Mangai Publications—3

# SAIVA NANNERI

A. THIRUMALAIMUTHUSWAMY,
M. A., B. T., D. L. S.

MEENASHI PUTHTHAGA NILAYAM
MADURAI

6

# சைவ நன்னெறி

அ. திருமலைமுத்துசுவாமி

புத்தக நிலையம்
மதுரை

மங்கை வெளியீடு — 3

R 673
N61

உரிமைப் பதிப்பு

விலை ரூ. 3—00

மீனாட்சி புத்தக நிலையம்
60, மேலக்கோபுர வாசல்
மதுரை—1

110940

முத்தையா அச்சகம், சானி சான் வீதி, சென்னை

எனது தந்தையும், வடக்கன்குளம் கன்கார்டியா உயர்நிலைப் பள்ளி முதனிலைத் தமிழாசிரியருமாகிய தமிழ்ப்புலவர் உயர்திரு. இ. மு. அருணாசலம் பிள்ளை அவர்களின் மணி விழா மலராக இந்நூல் வெளிவருகிறது. இதனை அழகிய முறையில் உரிய காலத்தில் அச்சிட்டுத் தந்த முத்தையா அச்சகத்தினர்க்கு என் நன்றி என்றும் உரியது. கலைத் தலைவர் (M. A.) பட்டப் படிப்பில் தமிழினைச் சிறப்புப் பாடமாகப் பயிலும் மாணவர்களுக்கும் சைவத்தைப் பற்றித் தெளிவாக அறிந்துகொள்ள விழையும் பொதுமக்களுக்கும் இந்நூல் பெரிதும் உதவும் என்பது என் எண்ணம். இந்நூலிற் காணப்படும் குற்றங் குறைகளைப் பொறுத்தருளுவதோடு, அவற்றை எனக்குத் தெரிவித்தருள அனைவரையும் வேண்டுகின்றேன்.

சென்னை,
18—1—61.

அ. தி.

# அணிந்துரை

நம் நாட்டின் பழம்பெருஞ்சமயங்களுள்
றப்பெறும் சைவசமயத்தைப் ப
வப்போது நூல்கள் எழுதப்பெறு
சைவ சமயத்தின் அடிப்படை
களை விளக்கவும், இதன் வர
ஆராய்ச்சி முறையில் எழுத
நூல்கள் வேண்டற்பாலன. இவ்
"சைவ நன்னெறி" என்னும் நூ
றிய திரு. அ. திருமலைமுத்துசாமி
B. T. அவர்களின் தொண்டு
தக்கதாகும்.

சைவத்தின் சிறப்பு, சங்ககாலச் சைவ
வர் காலத்திற்கு முந்திய சைவம்,
காலச் சைவம், மூவர் தமிழ், சோ
சைவ சமயம், சைவ மடங்களி
தொண்டு, என்னும் தலைப்புக்க
செய்திகளைத் தரும் இந்நூல்
விளக்கமாகச் சைவ நன்னெறி
பதைக் கூறுகிறது. ஆங்காங்
இலக்கியங்களினின்றும் பல்
முறைகளினின்றும் ஏற்ற மேற்
தரப்பெற்றுள்ளன. விளக்கங்கள்
றைப் பற்றி மாறுபட்ட க
இருக்கக்கூடுமாயினும் ஆசிரியர்
மும் தாம் அரிதிற் கண்டுணர்
எளிதாகப் பிறருக்குக் கூறி ம
டும் என்னும் உளப்பாங்கும்
முன்னேற்றத்தை நாடுபவர்களு
ருகும்.

சைவசமயத்தைப் பற்றிய பல செய்திகளைத் தெரிந்துகொள்ள இந்நூல் உதவுவதுடன் மேற்கொண்டு பன்னிரு திருமுறைகளையும் பதினான்கு சாத்திரங்களையும் பிற சைவ இலக்கியங்களையும் கற்க வேண்டும் என்னும் ஆர்வத்தையும் எழுப்பும் என நம்புகிறேன்.

இவ்வாசிரியரின் முயற்சியை நம்மனோர் பாராட்டி வரவேற்றால் காலக் குறைவால் நேர்ந்துள்ள பிழைகளை நீக்கி இன்னும் விரிவாக இரண்டாம் பதிப்பை மிகச் சிறந்த முறையில் வெளியிட இவர் ஊக்கம் பெறுவார் என்பது உறுதி.

பல்கலைக்கழகம்,
சென்னை,
11—1—'61.

வ. ஆ. தேவசேனாபதி.

# பொருளடக்கம்

—o—


## 1. சைவத்தின் சிறப்பு

தோற்றமும் வளர்ச்சியும்—சைவத்தின் தனிச் சிறப்பு

## 2. சங்க காலத்தில் சைவம்

சங்க இலக்கியங்களில் சிவன் — இடைப்பட்ட காலம் திருமுருகாற்றுப் படை — ஒரு வழிபாட்டு நூல் திருமுருகாற்றுப்படையின் சிறப்பு.

## 3. பல்லவர் காலத்திற்கு முந்திய சைவம்

காப்பிய காலம்—இருண்ட காலம் — கோயிலெடுத்த கோச்செங்கணான் — திருமூலர் தந்த திருமந்திரம் கனிபெற்ற காரைக்கால் அம்மையார்.

## 4. பல்லவர்காலச் சைவம்

சமயப் புரட்சி-சைவம் போற்றிய பல்லவ அரசர்கள் பல்லவர் காலத்துக் கோயில்கள்—பல்லவர் காலத்து அடியார்கள்.

## 5. மூவர் தமிழ்

ஞான்சம்பந்தர் வரலாறு, காலம், பாடல்கள் — ஞான சம்பந்தரால் ஏற்பட்ட விளைவுகள்—திருநாவுக்கரசர் வரலாறு, காலம், பாடல்கள் — சுந்தரர் — சேரமான் பெருமாள்—மணிவாசகர் காலம், வரலாறு, நூல்கள், உள்ளத்திறன் — பட்டினத்தடிகள் — அகத்தியர் தேவாரத்திரட்டு.

## 6. சோழர் காலத்துச் சைவம்

சோழர் காலத்துக் கோயில்கள் — சைவ இலக்கியங்கள் — பன்னிரு திருமுறைகள் — பதினான்கு சாத்திரங்கள் — பாண்டிய மன்னரின் சைவத் தொண்டு.

## 7. சைவ மடங்களின் சமயத் தொண்டு

திருவாவடுதுறை — தருமபுரம் — திருப்பனந்தாள் — வீர சைவ மடங்கள்.

# எடுத்தாண்ட நூல்கள்


அகத்தியர் தேவாரத் திரட்டு
அப்பர் சுவாமிகள் சரிதம் — கா. சு. பிள்ளை
அபிதான சிந்தாமணி
இரட்டைக் காப்பியங்கள்
கலைக் களஞ்சியம்
சங்க இலக்கியங்கள்
சித்தர் பாடல்கள்
சித்தாந்த சாத்திரம்
சித்தாந்தப் பொன் மலர் — சைவ சித்தாந்த சபை, தூத்துக்குடி
சிவஞான பாடியம் — சிவஞான முனிவர்
சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம் — சிவஞான சுவாமிகள்
சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரிதம்
சோழர் வரலாறு — சதாசிவப் பண்டாரத்தார்
சைவ இலக்கிய வரலாறு — அ. சு. துரைச்சாமி பிள்ளை
சைவ சமய வளர்ச்சி — மா. இராசமாணிக்கனார்
தமிழக வரலாறு — அ. மு. பரமசிவானந்தம்
தமிழ் இலக்கிய அகராதி — கண்ணப்ப முதலியார்
தமிழ்ச் சாசனங்கள் — வ. தங்கைய நாடார்
தமிழ் நாடும் மொழியும் — அ. திருமலைமுத்துசுவாமி
திருஞானசம்பந்தர் சுவாமிகள் சரிதம் — கா. சு. பிள்ளை
திருமந்திரம்
திருவாசகம்
தேவாரம்
நாயன்மார் வரலாறு — திரு. வி. க.
பன்னிரு திருமுறைத் திரட்டு
பெரிய புராண ஆராய்ச்சி — மா. இராசமாணிக்கனார்
பெரிய புராணம்
மாணிக்கவாசகர் வரலாறு — மறைமலை அடிகள்
மெய்கண்ட சாத்திரம்
Saiva Siddhanta Philosophy — John H. Piet

# சைவ நன்னெறி

## 1. சைவத்தின் சிறப்பு

"சைவத்தின் மேற்சமயம் வேறில்லை."

—எல்லப்ப நாவலர்.

"ஓது சமயங்கள் பொருளுணரு நூல்கள்
    ஒன்றோடொன்று ஒவ்வாமல் உளபலவும் இவற்றுள்
யாது சமயம் பொருள்நூல் யாதிங்கென்னில்
    இது ஆகும் அது அல்லது எனும் பிணக்கின்றி
நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காண
    நின்றது யாதொரு சமயம் அது சமயம் பொருள்நூல்
ஆதலினால் இவையெல்லாம் அருமறை ஆகமத்தே
    அடங்கியிடும் அவையிரண்டும் அரனடிக்கீழ்அடங்கும்."

—அருணந்தி சிவாச்சாரியார்; சிவஞான சித்தியார்.

"The Saiva Siddhanta Philosophy of South India is one of the classical products of the Tamil Mind."

"Saiva Siddhanta is predominantly a Tamil Philosophy."

—John H. Piet; A Logical Presentation of the Saiva Siddhanta Philosophy.

தென்னிந்தியாவிற்குரிய சைவ சித்தாந்தம் தமிழர் அறிவுத் திறனால் விளைந்ததாகும்; சைவ சித்தாந்தம் தமிழர் தத்துவமேயாகும்.

—சான் எச். பியட்.

"The worship of civa is one of the oldest and most widely spread in India."

—Pai; Monograph on the Religious Sects in India among the Hindus.

சைவ வழிபாடு இந்தியா முழுவதும் பரவியுள்ள தொன்மை வாய்ந்த ஒன்றாகும்.

—பாய்.

"The Saiva Siddhanta System is the most elaborate, influential and undoubtedly the most intrinsically valuable of all the religions of India. It is peculiarly the South Indian and Tamil religion.............."

—Dr. G. U. Pope.

சைவ சித்தாந்தமே இந்தியாவிலுள்ள பல்வேறு வகையான சமயங்களுக்குள் மிகவும் விளக்கமானதாக வும், கவர்ச்சிகரமானதாகவும், ஆத்துமீக மதிப்புடையதாக வும் இருக்கின்றது. அது தமிழர்களுக்கேயுரிய தனித்த ஒரு சமயக் கோட்பாடாகும்.

—ஜி. யு. போப்.

"There is no school of thought and no system of faith or worship that comes to us with anything like the claims of Saiva Siddhanta.

"The System possesses the merits of great antiquity. In the religious world, the Saiva System is the heir to all that is most ancient in South India; it is the religion of the Tamil people by the side of which every other form is of comparatively foreign origin.

"In the largeness of its following, as well as inregard to the antiquity of some of its elements, the Saiva Siddhanta is, beyond any other form, the religion of the Tamil people, and ought to be studied by all Tamil missionaries.

"The Saiva Siddhanta represents the high water mark of Indian thought and Indian life."

—Rev. W. Goudie; C. C. Magazine.

"Saivaism and Vaishnavism constitute the very life and soul of modern Hinduism."

—Prof. Monier Williams.

சைவ சித்தாந்தம் சிறந்த தத்துவக் கருத்துக்களைக் கொண்டிலங்குகின்றது; வேறு எந்தச் சமயத்திலும் அவ்வாறில்லை. சைவ சமயம் மிக்க தொன்மை வாய்ந்தது; சிறப்பு வாய்ந்தது. சைவ சித்தாந்தம் தமிழர்க்கே உரியது; தனித்து இயங்கும் தன்மையது; அனைவராலும் கற்றற்குரியது. இந்திய மக்களின் சிறந்த எண்ணங்களுக்கும் வாழ்க்கை நெறிக்கும் ஓர் எடுத்துக்காட்டாக, கலங்கரை விளக்கமாக இலங்குகின்றது.

W. கௌடி.

தற்கால இந்து சமயத்தின் இரு கண்களாகச் சைவமும் வைணவமும் விளங்குகின்றன; உயிர்நாடியெனினும் அது மிகையாகாது.

—பேராசிரியர் மானியர் வில்லியம்சு.

"A System which perhaps from the theistic point of view is the most valuable of all that have sprung up upon the Indian soil."

—Rev. N. Macnicol; Indian Theism.

இந்தியச் சமயங்களில் சைவ சமயம் ஒன்றே கடவுட் தத்துவத்தைத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் கூறுகிறது. எனவே இது மிகச் சிறந்த சமயமாகக் கருதப்படுகின்றது.

—என். மாக்னிக்கால்.

"No cult in the world has produced a richer devotional literature or one more instinct with brilliance of imagination, fervour of feeling and grace of expression."

—Dr. L. D. Barnett; Heart of India.

சைவ சமயத்தைப் போன்று உலகில் வேறு எந்தச் சமயமும் கற்பனைத் திறனும், கவிதையழகும், உணர்ச்சிப் பெருக்கும் உடைய சிறந்த இலக்கியங்களைப் படைக்கவில்லை.

—டாக்டர் எல். டி. பார்னெட்.

"Saivism is the most ancient faith in the world."

—Sir John Marshall.

சைவக்கொள்கை மிகவும் தொன்மை வாய்ந்ததாகும்.

—சர் சான் மார்சல்.

"Saiva Siddhanta may be ranked among the perfect and cleverest system of human thought."

—Dr. Kamil zvilabil.

சைவ சித்தாந்தம் முழுமையுடையதாகும்; மனித சிந்தனைத் திறனுக்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

—டாக்டர் கமில் சோவிலபில்.

"Saivam is a humanitarian religion-universal and ever-lasting."

—R. G. Nallakutralam.

சைவம் என்றும் எங்கும் நிலவும் அன்புச் சமயமாகும்.

—ஆர். ஜி. நல்லகுற்றாலம்.

மேலே தரப்பட்டுள்ள பல அறிஞர் பெருமக்களது கருத்துரைகள் சைவத்தின் மேன்மையையும் தொன்மையையும் உள்ளங்கை நெல்லிக் கனி போன்று தெள்ளிதிற் புலப்படுத்தும் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. சீரும் சிறப்பும் மிக்க சைவ சமயம் இந்நிலவுலகில் காணும் சமயங்கள் பலவற்றிலும் மிகவும் தொன்மை வாய்ந்தது; பரந்த நோக்குடையது; தனித்த ஒரு மனிதரால் தோற்றுவிக்கப்பெறாதது. 'இதுவாகும் அதுவாகாது' என்னும் பிணக்கில்லாது விளங்கும் இச்சமயம், பிற சமயக் கோட்-

பாடுகளையும், பிற சமயத்தவரும் அறிவியலறிஞர்வரும் கண்டுகொள்ள இயலாத அரிய பெரிய உண்மைகளையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. இறைவனால் அருளிச் செய்யப்பெற்ற ஆகமங்களையும், அருளாளர்கள் அன்புடன் அளித்த பன்னிரு திருமுறைகளையும், பதி னான்கு சாத்திரங்களையும் கொண்டு இலங்கும் இச்சமயம் ஆல்போல் செழித்து அருகுபோல் பரவியுள்ளது.

## தோற்றமும் வளர்ச்சியும்

முன்னர்க் கூறியபடி சைவ சமயம் மிகவும் தொன்மை வாய்ந்தது; தனித்த ஒரு மனிதரால் தோற்று விக்கப் பெறாதது. எனவே இதனது தோற்றம் குறித்து ஒன்றும் தெளிவாகக் கூறுவதற்கில்லை. சைவ சமயத்தின் முழுமுதற் பொருளை முதலில் மக்கள் இலிங்க வடிவமாக வழிபட்டனரென்று தெரிகிறது. இவ்விலிங்க வணக்கத் தின் தோற்றத்துக்குக் கூறப்படும் விளக்கங்கள் மிகப் பலவாகும். விளக்கங் கூறியவர்கள் ஒவ்வொருவரும் வெவ் வேறு விளக்கம் கூறுகின்றனர். ஒத்த இரண்டு விளக் கங்கள் காண்டல் முயற்கொம்பாகக் காணப்படுகிறது. "பாம்பு வணக்கம்" எனப் பெயரிய நூல் யாத்த திரு. நீன் அவர்கள் ஞாயிறு வணக்கத்தினின்று இலிங்க வணக்கம் தோன்றியிருக்கலாம் என்கிறார். அதற்கு அவர் கூம்பு வடி வான பிரமிடுக் கோபுரங்களைச் சான்றாகக் காட்டுகிறார். திரு. வெத்ராப் என்பவர் மக்கள் தோற்றத்தை விளக்கும் குறியாக இலிங்க உருவத்தை ஏற்படுத்தி அதனை வழிபட் டனர் என்பர். இலிங்க வணக்கம் பற்றி ஆராய்ந்த அறி ஞர் பெருமக்கள் அது உலகின் பல பாகங்களிலும் பரவி யிருந்த ஒரு சிறந்த வணக்கமாகும் என்று கூறியுள்ளனர். எகிப்தியரும் உரோமரும் கிரேக்கரும் இலிங்கத்திற்குக் கோயில் கட்டி வழிபட்டனராம். திரு. முக்கர்சி என்பவர் தாம் எழுதிய "இந்திய நாகரிகமும் பழமையும்" என்ற நூலில் இலிங்க வணக்கம் பற்றிக் கூறும் கருத்துக்கள் உளங்கொளற்குரியன. அவை வருமாறு:

"இந்திய மக்கள் சிவனின் அருட்குறியாகச் சிவலிங்கத்தைத் தொன்று தொட்டு வழிபட்டு வருகின்றனர். இவ் வணக்கம் உலகின் பல பகுதிகளிலும் ஒருகாலே பரவியிருந்தது என்பதை நிறுவுவதற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. சீனு, சப்பான், இந்துக் கடல் தீவுகள், பசிபிக் கடல் தீவுகள் முதலிய இடங்களில் இவ்வழிபாடு முற்றிலும் மறைந்துவிடவில்லை. ஆப்பிரிக்க மக்களிடையிலும் அமெரிக்கரிடையிலும் இஃது ஒருகாற் பரவியிருந்தது. அசீரியா, யூதேயம், சிரியா, சிற்ருசியா, பாபிலோன் ஆகிய தேய மக்களிடையும் இது காணப்பட்டது என்பதைக் குறித்துவ மறை வாயிலாக அறிகின்ருேம். சில நாட்களுக்கு முன்னர்ப் பாபிலோனியா நாட்டகத்தே சில இலிங்கங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. எகிப்து நாட்டின் சில இடங்களில் இலிங்கம் வணங்கப்பட்டது. எகிப்து நாட்டுப் பிரமிடுகளின் சுவர்களிலே இலிங்கங்கள் வெட்டப்பட்டுள்ளன. கிரீசிலே விசா என்னும் இடத்தில் இலிங்கத் தொடர்பான வழிபாட்டு முறைகள் இன்றும் நடைபெறுகின்றன. அயர்லாந்திலே இலிங்கங்கள் கிறித்தவ ஆலயங்கள் பலவற்றுட் காணப்படுகின்றன. அவை 'சீலநாகிக்' (Shila na-geg) என வழங்கப்படுகின்றன. புதைபொருளாய்வாளர் இங்கிலாந்திலும் காட்லாந்திலும் இலிங்கங்கள் பல தோண்டி எடுத்துள்ளனர். அவ்வாறு எடுக்கப்பட்ட இடங்கள் உரோமர்கள் கோட்டை கட்டிய இடங்களாம். உரோமர் இலிங்க வணக்கத்தைப் பரப்பியிருக்கலாம்; அல்லது வென்ற நாட்டின் சமயத்தைத் தழுவி இருக்கலாம். செர்மனியிலும் இவ் வணக்கம் செழித்திருந்தமைக்குரிய சான்றுகள் உள.''

இத்தகைய இலிங்க வழிபாடு பன்னூருண்டுகளாக இந்தியத் துணைக்கண்டத்தே பரவியிருந்தது என்பதற்குச் சிந்து வெளியிற் கிடைத்த இலிங்கம் பொறித்த பொருட்களே சான்ருகும். இலிங்க வழிபாடு குறித்து ஆராய்ந்தவருள் குறிப்பிடத் தகுந்தவர்கள் டாக்டர் சிலேட்டர், மறைமலையடிகள் என்போராவர். இவ்விருவரும் இலிங்க

வழிபாடு திராவிடர்களுக்குரியதாகும் என்ற உண்மையினை உலகிற்கு எடுத்துக்காட்டினர்.

இத்தகைய இலிங்கத்திற்குச் சிவம் அல்லது சிவன் என்ற பெயர் எங்ஙனம் ஏற்பட்டது? இதற்கு விடை பகரல் எளிதன்று. சிவன் என்பவனும் ரிக் வேதத்திலே குறிப்பிடப்படும் உருத்திரனும் ஒருவனே எனச் சிலர் எண்ணினர். அதற்குக் காரணம் இரண்டு சொற்களின் பொருளும் ஒத்திருத்தலேயாகும். ஆனால் காலப் போக்கில் தான் சிவனும் உருத்திரனும் ஒன்றாக்கப்பட்டனர். சிவத்தை முதலாகக் கொண்ட சமயம் சைவ சமயம் எனப் பெயர் பெறலாயிற்று. இனிச் சைவ சமயத்தின் வளர்ச்சியினைக் காண்போம். சைவ சமய வளர்ச்சியினை இரு கூறாகப் பிரிக்கலாம். அவை எவை? அவைதாம் அக வளர்ச்சி, புறவளர்ச்சி என்க. முதலிற் புற வளர்ச்சியினைப் பற்றிக் கூறுவாம். சங்க காலத்தே சைவம் பிற சமயங்களோடு ஒன்றி வளர்ந்தது; பல்லவர் காலத்தின் தொடக்கத்தில் புத்த சமணத்தோடு போராடிக் கொண்டே வளர்ந்தது. பிறகு சோழர் காலத்தே தனிப்பட்டதொரு பெருஞ்சமயமாகவும், ஒரோ வழி வைணவத்தோடு போராடும் சமயமாகவும் வளர்ந்தது. அதன் பின்னர் பல்வேறு சமயங்களின் கருத்துக்களையும் ஏற்றுக் கொண்டு வளர்ந்து வருகின்றது. தற்காலச் சைவ சமயத்தின் கொள்கைகளுள் ஒரு சில சமணம் போன்ற சமயங்களுக்கும் பொதுவாக விளங்குகின்றன. பல்லவர் காலத்தும் சோழர் காலத்தும் சைவ சமயத்தை நன்கு வளர்த்தவை ஆடல் பாடல் முதலிய கலைகளாகும். இனி அக வளர்ச்சியினைக் கூறுவாம்.

சங்க காலச் சைவ சமயம் தனக்கே உரிய கொள்கைகளுடன் விளங்கியதாகத் தெரியவில்லை. பிறர் தம் கோட்பாடுகளையும் தழுவிக் கொண்டே வளர்ந்ததாகத் தெரிகிறது. எடுத்துக் காட்டாகத் தமிழரசர் சிலர் வேள்விகளைச் செய்ததையும், துலாபாரம் செய்வித்ததையும் கூறலாம். என்றாலும் ஒரு காலத்தே அது தனது சொந்தக்

கோட்பாடுகளுடன் விளங்கியிருக்கும் என்பதில் ஐய மில்லை. சங்க காலத்தில் ஓரளவுக்கே சைவத்தில் கலந்த பிறருடைய கருத்துக்கள், கோட்பாடுகள் ஆகியவை மூவர் காலத்தும், அதற்குப் பிற்பட்டும் அதிக அளவிற்குக் கலக்கத் தலைப்பட்டன. அதுமட்டுமன்று; அவ்வாறு கலந்த பிறர் தம் கோட்பாடுகளைக் கண்டித்த சமண புத்த சமயத்தினரையும் கண்டிக்கும் அளவுக்குச் சைவப் பெரியார்கள் சென்றுள்ளனர், அதற்கு எடுத்துக் காட்டு சம்பந்தரே. வேதமும் வேள்வியும் சைவத்திற்குப் புறம்பானவை என்பதிலே கருத்து வேறுபாடு எள்ளளவும் இல்லை. ஆனால் சம்பந்தரோ வேதவேள்வியை நிந்தனை செய்த சமணரைத் தாக்குகிறார். இவ்வாறு சம்பந்தர் காலத்தே சைவத்திற் கலந்த வைதிகக் கருத்துக்கள் நாளடைவில் சைவத்துடன் இரண்டறக் கலந்து விட்டன. பின்னர் சமணம், புத்தம் போன்றவற்றின் கருத்துக்களும் சைவ சமயத்திற் கலந்தன. இன்றைய சைவ சமயத்திலே சமணக்கருத்துக்கள் உண்டு; வைதிகக் கருத்துக்கள் உண்டு. நுணுகி ஆராயின் கிறித்தவம் போன்ற அண்மைக் காலத்தே வந்த சமயக் கருத்துக்களும் காணப்படும். புத்தமும் சமணமும் இந்து சமயத்தின் கிளைகளாகும். பிற்காலத்தில் கிறித்தவ, இசுலாமிய சமயங்கள் நம் நாட்டில் பரவின. ஏசுநாதரைத்தவிர வேறு யாரும் மோட்சமடையச் செய்ய இயலாதென்றும், அச் சமயத்தினரைத் தவிர ஏனையோர் அஞ்ஞானிகள் ஆவர் என்றும் கிறித்தவ சமயத்தினர் இன்று கூறி வருவதை நாம் அறிவோம். அவ்வாறே இசுலாமிய சமயத்தினர், கலிமாச் செல்பவர்களைத் தவிர ஏனையோர் 'காபீர்' ஆவர் என்றும், அவர்கள் செய்யும் புண்ணியங்கள் மறு உலகத்தில் அவர்களைச் சேரா என்றும், 'குர்ஆன்' ஒன்றே இறைவனால் செய்யப்பட்ட நூல் என்றும், "அல்லா" ஒருவரே சிறந்த கடவுள் என்றும் கூறுவர். ஆனால் சைவமோ பின்வருமாறு கூறுகின்றது.

"யார் எச் சமயத்தைச் சார்ந்திருந்தாலும், எந்தத் தெய்வத்தை (குருநாதரை) வழி பட்டாலும், அருவம், உருவம், அருவுருவமாகிய மூன்றில் ஏதாவதொன்றை எவ்விதமாக வேனும் வழி பட்டாலும், அன்றி எண்ணினாலும் எவர்க்கும் பலன் உண்டு. அப்பயனை நல்குகின்ற தெய்வம், ஏனைய தெய்வங்களைப் போல் பிறப்பு, இறப்பு இல்லாத தாகும்; வேதனைப் படாததாகும்; மேல் வினை செய்யாத தாகும்; அதுவே ஒப்பற்ற பரம்பொருள் ஆகும். அப் பரம்பொருள் ஒன்றே அவரவர்க்குரிய பலனைக் கொடுக்கும்," இக் கருத்துக்களைப் பின்வரும் சிவஞான சித்தியார் பாடல்கள் நன்கு எடுத்துக் காட்டும்,

"மனமது நினைய வாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல
இன மலர் கையிற் கொண்டு அங்கு இச்சித்த
தெய்வம் போற்றி
சினமுதல் அகற்றி வாழும் செயல் அறமானால் யார்க்கும்
முனமொரு தெய்வம் அச் செயற்கு முன்னிலையாம் அன்றே."
"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர் மற்றத் தெய்வங்கள்
வேதனைப் படும் இறக்கும் பிறக்கும் மேல்வினையும் செய்யும்
ஆதலால் இவையில்லாதான் அறிந்து
அருள் செய்வன் அன்றே."

## சைவத்தின் தனிச் சிறப்பு

நாம் அனைவரும் "நாம் பிறப்பதற்கு முன் எங்கிருந்தோம், எவ்வாறு இருந்தோம், ஏன் வெவ்வேறு நிலைகளிற் பிறந்திருக்கிறோம், நாமாகப் பிறந்தோமா, நமது பெற்றோரது விருப்பத்தின்படி பிறந்தோமா, அவ்வாறு பிறக்கச் செய்தது யார், கருணையுடைய கடவுள் அவ்வாறு செய்தாரெனில் ஏன் நமக்குள் இத்தனை வேறுபாடுகள், முற்பிறவி உண்டா, இறந்த பின் நம் நிலை என்ன" என்றெல்லாம் சிந்திக்கின்றோம். இக் கேள்விகளுக்குரிய விடைகளை சைவத்தைத் தவிர வேறு எச்சமயமும் நன்கு விளக்க

வில்லை என்று துணிந்து கூறலாம். இவ்விடைகளைச் செந் தமிழ்ப் புலவர் சேக்கிழார் பெருமான் ஓர் அழகான பாட லில் தந்துள்ளார். அப்பாடல் வருமாறு:—

"செய்வினையும் செய்வானும் அதன் பயனும்
 சேர்ப்பானும்
மெய்வகையால் விதித்த பொருள்
 நான்காகும் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக்கில்லை என
 உய் வகையால் பொருள் சிவன் என்று..."

இதன் கருத்தாவது:

"முன் செய்த வினை, செய்த நாம், அதன் வினையால் வருகின்ற இன்ப துன்பமாகிய பயன், அந்தப்பயன் அவ் வினை செய்தவன் தனக்கே சென்று சேரும்படிச் சேர்க் கின்ற இறைவன்—இவையே மெய்வகையால் சைவநெறி விதித்தபொருள் நான்காகும். இவ்வியல்பு பிறநெறிகளுக்கு இல்லை. எனவே மக்களை உய்விக்கின்றமெய்ப்பொருள் சிவ னேயாகும்."

இந்நான்கு கொள்கைகளில் முதலாவதைக் குறித்த வரையில் இஸ்லாமியரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்; பௌத்த சமண சமயத்தினர் நான்காவது கொள்கையை ஏற் றுக் கொள்ளார். அவரவர் செய்த கர்மாவே அததற்குரிய பயனைத் தானே தரும்; அதனைச் சேர்ப்பிக்கின்ற கர்த்தா ஒருவர் வேண்டியதில்லை என்று அவர்கள் கூறுவர்.

இதுவரை கூறியவாற்றால் பழமையும் சிறப்பும் வாய்ந்த உலகச் சமயங்களில் ஒன்றாகச் சைவசமயம் விளங்குகிறது என்பதும் பிற சமயங்களுக்குரிய கோட் பாடுகளை எல்லாம் தன்னகத்தே கொண்டும், பிற சமயங் களில் காணப்பெறாத பல அரிய கருத்துக்களைக்கொண்டும் விளங்குகிறது என்பதும் எளிதிற் பெறப்படும்.

# 2. சங்க காலத்தில் சைவம்

## சங்க இலக்கியங்களில் சிவன்

உலகிலே பிற நாடுகட்கு இல்லாத ஒரு தனிச் சிறப்பு, தமிழ் நாட்டுக்குண்டு. அச்சிறப்பு எது? எதனால் ஏற்பட்டது? தமிழ்நாடு, தமிழ்மொழி, தமிழர் சமயம் முதலியவற்றுள் எதன் வரலாறும் வரலாற்றாசிரியரின் கைக்கு அகப்படுவதில்லை; கண்ணுக்குப் புலனாவதில்லை; நினைப்பிற்கு எட்டுவதில்லை. அந்த அளவுக்கு அவற்றின் வரலாறு காலங்கடந்து செல்லுகிறது; கருத்துக்கெட்டாது வாறு விளங்குகிறது. அவ்வாறே தமிழர் தம் தொன்மைச் சமயமாம் சைவ சமயத்தின் வரலாறும் நினைப்பிற்கும் வரலாற்றுக்கும் எட்டாது சென்றுளது. அத்தகைய தொன்மைச் சிறப்புடைய சைவ சமயத்தினைப் பற்றிக் கூறும் நூல்களுள் காலத்தினால் முந்தியவை சங்க இலக்கியங்களாகும். சங்க இலக்கியங்களிலே சிவனைப் பற்றிய குறிப்புக்கள் பாராட்டத்தக்க அளவுக்குக் காணப்படு கின்றன. ஆனால், காலத்தால் தொன்மைவாய்ந்த "ஒல்காப் பெரும் புகழ்த்" தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பி யத்தில் முருகனும், திருமாலும், கொற்றவையும் பேசப் பட்ட போதிலும், சிவனைப் பற்றிய குறிப்புக்கள் வெளிப் படையாகக் காணப்படவில்லை. என்றாலும் சைவ சமயத் தின் அடிப்படைகளாக விளங்கும் கடவுள், உலகம், உயிர் ஆகிய மூன்றைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுவது அறியத்தக்கது. அவற்றுள் உலகம் பற்றிய குறிப்பு வருமாறு :—

> "நிலம் தீ நீர்வளி விசும்போ டைந்தும்
> கலந்த மயக்கம் உலகம்."

சங்க இலக்கியங்களில் சைவத்தின் முழுமுதற் பொருளாம் சிவனைக் குறிப்பிடும் பெயர்கள், குறிப்புக்கள், முருகன் வழிபாடு, கொற்றவை வழிபாடு பற்றிய செய்திகள், அக்காலத்தே எடுக்கப்பட்ட இறையுறையும் கோயில்கள் பற்றிய விவரங்கள், கடவுளர்க்கு மக்கள் எடுத்த விழாக்கள், செய்த வழிபாட்டு முறைகள், ஐம்படைத் தாலியும் இடப அணியும் குழந்தைகளுக்கு அணிவிக்கும் வழக்கம், மக்கள் கொண்ட சிவனார் பெயர்கள் ஆகியவை குறிப்பிடத்தக்க அளவுக்குக் காணப்படுகின்றன.

சங்க இலக்கியம் சிவனைப் பற்றி வழங்கும் குறிப்புக்களை நோக்குமுன் கீழ்வரும் டாக்டர் வி. வி. இரமணசாத்திரிகளின் கருத்தை நாம் உளங்கொளல் வேண்டும்.

"There is nothing to show from the extant Tamil Literature that Siva as the name of the supreme was ever employed in it before the 7th cent. A. D."
இதன் கருத்து வருமாறு :—

கி. பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முன் சிவபெருமான் முழுமுதற் கடவுளாக விளங்கினார் என்பதற்கு இன்று எஞ்சியுள்ள இலக்கியச் சான்றும் இல்லை.

டாக்டர் சாத்திரியார் அவர்கள் கூறும் கூற்று உண்மையே என்றாலும் அது கொண்டு சங்க காலத்தே வாழ்ந்த மக்கள் சிவனையறியார் என்றும், சைவம் சங்க காலத்தே கிடையாது என்றும் கூறிவிடுதல் பொருந்தாது. பொருள் முந்தியதா ? அப்பொருளின் பெயர் முந்தியதா ? குழந்தை பிறந்தவுடனே பெயரிடுவதில்லை ; கொஞ்சநாள் கழித்தன்றோ பெயரிடுகின்றோம். அது கொண்டு பெயரிடு முன் குழந்தையே இல்லை என்னல் அறமாகுமா? சங்க இலக்கியங்களிலே சிவன் என்ற சொல் இல்லை; சைவம் என்ற சொல் சங்ககால இறுதியில் தோன்றிய மணிமேகலை தவிரப் பிறவற்றிலே காணப்படவில்லை. என்றாலும் வேண்டிய அளவுக்கு, அஃதாவது அக்காலத்தே சைவ சமயம் மக்களி

டையே நிலவி வந்தது என்று அறியும் அளவுக்குச் சிவனைப் பற்றிய குறிப்புக்கள் சங்க இலக்கியங்களிலே காணப்படுகின்றன. சிவனைப் பற்றிப் பிற்காலச் சைவத் திருமுறைகளில் காணப்படுகின்ற கதைகளிலே சிறப்பானவை சங்க நூற்களிலும் காணப்படுகின்றன. சிவன் றன் உருவங்கள் சங்க இலக்கியங்களிலே பலபொருளுக் குறிக்கப்பட்டுள்ளன.

சங்க இலக்கியங்களில் சிவனைப் பற்றிக் காணப்படும் திருக்குறிப்புக்களை நால்வகையாக வகுத்துத் தொகை வகை செய்து காணலாம். அத்திருக்குறிப்புகளுட் சில செழ்மேனி அம்மானின் திருமேனி பற்றியவை; சில அவன் திருமேனியிற் காணப்படும் கொன்றைமாலை, படை முதலி யவற்றைப் பற்றிக் கூறுவன. இன்னுஞ் சில அவன் செய்த ஈரமும் வீரமும் பொருந்திய செயல்களைச் சித்திரிப்பன; ஒரு சில அவன் கோயில் கொண்டுள்ள இடத்தைச் சுட்டும் சிறப்புடையவை.

சிவபெருமான் கற்றைச் சடையும், நெற்றிக்கண் ணும், கறைமிடறும், உமையொரு பாகமும், எண் கரங் களும் உடையவன் என்று சங்க இலக்கியங்கள் குறிப்பிடு கின்றன.

"தாழ்சடைப் பொலிந்த அருந்தவத் தோற்கே" (புறம்)
" நான்மறை முதுநூல் முக்கட் செல்வன் " (அகம்)
" கறைமிடற் றண்ணல் காமர் சென்னி " (புறம்)
" நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன் "
(ஐங்குறுநூறு)
" மாறுப்போர் மணிமிடற்று எண்கையாய் " (கலி)

இனி வருபவை சிவன்றன் திருமேனியிலும் திருக் கரத்திலும் காணப்படும் பொருள்களும் அவன் ஊர்ந்து செல்லும் ஊர்தியும் பற்றியவையாகும்.

" கண்ணி கார்நறுங் கொன்றை; காமர்
வண்ண மார்பின் தாருங் கொன்றை " (புறம்)
" மழுவாள் நெடியோன் தலைவனாக " (ம. காஞ்சி)
" கொலை யுழுவைத் தோலசைஇ " (கலி)
" ஊர்தி வால்வெள் ளேறே; சிறந்த
சீர்கெழு கொடியும் அவ்வே றென்ப " (புறம்)

பிற்காலத்தில் தோன்றிய சைவத் திருமுறைகளால் அடிக்கடி குறிப்பிடப்படும் சிறப்புடைய செய்திகள் இரண்டு ஆகும். அவை எவை? இறைவன் திரிபுரம் எரித்தமையும், இராவணன் சிரம் நெரித்தமையும் ஆம். இந்த இரண்டினுள்ளும் ஞானத்தின் திருவுருவாம் திருஞான சம்பந்தப் பெருமானால் பதிகந்தோறும் குறிப்பிடப்படும் சிறப்பு சிவபெருமான் இராவணனின் சிரம்நெரித்த செய்திக்குரியதாகும். அத்தகைய செய்தியைக் கலித்தொகை பின் வருமாறு கூறுகிறது.

" இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமையமர்ந்து உயர்மலை இருந்தனனாக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப் பொலி தடக்கையின் கீழ்ப்புகுந்த அம்மலை
எடுக்கல் செல்லாது உழப்பவன் போல " (கலி)

சிவபெருமான் திரிபுரமெரித்த அரும்பெருஞ் செயலைக் கீழ் வரும் புறப்பாட்டடிகள் அறிவிக்கின்றன,

" முங்குமலைப் பெருவில் பாம்புஞாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப்
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற் றண்ணல் " (புறம்)

இறைவன் ஆடிய கொடுகொட்டி, பாண்டரங்கம், காபாலம் ஆகிய மூன்று திருக்கூத்தினையும் கலித்தொகை புகழ்கின்றது. திருமுருகாற்றுப் படையிலும் கற்றறிந்தார்

ஏத்தும் கலித் தொகையிலும் சிவபெருமான் ஆலின்கீழ் அமர்ந்த திருக்காட்சி குறிக்கப்படுகிறது.

"ஆல் கெழு கடவுள்" (முருகு)
"ஆலமர் செல்வன்" (கலி)

நவிர மலையிலே காரியுண்டிச் சிவன் இருந்த இயற்கையை மலைபடுகடாம்,

"பேரிசை நவிரம் மேஎயுறையும்
காரியுண்டிக் கடவுளது இயற்கையும்"

என்று புகழ்கிறது.

## கொற்றவை - முருகன் - வழிபாடு

சங்க காலத்தே முருகன் வழிபாடு மிகச் சிறந்த முறையிலே விளங்கியதைத் திருமுருகாற்றுப் படையும், பரிபாடலும் தெளிவாக விளக்குகின்றன. கொற்றவை வழிபாட்டினைச் சிலப்பதிகாரத்தின் வேட்டுவ வரி விளக்கும். இனிச் சைவசமயத் தொடர்பான விழாக்கள் பற்றிய குறிப்புக்களைக் காணலாம்.

சிவபெருமான் ஆதிரை முதல்வன் எனப் பரிபாடல் கூறி அக்காலை எடுத்த ஆதிரை விழாவினைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

"மா இருந் திங்கள் மறுநிறை ஆதிரை
விரி நூல் அந்தணர் விழவு தொடங்க" (பரி)

மார்கழி நோன்பு என்பது சைவர்க்கும் வைணவர்க்கு முரிய விழாவாகும். இவ்விழாவினைத் தை விழா எனப் பண்டை நூல்கள் குறிக்கின்றன. இவ்விழாவின்போது மக்கள் காலையில் நீராடித் தாம் விரும்பும் கடவுளரை வணங்குவர் என்று கலித்தொகையும் பரிபாடலும் கூறும்.

சிவபிரான் திரிபுரமெரித்த சாம்பரை அணிந்தார் எனவும், யானைக்கு நீறு அணியப்பட்டது எனவும் கலித் தொகை கூறும்.

## இடபத் தாலி

பேய் பிசாசுகளினின்றும் காத்தற் பொருட்டுத் திரு மாலின் ஐம்படைத் தாலியைப் பிள்ளைகட்கு அணிவித்தல் தொன்றுதொட்டு வரும் தமிழ் மரபாகும். அதேபோலச் சிவனது மழு, வாள், எருது ஆகியவற்றைப் போலப் பொன்னாற் செய்து மக்கள் அணிந்திருந்தனர் என்று கலித் தொகையும் அதன் உரையும் கூறும்.

திருமுருகாற்றுப்படையின் மூலம் அக்கால மக்கள் செய்த பல்வித வழிபாட்டு முறைகள் நன்கு விளங்கும். கடவுளிடம் வரம் வேண்டிப் பக்தர்கள் உண்ணாவிரதம் இருந்தனர் என்று கலித்தொகையும் பதிற்றுப்பத்தும் கூறுகின்றன.

தாம் வணங்கும் குலதெய்வங்களின் திருநாமங்களைப் பெற்ற பிள்ளைகளுக்கு இட்டு வழங்கிடுதல் நெடுநாட் பழக்கமாகும். அப்பழக்கத்தின் அறிகுறியாகச் சிவனார் தம் திருப்பெயர்கள் தாங்கிய புலவர் சிலர் சங்க இலக் கியங்களில் காணப்படுகின்றனர். அவர்களுட் சிலர் வெண்பூதி, பேரெயின் முறுவலார், உருத்திரன், இறை யனார் என்பவராவர்.

இதுகாறும் எடுத்துக்காட்டிய சங்க இலக்கிய மேற் கோள்களாலும், வரைந்த செய்திகளாலும், கூறிய விளக் கங்களாலும் சங்க காலத்தில் சைவம் நன்கு வலிவும் பொலிவும் பெற்று விளங்கியிருத்தல் வேண்டும் என்பது புலனாகும். இதனாற்றான்போலும் கி. பி. ஏழாம் நூற் றாண்டுக்கு முன்னர் சிவன் என்ற பெயரைத் தமிழர் அறி யார் என்று கூறிய டாக்டர் இரமண சாத்திரிகள்,

"But there are grounds for believing that Siva was a name that the Tamils had learnt to use for the deity even in the earliest period"

என்று கூறினார் போலும். இதன் பொருளாவது.

பழங்காலத்திலேயே தமிழர் சிவன் என்னும் திருப் பெயரைக் கடவுளுக்கு இட்டு வழங்கினர் என்று எண்ண இடமுண்டு.

சீரிய சமய உணர்வு கொளல், கொண்ட சமயத்தின் நேரிய ஒழுக்கங்களை மேற்கொண்டு ஒழுகுதல், தம் சமயத்து இறைவனுக்குத் திருக்கோயில்களை அமைத்தல், எடுப்பித்தல், விழாக்கோலம் காணல், சமய முதல்வனாகிய இறைவன் மீது காதலுற்று அவன் றன் திருவருளைப் பெறுவதில் முழுநம்பிக்கை கொண்டு அதனை வேண்டிக் கோயில் சென்று வலம் வரல், ஊனினைச் சுருக்கி உள்ளொளி பெருகும் நோன்பிருத்தல், ஒருருவம் ஒரு நாமம் இல்லாத இறை வனுக்கு ஆயிரந் திருநாமம் கூறித் தோத்திரப் பாக் களான் வழிபாடு செய்து வணங்குதல், இறைவன் அடி யார் பொருட்டும் மக்கள் பொருட்டும் ஈரமும் அன்பும் கொண்டு செய்த திருவருட் செயல்களை நினைந்தும் அவற் றைப் பற்றிய கதைகளிலே ஈடுபாடு கொண்டும் போற்றி வாழ்தல், அவன் றன் திருநாமங்களைத் தம் பிள்ளைகட்கு இட்டு வழங்குதல், அவன் படைகளைத் தாலி செய்து அணி வித்தல் முதலிய செயல்கள் நன்கு வளர்ந்து பரந்து விரிந்து வன்மையும் இளமையும் பெற்றுள்ளிரும் ஒரு திருச்சமயத் தின் அறிகுறிகளாகும். அவ்வறிகுறிகளையே நாம் முற் கூறும் சங்க இலக்கியங்களிலே காணப்படும் குறிப்பு களிலே கண்டோம். பின்னர் நிலவிய தேவார காலச் சைவ சமயத்துக்கு இல்லாத தனிச் சிறப்பையும் நாம் சங்ககாலச் சைவ சமயத்திலே காணலாம். அச்சிறப்பெது? அது தான் சைவம் பிற சமயங்களோடு போராடாது அமைதி யாக வளர்ந்தமையாகும். அதற்குரிய காரணத்தைப் பேராசிரியர் ஆறுமுக முதலியார் பின்வருமாறு கூறினார்:

"During the Sangam age, the prevelance of a spirit of religious tolerence and the study of the different religions of the times in a philosophic and friendly spirit, reinforced and

strenghthened the feeling universal Brother hood fostered by the large hearted and far-seeing policy of the Tamil Kings."

[Tamil Culture]

இதன் கருத்துக் கீழே தரப்பட்டுள்ளது.

சங்க காலத்தில் சமயப் பொறையும் வேற்றுமை கருதாது பல சமயங்களையும் ஆராய்ந்து அறியும் வேட்கையும் மக்களிடையே நிலவியதால் தமிழரசர்கள் போற்றிய சமரச மனப்பான்மை மாண்புற விளங்கியது.

## திருமுருகாற்றுப் படை

### ஒரு வழிபாட்டு நூல்

முருகன் பழந்தமிழர் வழிபட்ட ஒரு கடவுள். அவனைக், குறிஞ்சிக்குரிய தெய்வமாகத் தொல்காப்பியர் கூறுகிறார். "சேயோன் மேய மைவரை யுலகமும்" என்பது தொல்காப்பியம். முருகனைப் பற்றிய குறிப்புக்கள் சங்க இலக்கியங்களிலே அங்கங்கே காணப்படுகின்றன. அவனுக்கு நம் பழந்தமிழ் மக்கள் செய்த வழிபாட்டு நிகழ்ச்சிகள் அவற்றிடையே காணப்படுகின்றன. அத்தகைய முருகனின் இருப்பிடம், அவனுக்கு மக்களால் செய்யப்படும் பலதிறப்பட்ட வழிபாடுகள், அவனது திருவருளைப்பெறும் வழிவகைகள் ஆகியவைகளைக் கவிதைச் சுவைபடக் கூறுவதே திருமுருகாற்றுப்படை என்னும் பாடலாகும்.

நக்கீரர் இம்முருகாற்றுப் படையிலே முருகன் காட்டிலும் நாட்டிலும் எப்படி வழிபடப் பட்டான் என்பதைக் கூறுகிறார்; அத்துடன் எப்படி முருகனை வழிபடல் வேண்டும் என்பதையும் சேர்த்து இறுதியிற் கூறுகிறார். பாட்டின் தொடக்கத்திலே திருப்பரங் குன்றத்தில் முருகனை வழிபட்ட வகையினைக் கூறுகின்றார்.

கிண் கிணி ஒலிக்கும் ஒண்செஞ் சீறடியும், கணைக் காலும், பணைத்தோளும், வாங்கிய நுசுப்பும், ஓங்கிய மருவும், விழிகளுக் கடங்காப் பேரெழிலும் உடைய சூர மகளிர் முருகனை வழிபடுகின்றனர். முருகனை வழிபடுமுன் முதலிலே அவர்கள் தங்களைப் பலவகையாலும் ஒப்பனை செய்து கொள்ளுகின்றனர். அவர்களுக்கு அழகூட்டப் பயன்பட்டன எல்லாம் பூக்களேயாகும். இருண்டு சுருண்ட கருங்கூந்தலிலே வெட்சிப் பூக்களையும், குவளை இதழ்களையும் அவற்றோடு நந்தியாவட்டப் பூக்களையும் சேர்த்துச் சூடுகின்றனர். பின் பொட்டிட்ட நெற்றியிலே செந்நிறச் சுட்டி தொங்கவிடப் படுகிறது; கருங்குழல் அள்ளி முடிக்கப்பட்டுக்கொண்டைபோடப்படுகிறது; அந்தக்கொண்டையிலே சண்பகப்பூ செருகப்படுகிறது; அரும்பாணியன்ற தண்மாலை ஒன்று தலையிலே வளையச் சூட்டப்படுகிறது. பின் வள்ளைக் காதுகளிலே வெள்ளைப் பிண்டி அணிசெய்ய நுண்பூண் ஆகத்திலே திண்காழ்த்தேய்வை பூசப்படுகிறது. அதன் மீது வேங்கையின் பொன் தாதுக்கள் பரப்பப்படுகின்றன. இவ்வாறு சூரர மகளிர் தம்மை நன்கு ஒப்பனை செய்து கொண்ட பின்னர் வெள்ளில் குறுமுறியினைக் கிள்ளி எறிந்து,

‘கோழி ஓங்கிய வென்று அடு விறற்கொடி
வாழிய பெரிது’’ என்றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப்பாடி’

ஆடி முருகனை வழிபடுகின்றனர். இதன் பின்னர் அதே குன்றத்திலே உலறிய கதுப்பும், பிறழும் பல்லும், பேழ் வாயும், சுழலும் விழிகளும், சூர்த்த நோக்கும் கொண்டு ‘‘அஞ்சுவரு பேய்மகள்,’’

‘‘குருதியாடிய கூர்உகிர்க் கொடுவிரல்
கண்தொட் டுண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண் தொடித் தடக்கையின் ஏந்தி வெருவர

வென்றடு விறற்களம் பாடித்தோள் பெயரா
நிணந்தின் வாயள்,''

மற்றொருபால் துணங்கைக் கூத்தாடி முருகனை வழிபடுகின்றனர்.

அடுத்துத் திருச்சீரலைவாயிலிலே முருகன் கொண்டுள்ள திருக்கோலமும், ஆர்வலரும் அந்தணரும் செய்யும் வழிபாடும் கூறப்படுகின்றன. பன்னிரு கையும் ஆறுமுகமும் கொண்டு, வள்ளியும் தேவமகளும் இருபுறமும் அணிசெய்ய, பல்வித ஒளி மணிகள் இழைத்த திருமுடியுங் கொண்டு "கூற்றத்தன்ன மாற்றரும் மொய்ம்பும் உயர்ந்த பிடரியும் ஓங்கிய நடையும் சிறந்த கொம்பும் பரந்த அடியும் சிறிய கண்ணும் செந்நிறவாயும் உடைய" வேழம் மேற்கொண்டு திருமுருகன் திருவுலா வருகின்றான். அக்காலை ஆர்வலர் அவன் புகழ் பாடி ஏத்துகின்றனர். மரபு வழுவாது மந்திர விதிப்படி அந்தணர் வேள்வி செய்து முருகனை வணங்குகின்றனர்.

மூன்றாவதாகத் திருஆவினன்குடி பேசப்படுகின்றது. இங்கே வழிபாட்டினைக் குறிக்காமல் முருகனை யார் யார் வழிபட வந்தனர் என்பதையும், அவர்கள் இயல்புகள் யாவை என்பதையும் நக்கீரர் கூறுகின்றார். வலம்புரிபுரையும் வால் நரையும், மரவுரியும், ஊணைச் சுருக்கி ஊனை உருக்கி ஒட்டியயாக்கையும், செற்றம் நீக்கிய மனமும், கற்றோர் அறியா அறிவும் காம வெகுளி கடிந்த காட்சியும் உடைய முனிவர்கள் முன்னாற் செல்லுகின்றனர். எழிலே உருவெடுத்த நங்கையர் இன்னிசைக் கருவிகளை இயக்கி மற்றொருபாற் பின்செல்லுகின்றனர். முருகனாற் சிறைப்படுத்தப்பட்ட நான்முகனை விடுதலை செய்வதற்காகத் திருமாலும் சிவனும் தேவர்கோனும் காற்றினும் கூற்றினும் கடுங்கனலினும் விரைந்து வந்து சேருகின்றனர்.

அதன் பின்னர் திருவேரகத்திலே முருகனை வழிபடுகின்ற அந்தணர்தம் இயல்புகளும் அவர் வழிபடும் முறை

களும் கூறப்படுகின்றன. இந்த அந்தணர்கள் 48 ஆண்டு கள் பிரமசரிய விரதம் மேற்கொண்டவர்கள்; வேதக் கேள்வியைச் செய்தவர்கள். அவர்கள் கீழ்க் கூறியவாங்கு முருகனை வழிபடுகின்றனர்.

"ஒன்பது கொண்ட மூன்று புரிநுண்ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர்; தற்புகழ்ந்து
ஆறெழுத் தடக்கிய அருமறைக் கேள்வி
நாவியல் மருங்கின் நவிலப் பாடி
விரையுறு நறுமலர் ஏந்தி பெரி துவந்து
ஏரகத்து உறைதலும் உரியன்."

இதற்கடுத்தது குன்றுதோறாடல் ஆகும். இங்கே குன்றுகளில் வாழும் மக்கள் குரவைக் கூத்தாடி முருகனை வழிபடுவதைக் காணலாம். கொடுந்தொழிற்கானவர்கள். குளவியும் கூதாளமும் சூடிச் சந்தனம் பூசிப் பின் தேறலைத் தம் கிளையுடன் குடித்துத் "தொண்டகச் சிறு பறைக் குரவை" அயருகின்றனர். குன்றக் குரவையின் முழு அழகையும் நாம் சிலப்பதிகாரம் குன்றக்குரவைக் காதையில் காணலாம். குன்று தோறும் குரவைக் கூத்து நடை பெறும் பொழுது முன்னைய இடங்களில் இருந்தது போல முருகன் வாளா இருக்காது, அவர்களைப் போல அவனும் குல்லையும் முல்லையும் காந்தளும் வேங்கையும் அணிந்து கொண்டும் சந்தனத்தைப் பூசிக் கொண்டும் அக் கானக மகளிரோடு கைகோர்த்துக் குரவைக் கூத்தாடுகின்றனன்.

வழிபாட்டு நூலாம் முருகாற்றுப் படையிலே மிகச் சிறந்த பகுதியாகக் கூறப்படுவது பழமுதிர் சோலையைப் பற்றியதாகும். இங்கே தான் முருகாற்றுப் படையின் உயிர்நிலை உளது எனினும் தவறில்லை. முருகனை வழிபடும் இடங்களும், அவனுக்கு வழிபாடு செய்யும் விதமும் ஆற்றுப் படுக்கும் முறையும் இப்பகுதியில்தான் தெளிவாகக் கூறப்படுகின்றன.

"....................................களனும்
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறு பல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்"

முருகன் வைத்து வழிபடப் படுகின்றான். சில இடங்களிலே "சிறுதினை மலரோடு விரைஇ" மக்கள் வணங்குவர்; வேறு சில இடங்களில் மறியறுத்து வணங்குவர்; மற்றொரு சில இடங்களிலே "வாரணக் கொடியோடு வயிற்பட நிறீஇ" வணங்குவர்; இன்னும் சில இடங்களில் விழவெடுத்து ஊர்வலம் செய்து வணங்குவர்; அக்காலைச் சிலர் ஆர்வலர் ஏத்தி வணங்குவர். வேலன் வெறியாடி வழிபடுவான். இறைவனாகிய முருகன் ஒருவன் ஆனாலும் அவனுக்குச் செய்யப்படும் வழிபாடுகள் பல திறத்தன. அவற்றுள் குறமகள் முருகனை வழிபடும் திறம் ஒன்று. அவள் முருகனை ஆற்றுப் படுத்தி வழிபடுகிறாள். தனக்கேயுரிய வெறியாடி முருகனைத் தன் நகருக்கு ஆற்றுப்படுத்தி வழிபடுகிறாள். எப்படி வெறியாடுகிறாள்?

ஓரிடத்தைத் தெரிந்தெடுக்கிறாள்; அதனைத் தூயதாக்குகிறாள்; கோழிக் கொடியை அங்கே நடுகிறாள்; ஐயவியும் நெய்யும் அளாவி அப்புகிறாள்; கொழு மலர் சிதறுகிறாள்; இருவேறு வண்ண உடை உடுக்கிறாள்; சிவந்த நூலால் காப்புக் கட்டுகிறாள்; வெண்பொரி சிதறுகிறாள்; கொழுத்த ஆட்டினை வெட்டுகிறாள்; குருதி அருவியென ஒழுகுகிறது. அதிலே அரிசியைத் துவைக்கிறாள். வெள்ளரிசி செவ்வரிசியாகி விடுகிறது. பிறகு அவள் பல பிரம்புகளைப் பரப்புகிறாள்; மஞ்சள் நீர் தெளிக்கிறாள்; கணவீரமாலை நறுக்குகளைத் தூங்க விடுகிறாள். பிறகு,

"நளிமலைச் சிலம்பில் நல்நகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி

இமிழிசை அருவியோடு இன்னியம் கறங்க
உருவப்பல் பூத்தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகியம் நிறுத்து முரணினர் உட்க

முருகாற்றுப் படுக்கிருள்.

அதன் பின்னர் முருக வழிபாடு நடைபெறுகிறது; வாழ்த் தொலி கேட்கிறது.

"ஆடுகளம் சிலம்பப் பாடிப் பலவுடன்
கோடு வாய்வைத்துக் கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டு ஆண்டு உறைதலும் அறிந்த வாறே".

அடுத்து முருகனை எப்படி வழிபட வேண்டும் என்பது கூறப்படுகின்றது.

"முந்து நீ கண்டுழிமுகன் அமர்ந்து ஏத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி
நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ
...............................
போர்மிகு பொருந! குரிசில்! எனப்பல
யானறி அளவையின் ஏத்தி",

தனது இயலாமையைப் புலப்படுத்தி,வந்த செயலை உணர்த்தல் வேண்டும்.

இவ்வாறு நூல் முழுவதும் முருகனுக்குப் பல்வேறு இடங்களிலும் செய்யப்படும் பல திறப்பட்ட வழிபாடு களைப் பற்றியும், அவ்வழிபாட்டிடை முருகன் பொலிந்து தோன்றும் திருக்காட்சியினைப் பற்றியும், நாம் எப்படி

முருகனை வழிபடுவது என்பது பற்றியும், அவ்வழிபாட்டினை ஏற்று முருகன் அருள் புரிவதைப் பற்றியும் கூறுவதால் இத்திரு முருகாற்றுப்படை ஓர் அழகிய அருள் ஒழுகும் வழிபாட்டு நூல் என்று கூறின் அது மிகவும் பொருத்தம் உடைத்தாம் என்க. இத்தகைய வழிபாட்டு நூலின் பெருமையைக் கீழ்வரும் பாட்டால் நன்கு அறியலாம்.

"நக்கீரர் தாமுரைத்த நல்முருகாற்றுப் படையைத்
தற்கோல நாள்தோறும் சாற்றினல் முன்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான் நினைத்த எல்லாம் தரும்."

## திருமுருகாற்றுப்படையின் சிறப்பு

திருமுருகாற்றுப்படையிற் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் சிறந்த தத்துவக் கருத்துக்கள் இலைமறை காய் போல மறைந்து கிடக்கின்றன. அவற்றைக் காண வேண்டுமானல் நாம் புற உலகை மறத்தல் வேண்டும்; அப்பொழுதுதான் திருமுருகாற்றுப் படையின் முழுப் பொருளை அறிய முடியும்; அதன் தத்துவக் கருத்து நுட்பங்களைக் காணல் முடியும்; முருகாற்றுப்படையின் உண்மை ஒளியில் மூழ்குதல் இயலும்.

திருமுருகாற்றுப்படையின் தொடக்கமே மிகவும் ஆழ்ந்த தத்துவக் கருத்துப் பொருந்திய காட்சியோடு தொடங்குகிறது. ஆண்டவன் இன்ன உரு, இன்ன நிறம் உடையவன் அல்லன்; எங்கும் நீக்கமற நிறைந்துள்ளவன், இக்கருத்து யாருக்குப் பொருந்தும்? ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா இறையானந்தத் தேனைப் பருகிய தெய்வ முனிவர்கட்குப் பொருந்துமே ஒழிய, பொது மக்கட்குப் பொருந்தாது. எனவே அவர்கட்கு இறைப் பற்று ஏற்படுத்தல் வேண்டும். அப்பற்றினை இரண்டு வழிகளால் ஏற்படுத்தலாம். அவை எவை? ஒன்று அறிவு வழி மற்ருென்று உணர்வு வழி. அறிவு வழி துறவிக்

குரியது; உணர்வு வழி மக்கட்குரியது. உணர்வு பெருகு வாயில்களாக இருப்பன பொறிகள். பொறிகள் மூலமாலும் உணர்வைப் பெருக்கலாம். அவ்வைம் பொறிகளிலும் எளிதாக உணர்வு பெருக்கிடும் வன்மை கண்ணுக்குண்டு. அத்தகைய கட்புலன் வழியேதான் நக்கீரர் மக்கட்கு முருகன் மீது பற்று ஏற்பட வழிகோலுகிறார்; அவர்கள் உணர்வை உள்ளத்தே எழுப்புகிறார். எப்படி? பொறிக்கும் புலனுக்கும் எட்டாத பரம் பொருளுக்கு ஓர் உருவைத் தருகிறார். அந்த உருவத்தையும் நேரடியாகத் தந்து விடவில்லை. உவமை வாயிலாகத் தருகிறார்: உவமையாகக் காட்டப்படும் பொருள் எல்லோருக்கும் எளிதிலே தெரியும் பொருள்; புரியும் பொருள். காலைக் கதிரவனைக் காணாதாரில்லை. "வைகறைத் துயிலெழு" எனும் மொழி எழுந்ததே மக்கள் கதிரவன் உதயத்தைக் கண்ணாரக் காணவேண்டும், களங்கமற்ற உள்ளமொடு காண வேண்டும், கண்டு களித்துப் புத்துள்ளமும் மறுமலர்ச்சியும் பெற வேண்டும் என்பதற்காகவே. தமிழ் நாட்டு மக்கட்குக் காலைக் கதிருதயம் மிகவும் பழக்கமான ஒன்று. அத்தகைய பழக்கமான ஒன்றைக் காட்டியே நக்கீரர் முருகனுக்கு உருவம் கற்பிக்கிறார்.

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடல்கண் டாஅங்கு
ஓவற இமைக்கும் சேண்விளங் கவிரொளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்தாள்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுஇல் கற்பின் வாணுதல் கணவன்."

இறைவனை அடைவதற்கு இரண்டு நெறிகள் உள. ஒன்று அறிவு நெறி; மற்றொன்று அன்பு நெறி. இந்த இரண்டு நெறிகளாலும் இறைவனை அடையலாம் என்று நக்கீரர் தம் முருகாற்றுப் படை மூலம் விளக்குகிறார். திருப்பரங்குன்றத்திலே முருகன் வீற்றிருத்தலைக் கூறும் பகுதி பல ஆழ்ந்த பொருள்களைக் கொண்டு விளங்

குகிறது. "ஒளி இருள், நன்மை தீமை, இன்ப துன்பம், அழகு அலங்கோலம் என்னும் இவற்றிற் சிக்கிக் கிடக்கும் உயிர்கள், பேராற்றலும் பேரறிவும் உடைய மெய்ப் பொருளாம் முருகனைக் காணும் புலமையே உண்மைப் புலமை; அப்புலமை யுடையவரே உண்மைப் புலவர்" என்று இப் பகுதியில் நக்கீரர் நுட்பமாக உணர்த்தியிருப் பதனை வியந்து டாக்டர் மொ. துரையரங்கனார் பாராட்டு கின்றார்.

திருப்பரங்குன்றத்திலே ஒருபால் எழில் குடி கொள்ளும் சூரரமகளிர் தங்களைக் கண்ணைக் கவரும் வண்ண மலர்களால் அழகுக்கு அழகு செய்து கொண்டு "கோழி ஓங்கிய வென்றடு விறற்கொடி வாழிய பெரிது" என்று சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடி ஆடுகின்றனர். மற்றொரு பக்கமும் முருகன் வழிபாடு நடைபெறுகிறது. ஆனால் அந்த வழிபாட்டுக் காட்சியோ நமக்குப் பேரச்சத் தைத் தருகிறது. முதல் வழிபாடு நம் கண்ணைக் கவருகி றது; கருத்திற்கு விருந்தாகிறது. இந்த வழிபாடோ நம்மை அதிர்ச்சியுறச் செய்கிறது. ஏன்? வழிபடும் முரு கன் ஒருவனே என்றாலும் வழிபாட்டில் இந்த முரண் ஏன்? சூரரமகளிர் எழிலின் உறைவிடம்; பேய் மகள் அருவருக் கத்தக்க தோற்றமுடையவள். சூரர மகளிர் நன்மையின் வடிவம்; பேய் மகள் தீமையின் வடிவம்; சூரர மகளிர் நல் லொழுக்கத்தின் இருப்பிடம். பேய் மகள் தீயவொழுக்கத் தின் இருப்பிடம். சூரர மகளிர் உயிர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் மலையிலே வழிபாடு செய்கின்றனர். பேய் மகளோ முறிந்த எலும்புகள், அறுந்த சிரங்கள், தலையற்ற முண்டங்கள், வெட்டுண்ட கரங்கள், பெருக் கெடுத்தோடும் இரத்த ஆறு, ஆணவத்திற்கு இரையாகிப் போர் செய்த வீரரின் பிணங்கள் ஆகியன குவிந்து குட லைப் பிடுங்கும் பிணவாடை வீசும் போர்க்களத்திலே வழிபாடு செய்கிறாள். சூரர மகளிர் வெள்ளில் குறுமுறி யைக் கிள்ளி வழிபாடு செய்கின்றனர்; பேய் மகளோ பிணத்தின் வாயுடன் கண் தொட்டுண்ட கழிமுடைக் கருந்

தலை ஏந்தி வழிபடுகிறாள். புலவர் இவ்வாறு முரண்பட்ட வழிபாடுகளைக் காட்டுவதன் காரணம் முருகன் எல்லாம் கடந்த ஒரு கடவுள் என்பதைக் காட்டத்தான் என்னலாம். இக்கருத்தினையே பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்,

"In these descriptions, the contradictions are resolved in the harmony of the Lord-an inevitable harmony of such contradictions, as to be welcomed and enjoyed-no more abhorred or feared"

என்று சுட்டிக்காட்டுகின்றார்.

அடுத்துத் திருச்சீரலைவாய்க் காட்சி. முருகன் காய்கிளர்ந்தன்ன வேகத்துடன் வரும் வேழத்தின் மீது வருகிறான். தலையிலே பலவித மணிகள் பதிக்கப்பட்ட முடியுடன், பன்னிரு கரங்களுடன், ஆறு முகங்களுடன் அவன் காட்சி தருகின்றான். ஆறு முகங்களும் மக்கள் வாழ்வில் மேற்கொள்ளும் அறுவகைப்பட்ட முயற்சிகளைக் குறித்திடும். முகத்திற்கு இரண்டு கைகள் வீதமுள்ள பன்னிரண்டு கைகளும் அந்த அறுவகை முயற்சிகளையும் நிறைவேற்ற உதவும் கருவிகளாகக் கொள்ளலாம். இறைவன் உலக வேற்றுமைகளைக் கடந்த ஒரு பரம்பொருள்; அவன் ஒரு கடல். கடலிற் பல்வேறு நிறமும் சுவையும் உடைய நீர் கலக்கலாம். என்றாலும் இறுதியிலே அவற்றின் வேற்றுமை மறைந்து கடல் நீராதல் உண்டு. அது போல வேறு வேறு நிறமுள்ள மணிகள் இறைவன் திருமுடியிலே ஒன்றுபடுகின்றன. இவ்வாறே இறைவன் ஒருமையின் உறைவிடமாக, ஒற்றுமையின் இருப்பிடமாக விளங்குகிறான் என்னலாம்.

"His crown is a harmony of all the geometrical shapes. The various activities or phases of the world are but his varied faces. He is like a diamond with six facets."

—Prof. T. P. Meenakshisundaram.

குன்றுதோறாடலிலே முருகன் ஒவ்வொரு குன்றிலும் ஆடுகின்றான். அதன் மூலம் அகில உலகமெலாம் ஆண்டவனின் உறைவிடங்கள் என்ற தத்துவத்தைப் புலவர் போதிக்கிறார். இங்கே குறமகளிரோடு முருகன் கை கோர்த்துக் குரவையாடல் இறைவன் ஆன்மாக்களோடு ஆடும் கூத்தைக் குறிக்கின்றது என்று கூறலாம். பழமுதிர் சோலையிலே நாம் பலவகை வழிபாட்டிடங்களைக் காணலாம். வழிபாட்டிற்கு, தகுதியுள்ள இடம், தகுதியற்ற இடம் என்ற வேறுபாடில்லை. எல்லாம் ஏற்ற இடங்களே. குன்றுதோறாடல் ஒழிந்த திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருஆவினன்குடி, திருவேரகம் என்ற இடங்கள் சாத்திரமும் கோத்திரமும் சடங்கும் தளரா முயற்சியும் கொண்டு நூலுணர்வுடையவர் வழிபாடு ஆற்றுதற்குரிய இடங்களாக முன்னர்க் குறிக்கப்பட்டன. அவையெலாம் அவ்வுயர்ந்தோர்க்கு வழிபாட்டிற்கு ஏற்றவை ஆயினமை போல இப்பகுதியிற் கூறப்படும் இடங்களும் வழிபாட்டிற்கு ஏற்றவையாம். வழிபாட்டிடங்களால் உயர்வு தாழ்வு இல்லை. வேண்டியதெல்லாம் அன்பு ஒன்றேயாகும். அன்புடையார்க்கு முருகன் தானே எளியனாகி வந்து அருள் புரிவான். சிறுதினை மலர் நறுமலரும் தூவி, மறியறுத்துக் கோழிக்கொடி நாட்டி ஊர் ஊர் கொண்ட சீர்கெழு விழவிலும் முருகன் தோன்றுவான்; ஆர்வலர் ஏத்தும் மேவரு நிலையினும் அவன் காட்சி தருவான்; வேலன் வெறியாடும் களத்திலும் முருகனைக் காணலாம். காட்டிலும் மேட்டிலும் ஆற்றிலும் குளத்திலும் சதுக்கத்திலும் சந்தியிலும் மரத்தடியிலும் மன்றத்திலும் எங்கும் முருகன் திருநடம் புரிவான். அவனுக்கு இடம் பற்றி வேறுபாடே இல்லை. நறுமணங் கமழும் பொழிலாகவும் இருக்கலாம்; புலால் நாறும் போர்க்களமாகவும் இருக்கலாம், நாகரிகம் செழிக்கும் நகரமாகவும் இருக்கலாம்; நாகரிகத்தின் வாடையே அடியாத மலை நாடாகவும் இருக்கலாம். முருகன் தோன்றவே செய்வான். கண்ணைக் கவரும் வண்ண மலர்கள் இட்டுப்பூசனை

செய்தாலும் முருகன் அருள் கிட்டும். அறுவன்றிக் குறமகள் போல, ஆட்டுக்கொலை, அச்சமூட்டும் வெறியாட்டு, செந்நீரொழுகும் அரிசி ஆகியவற்றின் மூலம் வழிபட்டாலும் முருகன் அருள் கிடைக்கவே செய்யும். இங்கு வேண்டியதெல்லாம் அன்பு! அன்பு! உளமார்ந்த உண்மை அன்பு! அந்த அன்புக்கு முருகன் கட்டுப்படுகிறான். அவனோ அருட் கொண்டல்; அருள் வள்ளல். இங்கே ஆற்றுப்படை நடைபெறுகிறது. ஆனால் பிற ஆற்றுப் படைக்கும் இந்த ஆற்றுப்படைக்கும் வேறுபாடு உண்டு. இங்கே ஆற்றுப் படுக்கப்படுவர் இரவலர் அல்லர்; புரவலர். புதுமை இது; புரட்சியும்கூட. இங்கே முருகன் அடியார்களிடத்திலே ஆற்றுப்படுத்தப் படுகின்றான். அங்கே கலைக்கும் பரிசிலுக்கும் இடையே பரிமாற்றம். இங்கே அன்புக்கும் அருளுக்கும் இடையே பரிமாற்றம். பிறர் தம்மிடம் வந்து இரந்தபின் கொடுத்தலைவிட அவர் இருக்குமிடந்தேடிக் கொடுத்தல் சிறப்புடையதல்லவா? அதனையே முருகன் செய்கின்றான்.

முருகாற்றுப் படையின் இறுதியிலே அருவியின் பெரு முழக்கம் கேட்கிறது. அதிலேயும் ஒரு நுட்பம் கண்டு கூறியுள்ளார் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந் தரம். மலையிலிருந்து இழுமெனும் ஓசையுடன் அருவி ஒழுகி வருகின்றது; பொன்னும் மணியும் பழமும் மரமும் தேனும் ஆரமும் அகிலும் அடித்துக்கொண்டு விழுகிறது. இதைக்கண்டு மடநடை மஞ்ஞை வெருவுகிறது; கோழி வயப்பெடை இரிகின்றது; கேழல் ஓடி ஒளிகிறது; காட்டெருமை ஓட்டம் பிடிக்கிறது. “இதே நிலைதான் கடவுள் அருள் அருவி வெள்ளம் பொழியும் போதும். ஆண்டவன் அருளாகும் அருவி வீடுபேற்றின்பத்தைச் சுமந்துகொண்டு வந்தாலும் விலங்குணர்வுடையோர் அவ்வருளைத் துய்த்து வீடு பேற்றின்பத்தைப் பெறாமல் ஆற்றாது நெஞ்சம் அஞ்சி உடல் நடுங்கி ஓடிப்பதுங்கி ஒழிவர்.

# 3. பல்லவர் காலத்திற்கு முந்திய சைவம்

## காப்பிய காலம்

பல்லவர் காலம் கி. பி. மூன்றும் நூற்றுண்டிலிருந்து தொடங்குகிறது என்பது டாக்டர் கோபாலன் அவர்கள் கருத்து. ஆனுல் பேராசிரியர் ஈராசடிகள் பல்லவர் காலம் கி. பி. நான்காம் நூற்றுண்டின் இடையே தொடங்குகிறது என்று கூறியுள்ளார். என்றுலும் டாக்டர் கோபாலன் அவர்களின் கருத்தே பொதுவாகப் பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எனினும் பல்லவர் தம் திருந்திய, தெளிந்த ஆட்சி கி. பி. ஏழாம் நூற்றுண்டுக்குப்பின் தான் வலுப்பெற்றது என்று சொல்ல வேண்டும். சிவச்கந்தவர்மனுல் தொடங்கப்பெற்ற பல்லலர் ஆட்சி ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்குப் பின்னரே விளக்கம் பெற்றது. தமிழ் வரலாற்றின் பொற்காலமாகிய சங்க காலம் கி. பி. இரண்டாம் நூற்றுண்டோடு முடிவுற்றது என்று கூற வேண்டும். இச்சங்க காலத்தை ஒட்டியதுதான் காப்பிய காலம், இக்காலத்தில்தான் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமும், மனத்திற்கு மகிழ்வூட்டும் மணிமேகலையும் முறையே இளங்கோவாலும் சாத்தனுராலும் இயற்றப்பட்டன. சங்க காலத்தை அடுத்த காப்பிய காலத்தில் விளங்கிய சைவத்தின் நிலையை நமக்கு விளக்கிக்காட்டும் ஒளிப்படங்களாக இவ்விரட்டைக் காப்பியங்கள் நின்று ஒளிர்கின்றன. பல்லவர் காலத்துக்கு முற்பட்ட தமிழ் நாட்டில் நிலவிய சைவ சமயத்தைப்பற்றி ஆராய்வதற்கு இவ்விரட்டைக் காப்பியங்களைத் தவிர வேறு ஏற்ற கல்வெட்டுக்களோ, பட்டயச் சான்றுகளோ, புதை பொருட் சான்றுகளோ கிடைத்தில. இக்காப்பிய காலத்தில் தான்

சமய நெறியும் வழிபாட்டு முறையும் தமிழ் நாட்டில் மாற்றம் பெற்றன எனக் கூறவேண்டும். இக்காலத்தில்தான் வைதிக சமயம் தமிழ் நாட்டில் வேரூன்றத் தொடங்கியது; சமணமும் பௌத்தமும் கூடச் செல்வாக்குடன் விளங்கத் தொடங்கின, ஆனால் சமயங்கள் பலதோன்றிய போதிலும் அவை தம்முள் மாறுபடாது ஒன்றிக் கலந்து வாழ்ந்தன என்று கூறவேண்டும். எனினும் சாத்தனாரது மணிமேகலையின் வாயிலாக அவர் சமய மாறுபாட்டிற்கு வித்திட்டார் என்று எண்ண வேண்டியுள்ளது.

சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும், பத்துப் பாட்டிலும் எட்டுத் தொகையிலும் காணப்படாத கோயில் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. அவ்வாறு அக் காலக் கோயில்களைப் பற்றிப் பேசுகையில் புறச்சமயத்தைச் சேர்ந்த இளங்கோவும் சாத்தனாரும் சிவனுக்கு முதல் இடம் தந்து பேசுகின்றனர் என்பது குறிப்பிடத்தகுந்தது.

''பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்''

என்பது சிலம்பின் கூற்று.

''நுதல் விழி நாட்டத் திறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கப் பூத மீறாக''

என்பது மணிமேகலை மொழி.

இவை தவிர மணிமேகலை மற்றொரு குறிப்பு வழங்குகிறது. அது சைவசமய வரலாற்றிலேயே சிறப்பாகக்குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அது எது? அது 'சைவம்' என்ற சொல்லையும் சைவத்தின் காவலனாகிய சிவனது தன்மையையும் நமக்கு அறிவிக்கும் பகுதியாகும்.

''இருசுட ரோடு இய மானன்ஐம் பூதம் என்று
எட்டுவகை யுயிரும் யாக்கையுமாய்க்
கட்டி நிற்போனும் கலையுருவினோனும்
துடித்துத் துயர்தீர் தோற்றத் தோனும்

காலத்தில்தான் சமயக் கோயில்கள் பெருகிப் பலவாயின. எனினும் சைவ வைணவக் கோயில்களே நாடெங்கும் மிகுதியாகக் காணப்பட்டன. இக்கோயில்களைத்தான் பின் வந்த சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் பாடிப்பரவினர். அவர்கள் பாடிய பாக்களே முறையே தேவாரம், நாலாயிரப் பிரபந்தம் ஆகிய இலக்கியங்களாகி இன்றும் நின்று நிலவுகின்றன.

## கோயிலெடுத்த கோச்செங்கணன்

சோழன் கோச்செங்கணன் சிறந்த சிவனடியாராக விளங்கிய போதிலும், சைவத்தையும் வைணவத்தையும் தன் இருகண்களாகவே கருதி இருசமயங்களையும் செழித் தோங்கச் செய்தனன். திருக்கோயில்கள் பல எடுத்தனன். இவனது சிறப்பைத் திருமங்கை ஆழ்வார், "எண்தோள் ஈசற்கு எழில் மாடம் எழுபது செய்தோன்" என்று பாடி யுள்ளார். இவன்கோயில்கள் கட்டியதோடு அமையாது, தில்லைக்குத் தில்லை வனம், மதுரைக்குக் கடம்ப வனம், குற்றாலத்திற்குக் குறும் பலா, காஞ்சிக்கு மாமரம் என்று ஒவ்வொரு கோயிலுக்கும் ஒவ்வொரு மரத்தைத் தல விருட்சமாக்கினான். இவனால் கட்டப்பட்ட இச்சிறு கோயில்களே நாயன்மார்களும் ஆழ்வார்களும் பல்லா யிரக்கணக்கான பக்திப் பாடல்களைப் பாடுவதற்குக் கார ணமாக அமைந்தன என்று சொல்ல வேண்டும். இக்கோயில் களே பிற்காலச் சோழப் பெருவேந்தர்களால் பெருங் கோயில்களாக ஆக்கப்பெற்றன. இறையடியார்கள் பதிகங் கள் பாடிப் பைந்தமிழை வளர்ப்பதற்கும், சோழப் பெரு வேந்தர்கள் திருக்கோயிற் பணிகளில் ஈடுபடுவதற்கும் வித் திட்ட வேந்தன் இக் கோச்செங்கணனே ஆவான். எனவே இவ்வேந்தனைச் சைவர்களும் வைணவர்களும் என்றுமே மறத்தல் இயலாது. சைவ வரலாற்றில் இவனுக்குச் சிறந்த இடம் உண்டு. தில்லைப்பதியாகிய சிதம்பரத்தைச் சீரும் சிறப்பும் மிக்கதாகச் செய்த பெருமை இவனுக்கே உரியது.

இவன் தில்லையைச் செப்பனிட்டுப் பெருங்கோயிலாகத் திகழச் செய்த காரணத்தினால்தான் பிற்காலத்தில் தில்லை, 'கோயில்' என்னும் சிறப்புப்பெற்று, இன்று சைவத் தலங்களுள்ளே முதன்மை பெற்று விளங்குகின்றது. பெரிய புராணத்தில் பேசப்படும் புகழ்ச்சோழ நாயனாரும் இவ்விருண்ட காலத்தில் வாழ்ந்தார் என்று கருதப்படுகின்றது.

## திருமூலர் தந்த திருமந்திரம்

முன்னர்க் கூறியபடி இந்த இருண்ட காலத்தில்தான் வளமான தமிழகம் வலிவை இழந்தது; பாராண்ட பழந் தமிழ் மூவேந்தர்கள் நிலை குலைந்தனர்; சங்க காலத்தே செழிப்புற்று வளர்ந்த செந்தமிழ் மொழி மங்கத் தலைப்பட்டது. எனவே தமிழக வரலாற்றிலே ஒரு கறையிருக்குமானால் அது களப்பிரர் ஆட்சி என்னலாம். இவ்விருண்ட காலத்திலேதான் சேற்றிலே செந்தாமரை முளைத்தது போலத் திருமூலர் தோன்றினார்; இருண்ட தமிழகத்திலே ஒளி ஏற்றினார்; தமிழ் மக்களின் அக இருளைப் போக்க ஓர் அரிய கலங்கரை விளக்கம் ஏற்படுத்தினார். அதுதான் அவர் அருளிச் செய்த திருமந்திரம் எனும் அரிய பெரிய நூலாகும். சைவத் திருமுறைகளிலே காலத்தால் முந்தியது திருமந்திரமே. திருமந்திரத்திற்கு மூன்று சிறப்புக்களுள. ஒன்று தொன்மைச் சிறப்பு; மற்றொன்று தமிழகமே உயிரற்று, உணர்வொழிந்து ஒடுங்கிக் கிடந்த காலை தோன்றிப் பேரொளி பரப்பியமை; மூன்றாவது அது அருமைத் தமிழ் மொழியில் அமைந்திருத்தல்.

திருமந்திரத்தை நமக்குத் தந்தருளிய திருமூலரது பொன்னான வரலாறு சேக்கிழார்பெருமானால் விரித்துரைக்கப்பட்டுள்ளது. திருவாவடுதுறைப் புராணத்தில் திருமூலரைத் தடுத்தாட்கொண்ட சருக்கத்திலும் இவரது வரலாறு பேசப் படுகிறது. இவர் காலத்தைப் பலர் ஆராய்ந்தனர். அவ்வாராய்ச்சியாளருள் ஒருவராகிய டாக்டர் இரமணசாத்திரியாரவர்கள் திருமூலர் காலம் கி. பி. ஆறாம்

நூற்றாண்டாகலாம் என்று கூறியுள்ளார். இந்நூற்றாண்டில் வாழ்ந்த மற்றொரு சிவனடியார் காரைக்கால் அம்மையார் ஆவார். திருமந்திரம் மூவாயிரம் பாடல் கொண்டது. ஒன்பது இயல்களாகப் பகுத்துரைக்கப் பட்டுள்ளது. ஒவ்வோரியலும் தந்திரம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இத்திருமந்திரத்தின் மூலம் அக்காலச் சைவ சமயத்தின் நிலையை நாம் நன்கறியலாம். திருமந்திர ஆசிரியராகிய திருமூலர் சித்தரும் சிவயோகியும் ஆவார். மூலன் என்னும் இடையன் திடீர் என்று இறக்க, அவன் மேய்த்து வந்த ஆடு மாடுகள் வருந்தும் நிலைகண்டு, அவன் உடலிற் புகுந்து ஆடு மாடுகளுக்கு இன்பம் வரச் செய்தவர். பின்னர் அப்படியே அவன் வடிவில் இருந்து திருமந்திரத்தைப் பாடியருளினர். இவரது கோயில் திருவாவடுதுறைத் திருமடத்தில் உள்ளது.

திருமந்திரத்தின் நடையில் எளிமை நடம் புரியும். ஆனால் சொல்லிலே திட்பமும் பொருளிலே நுட்பமும் செறிந்து காணப்படும். கரை புரண்டு செல்லும் காவிரியின் மேற்பரப்பிலே அமைதியே தோன்றும். ஆனால் ஆற்றின் கடுவேகம் அதில் கால் வைத்த போதுதானே தெரிகிறது. அதுபோலத் திருமந்திரம் பார்ப்பதற்குத் தான் எளியதாகத் தெரிகிறதே தவிர, சற்று உள் நுழைந்தால், அப்பொழுது தெரியும் திருமந்திரத்தின் பொருளாழம். இதை ஆங்கிலத்தில் "Deceptive Simplicity" என்பர். திருமந்திரத்தைப் படிப்பாரை எளிதிலே உளங் கவருவன அதிலே அங்கங்கே காணும் அருமையான சொற்றொடர்களாகும். அந்தச் சொற்றொடர்களின் அமைப்பிலே ஒரு கவர்ச்சியுண்டு; படிப்பின் உளங் குளிரும். அவற்றில் சில வருமாறு:—

**"அகத்திற் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்" (2944)**

**"இறக்கின்ற காலத்தும் ஈசனை உள்கும்" (2108)**

**"உண்டி சுருங்கின் உபாயம் பலவுள" (735)**

"உள்ளம் பெருங் கோயில் ஊனுடம் பாலயம்" (1823)
"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" (2104)
"நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" (85)
"முத்திக்கு வித்து முதல்வன் ஞாலமே" (2506)

சொல்லிலோ சுருக்கம்; நடையிலோ அழகு சொட்டுகிறது. கருத்திலோ கங்கையின் ஆழமும் இந்துமாக் கடலின் பரப்பும் தென்படுகின்றன. இத்தகைய சொற்றொடர்களைச் சூத்திரங்கள் என்றே சொல்லலாம். இவற்றை "Epigrams" எனினும் பொருத்தமே. சைவ சித்தாந்தப் பேரறிஞர்க்கும் எளிதிலே விளங்காத தத்துவக் கருத்துக்களைக் கூட நகைச்சுவைபடக் கூறுவதில் திருமூலருக்கு இணை அவரே.

"திகைக்கின்ற சிந்தையுள் சிங்கங்கள் மூன்று
நகைக்கின்ற நெஞ்சுள் நரிக்குட்டி நான்கு."

"தாவாரம் இல்லாதான் தனக்கொரு வீடில்லை
தேவாரம் ஏதுக்கடி குதம்பாய்
தேவாரம் ஏதுக்கடி."

"மாங்காய்ப் பாலுண்டு மலைமே லிருப்பார்க்குத்
தேங்காய்ப் பால் ஏதுக்கடி குதம்பாய்
தேங்காய்ப் பால் ஏதுக்கடி."

தமிழிலக்கணத்தில் உள்ள சிறப்பான பகுதிகளுள் ஒன்று வேற்றுமையுடைமையாகும். வேற்றுமைகளின் அருமையும் அவற்றின் பிரிவு நுட்பமும் பெருமையும் தமிழிலக்கணம் கற்றோர்க்கே தெரியும். அத்தகைய வேற்றுமையைத் திருமூலர் திருத்தமாகவும் தெளிவாகவும் பல இடங்களில் கையாண்டுள்ளார். அவற்றுள் ஒன்று வருமாறு:—

"மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை."

திருமந்திரத்திலே நமக்கு அறிவொளியும் அறவொளியும் ஊட்டி, நல்வாழ்வை நல்கவல்ல பல கருத்துக்கள் பொதுளியுள்ளன. அந்நாலில் இரண்டு பேருண்மைகள், கோட்பாடுகள் விளங்கித் தோன்றுகின்றன. அவை அழியாப் பெருநெறிகள்; என்றும் நின்று நம்மை வாழ்விக்க வல்லவை; போரிடைச் சிக்கி உழலும் உலகுக்குப் பேருதவி புரியத் தக்கவை. அவை எவை? அவை அன்பே சிவம்; சமரசமே சைவம் என்க. இவை இரண்டையும் கூறுகளாகக் கொண்ட அழியாப் பெருநெறியை ஆல்டசு ஹக்சிலி (Aldous Huxely) என்பவர் "நிலையான தத்துவம்" (Perennial Philosophy) என்பர். இத்தகைய அழியாப் பெருநெறியைத் திருமூலர் மூவாயிரம் பாடல்களிற் கூறி விளக்கியுள்ளார்.

அன்பே சிவம் என்பது திருமூலரின் அடிப்படைக் கொள்கைகளுள் ஒன்று. இது எச்சமயத்தினர்க்கும் எக்காலத்துக்கும் ஏற்ற ஒரு கோட்பாடாம்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்."

அன்பு இருவகைப்படும். ஒன்று உணர்ச்சியின் அடிப்படையில் எழுவது; மற்றொன்று அறிவின் அடிப்படையில் எழுவது. இவற்றுள் என்றும் நின்று வலிவோடும் பொலிவோடும் விளங்க வல்லது அறிவின் வாய்ப்பட்ட உண்மை அன்பே. அதனை,

"அன்புறு சிந்தையின் மேலெழும் அவ்வொளி"

என்பர் திருமூலர். இத்தகைய மெய்யறிவின் பாற்பட்ட அன்புகொண்டு ஒழுகுபவரே இறைவனைக் காணவும் அவனடி பணியவும் வல்லார் என்பது திருமூலர் கருத்து.

"என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போல் கனலில் பொரிய வறுப்பினும்

அன்போ டுருகி அகம் குழைவார்க் கின்றி
என்பொலா மணியினை எய்த ஒண்ணாதே.''

சைவமும் வைணவமும் ஒருகொம்பில் கனிந்த இரண்டு பழங்கள்; ஒரு தாய் வயிற்றுச் சேய்கள். ஆனால் இந்த உண்மையைச் சைவரும் உணருவதில்லை; வைணவரும் மதிப்பதில்லை; மாறுகப் போரிட்டுக் குமுறுகின்றனர். இத்தகைய சமயப் போராட்ட வீரர்களைப் பார்த்து,

''ஆதிப் பிரமனும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத்து அலர்மிசை யானும்
சோதிக்கில் மூன்றும் தொடர்ச்சியில் ஒன்றெனர்
பேதித்து உலகம் பிணங்குகின்றார்களே''

என்று திருமூலர் வருந்துகிறார்.

நம் திருமூலரின் சமரச நெறி இம்மட்டோ! இந்துச் சமயக் கடவுளரான மும்மூர்த்திகளுள் உயர்வு தாழ்வு கற்பிப்பாருக்கு அவர் மறுமொழி கூறுவதோடமையாது அறிவுரையும் புகட்டுகிறார்.

''ஒன்றது பேரூர்; வழி ஆறு அதற்குள;
என்றது போல இருமுச் சமயமும்
நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயை ஒத்தார்களே.''

''இத்தவம் அத்தவம் என்று இருபேரிடும்
பித்தரைக் காணின் நகும் எங்கள் பேர்நந்தி
எத்தவம் ஆகிலென்? எங்குப் பிறக்கிலென்?
ஒத்துணர் வார்க்கு ஒல்லை ஊர்புகலாமே.''

வாழ்க்கையிலே நன்னெறி விலகிப் புன்னெறி புகுந்து நல்லவை ஒருவி அல்லவை மருவி இடர்ப்படுவார்க்குத் திருமந்திரம் அறிவு கொளுத்தி அறவழிப் படுத்தும் ஓர் அருமை நூலாகும். அதில் மழை, செல்வம், ஆட்சி, கல்வி, கேள்வி, ஒழுக்கம், கருவுறல், உடலோம்பல், காலநிலை, வானியல்,

கோள்நெறி, ஆயுள் வகை, மருத்துவமுறை, பொருட் கலவை, மூச்சொழுங்கு, மனஒருமை, நாடி நலம், அறிவொளி, ஒலி இயக்கம், உணர்வு மாட்சி, அருள்வீறு முதலிய நல்வாழ்க்கைக் குறிப்புக்கள் நுட்பதிட்பமான விளக்கம் பெறுகின்றன. நாலுணர்ச்சியால் அறிந்து கொள்ள இயலாத நுண்ணிய உண்மைகளையும் திருமூலர் தம் தவ யோக ஞான நிலைகளாற் கண்டு விளக்கியிருக்கின்றார்.

"நல்லவர் வாழ நல்லுணர்வுகள் பரவும்; அவை நுண்பொருள்களை இயக்கும்; அதனால் மழை பொழியும்; அறம் ஓங்கும்; மறம் தேயும்; அருள் பெருகும்; உலகத்துயர் தீரும்" என்று பாயிரம் கூறுகிறது. நூலின் ஒன்பது தந்திரங்களும் முறையே நல்லொழுக்கம், அறவாழ்க்கை, யோகப் பழக்கம், மந்திர நுட்பம், சமய ஒழுக்கம், குருநெறி நிற்றல், அகப்புற உணர்வு, அருள் நுகர்வு, பெரு வாழ்வு எனும் பொருள்களை விளக்குகின்றன. முப்பொருள், மூவகை உயிர்கள், மும்மலம், முப்பத்தாறு தத்துவங்கள், நால்வகை நெறிகள், திருநீறு, இருள் வீழ்ச்சி, திருவைந்தெழுத்து, திருக்கூத்து முதலிய சித்தாந்தச் சமய நெறிகளும், முறைகளும், குறியீடுகளும் நூல் முழுவதும் வருகின்றன. மேலும் எங்கும் யோகப் பயிற்சியைச் சிறப்புறக் கூறுகின்றார். "அன்பே சிவம்" என்பது தான் திருமந்திரத்தின் உள்ளொளி. சிவ நிலை என்னும் தூய உணர்வு நிலை என்பது அவா என்னும் அழுக்கு நீங்கிய நிலையாகும். அவாவினை அறுப்பது அன்புணர்வே. இது போன்ற காலங் கடந்து நிற்கும் கோட்பாடுகள் எத்தனையோ பல இம்மந்திர நூலிலே புதையுண்டு கிடக்கின்றன.

திருமூலருக்கு முன் தமிழ் நாட்டில் தமிழில் சைவசித்தாந்த நூல் இல்லை. எனவே அவர் செய்த திருமந்திரமே சைவசித்தாந்த முதல் நூல் என்பது தெளிவு. ஆதலின் இந்நூல், பின்வந்த அப்பர், சுந்தரர் முதலிய சைவ அடியார்கட்கும், அவர்களால் பரப்பப்பட்ட சைவ சமயத்திற்கும் ஆதார நூலாயிற்று. திருமூலர் தமது திருமந்திரத்தில்

நியாயம், வைசேசிகம், சாங்கியம், யோகம், மீமாம்சை, வேதாந்தம் என வேதங்களிலிருந்து கிளைத்த ஆறு உட்பிரிவுகளைக் கூறுகிறார். அத்துடன் அவர் காலத்து விளங்கிய பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், பைரவம், என்பன சைவத்தின் உட்பிரிவுகள் என விளக்கியுள்ளார். திருமந்திரத்தின் மூலம் திருமூலர் காலத்துச் சைவம் சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், கடுஞ்சுத்த சைவம் என்று நால்வகையாக விளங்கிற்று என அறியலாம்.

திருமூலர் சிவனைப் பற்றி முற்காலத்து விளங்கிய கதைகளுக்குத் தத்துவப் பொருள் கூறியுள்ளார். முப்புரம் எரித்தமைக்குரிய பொருள் வருமாறு :

**"அப்பணி செஞ்சடை ஆதிபுராதனன்**
**முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்**
**முப்புர மாவது மும்மல காரியம்**
**அப்புரம் எய்தமை யாரறி வாரே."**

இது போன்றே சிவன் நஞ்சுண்டமைக்கும், மாலு மயனும் அடிமுடி தேடினமை முதலிய கதைகளுக்கும் தத்துவக் கருத்துக்கள் கூறியுள்ளார்.

"சிவனுக்கு நிகராகும் தெய்வம் வேறில்லை; அவன் பிறப்பு அற்றவன்; பேரருளாளன்; யாவர்க்கும் இன்பம் அருள்வான்; அவனைத் தொழுங்கள்; ஞானம் பெறலாம்; அவனை எந்த வகையிலும் ஏத்தலாம்; அவன் அருள் புரிவான்"—இதுவே திருமூலர் நமக்கு வழங்கிய அறிவுரை.

## கனிபெற்ற காரைக்கால் அம்மையார்

காரைக்காலில் வணிகர் மரபில் தோன்றிய தனதத்தரின் புதல்வியாகிய புனிதவதியாரே காரைக்கால் அம்மையாராவார். புனிதவதியாரின் கணவர் பரமதத்தன் ஆவார். அம்மையாரது கணவர் ஒருநாள் இரண்டு மாம்பழங்கள்

கொண்டு வந்து அவரிடம் கொடுத்தார். சிவனடியார் ஒருவரின் பசியைத் தணிக்கக் கறியமுதுக்குப் பதிலாக அம் மாம்பழங்களில் ஒன்றைப் புனிதவதியார் அரிந்து வைத்து உணவு படைத்தார். இதற்குக் காரணம் சமையல் முடியு முன் அவ்வடியார் வந்தமையே ஆகும். பிறகு மற்றொரு கனியை அவர் தம் கணவருக்குப் படைத்தார். கனி கற்கண்டினுமினிய சுவை பயக்கவே பரமதத்தன் மற்றொரு கனியினையும் தனக்குப் படைக்கும்படிக் கூறினார். அன்னையார் முதலில் செய்வதறியாது திகைத்து நின்றார்; கண்கள் கலங்கினார்; இறுதியில் இறைவனை வணங்கினார். கனியும் பெற்றார். கணவனுக்குப் படைத்தார். உண்மையை அறிந்த கணவர் அவரைத் தெய்வமாகக் கருதி, உடன் வாழ அஞ்சி, அவர் அறியாது பாண்டிய நாட்டிற்குச் சென்று வேறொரு பெண்ணை மணந்து வாழ்ந்தார். இதனை யறிந்த அன்னையார் வனப்பு மிகுந்த ஊனுடலில் உள்ள ஊனை உதறி விட்டு, எலும்புடம்புடையராய்க் கைலாயம் சென்று இறைவனைக் கண்டுகளித்து, அவர் கட்டளைக் கிணங்கத் திருவாலங்காட்டில் சிவனது திருநடனத்தைக் கண்டு மகிழ்ந்த வண்ணம் அவனது திருவடி நீழலில் என்றும் நீங்கா அன்புடன் இன்புற்றிருந்தார். சிவபெருமான் இவரை அம்மையே என்று அழைத்த காரணத்தினால் காரைக்கால் அம்மையார் என்ற திருப்பெயர் பெற்றார்.

அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, மூத்த திருப்பதிகம் என்பவை அம்மையார் அருளிச்செய்த நூல்களாகும். இவை இனிய பொருளும் பேரன்புச் சுவையும் உடையனவாகும். இவற்றுள் அற்புதத் திருவந்தாதி என்னும் நூல் முற்றிலும் வெண்பாவால் ஆனது. இறைவனிடம் வேண்டிப் பேய் வடிவத்தைப் பெற்ற பின்னர் இந்நூலை அம்மையார் பாடியருளினார். சுருங்கக் கூறின் இது சிவபெருமான்மீது பாடப்பெற்ற ஒரு தோத்திர நூலாகும். மூத்த திருப்பதிகம் என்னும் நூல் திருவாலங்காட்டு இறைவர்மீது அம்மையார் பாடிய திருப்

பதிகமாகும். தேவாரப்பதிகங்களே திருப்பதிகம் என்னும் சிறப்புக்குரியன. அப்பதிகங்களுக்கு முன்னர் இப்பதிகம் பாடப்பட்ட காரணத்தால் இதற்கு மூத்த திருப்பதிகம் என்னும் பெயர் ஏற்பட்டது.

காரைக்கால் அம்மையார் தமது பாடல்களில் சிவனை இரண்டு வகையில் வைத்துப் பாடுகின்றார். சிவனை முழு முதற் பொருளாக வைத்துப் பாடல் ஒரு முறை; சடையும் பிறையும் நுதல்விழியும், பாம்பும் கொண்டு, கங்கை, உமை ஆகிய இருவரையும் உடன் கொண்டு விளங்கும் சிவனது வடிவத்தைப் பாடல் மற்றொரு வகை.

"உலகைப் படைத்துத் துடைப்பவன்; அவன் அருளாற் காணத் தக்கவன்; அறிவு வடிவினன்; நிலம் நீர் தீ முதலியவற்றை உருவகமாக உடையவன்; ஒளி வடிவினன்; ஒருருவும் இல்லாதவன்; என்றும் அன்பர் நினைந்த உருவில் வருபவன்; நினைப்பவர் மனத்தைக் கோயிலாகக் கொண்டவன்; அவனுடைய அருளே முதன்மையானது; எனவே அவனை நெஞ்சில் வைத்து வழிபடுதல் வேண்டும்; அவனுக்குத் தொண்டு செய்வதே கடன்; அதுவே அவனருளைப் பெறற்கு வழி"—இவை போன்ற இறைவனது முழுமுதற் பொருண்மை பற்றிய கருத்துக்களை இவரது பாடல்களில் காணலாம். இறைவன் அறிவு வடிவினன் என்பதைக் கூறும் பாடல் சுவை மிக்கதாகும்.

"அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே — அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பார் ஆகாயம்
அப்பொருளுந் தானே அவன்."

இறைவனது வடிவத்தைப் பற்றிப் பாடுங்கால் சடையொடு கூடிய சிவன் அணிந்திருக்கின்ற பாம்பை விலக்கல் வேண்டும் என்கிற கருத்தால்,

"அரவம் மூன்றுகத்து நீநயந்து பூணேல்
பரவித் தொழுதிரந்தோம் பன்னாள்"
"இலகமெலாம் இரப்பினும் நின்னுடைய
தீய அரவு ஒழியச் செல்"

என்று பாடியுள்ளார். இவர் கற்றைச் சடையான் ஆடலிலே பெரிதும் ஈடுபாடுடையவர் என்பதையும், அவனது திருவடியை அடைவதால் எய்தும் சிறப்பினைப் பெரிதும் விரும்பினார் என்பதையும் பின்வரும் பாடல்களால் நன்கு அறியலாம்.

"இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான்
மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போதுன் அடியின் கீழிருக்க
என்றார்."

[சேக்கிழார்]

"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்."

[காரைக்கால் அம்மையார்]

# 4. பல்லவர் காலச் சைவம்

## சமயப் புரட்சி

கி. பி. 600 முதல் 900 வரை பல்லவர் சிறக்க வாழ்ந்த காலமாகும். இக்காலத்தில் தமிழகம் பல வகையிற் சிறந்தோங்கி விளங்கியது. தமிழக வரலாற்றினைத் திட்டவட்டமாகத் தெரிந்துகொள்வதற்குப் பெரிதும் உதவும் செப்பேடுகள், கல்வெட்டுக்கள், கலைக்கோயில்கள், இலக்கியங்கள் ஆகியன இக்காலத்தில் உருவாயின. தமிழ் நாட்டு வரலாற்றையும் வாழ்க்கை நெறியினையும் பல்லவர் காலத்து எழுந்த இலக்கியங்கள் என்றென்றும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. மேலும் பல்லவர்களால் எழுப்பப்பட்ட கற்கோயில்களும், கல் மண்டபங்களும், எழுதப் பெற்ற ஓவியங்களும், செதுக்கப்பட்ட சிற்பங்களும் இன்றும் நின்று அவர்தம் புகழ் பரப்பிக் கொண்டிருக்கின்றன. பல்லவர் காலத்தில் தோன்றிய பல்வேறு கலைகளும், இலக்கியங்களும், சமயக் கோட்பாடுகளும், இன்றளவும் நம்மோடு பிணைந்தே காணப்படுகின்றன. கலையையும் கல்வியையும் போற்றி வளர்த்த பல்லவப் பெருவேந்தர்கள் சைவத்தையும் வைணவத்தையும் வீறுபெற்றோங்கச் செய்தனர். இவ்விரு சமயங்களோடு புத்தமும் சமணமும் இக்காலத்தில் தமிழகத்தில் நன்கு வாழ்ந்தன என்றே சொல்லவேண்டும். ஓரிரு மன்னர்கள் தவிர ஏனையோர் அவைகளுக்கும் ஆக்கம் அளித்து வந்தார்கள். கருங்கற் பாறைகளைக் குடைந்து கோயிலாக்கியும், பின் அவற்றைப் பிளந்தெடுத்துக் கோயில் கட்டியும் சமயத்தோடு கலையையும் பிறவற்றையும் வளர்த்த பெருமை பல்லவர்க்கே உரியது. இக்காலத்தில்தான் சைவம் வெகு விரைவாக வளரலாயிற்று. மூவர் தமது திருப்பாக்களால் நாடெங்கும் சைவப் பேரொளி பரவுமாறு செய்தனர். அப்பர் சைவ

சமய வளர்ச்சிக்காக உடல், பொருள், உயிர் மூன்றையும் அர்ப்பணம் செய்தார். சம்பந்தர் நீரையும் நெருப்பையும் எதிர்த்துப் போராடினார். இருவரும் தெய்வ மணங்கமழும் தேவாரப் பாக்கள் பாடிப் பரமனை வழுத்தினர். நாளடைவில் சைவம் ஆட்சியிலும் இடம் பெற்றது; மக்கள் உள்ளங்களிலும் குடிகொண்டது. கோயில்கள் பெருகின. கோயில்களிலே தேவாரப் பதிகங்கள் முழங்கின. பிற சமயங்கள் தங்கள் வலுவை இழக்கலாயின. இக்காலத்தைத் தேவார காலம் என்று கூறினும் பொருந்தும்.

## சைவம் போற்றிய பல்லவ அரசர்கள்

கி. பி. 615—630 வரை தமிழகத்தை ஆண்ட பல்லவப் பெருவேந்தன் மகேந்திரவர்மன் முதலில் சமணனாக இருந்து சமண சமயத்தைப் பெரிதும் போற்றி வந்தான். இவன் காலத்தில்தான் மூவரில் ஒருவராகிய அப்பர் பெருமான் வாழ்ந்தார். அப்பரும் முதலில் சமணராக இருந்து, சமய நூல்களை நன்கு கற்றுத் தெளிந்து தருமசேனர் என்னும் பட்டம் பெற்றுச் சமணர்தம் தலைவராக விளங்கினார். ஒருகால் கொடிய சூலை நோய் அவரை வாட்டி வதைத்தது. சமணரால் அதை நீக்க இயலவில்லை. அவர் தமது தமக்கையாகிய திலகவதியாரிடம் வந்து திருநீறு வாங்கி அணியவே சூலை நோய் அகன்றது. அதனால் அவர் சைவரானார். பல ஆண்டுகள் சமண சமயத் தலைவராக விளங்கிய அப்பரே சமயம் மாறியதால் தொண்டை நாட்டில் சமண சமயச் செல்வாக்குக் குறையத் தலைப்பட்டது. இதனைக் கண்ட சமண முனிவர்கள் மன்னன் மகேந்திரனிடம் சென்று முறையிட்டனர். மன்னனும் அப்பரை மீண்டும் சமணராக்க முயன்றான்; இன்னல்கள் பல அவருக்கு இழைத்தான். இறுதியில் அம்முயற்சியில் அவன் தோல்வியுற்றான்; மனம் மாறினான்; மதமும் மாறினான். சமணனாக இருந்த அவன் சைவனாக மாறினான். திருவதிகையில் சிவனுக்குக் கோயிலொன்று எழுப்

பின்னன். திருச்சிராப்பள்ளியிலும் சிவனுக்காக ஒரு குகை வரைக் கோயிலை அமைத்தான். அங்கு காணும் இரண்டு கல்வெட்டுக்களில் ஒன்றில் "மாறுபட்ட நெறியிலிருந்து குணபரன் திரும்பினான். அவனால் நிறுவப்பட்ட இந்த இலிங்கத்தின் புகழ் உலகெல்லாம் பரவட்டும்" என்று பொறிக்கப்பட்டுள்ளது.

மாமண்டூர், குடுமியாமலை, சீயமங்கலம், மகேந்திர வாடி முதலிய இடங்களிலும் கோயில்களைக் குடைவித்தான். அவற்றுள் பல சிவன் கோயில்களாகும். மேலும் இவன் காலத்தில் பெரிய கோயில்களில் ஆட்சியாளரும் பணி மக்களும் இருந்தனர். இசையும் நடனமும் இம் மன்னனால் பெரிதும் போற்றப்பட்டன. இவன் வடமொழியில் 'மத்த விலாசப்பிரகசனம்' என்னும் சிறு நாடக நூலொன்று எழுதினான். அந்நூலில் இறைச்சி தின்னும் புத்தத் துறவி, விரதம்விட்ட பாசுபதன், ஒழுக்கம் கெட்ட கபாலிகன், கபாலினி ஆகியோர் படம் பிடித்துக் காட்டப் பட்டுள்ளனர்.

மகேந்திரனுக்குப் பின் அவன் மகன் மாமல்லனாகிய நரசிம்மவர்மன் பட்டமேறினான். சிறுத்தொண்டர் எனப் படும் பரஞ்சோதியார் அவனது தளபதியாக இருந்தார். இதற்குப் பெரியபுராணம் சான்று பகருகின்றது. மாமல்லன் சமயப் பொதுநோக்கு உடையவன். இவன் மாமல்லபுரத்தில் ஒற்றைக்கல் கோயில் பணியைத் தொடங்கி வைத்தனன். பஞ்சபாண்டவர் இரதங்கள் என்று வழங்கப்படுவனவற்றுள் பல சிவன்கோயில்களாகும். இவன் காலத்தில்தான் வாக்கின் வேந்தர் அப்பரும் ஞானக்குழந்தை சம்பந்தரும் தமிழகத்தில் சைவப் பிரசாரத்தை விடாது செய்து வெற்றிபெற்றனர். இவ்விருவரும் பல அடியார்களோடு தலந்தோறும் போய்ப் பதிகம்பாடி இறைவனைப் பரவி மகிழ்ந்தனர். இவ்விருவரது முயற்சியால் தமிழகத்தில் சைவ மறுமலர்ச்சி ஏற்பட்டது. இக் காலத்தில்தான் பாண்டிய மன்னன் நெடுமாறன் சமணனாக

விளங்கினன். எண்ணாயிரம் சமணத் துறவிகள் பாண்டிய நாட்டில் வாழ்ந்து வந்தனர். ஆனைமலை, நாகமலை முதலிய மலைக்குகைகளில் அவர்கள் தங்கள் இருப்பிடங்களை அமைத்திருந்தனர். சோழ நாட்டு இளவரசியும் நெடுமாறனது மனைவியுமாகிய மங்கையர்க்கரசி சைவப்பற்று மிகுந்தவள். பாண்டிய நாட்டு அமைச்சர் குலச்சிறையாரும் சைவர். இவ்விருவரது வேண்டுகோளின்படி நற்றமிழ் பாட வல்ல ஞானசம்பந்தர் பாண்டிய நாடு வந்து மதுரையில் ஒரு மடத்தில் தங்கி இருந்தார். இதனையறிந்த சமணர் அம்மடத்துக்குத் தீவைத்தனர். அதுகால் சம்பந்தர் பதிகம் பாடவே, அத் தீயானது பையவே சென்று பாண்டியனைப் பற்றியது. பின்னர் மங்கையர்க்கரசியார் வேண்டுகோளின்படி சம்பந்தர் பதிகம் பாடி மன்னனது வெப்பு நோயை அகற்றினர். இதற்கிடையில் சமணர் தம் மந்திரங்களினால் மன்னனது நோயை நீக்க முயன்று தோல்வியுற்றனர். இதன் காரணமாய்ப் பாண்டிய மன்னன் மனம் மாறினன். இதன் பின்னர் சம்பந்தருக்கும் சமணருக்குமிடையே அனல் புனல் வாதங்கள் நடைபெற்றன. சமணக் கொள்கைகள் எழுதப்பட்ட ஏடும், சைவக் கொள்கைகள் பொறித்த ஏடும் தீயிலிடப்பட்டன. சமண ஏடு எரிந்தது; சைவ ஏடு எரியாதிருந்தது. இது அனல் வாதமாகும். இவ்வாறே சமண சைவ ஏடுகள் வையை நீரில் இடப்பட்டன. சைவ ஏடு மாத்திரம் நீரை எதிர்த்து நின்றது. இவ்விடம் இன்று திருவேடகம் என்று வழங்கப்படுகின்றது. இவ்வூர் சோழவந்தானுக்கு அருகில் உள்ளது. சமணர் ஏடு நீரோடு சென்றது. இதுவே புனல் வாதமாகும். இவ்வாறு சம்பந்தர் இரு வாதங்களிலும் வெற்றி பெறவே, பாண்டிய மன்னன் மறுபடியும் சைவனாக மாறினன். தோற்ற சமணர் கழுவேற்றப்பட்டனர் என்று சொல்லப்படுகின்றது. இக்கதைக்கு அகச்சான்றும் இல்லை, புறச் சான்றும் இல்லை என்கிறார் திரு. வி. க. இதன் பின்னர் பாண்டிய நாட்டில் சமணர் செல்வாக்கு அடியோடு அழிந்தது; சைவம் தழைத்தோங்கியது. புத்த

மங்கையில் (போதிமங்கை) இருந்த புத்தக் குருவினைச் சமய வாதத்தில் சம்பந்தர் வெற்றி கொள்ளவே புத்த சமயச் செல்வாக்கும் அழியத் தொடங்கியது. அப்பர் பெருமானும் இவ்வாறே தொண்டை நாட்டிலும், பிற தமிழ்ப் பகுதிகளிலும் தல யாத்திரை செய்து பதிகங்கள் பாடிப் பைந்தமிழையும் சைவத்தையும் ஒருங்கே பரப்பினர். அப்பரது பெருமுயற்சியால் பழயாறையில் சமணர்தம் செல்வாக்கு மறைந்தது, இவ்வாறு அப்பரும் சம்பந்தரும் சமணரும் புத்தரும் செல்வாக்குடன் விளங்கிய இடங்களுக்கெல்லாம் சென்று சைவத்தின் புகழை நிலை நாட்டினர். இதன் காரணமாய் நாட்டு மக்கள் அனைவரும் சைவத்தின் மேன்மையை உணர்ந்து சைவ சமயத்தை மேற்கொண்டனர். மேலும் மக்களை ஈர்க்கும் வண்ணம் இசை, நாடகம், நடனம் ஆகிய கலைகள் கோயிலில் கால்கொண்டன. பூசனையும் விழாக்களும் சிறப்புற நடந்தன. மன்னரும் செல்வந்தரும் கோயில் திருப்பணிகளுக்கு, அறங்களுக்கு வரையாது வழங்கினர். சிவனடியார்களுக்குச் சமுதாயத்தில் பெருமதிப்பு ஏற்பட்டது. சிவனடியார்கள் சைவசமயக் குரவர் என வழங்கப்பட்டனர் இக்காலத்தில்தான் சிறுத்தொண்ட நாயனர், முருக நாயனர் போன்றவர்களும் முழு மூச்சுடன் சைவத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டனர்.

கி. பி. 670 முதல் 685 வரை பல்லவப் பெரு நாட்டை ஆண்ட பரமேச்சுரன் அழுத்தமான சிவபக்தன். 'சிவனை நினையாதவர் நரகத்திற்குப் போவார்' என்று இவனது கல்வெட்டுக் கூறுகிறது. இவன் உருத்திராக்கச் சிவலிங்கக் கிரீடம் அணிந்திருந்ததாகச் சொல்லப்படுகின்றது. கருங்கற்களை அடுக்கி முதல் முதல் கோயில் கட்டுவித்தவன் இவனே. காஞ்சியை அடுத்த கூரத்தில் சிவனுக்காக இக் கோயில் கட்டப்பெற்றது. இவனுக்குப் பின் இவன் மகன் இராசசிம்மன் (கி. பி. 666—705) பல்லவ அரசனுனன். இவன் முதன் முதலில் கருங்கற்களைக் கொண்டு

சிவன் கோயிலைக் காஞ்சியிற் கட்டுவித்தான். அதுவே
புகழ் பெற்ற காஞ்சி கைலாச நாதர் கோயிலாகும். அக்
கோயில் அமைப்பு தமிழகத்திலேயே புதுமையான அமைப்
பாகும். சிறந்த சைவனாக விளங்கிய இம்மன்னன்
மகேந்திரனைப் போன்று கலைப்பற்றுடையவனாக விளங்
கியமையால், இசை, நாடகம், நடனம் ஆகிய மூன்றையும்
குறிக்கும் அழகிய சிற்பங்களை இவன் கட்டிய இக் கோயி
லில் இன்றும் காணலாம். சிவன் ஆடிய நடன வகை
களைக் காட்டும் சிற்பங்கள் உள்ளத்தைக் கொள்ளை
கொள்ளுவனவாகும். மாமல்லபுரத்தில் உள்ள தலசய
னப் பெருமாள் கோயிலும் இவனால் கட்டப்பட்டதே.
இம்மன்னது காலத்தில் பூசலார் நாயனார் வாழ்ந்து வந்தார்
என்பது அறிஞர் கருத்து. அவர் வாழ்ந்த திருநின்ற
வூரில் (திண்ணனூர்) உள்ள சிவன் கோயிலில் அவரது
உருவச் சிலையை இன்றும் காணலாம். அவர் மனக்
கோயில் கட்டிய மாதவர் ஆவார், இதனைப் பெரியபுரா
ணம் நன்கு எடுத்துக் கூறுகின்றது. காடவர்கோனாகிய
இராசசிம்மன் கட்டிய கோயிலில், அவன் இறைவனைக்
கோயில் கொள்ளச் செய்த நாளும், பூசலார் மனக்கோயில்
நாளும் ஒன்றாக அமையவே, இறைவன் நாளை மாற்றச்
சொல்லி மன்னனுக்கு வானொலி வழி கட்டளை இட்
டான் என்று பெரியபுராணம் புகலுகின்றது.

இராசசிம்மனுக்குப் பிறகு பட்டமேறிய பல்லவ அர
சருள் குறிக்கத் தக்கவர்கள் இரண்டாம் நந்திவர்மன், மூன்
றாம் நந்திவர்மன் ஆவர். இவருள் இரண்டாம் நந்திவர்மன்
'பல்லவ மல்லன்' என்ற பெயரைப் பெற்றுச் சிறந்த வீர
னாக விளங்கினான். இவனது காலம் கி. பி. 710-765
ஆகும். இவனது காலத்தில்தான் திருமங்கையாழ்வார்
வாழ்ந்தார். இவன் சிறந்த வைணவ பக்தன். காஞ்சியில்
இன்று இலங்கும் வைகுண்டப் பெருமாள் கோயிலை
அமைத்தவன் இவனே. பரமேசுவர விண்ணகரமும் இவன்
காலத்தில் சிறந்து விளங்கியது, வேறு சில கோயில்களும்
இவனால் கட்டப்பட்டன.

மூன்ரும் நந்திவர்மன் (கி. பி. 825–850) காலத்தில் தான் சைவ மறுமலர்ச்சி கிளர்ந்து எழுந்தது. அவன் சிறந்த சிவபக்தனுக விளங்கியமையால் அவன் பல சிவன் கோயில்களில் அறங்கள் செய்துள்ளான். அவன் காலத்து வரே சுந்தரர். சுந்தரர் பல தலங்களுக்கும் சென்று திருப் பதிகங்கள் பாடிச் சைவத்தை வளர்த்தார். அவர் காலத் தில் சைவத்திற்கும் பிற சமயங்களுக்கும் பூசலில்லே. எனவே அவர் காலத்தில் சைவம் தடையின்றித் தழைத் தோங்கியது. கோட் புலி நாயனுர், கலிக்காம நாயனுர், விறல் மிண்ட நாயனுர் முதலிய நாயன்மார்கள் பலரும் இக்காலத்தில் வாழ்ந்து சைவத் திருப்பணிகளேப் பெரு விருப்புடன் செய்தனர்.

இதுவரை கூறியவாற்ருல், கலேக் கோயிலாகவும், கல்விக் கூடமாகவும் தமிழகத்தைத் திகழச் செய்த பல்ல வப் பெருவேந்தர்கள் சைவ வைணவ சமயங்களேத் தங்கள் இரு கண்களாகக் கருதிக் காத்தோம்பினர் என்பதும், கோயில்கள் அமைப்பை முதன் முதலில் உருவாக்கியவர் கள் அவர்களே என்பதும் எளிதிற் பெறப்படும்.

## பல்லவர் காலத்துக் கோயில்கள்

பல்லவ மன்னர்கள் பழைய கோயில்களேப் புதுப்பித் தனர். புதிய கோயில்களேக் கட்டினர். செங்கற்கோயில் கள் எல்லாம் கருங்கற் கோயில்களாக மாறின. மொட்டை மலேகள் எல்லாம் கோவில்களாக மாற்றப்பட்டன. மலேக ளின் சரிவுகளிலே குடைவரைக் கோயில்கள் குடையப் பட்டன. மலேகள் கற்களாக உடைக்கப்பட்டு, அடுக்கப் பட்டுக் கோயில்களாகக் கட்டப்பட்டன. பல்லவர் காலத் தில் சில கோயில்களே புதியனவாகக் கட்டப்பட்டன. அவற்றுள் பல்லவன் ஈசுவரம், மயேந்திரப் பள்ளி என்ற இரண்டுமே நாயன்மாரால் பாடப் பெற்றன. பல்லவர்க்கு முன்பே பல கோயில்கள் தமிழகத்தில் இருந்தன என் பதை, கி. பி. 700-இல் திருநாவுக்கரசரும் சம்பந்தரும்

தில்லையில் உள்ள நடராச மூர்த்தத்தில் பிற கோயில் மூர்த்தங்களின் சக்தி இரவில் வந்து அடங்குவதாக ஒரு நம்பிக்கை உண்டு. திருமுறைகளைப் பாடிய மூவரும் தம் திருப்பாடல்களைத் தில்லைக் கோயிலில்தான் அடக்கம் செய்து மறைந்தனர் என்பதும் தில்லைக் கோயிலின் சிறப்பை நன்குணர்த்தும். தில்லைக் கோயிலில் நடராசர் திருவுருவம் எழுந்தருளச் செய்யப் பெற்றது போலவே திருவாரூர்க் கோயிலிலே வீதி விடங்கர் திருவுருவத்தை வைத்து வழிபட்டனர். இத் திருவுருவம் தனிச் சிறப்புடையது. அதன் பெயர் தியாகராசர். அத் திருவுருவம் திருவாரூர்க் கோயிலைத் தலைமையாகக் கொண்ட சில கோவில்களில் வைக்கப்பட்டது. இவ்வாறு தில்லைக் கோயிலும் திருவாரூர்க் கோயிலும் பல்லவர் காலத்திலிருந்தே சீரும் சிறப்பும் பெற்று விளங்கலாயின.

பல கோயில்களில், கோயில் வருமானத்திற்கேற்ப ஆண்டில் சில திருவிழாக்களே நடைபெற்றன. திருவாரூர், தில்லை, மயிலாப்பூர் ஆகிய இடங்களில் மாத்திரம் ஆண்டில் பல மாதங்களில் விழாக்கள் நடைபெற்றன என்பதைத் திருமுறைகளால் அறிகின்றோம். நாயன்மார் வாழ்ந்து மறைந்த தலங்களில் உள்ள சிவன் கோயில்களில் அவர் பொருட்டுத் திருவிழா நடைபெற்றது. திருவாரூர்க் கோயிலில் தேவாசிரிய மண்டபம் என்ற பெரிய மண்டபம் ஒன்றுண்டு. அதனில், சுந்தரர் காலத்தில், நாயன்மார் திருவுருவங்கள் வைக்கப்பட்டன. உயிரோடு இருந்த நாயன்மார்களும் அங்குக் கூடியிருந்தனர். அம் மண்டபத்தைப் பார்த்துத்தான் சுந்தரர் திருத்தொண்டத் தொகை பாடினார். இதிலிருந்தும் திருவாரூர்க் கோயிற் சிறப்பை நன்கறியலாம்.

பல்லவ மகேந்திரவர்மன் கால முதல் கல்லின் பயன் மிகுதியாக அறியவந்த காரணத்தினால் கல் இலிங்கங்கள் மிகுதியாகத் தோன்றின. வழுவழுப்பான இலிங்கங்களும்

பதினாறு பட்டை தீட்டப்பெற்ற இலிங்கங்களும் பல்லவர் காலத்தில் இடம் பெற்றன. கி. பி. 700-இல் நடுப் பகுதி யில் வாழ்ந்த மாமல்லனது சேனைத் தலைவரான பரஞ் சோதியார் என்னும் சிறுத்தொண்டர் திருச்செங்காட்டாங் குடியில் கணபதீச்சுவரம் என்ற சிவன் கோயிலைக் கட் டினார். சம்பந்தர் அதனைத் தம் பதிகத்தில் பாடியுள்ளார். கணபதி பற்றிய குறிப்பு ஒன்றும் சங்க இலக்கியங்களில் இல்லை. கணபதி மகாராட்டிர நாட்டில் சிறப்பாக வழி படப்பட்டு வரும் தெய்வமாகும். சிறுத்தொண்டர் வாதாபி யின் மேல் படையெடுத்தார். சாளுக்கியரை முறியடித் தார். அங்கிருந்த செல்வத்தையும் பல பொருட்களையும் காஞ்சிக்குக் கொண்டு வந்தார். தமிழகத்தில் இல்லாத வாதாபியில் இருந்த கணபதி உருவம் அவர் கருத்தைக் கவர்ந்தது. எனவே அவர் அதைக் கொணர்ந்து செங்காட் டங்குடியில் எழுந்தருளச் செய்தார். அதன் பெயரால் ஒரு சிவன் கோயிலைக் கட்டினார். பின்பு நாளடைவில் விநயகர் திருமேனிகள் மிகப் பல வடிவங்களில் நாட்டில் பெருகி விட்டன.

பல்லவர் காலத்துக் கற்கோயில்களில் சிறப்பும் பழ மையும் வாய்ந்தன, திருச்சி மலைக் கோயில், திருவதிகை குணபதீச்சுரம், காஞ்சி கைலாசநாதர் கோயில் ஆகியன வாகும். "பல்லவர் காலத்துக் கற்கோயில்களின் அமைப்பு இமயத்திலுள்ள கைலாயகிரியை ஒத்திருக்கிறது" என்று சுவாமி விபுலானந்தர் கூறுவர். கைலாசநாதர் கோயிலின் அமைப்பு வருமாறு :—

1. கருவறை. 2. நடு மண்டபம், 3. முன் மண்டபம். அதாவது 1. கர்பக்கிருகம் 2. அந்தராளம் 3. மகாமண்டபம் ஆகும். முகப்பிலுள்ள பெரு மண்டபத்தில் நந்தி, பலி பீடம், கொடிக் கம்பம் இவற்றைக் காணலாம். இந்த அடிப் படையில் சோழர் காலக் கோயில்கள் பெருகின. திருச்சுற்றுகள் கட்டப்பட்டன. பொன்னும் பொருளும் சேர்ந்த பிறகு சுற்றுச் சுவர்களும் அரண்களும் பெருகின.

தொடக்கத்தில் கருவறைமேல் நின்ற கோபுரங்கள் (விமானங்கள்) சுற்றுச் சுவர்கள் (மதில்கள்) ஏற்பட்ட பிறகு மதில் வாயில்களின் மேல் நிறுத்தப்பட்டன.

இக் கோயில்கள் பின் வரும் சாத்திர அடிப்படையில் அமைக்கப்பட்டன எனவும் ஒரு சிலர் கூறுவர். ஆகம முறைப்படி, உடலில் இயங்கும் உயிர் ஐந்து இடங்களில் தங்கும். புருவநடு, கழுத்து, இதயம், உந்தி, அதீதம் என்பன அவ்வைந்து இடங்களாகும். கர்ப்பக் கிருகத்தின் நடுவிடம் அதீதம், அந்தராளம் உந்தி, மகா மண்டபம் இதயம், அதன் வாயில் கழுத்து, முன்கோபுர வாயில் புருவநடு என்று அவர்கள் கொள்ளுவர். இதய நிலை பெரு மண்டபம் என்பதால் அங்கே இதயத் துடிப்பிற்கு மூல காரணமாகக் கருதப்படும் இறைவனது திரு நடனம் காட்டும் நடராச மூர்த்தம் நிறுவப்பட்டிருக்கும். உந்திக்கு இரண்டங்குலம் கீழே உள்ள பகுதி அதீதம். அதுவும் அதனை அடுத்துள்ள உந்தி நிலையும் காற்றும் ஒளியும் புகாத இடமாதலால் கோயில்களை அமைக்குமிடத்துக் கருவறை இடை மண்டபம் ஆகிய இரண்டிலும் காற்றும் ஒளியும் புக முடியாதபடி அமைப்பது முறையாகும்.

தமிழ் நிலத்து ஐவகைக் கூறுகளுக்கும் ஒவ்வொரு தெய்வம் கற்பிக்கப்பட்டது நாம் அறிந்ததொன்றே. குறிஞ்சிக்கு முருகன்; முல்லைக்குத் திருமால்; மருதத்திற்கு இந்திரன்: நெய்தலுக்கு வருணன்( நீர்த்தம்); பாலைக்குக் காளி, கதிரவன். சிவனுக்குத் தலைமையிடம் ஏற்படவே, ஐவகை நிலத் தெய்வங்களும் சிவன் கோயிலைப் புகலிடமாகக் கொண்டன. இவை பிற்காலத்தே பரிவார தேவதைகள் எனப்பட்டன. புராணவரலாற்றினை அடிப்படையாகக் கொண்டு சில தெய்வங்கள் நிறுவப்பட்டன. அரசியற்றலைவர்களும் செல்வர்களும் சில வழிபடு தலைவர்களை நிறுவினர். இவைகளும் பரிவார தேவதைகளாக்கப்பட்டன.

மக்கள் செய்த வழிபாட்டினை நான்கு வகையாகப் பிரிக்கலாம். அவை யாவன:

1. சரியை—கோயிலை வலம் வருதல்,
2. கிரியை—அர்ச்சனை செய்தல்.
3. யோகம் — முன் மண்டபத்தின் வெளியில் ஓரிடத்தில் தனித்து இருந்து தியானித்தல்.
4. ஞானம்—மன அமைதியோடு அமைதல்.

## பல்லவர் காலத்து அடியார்கள்

• சுந்தரர் அவர் காலத்தில் வாழ்ந்த நாயன்மார் பெயர்களையும் அவர்க்கு முன் வாழ்ந்த நாயன்மார் பெயர்களையும் தாம் பாடிய திருத்தொண்டத்தொகையில் குறிப்பிட்டுள்ளார். 63 நாயன்மார்கள், 9 தொகை அடியார்கள் இந்நூலில்• கூறப்பட்டுள்ளனர். இந் நாயன்மார்கள் ஒரு காலத்தவரல்லர்; ஒரு சாதியார் அல்லர்; ஒரு நாட்டார் அல்லர். வேதியர், ஆதிசைவர், வேளாளர், வணிகர், அரசர், அரசியர், சிற்றரசர், தளபதிகள், அமைச்சர் முதலிய உயர் குடி மக்களும், வண்ணார், குயவர், எண்ணெய் விற்பவர் முதலிய கீழ்க் குடி மக்கள் பலரும் அத்தொகையில் இடம் பெற்றனர். அக் காலச் சைவ உலகில் அவரனைவர்க்கும் சமநிலை வழங்கப்பட்டது. உண்மையான பக்திக்கு மதிப்பே தவிர, தொழிற்கோ செல்வத்திற்கோ உயரிய பதவிக்கோ மதிப்பில்லை என்பது திருத்தொண்டத் தொகையால் அறியும் உண்மையாகும். இதுவே உண்மையான சமயப் பண்பாடாகும், சுந்தரர் குருக்கள் மரபினர். அவர் திருவாரூர்க் கோயிலில் பணியாற்றி வந்த கணிகையர் மரபில் வந்த பரவையாரைக் காதலித்துக் கோயிலிலே திருமணம் செய்து கொண்டார். பின்பு வேளாளர் மரபில் வந்த சங்கலியாரைத் திருவொற்றியூர்க் கோயிலில்மணந்து கொண்டார். இவ்வரலாற்றிலிருந்து பல்லவர் காலத்தில் வாழ்ந்த சைவர்கள் சாதி வேறுபாட்டைக் கருதவில்லை

என்பதும் சைவர் அனைவரும் ஓரினத்தவரே என்ற மன நிலையிற் பழகி வந்தனர் என்பதும் நன்கு தெரியலாகும்.

சைவ அடியார்கள் எவருக்கும் அஞ்சாதவர்கள்; சமயப் பற்று மிகுந்தவர்கள்; சமயத்திற்காக எத்தகைய தியாகத்தையும் செய்யத் துணிந்தவர்கள். சிவநெறிக்கு மாறுபட்ட செயலினை அரசே செயினும் தண்டிக்கும் ஆண்மை மிக்கவர். சூது முதலிய விலக்கப்பட்ட துறைகளிற் பொருளீட்டியேனும் சைவத்தை வளர்த்தனர். இவ்வுண்மைகளை முறையே இயற்பகை நாயனர், கழற்சிங்க நாயனர், மூர்க்க நாயனர் ஆகியோரது வரலாறுகளிலே நாம் காணலாம். சிவத் திருப்பணிகள் செய்வதற்குரிய மாணவர்களையும் நாயன்மார்கள் உருவாக்கினர். அவர்தம் மனைவியரும் தம் கணவருடன் சேர்ந்து சமய வளர்ச்சிக்காகப் பெரிதும் பாடுபட்டனர். அறுபத்து மூன்று நாயன்மார்களிலே தலைமையும் சிறப்பும் வாய்ந்தவர்கள், மூவர் என்று நாம் போற்றி வணங்கும் ஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோராவர். இம் மூவருடன் மணிவாசகரையும் சேர்த்து நால்வர் எனக் கூறி நாம் அவர்களை நாவாறப் புகழ்கின்றோம்.

# 5. மூவர் தமிழ்

## 1. திருஞான சம்பந்தர்

*வரலாறு*

சோழ நாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான சீகாழியில் வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்கச் சிவஞானப் பாலுண்ட ஞானசம்பந்தர் தோன்றினார். இவரைப் பெற்றெடுத்த பெருமை சிவபாத இருதயருக்கும் பகவதி என்ற பெண்மணிக்கும் சேரும். குலம் அந்தணர் குலம். இவர் பிறந்து மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு நாள், சிவபாத இருதயர் அந்தணர் குலத்து மணியாகத் தோன்றிய மழவிளங்குழவியுடன் சீகாழித் திருக்குளத்துக்கு நீராடச் சென்றார். குழந்தையைக் கரையில் வைத்து விட்டு அவர் நீராடிக் கொண்டிருக்குங்கால் குழந்தைக்குப் பசி யெடுத்தது. எனவே குழந்தையின் பூவந்த உண் கண்களிலிருந்து புனல் சொரிந்தது; வாய் ஓலமிட்டது. அந்த ஓலம் பெற்ற தந்தைக்குக் கேட்கவில்லை. ஆனால் உலகெலாம் ஓம்பும் இறைவன் திருச்செவிகளில் சென்று விழுந்தது. அவ்வளவில் அவன் பணிப்ப, அம்மை தன் திருவமுதினை ஞானத்துடன் கலந்து அழுது நிற்கும் அந்த மழலைச் செல்வத்திற்கு ஊட்டினார். தந்தை நீராடி விட்டுக் கரையேறினார். குழந்தையை ஆசையோடு நெருங்கினார். முகத்திலிருந்த புன்னகை மறைந்தது; முகஞ் சிவந்தார். அவர் கைக்குக் கோலொன்று வந்தது. "பாலளித்தவர் யாவர்?" என்று அவர் சினத்துடன் கேட்கவே, பாலருவாயர் தமது வலக்கையைக் கோயிற்புறமாக நீட்டிச் சுட்டு விரலாற் காட்டினார். அங்கே சிவன் உமையுடன் காளைமீது காட்சி நல்கினார். பிள்ளையார் "தோடுடைய செவியன்" எனத்

தொடங்கும் பாடலைப் பாடினார். இச் செய்தி ஊரெல்லாம் காட்டுத் தீயெனப் பரவிற்று. ஒவ்வோர் ஊர் மக்களும் தத்தம் ஊர்க்கு வருமாறு அவரை இறைஞ்சினர். ஆண்டவன் பொற்றாளத்தைப் பிள்ளையாருக்கு அனுப்பி வைத்தான். ஆண்டவன் அளித்த பொற்றாளத்துடன் தந்தை தோளில் அமர்ந்து கொண்டு நாவால் இறைவன் புகழை இசைத்த வண்ணமே சம்பந்தர் தமது திருவுலாவைத் தொடங்கினார். இடை வழியிலே, இவரது இசைத்திறத்தில் உளம் பறிகொடுத்த திருநீலகண்டயாழ்ப்பாணர் என்பவரையும் சேர்த்துக்கொண்டு சுற்றுலாவை மேற்கொண்டார்.

பின்னர்த் தில்லை முதலிய தலங்கட்குச் சென்று இறைவனை வணங்கித் திருப்பதிகம் பாடி இறுதியில் சீகாழிக்கு வந்து சேர்ந்தார். அதன்பின் அடிகளுக்கு உபநயனம் நடந்தது. இந்நிலையில் ஞானசம்பந்தர் தம் புகழ் கேட்ட அப்பர் அவரைக் காணும் அவாவினால் சீகாழி வந்து சேர்ந்து சம்பந்தருடன் கூடிப் பண்ணால் பரமனைப் பாடி மகிழ்ந்தனர். பின் அப்பர் விடைபெற்றார். அடிகள் முத்துச் சிவிகை யூர்ந்து தன் திருப்பதியுலாவை மீண்டும் தொடங்கினார். முதலில் காவிரியின் வட கரையில் உள்ள கோவில்களைக் கண்டும் பாடியும் சென்றார். அதன் பின் காவிரியின் தென்கரையிலமைந்த கோயில்கள் பலவற்றைப் பாடிச் சென்றார். அந்நாளில் பட்டீச் சுரத்தில் ஞானசம்பந்தர் வெயிலால் வருந்த, ஒரு பூதம் முத்துப் பந்தரைப் பிடித்தது. திருவாவடுதுறை இறைவனைப்பாடிப் பொற்கிழி பெற்றார். திருத்தருமபுரத்தில் யாழ்மூரி பாடினார். செங்காட்டங்குடி சென்று சிறுத்தொண்ட நாயனாருடன் அளவளாவினார். திருமறைக்காட்டுக்கு நாவரசருடன் சென்றார். திருக்கோயில் மறைக்கதவங்கள் திறக்கவும் மூடவும் பாடிச் சிவநெறியின் செம்மையினை இருவரும் மக்கட்கு உணர்த்தினர். அப்பரைப் பிரிந்த ஆளுடைப் பிள்ளையார் பாண்டிமாதேவியாம் மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் வேண்ட

மதுரை சென்ருர். சமணர் இட்ட தீக்காளாகாமல், இறுதியில் பாண்டியனின் வெப்பு நோய் மாய்த்துச் சமணரொடு அனல், புனல் வாதங்கள் செய்து வெற்றியுடன் மீண்டார். பிறகு கிழக்கே சென்று பல பதிகளை வழிபட்டார். காரைக்காலின் அருகேயுள்ள திருத்தெளிச்சேரிக்குச் சென்று புத்தரை வென்ருர்; திருப்பூந்துருத்தி சென்று மீண்டும் அப்பரைக் கண்டுகளித்தார். அதன் பின் வடக்கு நோக்கிச் சென்ருர். திருவோத்தூர் சென்று சிவனடியார் வைத்து வளர்த்த ஆண் பனைகளைப் பெண் பனைகளாக்கிஞர். பின்னர்க் காரைக்கால் அம்மையார் பரவிய ஆலங்காட்டிறைவனைப் பரவிஞர். மயிலாப்பூரில் விடந்தீண்டி இறந்தவளின் என்புக்கூட்டைப் பெண்ணுருவாக்கிஞர். இவ்வாறு பல பதிகள் சென்று இறுதியில் சீகாழி வந்தடைந்தார். அப்பொழுது அடிகட்கு வயது பதிஞறு. சீகாழிக்கு அடிகள் வந்தமை கேட்ட அடியார்கள் சிலர் அவருக்குத் திருமணம் செய்விக்கக் கருதினர். திருநல்லூர் நம்பாண்டாரின் மகளை மணம் பேசினர். மணம் அந்த ஊரிலேயே நடைபெற்றது. திருமண முடிவில் மணமக்கள், பெற்ருேர், உற்ருர், உறவினர் அனைவரும் அவ்வூர்த் திருக்கோயிலுக்குச் சென்றனர்; இறைவன் திருமுன் நின்றனர்; சம்பந்தர் ஒரு திருப்பதிகம் பாடிஞர். உடனே ஒரு கதவு திறந்தது; உள்ளே பேரொளி வீசிற்று. எல்லோரும் ஒளி வெள்ளத்தில் மறைந்தனர்.

## காலம்

சம்பந்தரது காலத்தைப் பல பேரறிஞர்கள் ஆராய்ந்து முடிவு கூறியுள்ளனர். அவ்வாராய்ச்சிப் பேராறிஞருள் திருவாளர்கள் சைமன் காசிச் செட்டியார், சி. வை. தமோதரன் பிள்ளை, பி. குமாரசாமி, பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, தஞ்சைச் சீனிவாச பிள்ளை, கா.சு. பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர். இவர்களுள் இலக்

கியச் சான்று (Literary evidence), கல்வெட்டுச் சான்று (Epigraphic Evidence) முதலிய சான்றுகளைக்கொண்டு ஆராய்ந்து எல்லோராலும் ஒப்புக்கொண்டு பாராட்டும் அளவுக்குச் சம்பந்தர் காலத்தைக் கணித்து முடிபு கூறிய பெருமை பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களையே சாரும்.

பேராசியர் பிள்ளையவர்கள் முடிபுக்குப் பெருந்துணை புரிந்தது சிறுத்தொண்டர் பல்லவர்க்காக வாதாபி சென்று சாளுக்கியனை வென்றமை பற்றிப் பெரியபுராணத்தில் வரும் செய்யுள் ஒன்றாகும். அச்செய்யுள் பின் வருமாறு:—

*"மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்*
*தொன்னகரம் துகளாகத் துளைநெடுங்கை*
*வரையுகைத்துப்*
*பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும்*
*பரித்தொகையும்*
*இன்னன எண்ணில கவர்ந்தே யிகலரசன்*
*முன்கொணர்ந்தார்!"*

இச்செய்யுளில் கூறப்பட்ட படையெடுப்பு மகேந்திரவர்ம பல்லவன் மகனுன நரசிம்மவர்மப் பல்லவன் காலத்திலே தளபதி பரஞ்சோதியார் தலைமையின் கீழ் நடந்ததாகும் என்பதை முதன் முதற் கண்டு கூறியவர் திரு. வெங்கையா என்பவராவார். அதனை அவர் சென்னைக் கிறித்தவக் கல்லூரி மலரில் வெளியிட்டுள்ளார். நரசிம்மவர்மனுல் தோற்கடிக்கப்பட்டவன் மேலைச்சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியாவான். இவனுல் தோற்கடிக்கப் பட்டவன் ஹர்ஷ மன்னன். நரசிம்மன் ஆண்ட காலம் கி. பி. 630–668 என்பதாகும். எனவே அவனுக்குத் தானைத் தலைவராக விளங்கிய பரஞ்சோதியார் என்ற சிறுத்தொண்டர் காலமும் அதுவே. அதுவாகவே, அவரைப் பாடிய ஞான சம்பந்தர் காலமும் அதுவே என்னலாம். எனவே சம்பந் தர் கி. பி. ஏழாம் நூற்றுண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்தவர் என்னலாம்.

## சம்பந்தர் பாடல்கள்

திருஞான சம்பந்தர் தமிழிசைக்கும் இறைவன் புகழுக்குமே தம் திருப்பாட்டுக்களில் முதலிடம் தந்த போதிலும் அங்கங்கே அறிஞர் தம் நுண்மாண் நுழைபுலங் கொண்டு காணத்தக்க அளவில் சைவ சித்தாந்தக் கருத்துக்களை அமைத்துள்ளார். முன்னர்க் கூறியபடி மணிமேகலையில் சைவவாதி கூறிய கொள்கையைத் திருஞான சம்பந்தர் விரித்தும் சுருக்கியும் விளக்கியும் தம் தெய்வ நலங்கொழிக்கும் தேவாரப் பாடல்களிடையே கூறியுள்ளார்.

சுடர் இரண்டு, இயமானன் ஒன்று, பூதம் ஐந்து, ஆக எட்டு வடிவாக இறைவன் உளன் என்ற கொள்கையை,

> **'' மண்ணொடு நீர் அனல்காலோடு ஆகாயம் மதியிரவி**
> **எண்ணில்வரும் இயமானன் இகபரமும் எண்டிசையும்**
> **பெண்ணினொடு ஆண்பெருமையொடு சிறுமையுமாம்**
> **பேராளன் ''**

என்று சம்பந்தர் விளக்கியுள்ளார். மேலும் ' துடைந்துத் துயர்தீர் தோற்றத் தோனும்' என்னும் மணிமேகலை வரிக்கருத்தை,

> **''இருநிலன துபுன லிடைமடிதர எரிபுக எரியதுமிகு**
> **பெருவளியினில் அவிதர வளிகெட வியனிடை முழுவது**
> **கெட**
> **இருவர்கள் உடல் பொறை யொடுதிரி எழில்உரு**
> **உடையவன்''**

என்று சம்பந்தர் விளக்குகின்றார்.

சைவ சித்தாந்த உரைகள் சுத்தாத்துவித நிலைஎன்ற உடனிலை ஒன்றைக் கூறுகின்றன. உடனாதலே உடனிலை எனப்படும். ஆதியும் அந்தமும் ஆகிய முதல்வன் உயிர்களிடத்தில் உயிர்க்குயிராய் உடனாய் நின்று, காண

பன கண்டும், காட்டியும் உதவுதல் அவன் இயல்பு. இதனை,

"உரைசேரும் எண்பத்து நான்கு நூறுயிரமாம்
யோனிபேதம்
நிரைசேரப் படைத்து அவற்றின் உயிர்க்குயிராய்
அங்கங்கே நின்றான்"

என்று சம்பந்தர் கூறுகின்றார். இதனையே,

"புவிமுதல் ஐம்பூதமாய்ப் புலனைந்தாய்
நிலனைந்தாய்க் கரண நான்காய்
அவையவைசேர் பயனுருவாய் அல்லவுருவாய்
நின்றான்"

என்றும் கூறுகின்றார். பயனுருவாயும் அல்ல உருவாயும் நிற்கின்றான் ஆயினும் இறைவன் இவற்றின் வேறாயும் உடனாயும் இருப்பன் என்பதை,

"ஈறாய்முத லொன்றா யிருபெண்ணாண் குணமூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதம்மவை யைந்தாய்
ஆறார்சுவை ஏழோசையொ டெட்டுத்திசைதானாய்
வேறாயுட னானானிடம் வீழிம்மிழலையே"

என்று சம்பந்தர் திருவீழிமிழலைப் பதிகத்திற் கூறுகின்றார். இப்பாடலைப் படிக்கும் பொழுது "அவையே தானேயாய்" என்ற சிவஞான போதசூத்திரம் நினைவுக்கு வருதல் ஒருதலை. இவ்வாறு இறைவன் அரிய காட்சியனாயினும், ஆளப்படுவாரை அவன் ஆட் கொள்ளும் முறையும், அவர்களுக்கு அருளும் வண்ணமும், பிறவும் அளவிறந்தனவாகும். அதனால் அவரவரும் தாம்தாம் அவன் திருவடிகளை வணங்கி வினை நீக்கமும் வீடுபேறுமே வேண்டற் பாலராவர் என்பது சம்பந்தர் நல்கும் நல்லுரை.

"ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான் புகில் அளவில்லை கிளக்க வேண்டா

கோட்பாலனவும் வினையும் குறுகாமை எந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்று இவை
கேட்கத்தக்கார்.''

செய்த பிழையை நினைந்து அதற்கா உளம், உருகி அழுது கரைந்திடின் அவன் அருள் கிட்டும் என்று சம்பந்தர் கூறுகிறார்.

''தேவா சிறியோம் பிழையைப் பொறுப்பாய்
பெரியோனே
ஆவா என்றங்கு அடியார் தங்கட்கு அருள் செய்வாய்''

இறைவன் நீதியே வடிவாகக் கொண்டவன் என்பது சம்பந்தர் எண்ணம்.

''இன்னவுரு இன்னநிறம் என்று அறிவதேல் அரிது
நீதிபலவும்
தன்னவுருவாம் என மிகுத்த தவன்''.

## உயிர்களின் இயல்பு

வீணான எண்ணங்கட்கு நெஞ்சிலே இடந்தந்து புண்ணுற்றுப் புழுங்கல் சிலர் இயல்பு. அதனைக் கண்டிக்கிறார் சம்பந்தர்.

''நினைப்பெனு நெடுங்கிணற்றை நின்று நின் றயராதே
மனத்தினை வலித்தொழிந்தே னவலம்வந்
தடையாமை''.

துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும் வினை ஒழிவும் பிறப்பறுப்பும் பெறத் துறவொன்றே வழி என்பது சரியன்று; அதனினும் எளியது, விழுமியது இறைவனை நாளும் வழிபடல் ஆகும்.

''பிறவியால் வருவன கேடுள ஆதலால் பெரிய இன்பத்
துறவியார்க் கல்லது துன்பம் நீங்காது எனத் தூங்
கினையே

மறவல் நீ மார்க்கமே நண்ணிஞய் தீர்த்தநீர் மல்கு சென்னி
அறவன் ஆரூர் தொழுது உய்யலாம்மையல்கொண்டு அஞ்சல் நெஞ்சே!''

இறைவழிபாட்டினை நாம் ஒருமை யுணர்வோடு சிற்றின்பம் நினைவின்றிச் செய்ய வேண்டும்.

''செப்ப நெஞ்சே நெறிகொள் சிற்றின்பம்
துப்பன் என்ஞது அருளே துணையாக''
''பத்திப்பேர் வித்திட்டே பரந்த ஐம்புலன்கள் வாய்ப்
பாலேபோகாமே காவாப் பகையறும் வகை நினையா''.

ஒருவர்க்குத் துன்பங்கள் அவராலும், பிறவுயிராலும், தெய்வத்தாலும் வருதல் உண்டு. அதனை அவர் முன்னறிந்து காத்திடலாம். ஆஞல் நாள் கோள்களால் துன்பம் வாரின் அதனைத் தடுத்தல் இயலாது. எனினும் அவனருளைப் பெற்ருர்க்கு அதுவும் இயலும்.

''ஆதிப் பிரான் அடிகள் அடைந்தேத்தவே கோளும்
நாளவை போயறும்.''

ஒருநெறிய மனம் வைத்து ஆண்டவனை வழிபடுவதை மேற்கொண்டு ஒழுகுபவர்க்கு இம்மைப் பயனும் வீடுபேறும் கிட்டும்.

''மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை.''

உயிர்கள் இறையின்பம் பெருவண்ணம் தடுப்பன அவை செய்த வினைகளாகும். அவ்வினைப் பயனை உயிர் நுகர்ந்தே கழித்தல் வேண்டும். வினைப் பகையை வெல்லும் பொருளில்லை என்பது சமணம், புத்தம், மீமாம்சை முதலியவற்றின் முடிபு. அவ்வினையை இறை வழிபாட்டால் நீக்கலாம் என்பது சம்பந்தர் கொள்கை.

''இறைவன்றன் திருவருளாம் ஒளிப் பிழம்பின் முன்
இருவினை இருள் மடியும்.''

வினைகள் உளவாதற்குக் காரணம் உயிர்களை அனாதியே பற்றி நிற்கும் மலங்களாகும். அம் மலம் நீங்கினாலொழிய உயிர்களிடமிருந்து வினை நீங்காது. அதற்கு இறை வழிபாடு நல்ல வழி. அதனால் மலப் பாசமறும்.

''ஈசன் முதுகுன்றை நேச மாகிநீர்
வாச மலர்தூவப் பாச வினைபோமே.''
''பாச மறுப்பீர்காள் ஈச னணியாரூர்
வாச மலர்தூவ நேச மாகுமே.''

## இயற்கை வருணனை

மண்ணும் விண்ணும், அவற்றிலே காணப்படும் காடும் மலையும், கானாறும் கடலும், கதிரும் மதியும், சுடர்விடும் உடுக்களும் பிறவும் இறைவன் படைப்பு என்பது சைவ சமயக் கொள்கை. இவ்வாறு படைத்த இறைவன் அப்பொருள்கள் எல்லாவற்றிலும் உடனாக நீக்கமற நின்று காட்சி தருகிறான் என்பதும் சைவ சமயக்கொள்கை. இதனை,

''கலையவன் மறையவன் காற்றொடுதீ
மலையவன் விண்ணொடு மண்ணுமவன்''
''இருநிலனதுபுன லிடைமடிதர வெரிபுக வெரியதுமிகு
பெருவளியினிலவி தரவளிகெடவியனிடை
முழுவதுகெட
இருவர்களுடல் பொறையொடு திரிஎழிலுரு
உடையவன்''

என்ற சம்பந்தர் வாக்குகளால் அறியலாம்.

இவ்வாறு இறைவன் களிநடம் புரியும் இயற்கைக் காட்சிகளில் ஆழ்ந்து களிக்கக் குழந்தையுள்ளம் வேண்டும். களித்த களிப்பைப் பிறருக்கு வாரி வழங்கக் கவிதையுள்

ளம் வேண்டும். கவிதையுள்ளம் வெள்ளம் போல உணர்ச்சி பெற வேண்டுமானல் இயற்கையின் மடியிலே தவழ்ந்து புரள வேண்டும்; அவளின் திருமேனியிலே புரண்டு உருண்டு மகிழும் வாய்ப்பு வேண்டும். அப்பொழுதுதான் இயற்கையைப் பாட முடியும். மேற்கூறிய சிறந்த உள்ளம், கவிதையுணர்வு, இயற்கையை நெருங்கி நோக்கி மகிழும் வாய்ப்பு ஆகியவற்றோடு பழுத்த தமிழ்ப் புலமை ஆகிய நான்கினையும் பெற்ற பேற்றையுடையவர் சம்பந்தர். சைவசமயக் குரவர்களிலேயே இயற்கையன்னையின் திருவமுதை உண்டு மகிழ்ந்து அவள் தன் எழிற் காட்சிகளைத் தமிழ் மொழியிற் குழைத்துக் குழைத்து வழங்கியவர் சம்பந்தரே எனில் அதில் தவறில்லை.

திருஞான சம்பந்தரின் திருப் பாட்டுக்களிலே இயற்கையன்னையின் கோயிலாம் குறிஞ்சியினையும், அவளது அருள் பழுத்தொழுகும் முல்லையினையும், அவள் கொலுவிற்றிருக்கும் திருவோலக்கமாம் மருதத்தினையும், அவளுடைய பரந்த உள்ளத்தைக் காட்டும் நெய்தலையும் கண்டு களிக்கலாம். இவ்வாறு சம்பந்தர் நானில அழகையும் பாடக் காரணம் அவர் ஆறுமுறை செய்த திருயாத்திரையே என்னலாம். ஞானசம்பந்தர் பிறந்தது நீர்வளமும் நிலவளமும் செறிந்த சோழநாடு. சோழநாட்டின் இயற்கைக் காட்சிகள் கண் கொள்ளாக் காட்சிகளாகும். சம்பந்தர் பதி சீகாழி அவர் காலத்தே கடற்கரை ஊராக விளங்கியிருக்கிறது. நாற்புறமும் நன்செய் வளம் சான்று பூவார் சோலையும் புயல்படு பொழிலும் புள் இடையறாத பூம் பொய்கையும் பெற்றுக் கண்ணுக்கு இன்பக் காட்சி நல்கும் தனி சிறப்புடையது சீகாழி. கிழக்கே நிரைநிரையாக அலை திரையெழுப்பி மகிழ்ச்சியால் ஆரவாரிக்கும் கடல்; ஏனை மூன்று பக்கங்களிலும் கன்னலும் செந்நெலும் கனி குலுங்கும் பொழில்களும் நிறைந்த இடம் சீகாழி. இவ்வாறு எங்கணும் இயற்கையின் செழிப்பைக் கண்ட ஞானசம்பந்தர் தம் உள்ளத்திலே கங்கை போலவும் காவிரி

போலவும் கவிதை உணர்வு தோன்றிப் பெருகியிருத்தல் வேண்டும். அதிலும் அவையெலாம் இறைவன் படைப்பு, இறைவன் உறையும் இடங்கள் என்ற எண்ணம் சம்பந்தரைக் களிப்பு வெள்ளத்திலே ஆழ்த்தியிருத்தல் வேண்டும். அவ்வாறு ஆழ்த்தப் பெற்ற சம்பந்தர் தம் கண்ணுக்கும் உள்ளத்துக்கும் களிப்பையும் கடவுள் அருளையும் ஊட்டிய அக் காட்சிகளை வளஞ்சான்ற கவிதைகளாக்கிப் பாடியுள்ளார். இதனைத் திருப்பூந்தராய்ப் பதிகத்திலே காணலாம்.

''எற்று தெண்டிரை யேறிய சங்கினொ டிப்பிகள்
பொற்றி கழ்கம லப்பழ னம்புகு பூந்தராய்''
''சங்கு செம்பவ ளத்திரள் முத்தவை தாங்கொடு
பொங்கு தெண்டிரை வந்தலைக் கும்புனற் பூந்தராய்''

என்பவை சம்பந்தர் தீட்டிய கடற்கரைக் காட்சிகளாகும்.

மருத வளம் நல்கும் இன்பத் திருக்காட்சியை நாம் திருவீழிமிழலைப் பதிகத்திற் காணலாம். இயற்கையன்னையின் முழு அழகையும் நாம் மருத நிலத்திலே காணலாம். ஒரு காட்சி வருமாறு:

வயல்; வளம் பொங்கும் பழனம்; நீர் நிறைந்த நஞ்செய்; சொல்லரும் சூற் பசும் பாம்பு போலக் காய்த்து முற்றிய நெற் கதிர்கள் சான்றோர் போலத் தலை தாழ்ந்து வரிசை வரிசையாகக் காட்சி நல்குகின்றன. அவற்றிடையே ஒரு சிறு பள்ளம். அந்தப் பள்ளத்திலே குவளையும் தாமரையும் மயங்கி உள்ளன. அங்கே ஒரு காட்சி. தாமரைப் பூ நன்கு விரிந்து மணம் கமழ்ந்து கொண்டிருக்கிறது. விரிந்த அம் மணமலரிலே திரண்ட வெண்ணெயினை வெல்லும் அரச அன்னம் ஒன்று உட்கார்ந்துளது. அதன் பின்புறம் தாமரை இலை ஒன்று உயர்ந்து அன்னத்தின் மீது கவிழ்ந்து காணப்படுகிறது. மற்றொருபால் நெற் கதிர்கள் அசைந்தாடுகின்றன. இதனைக் கண்ட ஞானசம்பந்தருக்கு ஓர் இன்பக் கற்பனை அவர்தம் கவிதையுள்

ளர்க்கத் தோன்றுகிறது. கண்ட காட்சியைக் கற்பனை யொடு குழைந்துக் கவிதைத் தட்டிலே வைக்கின்றார்.

"செறியிதழ்த்தா மரைத்தவிசில் திகழ்ந்தோங்கும்
இலைக்குடைக் கீழ்ச் செய்யார் செங்நெல்
வெறி கதிர்ச்சா மரையிரட்ட இள அன்னம்".

திருவண்ணாமலை என்பது குறிஞ்சியும் முல்லையும் கைப்புக் குலவிடும் இன்ப அறையாகும்; மந்தியும் அறியா மாப் பயில் அடுக்கம் அது. அங்கு "ஆமாம் பணையணை யும் பொழில்களும், கோல மயில் ஆடக் கருங்குயில் பாட மஞ்சு கண் துஞ்சும் மரம் செறிந்த சோலைகளும்" பொது ளரிக் கண்ணைக் கவரும். அங்குச் சம்பந்தர் உள்ளத்தைக் கவர்ந்த சிறந்த காட்சி ஒன்று வருமாறு:

அண்ணாமலையின் சாரல். அங்கே ஒரு மரத்தின் நிழ லில் நன் மலையை வெல்லும் உருவமுடைய இரண்டு யானை கள் (பிடியும் களிறும்) உறங்கிக்கொண்டிருக்கின்றன; ஈகளும் அயர்ந்து உறங்குகின்றன; நன்றாக ஆழ்ந்து உறங்குகின்றன. யானைகள் ஏன் இவ்வாறு ஆழ்ந்து உறங்குகின்றன? எதனால் அவற்றுக்கு இத்தகைய அயர்வு? அவைகள் ஏன் இவ்வாறு களைத்து உறங்கு கின்றன? களைப்புக்கும் இளைப்புக்கும் என்ன காரணம்? சம்பந்தர் ஞானப் பாலுண்டவர் அல்லவா? எனவே அவர் தம் ஞானக் கண்கள் அவற்றின் உள்ளங்களைத் துழாவி ஆராய்கின்றன, காரணம் புலப்படுகின்றது. காரணம் என்ன?

"பிழைத்த பிடியைக் காணாதோடிப் பெருங்கை மதவேழம்
அழைத்துத் திரிந்தங்கு உறங்கும் சாரல்
அண்ணாமலையாரே."

## சம்பந்தரால் பாடப்பட்டவர்கள்

ஞானசம்பந்தர் தமது திருப்பாட்டுக்களிலே தம் முடன் சேர்ந்து சைவத்தொண்டு செய்த சிவனடியார்களை

யும் தமக்கு முன் வாழ்ந்த சிவனடியார்கள் சிலரையும் குறித்துப் பாடிப் பெருமைப்படுத்தி உள்ளார். அவரால் அவ்வாறு திருப்பதிகங்களிலே குறிக்கப் பட்ட பெருமை யுடையவர்கள் பன்னிருவராவர். அப்பெரு மக்களுள் எழுவர் திருஞானசம்பந்தரின் காலத்தவர்; ஐவர் அவர்க் குக் காலத்தால் முற்பட்டவர்.

சிவஞானம் விஞ்சிய ஆளுடைப் பிள்ளையார் காலத் துக்கு முற்பட்டவருள் சண்டீசர் ஒருவர். இவர் ஆற்று மணலையே சிவலிங்கமாகச் செய்து ஆவின் பாலால் முழுக் காட்டி நாளும் அரனை வழிபட்டு வந்தார். அது கேட்ட அவர்தம் தந்தை உளம் கடுத்தார்; காடு வந்தார். ஆற் றிடை இலிங்கமும் அதன் மேற் சொரியும் பாலையும் கண் டார். மிகவும் வெகுண்டார்; தன் காலால் சிவலிங்கத்தைச் சிதைக்க முயன்றார். அதனைக் கண்ட சண்டீசர் அடிபட்ட அரவானார்; கையிலே கண்ட கோடாரியை எடுத்தார். தந்தைதாள் கண்டதுண்டமாகுமாறு வீசினார். பின்னர் இறைவன் தோன்றி அவர் பக்தியைச் சிறப்பித்தார். இத் திருவரலாற்றைச் சம்பந்தர் பின்வருமாறு தம் தெய்வ மணங் கமழும் திருப் பாட்டாற்பாடியுள்ளார்.

**''வந்த மணலால் இலிங்கம் மண்ணியின்கட் பாலாட்டும்**
**சிந்தை செய்வோன் தன் கருமம் தேர்ந்து சிதைப்**
**பான் வருமத்**

**தந்தைதனைச் சாடுதலும் சண்டீசன் என்றருளிக்**
**கொந்தணவு மலர் கொடுத்தான் கோளிலியெம் பெரு**
**மானே.''**

சிவத் தொண்டு செய்த சோழ மன்னர்களுள் காலத் தால் முந்தியவன் சோழன் கோச்செங்கணான் என்பதை முன்னர்க் கண்டோம். அவன் எண்டோளீசற்கு மாடங் கள் எழுபது எழுப்பிய விழுமிய பெருமையுடையவன். அதனைச்

**''செம்பியன் கோச் செங்கணான் செய் கோயில்''**

என்று சம்பந்தர் குறிக்கிறார்.

"பேணு தத்துவங்கள் என்னும் பெருகு சோபானமேறி
ஆணையாஞ் சிவத்தைச் சார அணைபவர் போல
நீணிலமலையை"

யேறி நேர்படச் சென்ற கண்ணப்பரைப் பற்றியும் சம்பந்தர் குறிக்கின்றார். அவ்வாறு குறிக்கும் பாடலில், அன்பால் என்பு நெக்குருகி, உள்ளத்தெழு பெருவேட்கையோடு கண்ணப்பர் காளத்திநாதருக்குச் செய்த தனிச்சிறப்புடைய வழிபாட்டினையும் கண்ணிடந் தப்பியதை யும் அவர் பாடியுள்ளார். அது வருமாறு:-

"வாய்கலசமாக வழிபாடு செயும்வேடன்
மலராகும் நயனம்
காய்கணையினால் இடந்து ஈசனடிகூடு
காளத்திமலையே."

அடுத்து நமிநந்தியடிகள் என்றொரு சிவனடியார் சம்பந்தரால் குறிப்பிடப் படுகின்றார்.

"ஆவிதனில் அஞ்சொடுக்கி அங்கணன் என்று
ஆதரிக்கும்
நாவியல்சீர் நமிநந்தியடிகளுக்கு நல்குமவன்."

இனியொருவது சம்பந்தர் புகழ்த்துணையாரைப் பற்றிக் குறிப்பிட்ட பகுதியாகும்.

"அலர்ந்த அடியான் அற்றைக்கன்று ஓர்காசெய்திப்
புலர்ந்த காலைமாலை போற்றும் புத்தூரே."

சம்பந்தர் காலத்துக்கு முற்பட்ட அடியார்களில் ஒருவராகிய தண்டியடிகளை,

"அண்டர்தொழு தண்டி பணிகண்டு அடிமைகொண்ட
இறை"

என்று சம்பந்தர் குறிக்கின்றார். இனிமேற் சம்பந்தர் காலத்தில் வாழ்ந்த சிவனடியார்களை நோக்குவோம். அவர் கால அடியார்கள் எழுவராவர்.

சம்பந்தர் கால அடியார்களுள் திருநீலநக்கர் ஒருவர். இவரது ஊர் திருநள்ளாறு என்ற பெயருடையதாகும். நள்ளாற்றுக்குச் சம்பந்தர் சென்று பதிகம் பாடிய பின்னர் திருநீலநக்கர் வீட்டிலேயே தங்கி அருளினர். அத்தகைய பெருமையுடைய திருநீலநக்கரைத் தம் திருப்பாடலில் கீழ்வருமாறு குறித்துள்ளார்.

**''நிறையினர் நீலநக்கன் நெடுமாநகர் என்று தொண்டர்**
**உறையுமூர் சாத்தமங்கை அயவந்தி மேல் ஆய்ந்த''.**

அப்பரால் பாடப்பட்ட திருப்பதிகளுள் ஒன்று திருப்புகலூர். இங்கே ஒரு மடம் இருந்தது. அதிலே தான் சம்பந்தர் வந்து தங்கியிருந்தார். இம்மடத்திலே தான் அப்பர் இரண்டாம் முறையாகச் சம்பந்தரைச் சந்தித்து அளவளாவினர். அத்தகைய பெருமையுடைய திருமடத்தினை ஏற்படுத்தியவரே திருமுருக நாயனர் என்பவர். • அவரைச் சம்பந்தர்,

**''தொண்டர் தண்கய மூழ்கித் துணையலும்**
**சாந்தமும் புகையும்**
**கொண்டு கொண்டடி பரவிக் குறிப்பறி**
**முருகன் செய்கோலம்''**

என்று பாடிச் சிறப்பித்துள்ளார்.

நரசிம்மப் பல்லவனுக்குத் தண்டாக வாதாபிமேற் படையுடன் சென்று சாளுக்கியப் புலிகேசனை வென்றவர்; வாதாபி நகரைத் தீக்கிரையாக்கியவர்; வெற்றித் தூணை நிலை நாட்டியவர்; சம்பந்தர் காலத்தை வரையறுக்கப் பெரிதும் உதவியவர்; தமிழகத்திலே முதன் முதலாக விநாயக வணக்கத்தை ஏற்படுத்தியவர் என்றெல்லாம் புகழப்படுகின்றவர் சிறுத்தொண்ட நாயனராவார். இவரது இயற்பெயர் பரஞ்சோதியார். இவர் தங்கி வாழ்ந்த ஊர் திருச்செங்காட்டங்குடியாகும். இது சம்பந்தரால் பாடப்பட்ட பெருமையுடையது. இவர் இங்கு வருமாறு வருந்தி அழைத்த பெருமை சிறுத்தொண்டரையே சேரும்.

பிள்ளைக்கறி சமைத்தவரும் இவரே. இத்தகைய பழுத்த சிவனடியாரை,

"செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய"

என்று சம்பந்தர் பாடியுள்ளார்.

சமண சமயத்தில் மூழ்கிக் கிடந்த ஒரு பழம்பெரு நாட்டையே சைவத்திற்குத் திருப்பிய பெருமையையுடைய மூவேர் தமிழ் மங்கை மங்கையர்க்கரசியாவார். இவரது இயற்பெயர் மானி; தாய்நாடு சோழ நாடு; புகுந்தநாடு பாண்டிய நாடு. சம்பந்தர் பாண்டிய நாடு வரவும், கூன் பாண்டியன் தன் நோய் நீங்கப்பெற்றுச் சமணந் துறந்து சைவம் தழுவவும் சமண் இருள் நீங்கவும் நாட்டில் சைவப் பேரொளி பரவவும் காரணமாக இருந்தவர் இம் மங்கையர் திலகமே. இத்தகைய சீரும் சிறப்பும் உடைய மங்கையர்க்கரசியாரைக் கீழ்வருமாறு சம்பந்தர் பாடியுள்ளார்.

"மங்கையர்க்கரசி வளவர்கோன்பாவை
வரிவளைக்கை மடமானி
பங்கயச் செல்வி பாண்டிமாதேவி பணிசெய்து
நாடொறும் பரவ."

பாண்டிமாதேவியின் சைவத் திருப்பணிக்கு உதவியாக இருந்தவர் குலச்சிறையாராவர். இவர் பாண்டியனுக்கு அமைச்சராக இருந்து அருந்தொண்டு புரிந்த பெருந்தகை. இவர் பிறந்த பெருமையையுடைய ஊர் மணமேற்குடி. இது மதுரைக்குக் கிழக்கேயுள்ளது. இவரே பாண்டிமாதேவி பணிப்பச் சம்பந்தரை அழைக்கச் சென்றவர். இவரையே,

"கொற்றவன் தனக்கு மந்திரியாய குலச்சிறை
குலாவி நின்றேத்த"

என்று பாடியுள்ளார்.

## புறச்சமயக் கண்டனம்

சைவசமயக் குரவர் நால்வருள் புறச் சமயங்களை மிகவும் கடுமையாகத் தாக்கியவர் சம்பந்தரே. அதற்குரிய காரணம் இன்னும் புலப்படுமாறில்லை. திருவாலவாய்ப் பதிகத்தில் மிகவும் கடுமையாகச் சமணர் மனப்பாங்கு கூறித் திட்டுகிறார். சிவச் சின்னங்களுள் குறிப்பிடத்தக்க சிறப்புடையது திருநீறாகும். இதன் பெருமையைச் சம்பந்தரின் திருவாலவாய்த் திருநீற்றுப் பதிகத்திற் காணலாம். அத்தகைய பெருமையுடைய திருநீற்றைச் சமணர்கள் பூசார்; போற்றார்; அதுமட்டுமன்று; அதனைக் காண்பதுந்தீது; அதன்மேல் பட்டு வரும் காற்றுங் கூட நஞ்சுடையது என்றெல்லாம் சமணர்கள் எண்ணினர். அதனால் நீறு பூசிய சைவர்கள் வரின் அவர்களை வெறுத்துச் சமணர்கள் காததூரம் ஓடுவராம். இவ்வாறு சம்பந்தர் கூறுகிறார்.

**''நீற்று மேனிய ராயினர் மேலுற்ற**
**காற்றுக் கொள்ளவும் நில்லா அமணர்.''**

ஞான சம்பந்தர் தமது பாடல்களிலே பதிகம் தவறாமல் புறச் சமயவாதிகளைத் திட்டுகிறார். அகச் சமயத்தவரான பாசுபதர், கபாலிகர், மாவிரதிகள் ஆகியோரும் குறிப்பிடப்படுகின்றனர். எனினும் அவரது தாக்குதலுக்குச் சமணர்களே அதிகமாக இரையாகின்றார்கள். அப்பரும் சமணரையே கடுமையாகத் தாக்குகின்றார். சைவத்துக்குப் புறம்பாகச் சமணம் மட்டுமன்று; புத்தம் முதலிய சமயங்களும் அவர் காலத்திலே இருந்தன. அவ்வாறிருப்பவும் அவற்றை யெல்லாம் விட்டு விட்டு அருளே பொருளாகவும் அடிப்படைக் கொள்கை யாகவும் கொண்டு விளங்கிய சமணத்தை மட்டும் சம்பந்தர் கடுமையாகத் திட்டுவதேன்? மூவர் காலத்தில் ஏனைய சமயங்களை விடச் செல்வாக்கு மிகுதியாகப் பெற்று நாட்டிலும் ஏட்டிலும் களிநடம் புரிந்து கொண்டிருந்த சமயம் சமணமே. அக்காலத்தே சமண சமயத்துக்கு எதிராக விளங்கிய சமயம்

வேதவழக்கொடுபட்ட வைதிக சமயமாகும். வேத சமயத்தை எதிர்த்துத் தோன்றிய சமயம் சமணமாகும். வேதத்தைப் புத்தமும் சமணமும் சாங்கியமும் யோகமும் மறுக்கின்றன; அதனை மதிப்பதும் இல்லை. இந்நிலையில், அமிழ்ந்த சைவம் தனியே நின்று சமணத்தோடும் பிறவற்றோடும் போரிட்டு வெற்றி பெறல் என்பது இயலாத ஒன்று. எனவே அது சமண மதத்திற்கு எதிரான வைதிக மதத்தினோடு நட்புக் கொள்ள வேண்டியதாயிற்று. வைதிக சமயம் மக்களிடையே ஓரளவுக்கு நிலவி வந்துள்ளது. அதனால் சைவம் வைதிகத்தோடு இணைந்தது; சமணத்தை எதிர்த்தது. அக்காலை சைவத்துக்கு உறுதுணையாகவும் வலிவும் வாழ்வும் தருவதாகவும் உள்ள வேதத்தையே சமணம் தாக்குவதைக் கண்ட சைவ அடியாராகிய சம்பந்தருக்குப் பொறுக்கவில்லை. அதனால் அவர் சமணரைத் திட்டுகிறார். அவ்வாறு திட்டும்பொழுது சமணர்கள் வேதத்தையும், அது கூறும் வேள்வியையும் இகழ்பவர்கள் என்று கூறியே பெரும்பாலும் திட்டுகிறார்.

"வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி அமணனொடு தேரரை"
"வைதிகத்தின் வழியொழு காதவக்
கைதவ முடைக் காரமண் தேரரை"
"மறை வழக்கமிலா தமா பாவிகள்"
"அந்தணாளர் புரியும் அருமுறை
சிந்தை செய்யா அருகர் திறங்கள்"
"அழலதோம்பும் அருமறை யோர்திறம்
விழலது என்னும் அருகர்."

## ஞானசம்பந்தரால் ஏற்பட்ட விளைவுகள்

ஞானசம்பந்தரின் தோற்றத்தால் தமிழக வரலாற்றிலேயே ஒரு பெரும் மாறுதல் ஏற்பட்டது என்னலாம். அந்த மாறுதல் தமிழ் நாட்டு வரலாற்றில் மட்டுமன்று;

தமிழிலக்கிய வரலாற்றில் மட்டுமன்று; தமிழ் மக்களின் ஆன்மீக வாழ்விலேயே ஏற்பட்டு விட்டது; தமிழ் மக்களின் வாழ்க்கையின் அடிப்படையினையே மாற்றிய பெருமை ஞானசம்பந்தருக்குண்டு. ஞானசம்பந்தருக்கு முன்னால் சங்க காலத்திலோ, அதற்கடுத்த காலங்களிலோ வாழ்ந்த மக்களுக்குச் சமயவுணர்வு மிக்கிருந்தது என்று துணிதற்குச் சான்றுகள் இல்லை. அதுவும் சங்க காலத்திலே சமயத்தைப்பற்றித் தமிழ் மக்கள் கவலையே கொண்டதில்லை. அதனை அக்காலத்திலே சமயப் பாக்கள் மிக மிக அருகியிருந்தமை ஒன்றே உறுதிப்படுத்தும். இவ்வாறு சமயத்தைப் பற்றிக் கவலையே கொள்ளாமல் வாழ்ந்து வந்த தமிழ் மக்களைத் தம் இசை குழைந்த இனிய தமிழ்ப் பாக்களால் தட்டி எழுப்பிச் சமயவுணர்வினை ஊட்டிக் கடவுட்கனலை உளத்தில் மூட்டி அவர்களைத் தத்துவ ஞானம் பெறச் செய்து நாளும் இறைவனைப் பரவிப் பரவிப் பக்தி வெள்ளத்தில் மூழ்கச் செய்த பெருமை சம்பந்தரையே சாரும். சமணம், புத்தம் ஆகிய புறச்சமயங்களைப் போலச் சைவத்தையும் ஓர் அமைப்புடைய சமயமாக (Ordered Religious Sect) நாட்டிலே நடமாடச் செய்தவர் ஞானசம்பந்தரே யாவார்.

சைவ மணமும் தெய்வ நலமும் இசை யழகும் தமிழ் வளமும் கொழிக்கும் இவர்தம் பல்லாயிரக்கணக்கான பாடல்கள் வடக்கே காளத்தி முதல் தெற்கே நெல்லை வரை பரவின. நாடெங்கும் பக்தி வேகம் காட்டுத் தீப்போலப் பரவியது; சைவமாரி பொழிந்தது. சிவப்பற்றுப் பெருக்கெடுத்தோடியது. தமிழ் மக்கள் "ஞாலம் மிக்க தண்டமிழால் ஞானசம்பந்தன் சொன்ன கோலம் மிக்க மாலை"யின் மணம் நுகர்ந்து உளங்குளிர்ந்தனர். அதனால் அவர்களுக்குச் சமயப்பற்று மிகுதியாக உண்டாகியது. புறச் சமயங்கள் கதிர் கண்ட பனித் துளியாயின. நாடெங்கும் சிவனுக்குக் கோயில்கள் எழுந்தன; பழைய கோயில்கள் புதுப்பிக்கப்பட்டன. கோயில்களிலே நாடோறும் "காழிநாதன் வேதியன் ஞானசம்பந்தன் வாய்

நவிற்றிய தமிழ்ப்'' பதிகங்களை ஓதுவதற்குப் பல்லவ மன்னவர்கள் காலத்திலேயே ஏற்பாடு செய்யப்பட்டது. மகளிரும் ஆடவரும் மாமலர் கொணர்ந்து வழிபட்டனர். கன்னியர்கள் நறுமலரும் தெண் புனலும் தூப புகர் சாந்தமும் கொணர்ந்து வணங்கினர். அடியவர்கள் அந்திப் பொழுதில் தூப தீபங்களுடன் 'சந்தி பல அர்ச்சனைகள்' செய்தனர். இவ்வாறே முற்றத் துறந்த முனிவர்களும் கடவுளை வணங்கினர். குறும்பலாவீசர் குடி கொண்டுள்ள திருக்குற்றால மலைப்பகுதியில் பிடிகளும் களிறுகளும் கூட வேங்கைக் கொத்துக்களைத் தலையிற் கொண்டு இறைவனை வழிபடுவதாகச் சம்பந்தர் பாடியுள்ளார். இவையாவும் சம்பந்தரால் விளைந்த மாற்றங்களாகும். ஞானசம்பந்தர் செய்த திருத் தொண்டின் சிறப்பைப் பின்வந்த புலவர்களும் பொது மக்களும் மன்னரும் மாநிலத் தலைவர்களும் பெரிதும் பாராட்டிக் கூறியுள்ளனர்.

**''வம்பரு வரிவண்டு மணநாற மலரும் மதுமலர்**
**நற்கொன்றையான் அடியலால் பேணு**
**எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்''**
**''நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும்**
**ஞானசம்பந்தன்''**

என்று சுந்தரர் தாம் பாடிய திருத்தொண்டத் தொகையில் அன்பும் பெருமதிப்புங் கொண்டு பாடுகின்றார். அவர்க்குப் பின் வந்த பட்டினத்தடிகள் ஞானசம்பந்தர் பாலுண் டதைத் திருக்கழுமல மும்மணிக்கோவை முதலகவலிலேயே கூறி மகிழ்கின்றார்.

**''தாதையொடு வந்த வேதியச் சிறுவன்**
**தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த**
**அன்றேயோவென் றழைப்பமுன் நின்று**
**ஞான போனகத் தருளட்டிக் குழைத்த**
**ஆனாத் திரளை யவன்வயி னருள.''**

நம்பியாண்டார் நம்பிகள் ஞானசம்பந்தரைப் பற்றிச் சிறு நூல் பல யாத்துள்ளார்.

''வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்''
''சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனையற மாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமை யிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்
ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார்''
என்று சேக்கிழார் புகழ்கிறார்.

• பின் வந்த தமிழ்ப் புலவர் அனைவரும் தாம் பாடிய நூல்களில் ஞானசம்பந்தர்க்குத் தலைமையிடம் நல்கி வாழ்த்துக் கூறியுள்ளனர். சம்பந்தரைப் பாராட்டி உரைக்கும் தமிழ் நூல்கள் (வெளிவந்தன, வராதன) இரு நூற்றுக்கு மேற்பட்டனவாகும். இவ்வாறு புலவர் உலகம் மட்டுமின்றிப் பொது மக்களும் சம்பந்தரின் திருப்பெருமையும் தொண்டும் கண்டுணர்ந்து பல வழியாலும் பாராட்டியதைப் பிற்காலக் கல்வெட்டுக்கள் நன்குணர்த்துகின்றன. ஆளுடைய பிள்ளையார், சிவஞானசம்பந்த அடிகள், சம்பந்தப் பெருமான், காழிநாடுடைய பிள்ளை என்பன சம்பந்தர்க்குக் கல்வெட்டு வழங்கிய தொடர்களாகும். பின் வந்த தமிழ் மக்கள் தங்கள் பிள்ளைகளுக்குச் சம்பந்தரின் பெயரையும், அவர் பாடல்களில் பயின்று வரும் அழகொளிரும் அருஞ்சொற்றொடர்களையும் பெயராக இட்டு வழங்கியுள்ளனர். ''திருஞான சம்பந்தப் பல்லவரையன், திரு ஞானசம்பந்த மாராயன்'' என்பவை அரசியல் தலைவர்களின் பெயர்கள்; நம்பி சம்பந்தப் பெருமாள், நல்ல ஞானசம்பந்தன், செல்வ ஞானசம்பந்தன் என்பன பொதுமக்களில் ஆடவர் பெயர்கள். ஞான சம்பந்த நங்கை என்பது பெண்டிர் பெயர். கோளறு திருப்பதிகத்திலும் பிறவற்றிலும் 'ஆணைநமதே' என்ற தொடர் வந்துளது. அதனை ஒருவர் பெயராகக் கொண்

டுள்ளார். "பட்டமுடையார் ஆணைநமதென்ற பெருமாள்" என்பது அப்பெயராகும். திருவண்ணாமலைப் பதிகத்தில் காணும் "பெண்ணாகிய பெருமான்" என்னும் தொடரை, ஒருவர் தமது பெயரோடு சேர்த்து வழங்கியதாக மாறங்கியூர்க் கல்வெட்டு மூலம் அறிய முடிகின்றது. "தியாகப் பெருமாள் பெண்ணாகிய பெருமான்" என்பதே அப்பெயர். இனிவருவன சம்பந்தர் பெயர் பெற்ற ஊர்கள்.

"திருஞான சம்பந்த சதுர்வேதி மங்கலம்".

"திருஞான சம்பந்தன் நல்லூர்".

சிறந்த இடங்கள்:

திருஞான சம்பந்த வளாகம், திருஞான சம்பந்தன் தளம். "மந்திகள் பாய்தர மதுத்திவலை சிந்து பூந்துறை கமழ் திருநெல்வேலி" என்ற சம்பந்தரது திருநெல்வேலிப் பதிகப் பாடல் வரியில் காணப்படும் "சிந்துபூந்துறை" என்னும் தொடரால் இன்றும் சிந்துபூந்துறை என்று திருநெல்வேலி ஊரின் ஒரு பகுதி வழங்கப்படுகின்றது.

கோயில்கள்:

திருஞான சம்பந்தர் கோயில்; திருஞான சம்பந்தீச்வரம்.

மடம்:

திருஞான சம்பந்தர் மடம்; செல்வ ஞான சம்பந்தர் மடம்.

நந்தவனம்:

திருஞான சம்பந்தர் நந்தவனம். திருஞான சம்பந்தன் நடை.

[இவற்றோடு இக்காலத்தில் தலைவர்கள் பெயரால் அமைந்த பள்ளி, பூங்கா, படிப்பகம், நகர், பல்கலைக் கழகம், கல்லூரி ஒப்பு நோக்கத்தக்கன.]

ஒவ்வொரு சிவன் கோயிலிலும் சம்பந்தர் திருவுருவம் இடம் பெற்றது. தென்காசிக் கோயிலிலும், சீகாழியிலும்

இன்றும் ஞானப் பாலுண்ட விழா நடைபெறுகிறது. கோயில்களில் சம்பந்தர் திருப்பதிகங்கள் கற்பிக்கப்பட்டன; சுவர்களில் பொறிக்கப்பட்டன. மேலும் ஊர்கட்கும் மக்கட்கும் சம்பந்தரது சொற்றொடர்கள் பெயர்களாக வழங்கப்பட்டன போன்றே இறைவர்க்கும்கூட அவரது தொடர்கள் பெயர்களாகி விட்டன.

1. தேறினர்—"தென்குடித் திட்டையுடைய நாயனர் தேறினர்".—

"ஐயுணர்வெய்தி மெய்தேறினர் வழிபடும் தென் குடித் திட்டை"— தென்குடித் திட்டைத் திருப்பதிகம்.

2. மெய்ய நின்ற நாயனர் என்பது பட்டுக்கோட்டைக் கருகிலுள்ள சிரமங்கலத்திலுள்ள இறைவன் பெயர். இப்பெயர் "போற்றிசைத்து என்னும் பணிவாரை மெய்ய நின்ற பெருமான்" என்னும் திருப்புகலூர்ப் பதிகத்தில் வந்துளது.

இறைவி பெயர்கள்:

'வேயன தோளுமை'— திருவெண்காட்டுத் திருப்பதிகம். இறைவி பெயர்—"வேயன தோளி நாச்சியார்".

"இடையீர் போகா இளமுலையாள்"— திருவோத்தூர்ப் பதிகம்.

இறைவி பெயர்—"இளமுலை நாச்சி".

இதுகாறும் கூறியவற்றால் சம்பந்தரால் நாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் விளங்கும். இதனாலன்றோ பேராசிரியர் சுந்தரம் பிள்ளை கீழ்வருமாறு புகழ்கின்றார்.

"He is decidedly the greatest and the most popular of the Tamil Rishis. Even considered as a poet, he has more than ordinary claims to be remembered. His hymns......... are models of pure and elevated diction, generally earnest and touching, but always melodious and well tuned........... Taken all in all Sambandar must be put down as a true and great Tamil Poet."

# 2. திருநாவுக்கரசர்

## வாழ்க்கை வரலாறு

திருநாவுக்கரசரின் தந்தை புகழனார்; தாய் மாதினியார்; தமக்கை திலகவதியார். இவர் பிறந்த ஊர் திருவாமூராகும். இவர் வேளாளர் குலத்தில் பிறந்தவர். இவரது இயற்பெயர் மருணீக்கியாராகும். இளமையிலேயே பெற்றோர்களை இழந்ததால் தமக்கை திலகவதியாரின் ஆதரவில் வளர்ந்தார். இவரது தமக்கையை இவருடைய பெற்றோர்கள் கலிப்பகையார் என்பவருக்கு மணஞ் செய்விக்க முடிவு செய்திருந்தனர். ஆனால் கலிப்பகையார் போரில் இறக்கவே, திலகவதியார் பெரிதும் கவன்று தாமும் அவரைப் பின்பற்றி இறக்க முடிவுசெய்தார். இதற்கிடையில் பெற்றோர்கள் இறக்கவே, திலகவதியார் தம் தம்பியின்மீதுள்ள குறையாத அன்பின் காரணமாகத் தமது எண்ணத்தை மாற்றிக்கொண்டு, கைம்மை நோன்பேற்றுக்கொண்டு, திருவதிகை வீரட்டானத்திற் கோயிற் பணி செய்து வரலானார். மருணீக்கியாரோ சமண சமயம் புகுந்து 'தருமசேனர்' என்னும் பட்டம் பெற்றுச் சமயத்தின் தலைவராக விளங்கினார். அதுகால் சூலை நோய் வாய்ப்பட்டு மிகவும் வருந்தினார். சமணர்களால் அந்நோயினைத் தீர்க்க முடியாது போகவே அப்பர் தன் தமக்கையாரை நாடி வந்தார். இருவரும் இறைவனை இறைஞ்சினர். சூலை நோய் இருந்த இடம் தெரியாது போயிற்று. அதுகால் இறைவன்மீது "கூற்றாயினவாறு விலக்ககலீர்" என்னும் பாடலை அவர் பாடினார். பின்னர் அவர் சைவரானார். இதனைக் கேள்வியுற்ற சமணர்கள் தங்கள் சமயத்தைப் போற்றிப் புரந்த பல்லவப் பெருவேந்தனாகிய மகேந்திரனிடம் சென்று கூறினர். மன்னனும் இவருக்குப் பல இன்னல்களைச் செய்தனன். ஆனால் இறைவன் அருளால் அப்பர்பெருமான் தன்னைக் கொல்ல வந்த யானையைக் குனியச் செய்தார்; விடத்தை யுண்டும் சாவாது

விளங்கினுர்; சுண்ணும்பு அறையில் அடைக்கப்பட்டும் அஞ்சாது இருந்தார்; கல்லொடு கட்டிக் கடலில் இட்டும் அழுந்தாது கரையேறினுர். இவைகளைக் கண்ட பல்லவ மன்னன் மனம் மாறினுன். மதமும் மாறினுன். சைவத்தைப் போற்றத் தொடங்கினுன். அப்பர் பெருமான் மண், பொன், பெண் ஆகிய மூன்று ஆசைகளையும் வென்றவர். தன்மீது அளவு கடந்த அன்பு வைத்திருந்த அப்பூதியடிகளின் மகன் அரவு தீண்டி இறக்க அவனை எழுப்பியவர். திருமறைக்காட்டுத் திருஆலயக் கதவைத் திறந்தவர். ஞானசம்பந்தர் இவரை "அப்பரே" என்று கூறிப் போற்றினுர். தாண்டகவேந்து, திருநாவுக்கரசர், வாகீசர், ஆளுடைய அரசு என்பன இவரது திருப்பெயர்களாகும். இவர் பல தலங்களை வணங்கிப் பதிகங்கள் பல பாடினுர். முன்னர்க் கூறியது போன்று தொண்டைநாடு முழுவதும் சைவ மணம் கமழச் செய்தார். இவர் பாடிய பாடல்கள் நாற்பத்தொன்பதாயிரம் என்பர். ஆனுல் முன்னூற்றுப் பதின்மூன்று பதிகங்களே இப்பொழுது உள்ளன. இவரது பதிகங்கள் திருத்தாண்டகம், திருநேரிசைத் திருவிருத்தம், திருக்குறுந்தொகை என்ற தலைப்புக்களைப் பெற்றிருக்கும். திருப்புகலூரில் இவர் இறைவன் திருவடி நீழலை அடைந்தார்.

## காலம்

முதல் மகேந்திரவர்மன் சைவனுன பின் சிவன் கோயில்கள் பல கட்டியிருப்பதை நாம் அறிவோம். இவற்றைக் கட்டுதற்குப் பத்து ஆண்டுகள் வைப்போமாயின் அவன் கி.பி. 620இல் சைவம் புகுந்தான் எனல் அமையும். அப்பொழுது நாவரசர்க்குக் குறைந்த அளவு ஐம்பது வயது இருக்கலாம். எனவே அப்பர் கி. பி. 570-இல் பிறந்து 81 ஆண்டுகள் வாழ்ந்து கி. பி. 650-651-இல் சித்திரைத் திங்களில் சதய நாளில் இறைவனடி சேர்ந்தார் எனக் கொள்ளுதல் ஓரளவு பொருத்தமுடைத்து.

பாடல்கள்

திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகங்கள் இறைவன் இயல்பு, உயிர்களின் இயல்பு, இறைவன் உயிர்க்கு அருள் செய்யும் திறம், கற்றவர்களும் ஞானியர்களும் பிறரும் இறைவனுக்கு அடியார்களாய் அன்பு செய்யும் முறை, இறைவன் அவர்களுடைய மனத்தின்கண் எழுந்தருளி இன்புறுத்துவது முதலிய பல பொருள்களை விரித்துக் கூறுகின்றன.

பொறிப் புலன்களைப் போக்கறுத்து உள்ளத்தை நெறிப்படுத்தியவர் தம் அகக் கண்ணால் உள்ளத்தே உணர்வு வடிவாய் எழுந்தருளும் இறைவனைக் கண்டு வழிபடுவர். இறைவனும் அவர்க்கு அங்கே வெளிப்பட்டுத் தேனாய் இன்னமுதாய்த் தெரிவரிய சிவானந்தத்தை நல்குவன். இது யோக நெறி எனப்படும். இதனைக் குறிக்கும் பாடல் வரிகள் கீழே தரப்பட்டுள்ளன.

> " உயிராவணம் இருந்து உற்று நோக்கி உள்ளக்
> கிழியின் உருவெழுதி
> உயிராவணம் செய்திட்டு உன் கைத் தந்தால் உணரப்
> படுவாரோடு ஒட்டி வாழ்தி."

ஞான நெறியைப் பற்றிப் பின்வரும் பாடல் நன்கு கூறுகின்றது.

> " ஞானத்தால் தொழுவார் சில ஞானிகள்
> ஞானத்தால் தொழுவேன் உனை நானலேன்
> ஞானத்தால் தொழுவார்கள் தொழக் கண்டு
> ஞானத்தாய் உனை நானும் தொழுவனே."

"என்னைத் தன்னடியானென்றறிதலும், தன்னை நானும் பிரானென்றறிந்தேன்" என்று இறைவனைத் தனக்குப் பிரான் என்று தேறியொழுகும் அப்பர், "அளக்கலாகாத் தற்பரமாய்ச் சதாசிவமாய்" இருக்கும் இறைவனைப் பொது நிலையின் நீக்கித் தனி நிலையில் தம் உள்ளத்தே

வைத்துக் காண்கிறார். உள்ளத்தில் விளங்கும் புண்டரி வட்டத்தில் இறைவன் சிவமாய்க் காட்சியளிக்கின்றான். அக் காட்சி தேனும் இன்னமுதுமாய் அவர்க்கு இன்பம் செய்கின்றது. அவ்வின்பத்தில் மூழ்கித் திளைக்கும் அப்பர் அங்கே காட்சி நல்கும் சிவத்துக்குத் தன் உள்ளம் கோயிலாவதையும், உடல் இடங்கொண்ட தாம் அங்கு ஊறுகின்ற இன்பத்தை நுகர்வதையும், அதனை நுகராதவாறு தடைசெய்து நின்ற வினைத் தொடர்பு நீங்கி மறைவதையும், சிவன்பால் பேரன்பு பெருகி மிகுவதையும் உணர்கின்றார். இத்தனைக்கும் ஏதுவாவது இறைவன் தன்னைக் 'கூழாட்கொண்ட' பேரருளே என்று தெளிகின்றார், அத் தெளிவால் இறைவனை நோக்கி,

''என்புஇருத்தி நரம்புதோல் புகப்பெய்திட்டு
என்னை யோர் உருவமாக்கி
இன்பிருத்தி முன்பிருந்த வினை தீர்த்திட்டுஎன்
உள்ளம் கோயி லாக்கி
அன்பு இருத்தி அடியேனைக் கூழாட் கொண்டருள்
செய்த ஆரூரர்''

என்று பாராட்டியுரைக்கின்றார். இவ்வாறு அகவழிபாடு சிவபோக உணர்ச்சிக்கு வாயிலாவது கொண்டு,

'' காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறைய நீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே''

என்றும், இதனைச் செய்வாரது பாவம் நாசமாகும் என்றும் எடுத்துரைத்துள்ளார்.

அப்பரது இறுதி வேண்டுகோள்:

'' இறைவா! சாகும் நாளில் பொறி, புலன்கள் நிலை கலங்கி அலமருமாதலால், யான் வேறு பற்றுக் கோடின்றி

உன்னை எங்குற்றாய் என் அழைப்பேன்; அப்போது நீ போந்து இங்குற்றேன் என்று சொல்லியருள வேண்டும்.'' மேலும் ''இறக்குங் காலத்து நமன் தூதர் போந்து என்னை நலிந்து என் உயிரைக் கொண்டுபோகும் காலத்து எனக்கு அருள் செய்யலாம் என்பது, இறைவனே, நின் திருவுள்ளமாக இருக்கலாம். அதற்கு முன்பே நீ போந்து என் நெஞ்சில் நின் திருவடியை எழுதி வைப்பாயாக; செம்மை நிறம்பாத சிவக்கொழுந்தே! அப்பொழுது நீ அருளுவதை யாவர் அறிவார்?''

'' வெம்மை நமன்தமர் மிக்கு விரவி இழுப்பதன் முன்
இம்மையுன் தாள் என்றன் நெஞ்சத்து
எழுதிவை ஈங்கிகழில்
அம்மை அடியேற்கு அருளுதி என்பதிங் காரறிவார்?
செம்மை தருசத்தி முற்றத்து உறையும்
சிவக் கொழுந்தே.''

மக்களுக்கு வேண்டுகோள்:

'' மாடுதானது இல்லெனின் மானுடர்
பாடுதான் செல்வா ரில்லை பன் மாலையால்
கூடநீர் சென்று கொண்டீச் சுரவனைப்
பாடுமின் பரலோகத் திருத்துமே.''

வழிபாட்டின் இன்றியமையாமை:

பின்வரும் அப்பரது பாடல்கள் வழிபாட்டின் இன்றியமையாமையினை நன்கு எடுத்துக்காட்டும்.

'' ஆக்கையால் பயன் என்? அரன்கோயில் வலம்
வந்து
பூக்கையால் அட்டிப் போற்றி என்னாத இவ்வாக்கை
யால் என்பயன்?''

" வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே."

" பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக் கேஇரை தேடி யலமந்து
ஆக்கைக் கேஇரை ஆகிக் கழிவரே."

" நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீரும் கண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே."

" விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோனட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே."

" சிட்டனைச்சிவனைச்செழுஞ் சோதியை
அட்ட மூர்த்தியை யால நிழலமர்
பட்டனைத்திருப் பாண்டிக் கொடுமுடி
நட்டனைத்தொழ நம்வினை நாசமே."

# அப்பர் பாராட்டிய அடியார்கள்

1. சோழன் செங்கணன்

" சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழற் பந்தர்செய்து
உலந்துஅவன் இறந்தபோதே கோச் செங்கணனுமாகக்
கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனிற் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டனாரே."

2. சண்டேசுரர் (தண்டி)

" அண்டமார் அமரர் கோமான் ஆதிஎம் அண்ணல் பாதம்
கொண்டவன் குறிப்பினாலே கூப்பினான் தாபரத்தைக்
கண்டவன் தாதைபாய்வான் காலற எறியக்கண்டு
தண்டியார்க் கருள்கள் செய்த தலைவர் ஆப்பாடியாரே."

3. சாக்கிய நாயனார்

முதலிற் புத்தராக இருந்த இவர் பின்னர் சைவரானார். சாக்கியர் கோலத்தோடு இருந்து இவர் சிவத்தொண்டு புரிந்தார். இவர் எறிந்த கற்களை இறைவன் மலராகக் கொண்டனன்.

" கல்லினால் எறிந்து கஞ்சிதாம் உணும் சாக்கியர்
சொல்லினார் சொற்றுணுமே நீள்விசும்பு ஆளவைத்தார்."

4. கண்ணப்பர்

" கண்ணப்பன் கண்ணப்பக் கண்டுகந்தார்."

5. கணம் புல்லர்

கணம் என்னும் புல்லை விற்றுப் பெற்ற பொருளால் இறைவன் கோயிலில் விளக்கெரித்ததனால் இவருக்கு இப் பெயர் ஏற்பட்டது.

"எண்ணிறந்த குணத்தினாலே கணம்புல்லன்
கருத்து கந்தார்."

6. அமர்நீதியார்

"நாட்கொண்ட தாமரைப் பூத்தடம் சூழ்ந்த
நல்லூரகத்தே
கீட்கொண்ட கோவணம்கா என்றுசொல்லிக்
கிறிபடத்தான்
வாட்கொண்ட நோக்கிமனைவியொடும்
அங்கோர்வாணிகனை
ஆட்கொண்ட வார்த்தை உரைக்கு மன்றோ
இவ்வகலிடமே."

7. நமிநந்தி

திருத்தொண்டத்தொகை இவரை 'நமிநந்தி' எனக் கூறும். அப்பர் இவரை 'நம்பிநந்தி' எனக் கூறியுள்ளார். இவர் திருவாரூரில் இறைவனுக்கு நீரால் திருவிளக்கிட்டார். கி. பி. 12-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நமிநந்தியடிகள் பெயரால் திருமடமொன்று இருந்ததென அவ்வூர்க் கல்வெட்டு ஒன்று கூறுகிறது.

8. சம்பந்தர்

"கழுமல வூரர்க்கு அம்பொன் ஆயிரம் கொடுப்பர்போலும்
ஆவடுதுறையனாரே."

9. அப்பூதியடிகள்

இவர் திங்களூரைச் சேர்ந்த அந்தணராவார்; அப்பரைத் தம் குல தெய்வமாகப் போற்றிப் பூசித்தார். அப்பரது பெயரால் பல அறங்கள் செய்தார். தம் மகன் அரவு

மாண்டு இறந்த நேரத்திலும் கூடச் சிறிதுகூட வருந்தாது அப்பரை விருந்துண்ணும்படி உபசரித்தார். அப்பர் பதிகம் பாடி அப்பூதியாரது அருமந்த மகனை உயிர் பெற்றெழச் செய்தார்.

" அஞ்சிப் போய்க்கலி மெலிய அழல்ஓம்பும் அப்பூதி
குஞ்சிப் பூவாய் நின்ற சேவடியாய்."

**10.** இலகவதியார்

" அம்மையார் எனக்கு என்று என்று அரற்றினேற்கு
அம்மையாரைத் தந்தார் ஆரூர் ஐயரே."

இராவணன் கையிலை பெயர்த்துச் செருக்கடங்கினமை ஒவ்வொரு பதிகத்தின் இறுதியிலும் கடைக் காப்பாகக் குறிக்கப்படுகிறது.

## அப்பர் பாராட்டிய திருப்பதிகள்

அப்பர் பாராட்டிய திருப்பதிகள் மொத்தம் நூற்று இருபத்தைந்தாகும். அவற்றுள் சிறந்தவை பின் வருவனவாகும்.

**1.** தில்லைப் பெருங்கோயில்

தில்லை நகர் அந்நாளில், நீலம் மலர்ந்து வாளைபாயும் வயல் சூழ்ந்து வண்டு பண்பாடும் சோலையுடன் பாளையுடைக் கமுகு ஓங்க நிற்கும் பல மாட மாளிகை கொண்டு இனிய காட்சி வழங்கிற்று. இத்தகைய தில்லைப்பதியில் உறையும் இறைவன் புரியும் திருநடனத்தின் சிறப்பை,

" சிற்றம்பலத்து அரன் ஆடல் கண்டால்
பீளையுடைக் கண்களால் பின்னைப் பேய்த் தொண்டர்
காண்பதென்ன"

எனவும், தில்லைக்குப் பொன் வேய்ந்ததை,

**" தூயசெம் பொன்னினால் எழுதி மேய்ந்த சிற்றம்பலம்"**
எனவும் அப்பர் பாடியுள்ளார்.

2. திருவதிகை

திருவாரூர்க்குக் கிழக்கில் கெடிலம் என்னும் ஆற்றின் வடகரையில் உள்ள பதியாகும்.

**" கெடில வட கரைத்தே எந்தை வீரட்டமே."**
**" வில்லால் மூவெயில் எய்தவன் வீரட்டம்."**

இத்திருவதிகைக்கு அதியரையமங்கை என்ற மற்றொரு பெயரும் உண்டெனப் பல்லவர் கல்வெட்டொன்று கூறும். " அதியர மங்கை யமர்ந்தான் தன்னை" என்றார் அப்பரும். "தென்றிசைக் கங்கையது எனப்படும் கெடிலம்" பாய்வதால் இவ்வூர் இயற்கைவளம் செறிந்து விளங்கியது என்றும், " திரையலைப்ப அன்னம் தாமரையூசலாடும்" காட்சியினைக் காணலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

3. திருவொற்றியூர்

தொண்டை நாட்டில் சென்னைக்கருகில் உள்ள இவ்வூர் சிறந்த கடற்கரைப்பதியாகவும் கல்வியின் உறைவிடமாகவும் விளங்கியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**" விடுகலங்கள் நெடுங்கடலுள் நின்று தோன்றும்**
**திரைமோதக் கரையேறிச் சங்கம்**
**ஊரும் திருவொற்றியூர்."**
**" ஓதல் ஓவா ஒளிதிகழும் ஒற்றியூர்."**

12—ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்று இவ்வூரில் வியாகரணதான மண்டபம் ஒன்று இருந்தது எனக்குறிப்பிடுகின்றது.

4. திருப்புகலூர்

அப்பர் இறுதி நாளைக் கழித்த இடமாகும். **நெய்**

நல் வளம் உடையது. பூம்புகார், பூந்தராய் போலப் பூம் புகலூர் எனப்படும்.

"புள் தன் பெடையோடு ஆடும் பூம்புகலூர்"
—சம்பந்தர்.

"பூம்புகலூர் மேவிய புண்ணியனே"—அப்பர்.

"புன்னைக் கானற் பொழிற் புகலூர்"—அப்பர்.

இங்குள்ள இறைவன் கோணப் பிரான் ஆவார்.

"தொல்லை நீர்க் கோணப் பிரானைக் குறுகக் குறுகா
நெடுவினையே."

இதுவே இறைவன் பெயராகப் பிற்காலக் கல்வெட்டுக்களிற் கூறப்படும். திருப்புகலூரிலுள்ள திருநாவுக்கரசர் கோயிற்கு நாள்வழிபாட்டுக்கு அரசு நிவந்தம் விட்டதாக முதல் இராசராசன் கல்வெட்டுரைக்கும்.

## இலக்கிய நயம்

"மாசிலொள் வாள்போல் மறியும் மணிநீர்த் திரைத்
தொகுதி
ஊசலை யாடியங்கு ஒண்சிறை அன்னம் உறங்கலுற்றால்
பாசறை நீலம் பருகிய வண்டுபண் பாடல்கண்டு
வீசுங் கெடில வடகரைத்தே......."

"பைங்கால்தவளை பறைகொட்டப் பாசிலை நீர்ப்படுகர்
அங்காற் குவளைமேல் ஆவிஉயிர்ப்ப அருகுலவும்
செய்காற் குருகிவை சேருஞ் செறிகெடிலக் கரை."

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே."

மேலே தரப்பட்டுள்ள பாடல்களில் இலக்கிய நயத்தைக் காணலாம். மேலும் சிவநெறி தேராது புறச் சம

யத்தே ஒதுங்கியிருந்த தம் நிலைமையை விளக்கற்கு "ஆரூரர்தம் முன்பிருக்கும் விதியின்றி முயல் விட்டுக் காக்கைப் பின் போனவாறே" என்றும், "ஆரூரில் வார்தேனை வாய்மடுத்துப் பருகியுய்யும் விதியின்றி மதியிலியேன் விளக்கிருக்க மின்மினித் தீக்காய்ந்தவாறே" என்றும் அவர் பாடியிருப்பது மிகவும் சுவை பயப்பதாகும்.

தேவர், நாயனர், முதலியார், அரையர், பிள்ளை, நாவுடைப் பெருமான் முதலிய பெயர்களால் கல்வெட்டுக்கள் இவரைக் குறிக்கின்றன. [ஆற்றூர்க் கல்வெட்டு—திருநாவுக்கரசு முதலியார்; தஞ்சைப் பெரியகோயிற் கல்வெட்டு—திருநாவுக்கரைய தேவர்; பராக்கிரம பாண்டியன் கல்வெட்டு-திருநாவுடைய பிள்ளையார்.] மக்களும் அரசியல் தலைவர்களும் தங்களது குழந்தைகளுக்கு இவரது பெயரை இட்டு வழங்கினர். "குன்றங்கிழான் திருநாவுக்கரைசு தேவன்" என்பது அரசியல் தலைவர் ஒருவரின் பெயராகும். "திருநாவுக்கரையனான நேத்திர சிவன்," "சத்தி திருநாவுக்கரையனான ஈசான சிவன்" ஆகியன இரு அந்தணப் பெரியார்களது பெயர்களாகும். ஆப்பூதியடிகள் தம் பிள்ளைகட்கும், பந்தலுக்கும் அப்பரது பெயரை இட்டு வழங்கினர் என்று பெரியபுராணம் கூறும். அப்பரது பாடலில் காணும் சொற்றொடர்கள் இறைவனுக்கும் பெயர்களாக அமைந்தன. திருப்பாதிரிப்புலியூரில் விளங்கும் இறைவனை இவர் "தோன்றாத் துணையாயிருந்தனன் தன்னடியோங்களுக்கே" என்று பாடியுள்ளார். இன்று அவ்வூரிறைவன் "தோன்றாத் துணையாளுடையார்" என்று அழைக்கப்படுகிறார். மேலும் அப்பர் இறைவனுக்கு வழங்கிய தொடர்களை மக்கள் தங்களுக்குப் பெயர்களாக வைத்துக் கொண்டனர். திருமழபாடியில் இவர் இறைவனை "மழபாடி வயிரத்தூணே" என்று பாடினர். ஒருவர் "ஆனைமங்கல முடையான் பஞ்சநதி வயிரத்தூண்" என்ற பெயரைக் கொண்டிருந்ததாகத் தெரிய வருகின்றது. திருவீழிமிழலை, திருப்பாற்றுறை ஆகிய இடங்களில் திருநாவுக்கரசர் பெயரால் மடங்கள்

நிறுவப்பட்டன. பிரான்மலையிலுள்ள மங்கை பாகர் திருக் கோயிலில் இவரது பெயரால் திருமண்டபம் ஒன்று காணப்படுகின்றது. பிரான்மலை மடத்தில் 'திருநாவுக்கரசு பண்டாரம்' உள்ளது. திருவதிகையில் பிடாரி கோயிலின் வடக்கிலிருந்த காட்டை அழித்துச் சாலியர், எண்ணெய் வாணிகர் முதலியோரைக் குடியேற்றி அதற்குத் திருநாவுக்கரசன் திருவீதி என்ற பெயரினை வழங்கினர். தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்திலேயே அப்பர், சம்பந்தர் ஆகியோரது பதிகங்கள் கோயில்களில் பாடப்பட்டன. சோழர் காலத்திலே இவர் உருவம் வழிபடப்பட்டு, வழிபாடுகள் நடத்தப்பட்டன.

## 3. சுந்தரர்

தமிழிலக்கியம் ஒரு நீலவானம். அந்த நீலவானத்திலே புதுமை ஒளி பொழியும் சுடர் நட்சத்திரங்கள் பல உண்டு. அத்தகைய சுடர் நட்சத்திரங்களுள் ஒரு நட்சத்திரமே சுந்தரர். தனிப்பாடல்களை மட்டுமே பாடி வந்த தமிழகத்திலே நெஞ்சைச் சூறையாடும் நீண்டதொரு காப்பியம் செய்து அதன் வாயிலாகப் புதுமைக்கு வித்திட்டார் இளங்கோவடிகள். அதுபோல இடைக் காலத்தே இறைவனையும் அவன் உறைவிடமாகக் கொண்டொளிரும் திருப்பதிகளையும் மட்டுமே பாடி வந்த காலத்திலே சுந்தரர் தோன்றினார்; சுந்தரத்தமிழினால் இறைவனையும் அவன்றன் திருப்பதிகளையும் பாடினார். அத்துடன் நில்லாது, 'ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கிடும் சிவானந்தமாய தேனினை மாந்தி, மெய்தான் அரும்பி, விதிர் விதிர்த்து, இறைவனின் விரையார் கழலுக்குத் தம் கைதான் தலை வைத்துக் கண்ணீர் ததும்பி, வெதும்பி, உள்ளம் பொய் தான் தவிர்ந்து, இறைவனைச் 'சய சய' என்று ஏற்றியும் போற்றியும், இறுதியிலே நில்லாவுலகப் புல்லிய வாழ்க்கையை நீத்து, நிலைத்த புகழ்க் கொடை பூண்ட" அப்பர்;

சம்பந்தர் முதலிய சைவ சமய அடியார்களைப்பற்றி முதன் முதலாகப் பாடினார். அவ்வாறு சுந்தரரால் பாடப்பட்ட நூல் திருத்தொண்டத் தொகை யாகும்.

தமிழிலக்கிய வரலாற்றிலே திருத்தொண்டத் தொகைக்கு ஒரு சிறந்த இடம் உண்டு. சுந்தரர்க்கு முன்னால் எந்தத் தமிழ்ப் புலவனும் தனக்கு முன்பு வாழ்ந்த புலவர்களையோ அடியார்களையோ சுந்தரர் போலத் தொகுத்துப் பாடியதாகத் தெரியவில்லை. சைவப் பெரு மக்கள் தம் தலைமேலேற்றிப் போற்றிப் புகழ்ந்திடும் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடப்பட்ட பெரிய புராணத்தின் தோற்றத்துக்குச் சுந்தரர் பாடிய இந்தத் திருத்தொண்டத் தொகையே காரணமாகும். அது மட்டு மன்று; பெரியபுராணத்துக்கு முன் தோன்றிய திருத்தொண்டர் திருவந்தாதி என்ற நூலுக்கும் சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையே காரணமாகும். இத்துடன் சுந்தரர் நின்று விடவில்லை. சம்பந்தர், அப்பர், சாக்கிய நாயனார் முதலியவர்களையும் சுந்தரர் தமது தேனொழுகும் தேவாரப் பதிகங்களிலே குறிப்பிடுகிறார்.

"நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்
நாவினுக்கு அரையனாளைப் போவானுங்
கற்ற சூதன் நல்சாக்கியன் சிலந்தி
கண்ணப்பன் கணம் புல்லன் என்றிவர்கள்
குற்றம் செய்யினும் குணமெனக் கருதும்
கொள்கை கண்டு நின்குரை கழலடைந்தேன்".

சுந்தரர் பாடிய திருத்தொண்டத்தொகைக்கு மற்றொரு சிறப்புண்டு. திருத்தொண்டத்தொகையில் பாடப்பட்ட நாயன்மார்கள் அனைவரும் தமிழ் நாட்டு மக்களாவர். மேலும் திருத் தொண்டத்தொகையிலே பதினான்கு நாடுகளையும், நூற்றைம்பத்தைந்து திருப்பதிகளையும் குறிப்பிடுகின்றார். மற்றும் அண்ணாமலை, குமணமலை முதலிய மலைகளையும், காவிரி, அரிசிலாறு முதலிய ஆறுகளையும்

சுந்தரர் குறிப்பிடுகிறார். இத்தகைய சிறப்பு மிக்க திருத் தொண்டத்தொகையினைத் தீந்தமிழிலே யாத்துத்தந்த சுந்தரர் திருநாவலூரில் ஆதிசைவ பிராமண மரபில் சடையனார், இசைஞானியார், ஆகியோருக்கு மகனாகப் பிறந்து, நாடாளும் மன்னவன் நரசிங்க முனையாரது வளர்ப்புப் பிள்ளையாக வளர்ந்து, அருமறை நூல்கள் பலகற்று அளவில் தொல்கலைகள் ஆய்ந்தார். ஆண்டுகள் பல உருண்டோடின. குழந்தை சுந்தரர் கொடிபடரும் ஒரு கொம்பாக மாறினார்; திருமணப் பருவம் எய்தினார். இவரது தந்தையார், சடங்கவி என்பவரது மகளை மருமகளாக்க எண்ணினார். ஆனால் திருமண நாளன்று சிவபெருமான் முதியவர் வடிவில் வந்து திருமணத்தை நடைபெறாதவாறு செய்து, சுந்தரரைத் தடுத்தாட் கொண்டருளினார். பின்னர் சுந்தரர் கணிகையர் மரபில் வந்த பரவையாரையும், வேளாளர் மரபில் வந்த சங்கிலியாரையும் திருமணம் செய்து கொண்டார். இத்திருமணம் பற்றிச் சேக்கிழார் பெருமான், "சுந்தரர் சிவனின் அணுக்கத் தொண்டரான ஆலால சுந்தரராவார்; பரவையாரும் சங்கிலியாரும் உமையின் பணிப் பெண்டிராவர்; ஆலாலசுந்தரர் கைலாயத்திலேயே இவ்விருவர் மீதும் அன்பு கொண்டார்; எனவே சிவனால் மூவரும் மண்ணுலகத்திற்கு அனுப்பப் பட்டனர்" என்று தமது பெரிய புராணத்தில் கூறியுள்ளார்.

அப்பர், சம்பந்தர் போன்று இவரும் பல பதிகளுக்கும் சென்று இறைவனைப் பாடி மகிழ்ந்தார். முதலையுண்ட பாலனை அழைத்தல், செங்கல்லைப் பொன் கல்லாகச் செய்தல், ஆற்றில் இட்ட பொருளைக் குளத்தில் எடுத்தல் போன்ற பல அற்புதங்களை இவர் திருவருளின் துணைகொண்டு செய்து காட்டினார். இவரது பாடல்கள் நயங்கள் பலவற்றைக் கொண்டு விளங்குவதால், "நயத்துக்குச் சுந்தரனார்" என இவர் பாராட்டப் பெறுகின்றார். கல்வியின் பொருட்டுச் சிவபெருமான் இவரது நட்டைப் பெற்றார் எனவும் அதன் காரணமாய் இவர் 'தம்பிரான்

தோழர்' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்ருரெனவும் பெரியபுராணம் கூறும்.

இவர் பல ஆயிரக்கணக்கான பாடல்களைப் பாடியருளினர். ஆனல் 1020 பாக்களே கிடைத்துள்ளன. இறைவனைப் பற்றியும், அவனது அன்பின் திறத்தைப் பற்றியும், அவன் அடியவர்களுக்கு அருள்புரியும் தன்மையைப் பற்றியும் சுந்தரர் தமது பாடல்களிலே திறம்படக் கூறியுள்ளார். அவற்றுள் ஒரு சில வருமாறு :

"பெண்ணோடு ஆண் அலியாய்ப் பிறவா
உருவானவனே"

"விருத்தனைப் பாலனைக் கனவிடை விரவி"

"பேராயிரம் உடையானை"

"இறையவனை மறையவனை எண் குணத்தினனை"

"பணிமே விட்ட பாசுபதர் பஞ்சவடி மார்பினர்"

"தாயுந் தந்தை பல்லுயிர்க்குந் தாமே ஆய
தலைவனார்"

"அங்கமாறு மாமறையொரு நான்கும் ஆய நம்பனை"

"மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி"

"மூவரின் முதலாயவன் றன்னை"

"மண் நீர் தீ வெளிகால் வருபூதங்களாகி"

"வஞ்சமற்ற மனத்தாரை மறவாத பிறப்பிலியை"

"மெய்யர்க்கு மெய்ப் பொருளான விமலன்"

"பிறவாய் இறவாய் பேணாய் மூவாய்"

"பகலுங் கங்குலுமாகி நின்றானை"

"ஆருயிர்க் கெல்லாம் மருந்தனை ன்றனை"

"அகரம் முதலின் எழுத்தாகி நின்றாய்"

"இமைக்கும் எழுத்துக் குயிரே யொத்தியால்"

"சொல்லுவார் சொற்பொரு ளவைநீ"

"பண்ணுளீராய்ப் பாட்டு மானீர்"

"பண்ணாரின் தமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே"
"பேசினாற் பெரிதும் இனியானை"
"கற்ற கல்வியிலும் இனியானை"
"தொண்டரைப் பெரிதும் உகப்பானை"
"தொண்டர் தமக் கெளிய சோதியை வேதியனை"
"வேதத்தின் பொருளானை"
"ஓங்காரத் துருவாகி நின்றானை"
"அல்லலில் அருளே புரிவானை"
"தொழுவார் தங்கள் துயர் தீர்ப்பாய்"
"மெய்யிலாதவர் தங்கட் கெல்லாம் பொய்யனை"
"தருமனார் தமர் என்னைக் கலக்குவான் வந்தாலும்
கடுந்துயர் வாராமே விலக்குவாய்."

திருஞானசம்பந்தர், அப்பர், கண்ணப்ப நாயனார், சண்டேசுர நாயனார், கோச்செங்கட்சோழ நாயனார், புகழ்த்துணை நாயனார், ஏயர்கோன் கலிக்காம நாயனார், கணம்புல்ல நாயனார், திருநாளைப்போவார் நாயனார், மூர்க்க நாயனார், சாக்கிய நாயனார், நரசிங்க முனையரைய நாயனார், கோட்புலி நாயனார் ஆகியோர், சுந்தரர் தம் தேவாரப் பதிகங்களில் குறித்த அடியார்களாவர். ஒரு சிலரைக் குறிக்கும் பாடல் வரிகள் கீழே தரப்பட்டுள்ளன.

"நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் நாவினுக்கரையன்"
"இடந்த கண்ணப்பன் ஒத்த பத்தர்கட்கு"
"இண்டை மலர் கொண்டு மணல் இலிங்கம தியற்றி
இனத்தாவின் பாலாட்ட இடறிய தாதையைத்
தாள் துண்டமிடு சண்டி அண்டர்."

சிவபெருமான் இனிமையானவர் என்றும், நாம் சார வேண்டியதும், உணர வேண்டியதும், பேச வேண்டியதும், பரவ வேண்டியதும், பயில வேண்டியதும், அறிய வேண்

டியதும், நினைய வேண்டியதும், குழைய வேண்டியதும் எல்லாம் வல்ல தேவதேவனுன கங்கை சடைமுடிக் கணிந்த பெருமானிடத்திலே ஆகும் என்று சுந்தரர் பாடியுள்ளார்.

"எனக்கினியவன் தமர்க்கினியவன்"
"சடையிற் கங்கை தரித்தானைச் சாராதார் சார்பென்னே"
"உறையும் எங்கள் பிரானை உணராதார் உணர்வென்னே"
"பெண் ஆணய பிரானைப் பேசாதார் பேச்சென்னே"
"பரமன் எங்கள் பிரானைப் பரவாதார் பரவென்னே"
"ஐயர் எங்கள் பிரானை நினையாதார் நினைவென்னே"
"குழை காதற் கடிமைக்கட் குழையாதார்
குழைவென்னே."

சைவசமயிகள் மேற்கொண்டொழுகுவன சரியை முதலிய நாற்பதங்களாம். அவற்றைச் சுந்தரர் பின் வரும் பாடல்களில் அழகுறக் கூறியுள்ளார்.

சரியை:

"தாரமாகிய பொன்னித் தண்டுறை யாடிவிழுத்து
நீரின்றடி போற்றி நின்மல கொள்ளென வாங்கே
ஆரங்கொண்ட எம்மானைக் காவுடையாதியை நாளும்
ஈரமுள்ளவர் நாளும் எம்மையு மாளுடையாரே."

கிரியை:

"சுரும்பார் விண்ட மலரவை தூவித் தூங்கு கண்ணீர்
அரும்பா நிற்கும் மனத்தடி யாரொடும் அன்பு
செய்வன்
விரும்பேன் உன்னையல்லாலொரு தெய்வமென்
மனத்தாற்
கரும்பாருங் கழனிக் கழிப்பாலை மேயோனே."

யோகம்:

"தேடுவன்தேடுவன் செம்மலர்ப் பாதங்கள்
நாடொறும்

நாடுவன் நாடுவ னாபிக்குமே லேயோர் நால்விரல்
மாடுவன் மாடுவன் வன்கைபிடித்து மகிழ்ந்துளே
ஆடுவன் ஆடுவ னாமாக் ததொல்லடிகளே."

ஞானம்:

"குற்றநம்பி குறுகா ரெயின் மூன்றைக் குலைத்தநம்பி
சிலையா வரைகையிற்
பற்றுநம்பி பரமானந்த வெள்ளம் பணிக்கு நம்பி
ஞானப்பாடுதல் அல்லான்
மற்று நம்பியுனக் கென்செய வல்லேன் மதியிலியேன்
படுவந்துய ரெல்லாம்
எற்று நம்பி எனையாளுடைநம்பி எழுபிறப்பும்
எங்கள் நம்பி கண்டாயே".

சுந்தரர் 114 தலங்கட்குச் சென்று தேவாரப் பதிகம் பாடியதாகப் பெரியபுராணம் கூறும். அவற்றில் 31 திருப்பதிகளுக்குப் பதிகம் கிடைக்கவில்லை. ஆனால் சேக்கிழார் கூறாத திருவிடையாறு என்னும் தலத்திற்குப் பதிகம் காணப்படுகிறது. சம்பந்தரைப் போன்று சுந்தரரும் இயற்கைக் காட்சிகளை நன்கு வருணித்துள்ளார். ஓர் எடுத்துக்காட்டு வருமாறு:

"பாளைபடு பைங்கமுகின் சூழல் இளந்தெங்கின்
படுமதஞ்செய் கொழுந்தேறல் வாய்மடுத்துப் பருகிக்
காளை வண்டுபாட மயிலாலும் வளர்சோலைக்
கானாட்டு முள்ளூர்."

சுந்தரர் காலத்தில் வாழ்ந்த மற்றொரு சிறந்த சிவனடியார் சேரமான் பெருமாள் நாயனார் ஆவார். அதன் பின்னர் வாழ்ந்த தலைசிறந்த பெரியார் மாணிக்கவாசகர் ஆவார். அடுத்து இவ்விருவரது வாழ்க்கை வரலாற்றினையும், நூல்களையும் பற்றி ஒரு சிறிது கூறுவாம்.

# சேரமான் பெருமாள்

சேரநாட்டைப் பண்டைக் காலத்தே ஆண்ட அரச மரபுகளுள் இரும்பொறை என்பது ஒரு மரபாகும். அதில் தோன்றி நாடாண்ட காவலருள் ஒருவனே சேரமான் செங்கோற் பொறையன் என்பவன். அவன் வழி எஞ்சிற்று. எனவே நாடு துறந்து காடு சென்றான். காவலன் இல்லா நாடு கணவன் இல்லா வீடு என்பதை உணர்ந்த அரசியற் சுற்றத்தார் திருவஞ்சைக்களம் நோக்கிப் புறப்பட்டனர். அக்காலை திருவஞ்சைக்களத்தில் அரசர் குடியில் தோன்றிச் சிவனைச் சிந்தித்த வண்ணமே பெருமாக் கோதையார் என்பவர் வாழ்ந்து வந்தார். அவரிடம் அரசியற் சுற்றத்தார் வந்தனர். தம் அவாவினை விளம்பினர்; மக்கள் தொண்டு மகேசன் தொண்டினைப் பாதிக்குமோ என மாக்கோதையார் மனங் கலங்கினார். பின்னர் மறைக்கும் எட்டா மாமுதல்வனை இறைஞ்சினார்; அக்காலை பேரறிவு கைவரப்பெற்றார். அதனால் கழற்றறிவார் என்னும் சிறப்புப் பெயருடன் திருவஞ்சைக்களம் புகுந்தார்; சேரவரசை மேற்கொண்டார்; சேரமான் பெருமாள் ஆயினார்.

இயம்பல துவைப்ப எங்கும் ஏத்தொலி எடுப்ப மாதர் நயந்து பல்லாண்டு போற்ற நான்மறை யொலியினோங்க வியந்து பார்வந்து விரும்ப நெருங்கு தாரியங்கள் ஏங்க நிரைத் தாமரைகள் ஓங்கப் பெருங்குடை மிடைந்து செல்லப் பிணங்கு பூங்கொடிகளாடச் சேரமான் பெருமாள் முடிசூடி உலாவந்தார். [illegible]து உவர் மண்ணின் திருவினையால் மேனியு[illegible] போலப் பொலிய வண்ணான் ஒருவ[illegible] வந்தனன். அவ[illegible]க்கண்ட காவலராகிய பெருமாள[illegible] விழிகள் துளும்பின, மெய் சிலிர்த்தது. அவ்வளவு[illegible]தான்; வண்ணான் திருவ[illegible]களில் தன் முடியார் சென்னி[illegible]யைக் கிடத்தினார். ஏன் இவ்வாறு செய்தார்? மண்ணாளு[illegible] மன்னன் வண்ணானின் [illegible]கால்களில் விழுவானேன்? [illegible]அந்த மேனியும் செம்ப[illegible]டை

110940

முடியும் கொண்ட வண்ணன் செம்மேனி அம்மானாக அவர் தம் அருட் கண்களுக்குத் தோன்றியமையால் என்க.

சேரமான் பெருமாள் மக்கள் தொண்டினைச் செய்த போதிலும் மாமுது முதல்வனுக்குச் செய்யும் தொண்டினை நாளும் மறவாது செய்த வண்ணம் இருந்தார். சிவவழி பாடு செய்யும் பொழுது ஒவ்வொரு நாளிலும் தில்லையம் பலவாணனின் திருச்சிலம்பொலி கேட்டு உளங்குளிருவார். ஒரு நாள் மதுரையிலிருந்து பாணபத்திரன் என்பான் இறைவன் அளித்த திருமுகப் பாசுரத்துடன் பொருள் வேண்டிச் சேரமானிடம் வந்தான்; பாசுரத்தினை அவரிடம் காட்டினான்; அவர் அகங் குளிர்ந்தார்; முக மலர்ந்தார்; இறுதியிலே புவியாளும் செல்வத்தையே பாணனுக்களிக்க முன்வந்தனர். பாணனோ அளவே பெற்றான். பின்னொரு நாள் சிவ வழிபாடுநடந்தது; வழக்கம் போல அன்றும் சிலம்பொலி கேட்கும் எனச் சேரமான் எதிர்பார்த்தார். ஆனால் இறுதியில் ஏமாற்றமே அடைந் தார். எனவே அவர் கலங்கினார்; சற்று நேரங்கழித்துச் சிலம்பொலி கேட்டது. காலம் தாழ்ந்தமைக்குக் காரணம் கூறுவார் போலக் கண்ணுதற் கடவுள் சேரனைத் தில் லைக்கு வந்து பின் திருவாரூர்ச் சென்று நம்பியாரூரரைக் காணுமாறு பணித்தனர். அவ்வாறே சேரமான் தில்லை சென்றார். இறைவனைப் பரவிப் பொன் வண்ணத்தந் தாதி பாடினார்; பின் திருவாரூர் சென்றார்; சுந்தரருடன் அளவளாவினார்; இருவரும் நண்பராயினர். பின் சேர மான் மும்மணிக்கோவை பாடினார். பின்னர் சுந்தரரும் சேரமானும் பாண்டிநாடு சென்று, திருப்பரங்குன்றம் முதலிய திருப்பதிகளை வழிபட்டுப் பின் சேரநாடு சென்ற னர். இடையிலே சுந்தரர் சொந்தநாடு சென்று இறுதி யில் சேரநாடு சென்று தங்கினார். பின் ஒரு நாள் இறை வன் வெள்ளை யானையை அனுப்பினார். சுந்தரர் அதன் மூலம் கைலை சென்றார். அவருடன் சேரமானும் குதிரை யேறிச் சென்றார். அங்கே ஆதியுலாப் பாடினார்; சிவகணங்கட்குத் தலைவரானார்.

## சேரமான் பெருமானின் காலம்

சேரமான் பெருமாள், சுந்தரர் இவர்களது காலத்தை அறிஞர்கள் பலர் ஆராய்ந்தனர். அவ்வாறு ஆராய்ந்தவருள் தஞ்சைச் சீனிவாசம் பிள்ளை, இராமநாதையர், நாராயண அய்யர், டாக்டர் மீனாட்சி ஆகிய பேரறிஞர்கள் சேரமான்பெருமாளின் காலம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டாகுமென்றனர். பல்லவர் வரலாறும், சேரமான் நூல்களில் காணப்படும் வரலாற்றுக் குறிப்புகளும் இவர்கள் எட்டாம் நூற்றாண்டு என்பதற்குத் துணைபுரிகின்றன என்று காலம் சென்ற சதாசிவப் பண்டாரத்தார், கோவிந்தசாமிப் பிள்ளை, மு. இராகவையங்கார் ஆகியோர் கூறியுள்ளனர். சேரமான் மூன்று நூல்களைச் செய்துள்ளார். அவை பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை, திருக்கைலாய ஞானவுலா என்பவையாகும். இவற்றுள் பொன்வண்ணத்தந்தாதி என்பது தில்லையில் செய்யப்பட்டது. திருவாரூர் மும்மணிக்கோவை திருவாரூரிற் செய்யப்பட்டது; ஆதியுலா கைலாயத்தில் அருளப்பட்டது.

தன்னுடைய கருவி கரணங்களைத் திருத்தொண்டில் ஈடுபடுத்தல், உடல் வாழ்வின் உயர்வின்மை, தொண்டு செய்யும் முறை, தொண்டினை யேற்கும் இறைவனது அருமை நிலை, அம்மையப்பனாய் ஆண்டவன் எழுந்தருளும் திறம், அவன் அட்ட மூர்த்தியாய் அமைதல், அகப்பொருள் துறைகள், இங்கிதப் பாட்டுக்கள், இனிய சொல்லாடல் ஆகியன பொன்வண்ணத்தந்தாதியில் பொதுளியுள்ளன. ஒவ்வொரு தமிழ்க் கவிஞரும் தாம் கவிபாடும் காரணத்தை நூலின் முகப்பிற் கூறுவர்; அல்லது இறுதியிற் கூறுவர். பின்னைய முறைக்குச் சம்பந்தரைக் கூறலாம். ஆனால் சேரமான் பெருமாளோ கவிபாடும் காரணத்தை நூலின் முகப்பிலும் உரைக்கவில்லை; முடிவிலும் விளம்பவில்லை. நூல் தொடங்கி இருபது பாக்கள் பாடிய பின்னரே கூறுகின்றார். அது வருமாறு :

" தெள்ளிய மாந்தரைச் சேர்ந்திலன்
  தீங்கவி பாட லுற்றேன்
ஒள்ளிய சொல்லும் பொருளும் பெறேன்
  உரைத்தார் உரைத்த
கள்ளிய புக்கால் கவிகள் ஒட்டார் கடல்
  நஞ்சு அயின்றாய்
கொள்ளிய வல்ல கண்டாய் புன்சொல்
  ஆயினும் கொண்டருளே."

திருத்தொண்டு ஈடுபாடு:

"கருவி கரணங்களை இறைவன் திருத்தொண்டில் ஈடுபடுத்திப் பிறவிக்கு ஏதுவாகிய மல கன்மங்களினின்றும் நீங்குதல் வேண்டும் என்பது சிவநெறி அணைந்தோரது சீரிய நேரிய கொள்கையாகும். பொறிகளை நெறியல்லா நெறிச் செல்லவொட்டாது ஒறுத்து அடக்குதல் வேண்டும்; அவ்வாறு அடக்கின் புலன்கள் ஒடுங்கும். புலன் ஒடுங்கின் வினையொழியும்; வினை யொழியின் மனம் இறையின்பாற் படியும்; படியவே ஞானம் பெருகும்; மலந்தேயும்." அதனால் இறைவழிபாட்டைப் பெரியார் விரும்பி அதன் கண் ஒன்றியிருக்கும் தனது செயலைச்

"சிந்தனை செய்யமனம் அமைத்தேன்; செப்ப
    நாவமைத்தேன்;
வந்தனை செய்யத் தலையமைத்தேன்; தொழக்
    கையமைத்தேன்
பந்தனை செய்வதற்கு அன்பமைத்தேன்; மெய்
    அரும்ப வைத்தேன்
வெந்த வெண்ணீறு அணி ஈசற்கு இவையான்
    விதித்தனவே"

என்று கூறி, நம்மையும் அது செய்யுமாறு,

"கூறுமின் ஈசனை; செய்ம்மின் குற்றேவல்;
    குளிர்மின் கண்கள்

தேறுமின் சித்தம்; தெளிமின் சிவனை;
செறுமின் செற்றம்
ஆறுமின் வேட்கை; அறுமின் அவலம் ;
இவை நெறியா
ஏறுமின்; வானம் இமையவர்க்கு விருந்தாய் இருமின்''

என்று அறிவுறுத்தி வற்புறுத்துகின்றார்.

ஓர் உவமை:

பக்தி விஞ்சி அடியவர்கள் இறைவனைச் சேரின் முக்தியடைவர். இதற்குச் சேரமான் பெருமாள் அவர்கள் ஓர் அழகிய உவமையினைப் பயன்படுத்தியுள்ளார். காக்கை கருப்பு நிறமுடையது; இமயமலையோ பொன்னிறமானது. காக்கை இமயமலையை அடைந்தால், இமயத்தின் பொன்னிறச் சாயலில் தோய்ந்து அதுவும் கருமை மறைந்து பொன்னிறம் பெறும். இவ்வாறே இறைவனைச் சேர்ந்த அடியவரும் முத்திச் செல்வம் பெறுவர் என்கிறார் சேரமான்.

"மாயநன் மாமணி கண்டன் வளர்
சடையார்க்கு அடிமை
ஆயின தொண்டர் துறக்கம்
பெறுவது சொல்லுடைத்தே
காய்சின யானை வளரும்
கனக மலை யருகே
போயின காக்கையும் அன்றே
படைத்தது அப் பொன் வண்ணமே.''

இவர் திருவாரூர் மும்மணிக்கோவையை நம்பியாரூரர் கேட்கத் திருவாரூர் இறைவன் முன் அரங்கேற்றம் செய்தார். இதனை, "திருமும்மணிக் கோவை நாவலூரர் தம் முன்பு நன்மை விளங்கக் கேட்பித்தார்'' என்று பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய சேக்கிழார் கூறுமாற்றால் அறியலாம். இம் மும்மணிக்கோவை முப்பது

திருப்பாட்டுக்கள் கொண்டது. எல்லாப் பாக்களும் அகப் பொருள் பற்றியவை. சில பாக்களில் சங்கப் பாடல்கள் இரண்டொன்றின் சாயல் காணப்படுகின்றது.

" புனமயிற் சாயல் பூங்குழன் மடந்தை
மனைமலி செல்வம் மகிழாளாகி ஏதில் ஒருவன்
காதலனாக"

என்ற வரிகள்,

" கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொடுஞ்சோறு உள்ளாள்"

என்ற நற்றிணைக் காட்சியை நினைப்பூட்டுகின்றன.

தமிழில் காணப்படும் உலாப் பிரபந்தங்களில் காலத்தால் முந்தியது சேரமான் பாடிய கைலாய ஞானவுலா வாகும். இது பற்றியே அதனை ஆதியுலா எனக் கூறினர் போலும். இறைவன் செவ்விய கோலம் பூண்டு, தேவர் பலரும் சிறப்புடைய பல பணிகளைச் செய்துவர, அவர் வேண்டுகோட்கு இசைந்து உலா வருங்கால், அவனைப் பேதை முதலாகப் பேரிளம் பெண் ஈருக மகளிர் பலரும் கண்டு நயந்திட, அவர்களனைவர்க்கும் அருள் நோக்கம் செய்து திருவுலாவந்து அமைகின்றான் சிவன் என்பது இந்த உலாவின் திரண்ட கருத்தாகும். உலாவின்கண் வரும் பாக்கள் சிறந்தவை. இழுமெனும் ஒலியுடன் ஒழுகிச் செல்லுகின்றன. இளகி ஒளிரும் வெண் பொன் ஒழுக்குப் போன்று ஒவ்வொரு வரியும் செல்லுகின்றது.

" திருமாலும் நான்முகனும் தேர்ந்துணரா தன்றங்கு
அருமா லுறவழலாய் நின்ற-பெருமான்
பிறவாதே தோன்றினான் காணாதே காண்பான்
துறவாதே யாக்கை துறந்தான்-முறைமையால்."

இவ்வரிகளைப் படிக்கும்பொழுது, மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப் பூவாடையதுபோர்த்தி அமைதியாகச் செல்லும் ஆறுநீர்க் காவிரி நம் கண்முன் தோன்றும்.

உலா முழுவதும் இவ்வாறே அமைதியும் இனிமையுமே ஆட்சி புரிகின்றன.

சேரமான் பெருமாள் சைவராக இருந்து பாக்கள் பாடியதின்மூலம் இடைக்காலத்தெழுந்த சமய மறு மலர்ச்சியிலே சேர நாட்டுக்கும் பங்குண்டு என்பதை நிறுவிக் காட்டிச் சென்றுள்ளார். அவ்வாறு சமயத்துறையில் மட்டுமின்றிச் சமய இலக்கியங்களிலும் சேர நாட்டின் பங்கை அவர் செய்துள்ள நூல்கள் தெற்றெனக் காட்டுகின்றன. சேரமான் பெருமாள் தோன்றியிராவிட்டால் சமய மறுமலர்ச்சி வரலாற்றிலே அதற்கு இடமே இல்லாது போயிருக்கும்; சமய இலக்கியங்களிலே சேர நாட்டுத் தமிழர்க்குப் பங்கே இராது. அத்தகைய அவல நிலையைத் தன் அரும்பெருந் தொண்டாலும் புனைந்த பாக்களாலும் துடைத்த பெருமை சேரமானையே சாரும்.

## மணிவாசகர்

### காலம்

கி. பி. முதலிரண்டு நூற்றாண்டுகள் — திருமலைக் கொழுந்துப் பிள்ளை, பரிதிமாற் கலைஞர், டி. பொன்னம்பலம் பிள்ளை.

கி. பி. மூன்றாம் நூற்றாண்டு — மறைமலையடிகள்.

கி. பி. நான்காம் நூற்றாண்டுக்கு முந்தியகாலம்-கா.சு. பிள்ளை.

கி. பி. நான்காம் நூற்றாண்டுக்குப் பிந்தியகாலம் — சேசையர்.

கி. பி. நான்கு அல்லது ஐந்தாம் நூற்றாண்டினர் — இராமசாமி சாத்திரியார்.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து ஏழாம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தில் இடைப்பட்டவர்—திருச்சிற்றம்பலம் பிள்ளை, சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணியம்.

கி. பி. பத்தாம் நூற்றாண்டு—கோபிநாத ராவ்.

கி. பி. பதின்மூன்று அல்லது பதினான்காம் நூற்றாண்டு—ரோச்ட் (Dr. Rost).

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதி—சீனிவாச அய்யங்கார், அனவரத விநாயகம் பிள்ளை, சீனிவாசபிள்ளை.

கி. பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்—கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார்.

கி. பி. எட்டாம் நூற்றாண்டு—வில்சன், டாக்டர் போப்.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு—(சங்கரர் காலத்துக்குப் பின்னவர்)—இன்னசு (Innes).

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம்—நெல்சன் (புத்தர் வரலாறு).

கி. பி. எட்டாம் நூற்றாண்டிலிருந்து பத்தாம் நூற்றாண்டுவரை கூறலாம்—கௌடி.

மேலே மாணிக்க வாசகரின் காலத்தை ஆராய்ந்த பல்வேறு அறிஞர்களினால் குறிக்கப்பட்ட பல்வேறு காலங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு என்னும் காலமே காலப்போக்கில் வற்புறுத்தப்பட்டுப் பின் வந்த அறிஞர் பெருமக்களால் காட்டப்பட்டு வருகிறது. ஏனையவை பொருந்தாக் காலங்கள் என ஒதுக்கப் பட்டுவிட்டன. இனி ஒன்பதாம் நூற்றாண்டு பற்றிய ஆராய்ச்சி முடிவுகளைக் காண்போம். அடிகள் காலம் ஒன்பதாம் நூற்றாண்டென ஆராய்ந்தவர்கள் இன்

னசு, சீனிவாச ஐயங்கார், அனவரதவிநாயகம் பிள்ளை, சீனிவாசப் பிள்ளை, பழனியப்ப பிள்ளை ஆகியோரும் பிறரும் ஆவர். பிற்காலத்தெழுந்த தமிழ் நூல்களில் பெரும் பாலன நால்வர்க்கும் வணக்கம் கூறுகின்றன. அவ்வாறு கூறும் பொழுது நால்வர் பெயரையேனும் அல்லது அவர்கள் செய்த அற்புதங்களில் சிறந்த நான்கு அற்புதங்களை யேனும் குறிப்பிடுதல் பெரு வழக்கமாகக் காணப்படுகிறது. அவ்வாறு கூறும்பொழுது கூறும்வகையில் ஒரு பொதுமை காணப்படுதலை எளிதில் அறியலாம். அதாவது மணிவாசகரும் அவர்தம் திருச் செயலும் நான்காவதாகக் கூறப்படலாகும். இவர்கள் அனைவரும் இவ்வாறு ஒரு முகமாகக் கூறுவதற்கு ஏதேனும் ஒரு வரலாற்று அடிப்படை இருந்தேயாகல் வேண்டும். அவ்வடிப்படை எது வென இப்பொழுது துணிதற்கில்லை.

மாயாவாதம் என்பது புறச் சமயங்களுள் ஒன்று. இதனைத் தோற்றுவித்தவர் சங்கரர். இதனைப் பிற்காலச் சைவ நாயன்மாரில் சிலரும், வைணவ ஆழ்வாரில் சிலரும் கண்டிக்கின்றனர். இத்தகைய மாயாவாதம் பற்றிய குறிப்பும் கண்டனமும் மாணிக்க வாசகரால் குறிக்கப்படுகின்றன.

> "மிண்டிய மாயாவாத மென்னும் சண்டமாருதம்
> சுழித்தடித்தார்த்து."

எனவே மாணிக்க வாசகர் மாயவாதத்தைத் தோற்றுவித்த சங்கரர் காலத்திலோ அன்றி அவருக்குப் பிற்பட்ட காலத்திலோ தோன்றியிருத்தல் வேண்டும். ஒரு சமயம் மாற்றுரால் கண்டிக்கப்பட வேண்டுமானால் அது ஓர் அளவிற்கு வளர்ந்த பிறகே கண்டிக்கப்படும். எனவே சங்கரரது மாயா வாதம் ஓர் அளவுக்குப் பரவிய பின்னரே மாணிக்க வாசகர் அதனைக் கண்டித்திருக்க வேண்டும். அவ்வாறெனில் சங்கரருக்குப்பிற்பட்ட காலத்தவரே மணிவாசகர் எனலாம். சங்கரர் காலத்தை ஆராய்ந்த மாக்ஸ்முல்லர்,

கித் என்போர் கி. பி. எட்டாம் நூற்றூண்டுக்கும் ஒன்பதாம் நூற்றூண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர் சங்கரர் என்று கூறியுள்ளனர். அதனைக் காம்போச நாட்டுக் கல்வெட்டு உறுதி செய்வதாகப் பேராசிரியர் நீலகண்ட சாத்திரியார் கூறுவர். எனவே சங்கரர் கி. பி. ஒன்பதாம் நூற்றூண்டின் முற்பகுதியினர் என்னலாம். அதனுல் மாணிக்க வாசகர் காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றூண்டின் இடைப்பகுதியாகவோ அன்றிப் பிற்பகுதியாகவோ இருக்கலாம். அடிகள் பாண்டியன் வரகுணனைக் குறித்துள்ளார்.

" வரகுணனும் தென்னவனேத்து சிற்றம்பலத்தான்."
" சிற்றம்பலம் புகழும் மயலோங்கு
இருங்களியானை வரகுணன்."

இடைக்காலப் பாண்டியர்களுள் வரகுணன் எனப் பெயர் பெற்றவர் இருவர் உளர். அவர்களுள் இரண்டாம் வரகுணனே மாணிக்க வாசகரால் குறிக்கப் பெற்றவன் என்பது சீனிவாசப் பிள்ளை கருத்தாகும். முதல் வரகுணன் காலம் கி. பி. 792-835 ஆகும். இரண்டாம் வரகுணன் இவனுக்கு மகன் வயிற்றுப் பேரன்; இவனது காலம் கி. பி. 862-880.

திருவாசகமும் திருக்கோவையாரும் பட்டினத்தாரின் பொருளுரைகளும் திருவிடை மருதூர்த் தலபுராணமும் பிறவும் வரகுண பாண்டியன் என்பவன் திருவிடைமருதூர், தில்லை ஆகிய இடங்களில் நீண்ட காலம் தங்கிச் சிவப்பணி புரிந்தனன் என்று கூறுகின்றன. திருவிடைமருதூரும் தில்லையும் சோழநாட்டுப் பதிகள். அப்பதிகளிலே பணி செய்யவும் நீண்ட காலம் தங்கவும் வேண்டுமானுல், வரகுண பாண்டியன் ஆட்சிக்கு அவை உட்பட்டவையாகவும், பாண்டியன் மிகுந்த வல்லவனுகவும் இருந்திருத்தல் வேண்டும். முதல் வரகுணன் கல்வெட்டுக்களே சோழநாட்டிலுள்ள திருவியலூர், திருநெய்த்தானம்

ஆகிய ஊர்களில் காணப்படுகின்றன. எனவே முதல் வர குணன் காலத்தில் சோழநாட்டின் பெரும்பகுதி பாண் டியன் கையிலேயே இருந்திருத்தல் வேண்டும். அதற் கேற்ப அக்காலப் பல்லவனை நந்திவர்மன் கல்வெட்டு ஒன்றேனும் சோழநாட்டிற் காணப்படவில்லை. இவ்வாறு பல்லவனையும் தோற்கடித்துச் சோணாட்டைப் பிடித்தமை யால்தான்போலும், சின்னமனூர்ச் செப்பேடுகள் இரண் டாம் வரகுணனை விட முதல் வரகுணனை உயர்வாக "மகா ராசன்" என்கின்றன போலும். நம்பியாண்டாரும் இவன் தன் உடல் வன்மையைச் சற்று மிகைபடக் கூறுகின்றார். ஆனால் இரண்டாம் வரகுணனோ போரிற் பெருந்தோல்வி எய்திப் புறமுதுகிட்டோடியுள்ளான். இத்தகையவன் சோழ நாட்டில் நெடுநாள் தங்குவது எங்கே? திருப்பதி களை வணங்குவது எங்கே? எனவே மணிவாசகர் குறிப் பிடுவது முதல் வரகுணனையே என்க. முதல் வரகுணன் காலம் கி. பி. 792-835. எனவே அடிகள் காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பது தெளிவு. ஆனால் மற்றொரு ஐயமும் உள்ளது. சைவ நாயன்மார்க ளிலே மூவர்க்கு எவ்வளவு சிறப்புண்டோ அவ்வளவு சிறப்பு மணிவாசகருக்கும் உண்டு. அவ்வாறிருக்கப் பின் வந்த பெரிய புராணம் மணிவாசகரின் சிறப்பில் நூறிலும் ஆயிரத்திலும் ஒரு பங்குடைய அடியார்களை எல்லாம் குறிப்பிட்டுவிட்டு மணிவாசகரை மட்டிலும் குறிப்பிடா மல் விட்டதேன்? இதனால்தான் போலும் டாக்டர் ரோச்ட் என்பவர் அடிகள் கி. பி. 13 அல்லது 14-ம் நூற் றாண்டைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்றார் போலும். ஆனால் சேக்கிழார் திருத்தொண்டத் தொகையில் கூறப் பட்டுள்ள நாயன்மார்களையே பாடியுள்ளார் என்றும், அத் திருத்தொண்டத் தொகையைப் பாடியவராகிய சுந்த ரர் மாணிக்கவாசகருக்கு முற்பட்டவர் ஆதலின் மாணிக்க வாசகரை அவர் தமது திருத்தொண்டத் தொகையில் சேர்க்கவில்லை என்றும் ஒரு சிலர் கூறுவர். இது முற்றி லும் பொருத்த முடைத்தே.

## மணிவாசகரின் வாழ்க்கை வரலாறு

மாணிக்கவாசகர் திருவாதவூரில் ஆமாத்திய பிராமணர் மரபில் சம்புபாதாசாரியரின் புதல்வராகத் தோன்றினார். இவரது இயற்பெயர் வாதவூரர் ஆகும். இவர் கலைத்திறனும் அறிவாற்றல் ஒழுக்கங்களும் பெற்று விளங்கவே அரிமர்த்தன பாண்டியன் இவரைத் தன் நாட்டிற்கு முதலமைச்சராக்கித் தென்னவன் பிரமராயன் என்னும் பட்டமும் வழங்கிச் சிறப்பித்தான். அடிகள் இறைவனது திருவடிக்கண் மாறாத பேரன்புடையராய் விளங்கினார். பாண்டிய மன்னனுக்குக் குதிரைகள் வாங்கி வருதற் பொருட்டு இவர் அளவற்ற பொற்குவியல்களுடன் ஒரு நாள் மதுரையை விட்டுப் புறப்பட்டார். திருப்பெருந்துறையை வந்தடைந்தார். இத்தலத்தில் குருந்த மரத்தடியில் இறைவனால் ஞானோபதேசம் பெற்றார். அதன் காரணமாய் அவர் அருட்பாடல்களை மழை மாரியெனப் பொழிவாராயினர். அடிகளின் அருட் பாடல்களைக் கேட்ட இறைவன், அவை மணி போன்று உயர்மதிப்பும் ஒண்மையும் பெற்றிருந்தமையால் அவருக்கு மாணிக்கவாசகர் என்னும் திருப்பெயரைச் சூட்டிச் சென்றார். பின்னர் அவர் தாம் கொண்டு வந்த பொற்குவியல்களை எல்லாம் திருக்கோவிற் பணிக்கே செலவிட்டார். இதனைக் கேள்வியுற்ற மன்னன் அடிகளை மதுரை வருமாறு பணித்தனன். அடிகள் இறைவனிடம் சென்று முறையிட, இறைவன் வான் வழியாகக் "குதிரைகள் ஆவணிமூல நன்னாளில் வரும்" என்று கூற, அவர் மகிழ்ந்து மதுரை சென்று மன்னனைக்கண்டு குதிரை வரும் நாளைக் கூறினார். ஆனால் குறித்த காலத்துக் குதிரைகள் வராமற் போகவே அரசன் அடிகளைச் சிறையிலிட்டு வருத்தினான். அடியாரது துயர் பொறாத ஆண்டவன் நரிகளைப்பரிகளாக்கி அரசன் முன் கொணர்ந்தார். பின் அவைகள் நரிகளாயின. அது கண்ட பாண்டியன் அடிகளைச் சுடு மணலில் நிறுத்திக் கல்லேற்றி வருத்தினான். அடிகளது பெருமையை இவ்வவனிக்கு உணர்த்த எண்ணிய இறைவன் வையையாற்றில் நீர் பெருகச்செய்து,

தாமே ஒரு பிட்டு வாணிச்சிக்குக் கூலியாளாக வந்து மண் சுமந்து, வேந்தன் கொடுத்த பிரம்படியும்பெற்று அரசர்க்கு உண்மையை உணர்த்தி மறைந்தருளினர். பின் அடிகள் திருப்பெருந்துறை, திருவுத்தரகோச மங்கை முதலியதலங் களுக்குச் சென்று பல திருப்பதிகங்கள் பாடி கடைசியா கத் தில்லை நகர் அடைந்து புத்தர்களை வாதில்வென்று, ஊமைப் பெண்ணைப் பேசுவித்து, இறைவன் அந்தணர் வடிவில் வந்து வேண்ட திருவாசகமும் திருக்கோவையாரும் பாடினர். அவரது பாடல்களை எல்லாம் இறைவன் தாமே எழுதிக் கைச் சாத்திட்டுத் திருவம்பலப்படியில் வைத்து மறைந்தார். பின்னர் அடிகளார் திருவருளில் இரண்டறக் கலந்தார். அடிகளாரது வரலாற்றினைத் திருவாதவூரடி கள் புராணம் என்னும் நூல் தெளிவாக எடுத்துரைக்கின் றது. இந்நூலின் காலம் பதினெட்டாம் நூற்றாண்டு ஆகும்.

## அடிகள் அருளிய நூல்கள்

அடிகள் பாடிய திருவாசகம் என்பது ஓதுவார் உள் ளத்தைக் குளிர்விப்பது; கற்கக் கற்கப் பேரின்பம் நல்கும் பெற்றியது; கருங்கல் மனத்தையும் கரைத்துக் கண்ணீர் விடச்செய்வது. இவரது பாடல்கள் அனைத்தும் உருகிப் பெருகி உளங்குளிர முகந்துகொண்டு பருகுதற்கு இனிய தாய், உணர்ச்சி என்னும் ஒளி ஊடுருவப் பெற்றதாய், உணர்ந்துஉணர்ந்து அன்பேநிறைந்துநிறைந்து ஊற்றெழும் கண்ணீரை ஒழுகச்செய்வதாய்ப் படிக்குந்தொறும் படிக்குந் தொறும் இன்பம் பயப்பதாய்ப் பின் அவற்றை எண்ணுந் தொறும் எண்ணுந்தொறும் இரும்பூது பயப்பதாய் விளங்கு கின்றன. அது கருதியே "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்ற பழமொழி வழங்கப் படுகின்றது. இத் தோத்திர நூலில் தம் உள்ளத்தைப் பறிகொடுத்த டாக்டர் போப் இதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து இதன் பெருமையை உலக மக்கள் அனைவரும்

உணரும்படிச் செய்தார். இதற்குக் காழித் தாண்டவராயர் எழுதிய வியாக்கியானம் உண்டு. மறைமலை அடிகள் முதல் நான்கு பாடல்களுக்கு உரை எழுதியுள்ளார். வேறு சில உரைகளும் வெளி வந்துள்ளன. திருவாசகம் 51 திருப்பதிகங்களாலாயது. இந்நூலின் பாடல் தொகை 695 ஆகும். தித்திக்கும் திருவாசகத் தேனின் சுவையை உணர்ந்த வள்ளலார் இராமலிங்க அடிகள்,

> ''வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
> நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
> தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
> ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப் பதுவே''

என்று பாடியுள்ளார். பின்வரும் உண்மைகளை இந்நூல் உணர்த்துகின்றது.

''மக்கட் பிறவி அடைவதற்கு அரியது. தெய்வம் ஒன்று உண்டு என்ற சித்தமுண்டாவது அதனினும் அரியது. மக்கள் யாவரும் வீட்டின்பம் பெறவிரும்பின், சிவபெருமானை முதற் கடவுளாகக் கொண்டு வழிபாடாற்றல் வேண்டும். யாவரும் வீட்டின்பம் பெறலாம். இறைவனிடத்து அன்பும், அடியார் கூட்டுறவும் கொள்ளுபவர் இறைவனது உண்மை இயல்பைத்தெளிய உணர்வர்.''

திருவாசகத்தினுள் விளங்கும் சிறந்த பாடல் பகுதிகளில் திருவெம்பாவை ஒன்றாகும். இயற்கை அழகும், மகளிர் ஒருவரை யொருவர் எழுப்பிக் கொண்டே நீராடப் போகும் முறையும், அவர்கள் தமக்குள் ஏசிப் பேசிச் சொல்லும் முறையும் சுவை பயப்பனவாகும். பாவை நோன்பின் காரணமாக மங்கையர்கள் பாடும் முறையில் இது அமைந்துள்ளது. இது திருவண்ணாமலையில் பாடப்பட்டதாகும். பாவை நூல்களில் இது தலை சிறந்ததாகக் கருதப்படுகிறது. மேகத்தை உமாதேவியாக உருவகப்படுத்திக் கூறும் பாடல் இன்பம் பயப்பதாகும்.

அடிகளார் இயற்றிய மற்ெறாரு நூலாகிய திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் திருக்கோவையார் சிற்றின்பச் சுவை பயக்கும் முறையில் அகப்பொருள் இலக்கணப்படி பாடப்பட்டிருப்பினும், பேரின்பப் பொருளையே அது தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது என்று கூற வேண்டும். "பாவை பாடிய வாயால் கோவை பாடுக" என்று சிவபெருமான் மணிவாசகரைப்பணிக்க, அவரும் அந்நூலைப் பாடியருளினார் என்று பெரியோர் சொல்லுவர். பேராசிரியர் இந்நூலுக்குச் சிறந்த உரையொன்று எழுதி உள்ளார். இந்நூலின் சிறப்பை திருக்கோவையார் உண்மை என்னும் நூல் நன்கு எடுத்துக் கூறும். சுருங்கக் கூறின் கோவை நூல்களிலே வாக்காலும் போக்காலும் தொன்மையாலும் மிகச் சிறந்து விளங்குவது திருக்கோவையாரே ஆகும். அந் நூலில் தில்லைக் கூத்தன் தலைவனாகப் பரவப் படுகின்றான். அதனால் அவனது திருவருட் சிறப்பும் தில்லையம்பலத்துப் பெருமாண்பும் ஒவ்வொரு பாட்டிலும் சிறப்பிக்கப்படுகின்றன. இதற்கு நாற்பா யாப்பில் மற்றுமொரு உரை உண்டு.

## மணிவாசகரின் உள்ளத்திறன்

ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலாய தேனினைச் சொரிந்திடும் திருவாசகத்திலே காணப்படும் சிறந்த பகுதிகளிலே ஒன்று திருச்சதகம். இந்நூலிலே மணிவாசகப் பெருந்தகையானவர் தான் உண்ணாமல் உறங்காமல் அல்லும் எல்லும் ஆண்டவனின் பேரருளிலும் அன்பிலும் நினைந்து நினைந்து, உருகி உருகி, நெக்கு நெக்காடித் தன்னை மறந்து, உலகை மறந்து வாழ்ந்த காலம் கண்ட சைவ உண்மைகள் பலவற்றைப் பொன்னே போலப் பொதிந்து வைத்துப் பாடியுள்ளார்.

உடல் வாதனைக்கு ஆட்பட்ட ஆன்மா மலமாசுண்ணுகிறது. இவ்வுலகமே ஆன்மாவின் மல நீக்கத்துக்காகப் படைக்கப்பட்டதே என்பது பேரறிஞர் சிலர் கருத்தாகும்.

ஆன்மா மல நீக்கம் பெறவேண்டுமானால் இறையருளைப் பெறவேண்டும். இது சைவத்தின் உண்மைகளுள் ஒன்று. இத்தகு உண்மையை 'ஆத்தும சுத்தி' என்ற பகுதியிலே மாணிக்கவாசகர் திறப்பட விளக்கியுள்ளார். ஆன்மா இறையருளைப் பெற வேண்டுமானால் அவனை ஆடிப்பாடி அன்பு கொண்டிடல் வேண்டும்; அவனை நினைந்து நினைந்து உருகிடல் வேண்டும்; அவனை ஐம்பொறிகளாலும் பணிதல் வேண்டும்; காதுகள் அவன் புகழைக் கேட்டல் வேண்டும்; கண்கள் அவன் திருமேனியைக் கண்டு களித்தல் வேண்டும்; கைகள் அவனைக் கூப்பி வணங்கல் வேண்டும். இவ்வாறு ஐம்பொறிகளாலும் ஆன்மா இறைவனை வணங்கி அன்பு செய்தல் வேண்டும். அப்படிச் செய்திடின் இறையருள் கிடைக்கும். கிடைப்பின் ஆன்மா மலமாசு நீக்கமும் ஒளியாக்கமும் உணர்வூக்கமும் பெற்றிடும். ஆனால் மணிவாசகரின் ஆன்மாவோ இவ்வாறு தன் ஐம்பொறிகளாலும் இறைவனை வணங்கி அவனருளைப் பெற்று மலநீக்கம் பெற மறுக்கிறது. மணிவாசகரால் ஒன்றும் செய்தற் கில்லை. எனவே ஆன்மாவை நோக்கி இடித்துரைக்கின்றார்.

"ஆடுகின்றிலை கூத்துடையான்கழற்கு அன்பிலை
என்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை
பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை துணையிலி
பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோறும் அலறிலை செய்வதொன்
றறியேனே."

ஆன்மாவின் இருப்பிடம் ஐந்து பொறிகளாலாய உடல். இந்த உடலுக்குச் சொந்த அறிவில்லை. மேலும் இருக்கின்ற அறிவோ சுட்டியறியும் அறிவே. அத்தகைய சுட்டியறியும் அறிவை ஆன்மாவுக்களிப்பது ஐம்பொறிகள். ஐம்பொறிகளாலாய உடலோ உலக வாதனைக்கு ஆட்பட்டது. உலகமோ மலமாசுண்டது. எனவே சுட்டி

யறியும் அறிவால் ஆன்மாவிற்கு இருக்கின்ற மாசும் மல மும் மேலும் மேலும் அதிகமாகுமே தவிர அவை நீங்கா. ஆகவே ஆன்மா இறையருளைப் பெற்று, சுட்டியறியும் கூனல் அறிவினை அறுத்து அங்கிங்கெனாதபடி எங்கும் பரந்துநிற்கும் இறைவனின் பேரருட்திறத்தை அவனரு ளே கண்ணாகக் கொண்டு காணல் வேண்டும். இவ்வாறு செய்தால் ஆன்மாவிற்கு இருக்கின்ற மாசும் மலமும் நீங்கும். இதனையே 'சுட்டறுத்தல்' என்ற பகுதி விளக்கு கின்றது.

''வெள்ளம்தாழ் விரிசடையாய்! விடையாய்! விண்ணோர்
பெருமானே! எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்,
பள்ளம்தாழ் உறுபுனலில், கீழ்மே லாக,
புதைத்துஉருகும் அவர்நிற்க, என்னை ஆண்டாய்க்கு,
உள்ளந்தான் நின்று உச்சி அளவும் நெஞ்சாய்
உருகாதால்; உடம்புஎல்லாம் கண்ணாய், அண்ணா!
வெள்ளம்தான் பாயாதால்; நெஞ்சம் கல்ஆம்;
கண்இணையும் மரம்ஆம் தீ வினையி னேற்கே.''

மலமாசு நீக்கம் பெற்ற ஆன்மாவானது ஆண்டவன் தனக்குச் செய்யாமற் செய்த உதவிக்குக் கைம்மாறாகத் தன்னை அவனிடம் ஒப்படைக்கும் என்ற உண்மையை விளக்கும் பாடல் வருமாறு :—

'' மேலை வானவரும் அறியாத தோர்
கோலமே எனை ஆட்கொண்ட கூத்தனே
ஞாலமே விசும்பே என்றிவை போங்
காலமே யுனை என்றுகொல் காண்பதே!''

ஆண்டவன் தன்மேல் உயிருக்குப் பக்தி உறைப்பு ஏற்படல் வேண்டும் என்பது சைவ உண்மைகளுள் ஒன்று. அவ்வாறு பக்தி உறைப்புக் கொண்ட உயிரினால் ஏற்பட்ட வியப்புக்கொண்ட மணிவாசகர் பாடிய பாடல்கள் 'மெய் யுணர்தல்' என்ற பகுதியிலே வந்துள்ளன. அவற்றுள் ஒரு பாடல் வருமாறு:

''மெய்தான் அரும்பி, விதிர்விதித்து உன்விரை
ஆர்கழற்கு, என்
கைதான் தலைவைத்து, கண்ணீர் ததும்பி,
வெதும்பி, உள்ளம்
பொய்தான் தவிர்ந்து, உன்னை, 'போற்றி. சய, சய,
போற்றி!' என்னும்
கைதான் நெகிழவிடேன்; உடையாய்!
என்னைக் கண்டுகொள்ளே.''

சுருங்கக் கூறின் திருச்சதகம் சைவ உண்மைகள் அடங்கிய ஒரு சைவப் பேழையாகும். மெய்யுணர்தல், சுட்டறுத்தல், ஆத்துமசுத்தி, கைம்மாறு கொடுத்தல் ஆகிய சைவ உண்மைகள் இப்பகுதியில் நன்கு விளக்கப்பட்டுள்ளன. பேரறிஞர் டாக்டர் இரா.க. சண்முகம் கூறியாங்குத் திருச்சதகம் என்பது மணிவாசகர் இறையின் அருளார முதப் பெருங்கடலில் திளைத்தாடிப் பாடியது ஆகும். திருவாசகத்திலே காணும் மற்றொரு சிறந்த பகுதியாகிய நீத்தல் விண்ணப்பமோ இறையருளைப் பெற இடையூறாக நிற்கும் பந்த பாசங்களினால் ஏற்படும் துன்பங் கண்டு கலங்கிப் பாடியது. எனவே மணிவாசகரின் உள்ளத் திறனை வெளிப்படுத்தும் சிறப்பு நீத்தல் விண்ணப்பத் துக்கே உண்டு எனில் தவறன்றாம்.

இறைவன் இன்னும் சின்னாள் இருக்க எனப் பணித்த காலை அடிகள் கலங்குகிறார். ஏன்? இறையருளுக்குத் தடை விளைவிக்க வல்லன ஐம்பொறிகள். ஐம்பொறிகளும் தத்தமக்குரிய புலன்கள் வழியே செல்லும். செல்லவே உள்ளமும் அவற்றின் வழியே செல்லும். அவ்வாறாயின் ஆண்டவனை உள்ளம் இடையறாது நினைந்து உருகும் வினை தடைப்படும். இதனை அடிகள் நீத்தல் விண்ணப்பத்தில் பல இடங்களிலே தெரிவிக்கின்றார்.

"ஆனை வெம்போரிற் குறுந்தூறெனப்
புலனால் அரிப்புண
டேனை எந்தாய் விட்டிடுதி கண்டாய்."
"எறும்பிடை நாங்கூழ்ப் புழுவெனப் புலனால்
அரிப்புண்ட
வெறுந் தமியேனை விட்டிடுதி கண்டாய்."

இவ்வாறு புலன்களினால் அடிமையாக்கப்பட்ட பொழுது ஆண்டவனே வந்து தடுப்பினும் தன்னால் புலன்களி லிருந்து விடுபடல் அரிது என்கிறார் அடிகள்.

இதுகாறும் கூறியவற்றால் அடிகளின் உள்ளம் உலகப் பற்றுக்களையும், அப்பற்றுக்களினால் உண்டாகும் இன்பங்களையும், அவற்றுக்குக் காரணமான பொறி புலன் களையும், வெறுத்த உள்ளம் என்பதும், அல்லும் எல்லும் கனவும் நனவும் உண்ணாது உறங்காது இறைவன்றன் அருளாரமுதப் பெருங் கடலிலே திளைத்தாட விழைகின்ற அருள் உள்ளமாம் என்பதும் புலனாகும்.

மனித உள்ளத்து எழுகின்ற உணர்வுகள் மிகப்பல. அவற்றுள் சிறந்தன இரண்டு. ஒன்று இன்ப உணர்வு; மற்றொன்று துன்ப உணர்வு. இந்த இரண்டு உணர்வு களிலே உள்ளத்தின் திறனையும் உண்மையான இயல் பினையும் தெள்ளத் தெளியக் காட்டவல்லது துன்ப வுணர்வே. இன்பியல் நாடகத்தை விடத் (Comedy) துன்பியல் (Tragedy) நாடகம் சிறந்திருப்பதற்குக் காரணம் இதுவே. இத்தகைய இரண்டு உணர்வுகளிலே திருச் சதகம் என்பது இன்பவுணர்வின் கொள்கலம். நீத்தல் விண்ணப்பமோ துன்பவுணர்வின் கொள்கலம்.

மணிவாசகரின் மாண்பினைப் பண்டிதமணி மு. கதி ரேசச் செட்டியார், "இவர் மேற்கொண்ட நெறி, சரியை, கிரியை, யோகங்களுக்கு மேலான ஞானநெறியாகிய சன்மார்க்கமாகும். இந்நெறியில் நின்ற அடிகள், காணப் படும் இவ்வுலக இயல்புகளைத் தம் கூர்த்த மதியால்

உய்த்துணர்ந்து, பருப்பொருளாகிய மாயா காரியங்களெல்லாம் தத்தங் கால எல்லையில் அழிந்தழிந்து தேய்ந்தொழிவன என்னும் உண்மையையும், இவ்வெல்லாவற்றையும் கன்மங்களுக்கிடாகப் படைத்தும், காத்தும் கரந்தும் விளையாடும் பேராற்றல் வாய்ந்து கால எல்லையைக் கடந்து நிற்கும் கடவுள் ஒருவருளர் என்பதையும், அப்பெருமான் சார்ந்தார்க்குத் தண்ணிழலாய்ப் பேரின்ப வடிவாகத் திகழும் இயல்பினர் என்பதையும் உள்ளவாறுணர்ந்து அப்பெரும் பெயர்க் கடவுள் உபதேசத்தால், தாம் எய்திய பேரானந்தப் பெருஞ் செல்வத்தைத் தம் சோதரராகிய மக்கள் எல்லோரும் துய்க்க வேண்டும் என்னும் பேரருளுடையராய்த் திருவாசகம் என்னும் தெளிதேனைப் பொழியும் அருள் முகிலாயினர்" என்று பாராட்டியுள்ளார்.

அடிகளார் இயற்றிய திருவாசகம் இம்மை உடல் வாழ்வு, பண்டைய உடல் வாழ்வு ஆகிய இருவகை வாழ்வுகளைத் திறம்பட எடுத்துக்காட்டுகின்றது. பண்டைய வாழ்வைச் சிவபுராணத்திலும், திருவம்மானையிலும் காணலாம்.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்"
—சிவபுராணம்.

"ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய்
ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை"
—திரு அம்மானை.

இம்மை வாழ்வைத் தன் தாய் வயிற்றிற் கருக்கொண்டது முதல் தொடங்கிப் போற்றித் திருவகவலில் கூறுகின்றார். தாய் வயிற்றில் இருந்தநிலை; பிறந்து உண்டு

உறங்கிக் காளையாகிக் கன்னியர் வயப்பட்டு, கல்வி கற்று, தெய்வப்பற்றுக் கொண்டு, மாயாவாதத்திற் சுழன்று, பின் பக்தி உறைப்பேற்பட்டு நிற்ப, இறைவன் ஞான குருவாய் வந்து ஞான மருளியது ; இறைவனை நினைந்து வாழ்ந்தது முதலியன குறிக்கப்படுகின்றன. தெய்வம் ஒன்று உண்டு ; அது சிவபரம்பொருளேயாகும் என்பது அடிகளார் கருத்தாகும். எனவேதான் அவர் "தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று பாடுகிறார். "உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லாது எங்கள் உத்தமனே" என்றும் அவர் கூறுகிறார்.

அடைக்கலப்பத்தில் அவர் "மின்கணினார் நுடங்கும் இடையார் வெகுளி வலையில் அகப்பட்டுப் புன்கணனாய்ப் புரள்வேன்" என்று மகளிர் வயப்பட்டமை கூறிக் கருதுகின்றார். மேலும் உலக வாழ்வில் ஈடுபட்டதனால் நன்னெறி சென்ற சான்றோரைப் பின்பற்றாது இருந்து இறுதியில் இறைவனைத் தாம் அறிந்ததாகக் கூறி அடைக்கலம் புகுகிறார்.

"பிறிவறி யாஅன்பர் நின்அருட் பெய்கழல்
தாளிணைக்கீழ்
மறிவறி யாச்செல்வம் வந்துபெற் றார்உன்னை
வந்திப்பதோர்
நெறியறி யேன்நின்னை யேஅறியேன்நின்னை அறியும்
அறிவறி யேன்உடை யாய்அடியேன்உன்
அடைக்கலமே."

இந்நிலையில் இறைவன் ஞான குருவாய் அடியாருடன் போந்து,

"காட்டாதன எல்லாம் காட்டிச் சிவம் காட்டித்
தாளாகிய தாமரைகாட்டித் தன்கருணைத்தேன்காட்டி"

ஆட்கொண்டான் என்பதையும், அதனால்,

"மெய்ப் பொருட்கண் தோற்றமாய் மெய்யே நிலைபேருய்
எப்பொருட்கும் தானேயாய் யாவைக்கும் வீடாகும்
அப்பொருள் நம் சிவனேயாம்"

என்று தெளிந்ததையும் அவர் எடுத்து ஓதுகின்ருர். பின் நன்றியைப் புலப்படுத்துகின்ருர். இதனை அடிகள் பாடுதற்குக் கொண்ட நெறி மிக்க புதுமையானது. மகளிர் விளையாடும் அம்மனையாடல், தும்பியூதல், சாழலாடுதல் முதலிய விளையாட்டுப் பாட்டுக்களாகச் சிறுமகளிர் கூற்றில் வைத்துத் தேன்சொட்டப் பாடியுள்ளார். அருட்குரவனுக வந்து இறைவன் அருளிய ஞானவுணர்வு மிக மிக, அடிகட்கு வீடுபேற்றின்கண் பேரார்வம் உண்டாகி விடுகிறது. எனவே இறைவனை வீடு நல்க வேண்டுகிருர்.

"எம்பெருமானே,
உடைந்து நைந்து உருகி உன்திருமலர்ப்பாதம்
அடைந்து
நின்றிடுவான் ஆசைப்பட்டேன்."

வீடு பேற்றின்கண் ஆர்வம் மிக்கவர் தம் கருவி கரணங்களை இறைவன்பால் உரிமை செய்து அவற்றின் செயலை இறைவனுடையதாகக் கையடைப்படுத்துவர். அதனைச் சமய நூல்கள் இறைபணிநிற்றல் என்று கூறும்.

"அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை
யெல்லாமும்
குன்றே யனையாய் எனைஆட் கொண்டபோதே
கொண்டிலையோ."

இவ்வாறு "பசு கரணங்களெல்லாம் பதிகரணமாக வசிபெறும்." சான்ருேர் பிறவித்துயர்க்கு அஞ்சுவதிலர். எனவேதான் அடிகளார் "மனித்தப் பிறவியும் வேண்டுவதே" என்று கூறுகிருர்.

அடிகளின் அறவுரை :

''புகவே வேண்டா புலன்களில்நீர் புயங்கப் பெருமான்
பூங்கழல்கள்
மிகவே நினைமின் மிக்கவெல்லாம் வேண்டா போக
விடுமின்கள்.''
''விடுமின் வெகுளி வேட்கை நோய்.''
''புகழ்மின் தொழுமின் பூப்புனைமின் புயங்கள் தாளே
புந்திவைத்திட்டு
இகழ்மின் எல்லா அல்லலையும் இனியோரிடையூறு
அடையாமே.''
''புரள்வார் தொழுவார் புகழ்வாராயின்றே
வந்தாளாகாதீர்
மருள்வீர் பின்னை மதிப்பாரார் மதியுட்கலங்கி மயங்குவீர்
தெருள்வீராகில் இதுசெய்மின் சிவலோகக் கோன்
திருப்புயங்கன்
அருளார்பெறு வாரகலிடத்தே அந்தோ அந்தோ
அந்தோவே.''

—யாத்திரைப்பத்து.

திருவெம்பாவையைத் தஞ்சை மாநிலத்து வழுவூர் வீரட்டேசுரர் கோயிலில் மார்கழித் திருவாதிரை விழாவில் மணிவாசகர் முன் ஓதுதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் முதற் சுந்தர பாண்டியன் காலத்தில் நாங்குனேரியிலுள்ள திருநாகேச்சுரத்தில் (கோயில்) மார்கழித் திருவிழாவில் திருவெம்பாவை ஓத ஒருவன் நிலம் விட்டுள்ளான். வடக்கே திருவொற்றியூரிலும் ஓதப்பட்டது. சயாம் நாட்டு முடி சூட்டு விழாவின்போது சிவப் பிராமணர் திருவெம்பாவை பாடுவர் என்றும், அதற்கு 'லோரி எம்பாவாய்' என்று பெயர் சொல்லுவர் என்றும், திருவூசல் விழா 'லோ—ஜின்—ஜா' எனப்படும் என்றும், அப்பொழுது இரண்டு பாவைகளும் ஓதப்படும் என்றும் டாக்டர் குவாரிட்ச் வேல்சு (Dr. H. G. Quaritch Wales) என்பவர் கூறியுள்ளார். கி. பி. 11,

12—ஆம் நூற்றாண்டுகளில் மணிவாசகர் திருவுருவம் திருவொற்றியூர், திருவலஞ்சுழி, திருக்கழுக்குன்றம் ஆகிய ஊர்களிலுள்ள கோயில்களில் வைத்து வணங்கப்படலாயிற்று. கொழும்பு, சென்னைப் பொருட்காட்சி சாலைகளில் இவர் உருவம் உளது. 'திருவாசகன் மடம்' என்று இவர் பெயரால் மடமொன்று அக்காலத்தில் விளங்கியது.

## பட்டினத்தடிகள்

பட்டினத்தடிகள் ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தலைசிறந்த சிவனடியார்களில் ஒருவராவார். பெற்றோர் சிவநேசர், ஞானகலை ஆவர். அடிகளாரின் இயற்பெயர் திருவெண்காடராகும். இவர் காவிரிப் பூம் பட்டினத்திற் பிறந்து விளங்கிய காரணத்தால் பட்டினத்துப் பிள்ளையார் என்று வழங்கப்பட்டார். அடிகளார் சைவ வேளாண் மரபைச் சேர்ந்தவர்; கப்பல் வாணிகத்தால் பெரும் பொருள் ஈட்டிய செல்வக் குடும்பத்திற் பிறந்தவர். இவரது மனைவியார் பெயர் சிவகலை அம்மையார். தனக்கு மகப்பேறு இல்லாத காரணத்தினால் திருவெண்காடர் மருதவாணர் என்ற சிறுவரை வளர்த்து வந்தார். தந்தையாரின் கப்பல் வணிகத்தைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்த மருதவாணர் ஒருநாள், "காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே" என்று எழுதி வைத்து விட்டு மறையவே, திருவெண்காடருக்கு நிலையாமை உணர்வு தோன்றியது; செல்வத்தையும், இல்லற வாழ்வையும் துறந்தார்; ஓடேந்திப் பிச்சை யேற்றுண்ணும் துறவியானார்; தலங்கள் தோறும் சென்றார்; தேனினுமினிய தீஞ்சுவைச் சிவானுபவக் கவிதைகளை மாரியெனப் பொழிந்தார். அற்புதங்கள் பல நிகழ்த்தினார். சேந்தனாரும், வடநாட்டு உச்சயினி மன்னர் பத்திரகிரியாரும் அடிகளாரின் அருள் வாக்கால் உண்மை நெறியினை உணர்ந்தனர். நால்வரைப் பற்றியும், வரகுண பாண்டி

யனைப்பற்றியும் அடிகளார் தமது பாடல்களில் கூறியுள்ள காரணத்தினாலும், நம்பியாண்டார் நம்பிகள் அடிகளாரது பாடல்களைத்தொகுத்துள்ள காரணத்தாலும் அடிகளார் தேவார திருவாசக ஆசிரியர்க்கும் நம்பியாண்டார் நம்பிகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர் எனக் கொள்ளுதல் சாலப் பொருந்தும். நாடெங் கணும் அற்புதங்கள் நிகழ்த்திவந்த அடிகளார் இறுதியாகத் திருவொற்றியூரில் ஒருநாள் கடற்கரை யில் சிறுவருடன் விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது சிவலிங்க உருவில் திருவுருக் கரந்து, 'உருவசித்தி' என்று வழங்கப்படும் முத்தி நிலையை அடைந்தார். திரு வொற்றியூரில் அடிகளாரது கோயில் இன்றும் சிறப்புற விளங்கிக் கொண்டிருக்கின்றது. ஆண்டுதோறும் ஆயி ரக்கணக்கான மக்கள் வந்து செல்லுகின்றனர்.

பட்டினத்துப் பிள்ளையாரின் திருப்பாடல்கள், கோயில் நான்மணிமாலை, திருவிடைமருதூர் மும்மணிக் கோவை, திருக்கழுமலமும்மணிக் கோவை, திருவொற்றி யூர் ஒருபாஒருபஃது, திருவேகம்பமுடையார் திருவந்தாதி ஆகியவை அடிகளாரது நூல்களாகும். இவ்வைந்து நூல்க ளும் பதினோராந்திருமுறைக்கண் தொகுக்கப்பெற்றுள் ளன. இவையேயன்றிக் கோயில் திருவகவல், கச்சித்திரு வகவல், திருவேகம்பமாலை, திருவேகம்ப விருத்தம், பல தனிப் பாடல்கள், முதல்வன் முறையீடு, அருட் புலம்பல், இறந்தகாலத்திரங்கல், நெஞ்சொடு மகிழ்தல், உடற் கூற்று வண்ணம் ஆகிய நூல்களும் பாடல்களும்கொண்ட "பட்டினத்துப் பிள்ளையார் பிரபந்தத் திரட்டு" என்ற தொரு தொகுப்பு நூலும் கிடைக்கப் பெற்றுளது. 'சித்தர் ஞானக் கோவை' என்ற தொகை நூலிலும் இவ ரது பாடல்கள் இடம்பெற்றுள்ளன. ஆனால் இவ்விரண்டு தொகுப்பு நூல்களிலும் காணப்பெறும் பாடல்கள் பாம ரரும் படித்து மகிழும்வண்ணம் பிற்காலப் பாவகைகளைத் தழுவியதாய், பேச்சு மொழிச்சொற்களைக் கொண்டன வாய் எளிமையாக உள்ளன. இதனால் பிற்காலத்தில்

வாழ்ந்த வேருெரு பட்டினத்தாரால் இப்பாடல்கள் பாடப் பட்டிருக்குமோ என ஒரு சிலர் எண்ணுகின்றனர். அடிகளார் நூல்களை ஆராயின் பல புராண வரலாறுகளைக் காணலாம். இவரது பாடல்கள் கவிச் சுவையும் சிவச் சுவையும் கொண்டு விளங்குகின்றன. சிவனது முழுமுதற் பெருமையினையும், அடியார்களது சிறப்பினையும் இவர் தமது பாடல்களில் பல இடங்களில் பலபடப் போற்றிக் கூறியுள்ளார். அடிகளாரது கோயில் நான்மணிமாலை என்னும் நூல் சிதம்பரத்தின்மீது பாடப்பட்டதாகும்; நாற்பது பாடல்களையுடையது. தில்லையின் சிறப்பை இந்நூல் நன்கு எடுத்துக்கூறுகின்றது. திருவிடை மருதூர் மும்மணிக்கோவையில் திருவிடைமருதூரின் இயற்கை வளத்தைச் சுவைபடப் பாடியுள்ளார்.

.........'' உற்பல வாவியில்
பாசடைப் பரப்பிற் பால்நிற அன்னம்
பார்ப்புடன் வெருவப் பகுவாய் வாளைகள்
போர்த்தொழில் புரியும் பொருகா விரியும்
மருதமுஞ் சூழ்ந்த ''

என்பது அடிகளாரின் மருதம் பற்றிய வருணனையாகும்.

அடிகளார் காலத்தில் சிவாகமங்கள் வழியொழுகும் சித்தாந்த சைவம் தமிழகத்திற் பரவியது. இச் சமயம் வேதங்களையும் சிவாகமங்களையும் தனக்கு அடிப்படை நூல்களாகக்கூறும்.

''வேதமே ஒப்பென வோது கோபுரமும் ''
'' சிவாகமம் என ஒளிர் தவா மணி மேடையும்.''

சிவாகமங்களைச் சித்தாந்தம் என்று ஆகமங்களே குறிப்பிடுகின்றன. இதனை அடிகளும் குறிப்பிடுகிருர்.

'' கைவல நெல்லியங் கனியது போலச்
சைவ சித்தாந்த தெய்வ ஆகமத்தை
வரன் முறை பகர்ந்த திருமலர் வாய்.''

சித்தாந்த சைவர்கட்கு இன்றியமையாத திருவைந் தெழுத்து, திருநீறு, கண்டிகை ஆகிய மூன்றையும் அடிகள் வற்புறுத்துகிறார்.

"........சண்பை வாணர் கொண்ட
நீறுந் திருவெழுத்து ஓரைந்தும் கண்டியு நித்த நித்தம்
தேரும் பொருளென் றுணராத மாயச்
செருக்கினர்க்கே."

பாச தரிசனம், பசுதரிசனம், சிவதரிசனம் எனப் படும் முக்கூற்றுச் சித்தாந்த ஞானநெறியை அடிகளார் "மேவிய புன் மயிர்த் தொகையோ" என்று தொடங்கும் பாடலில் விளக்கியுள்ளார். இவ்வாறே இறைவன், உயிர், உலகு என்ற முப் பொருள்களின் இயல்புகளைத் திரு வொற்றியூர் ஒருபா ஒருபஃது என்பதிலும் கூறியுள்ளார். அடிகளார் தாம் துறவு நெறியை மேற் கொண்டதைப் பற்றிக் கோயினான்மணிமாலையில் அழகாகக்கூறியுள்ளார். அவர் உலக வாழ்வைத் துறந்த காலத்தில் உடம்பைக் கல மாகவும், தீயொழுக்கம், பொய், பிணி, இடும்பை முதலிய வற்றைச் சரக்காயும், வினையை மீகாமனாகவும், கருநிலை யைக் கடற்றுறையாகவும், புலன்களைச் சுறாமீனாகவும், பிறவியைக் கடலாகவும், துயரத்தை அலையாகவும், குடும் பத்தை நங்கூரக் கல்லாகவும், நிறையைக் கலத்தின் கூம் பாகவும், உணர்வைப் பாயாகவும், உருவகம் செய்து, இக் கலம் கவிழ்வதன் முன் இறைவன் திருவடியாகிய நெடுங் கரையைச் சேரவேண்டும் என்று பாடியுள்ளார். மேலும் தமது காலத்தில் செல்வம் மிக ஈட்டிச் சிறப்புடைய வாழ்க்கை நடத்திய செல்வர்களின் வாழ்க்கை இயல்பை நன்கு விளக்கியுள்ளார். தம் காலத்தே களவு மணம் வீழ்ந்து, கட்டாய மணம் வந்ததைக் குறிப்பிட்டுள்ளார். பழமொழிகளையும், குறட் கருத்துக்களையும் அடிக ளார் பாடல்களில் நாம் காணலாம். தில்லைக் கூத்தனை "நடன் நம்பிரான் உகந்து உய்யக் கொண்டான்" என்கி றார். இது முதல் இராசராசன் பட்டப்பெயராகிப் பின்

அரிசிலாற்றுக்கும் காவிரிக்கும் இடையில் உள்ள பகுதி "உய்யக் கொண்டார் வளநாடு" என்று நாட்டுக்குப் பெயராயிற்று.

## அகத்தியர் தேவாரத் திரட்டு

### தோற்றுவாய்

சிவஞானம் பெற விரும்பிப் பெரிதும் பாடுபட்ட தவஞானச் செல்வருள் சிவாலய முனிவர் ஒருவர். இவர் மூவர் தேவாரத்தையும் பக்தியோடு பாடம் பண்ணி ஓதினால் சிவப்பேறு சித்திக்கும் என்று எண்ணினார். எனவே ஏழு திருமுறைகளையும் மனப்பாடம் செய்து பாட நினைந்து முயன்றார். அம் முயற்சி கைகூடாமற்போகவே அவர் உளம் பெரிதும் வருந்தி மனக்கவலை மாய்க்கும் மாமணியாம் தில்லைச்செல்வனை அடைந்து முறையிட, இறைவனும் பொதியில் வாழ் முனிவனும் அகத்தியனை அண்டிடுமாறு அவரைப் பணிக்கவே, அவரும் பொதியமலையை அடைந்து அகத்தியரை நோக்கி மூன்றாண்டுகள் கடுந்தவம் புரிந்தார். அகத்தியரும் ஒரு நாள் தோன்றி அடங்கன் முறை முழுவதையும் அவருக்கு அருளிப் பின் அதனின்றும், குரு உருவம், திருநீறு, அஞ்செழுத்து, கோயிற்றிறம், அரன் உருவம், திருவடி, அர்ச்சனை, தொண்டு என்ற எட்டின் உண்மைப் பொருள்களையும் உணர்த்தவல்ல இருபத்தைந்து பதிகங்களையும் திரட்டித் தந்து "இவற்றை நாடோறும் ஓதுவார் அடங்கன் முறை முழுவதையும் ஓதுவாராவார்" எனத் திருவாய் மலர்ந்தருளினார். சிவாலயரும் அவ்வாறே செய்து சிவனது திருவடி நீழலை அடைந்தார். இக்கதையினை ஆராய்வோமானால் ஓர் உண்மை புலப்படும். பகுத்தறிவு மிக்க மனிதன் குறைவாக முயற்சி செய்து நிறைந்த பயனைப் பெற இயன்ற வரை முயன்றிடுவதை நாம் உலகிலே நாளும் கண்கூடாகக் காண்கின்றோம். இத்தகைய முயற்சியை மனிதன் பொருளியல் வாழ்விலே

மட்டும் மேற்கொள்ளவில்லை; அறிவுத்துறையிலும், ஆன்ம வாழ்விலும் இவ்விதமே மனிதன் முயன்றுள்ளான். முப்பத் தெண்ணாயிரம் திருப்பதிகங்களைக் கண்டு மருண்ட தமிழ் மகன் அவற்றிலே சிறந்தன எனத் தான் கருதிய இருபத் தைந்து பதிகங்களை எடுத்துத் திரட்டிப் பாடிப் பரமன் நீழல் சேர்ந்தான். ஆன்ம வாழ்விலே மனிதன் கொண்ட முயற்சிச் சுருக்கத்தின் அடையாளமே அகத்தியர் தேவா ரத்திரட்டு எனின் அது பொருத்தமுடைத்தாகும்.

## நூலின் அமைப்பு

அப்பரும் சம்பந்தரும் சுந்தரரும், குரு உருவம், திரு நீறு, ஐந்தெழுத்து, கோயிற்றிறம், அரன் உருவம், திரு வடி, அர்ச்சனை, தொண்டு ஆகிய எட்டுப்பொருளின் உண் மைகளையும் தன்மைகளையும் சிறப்புக்களையும் அமைத்துப் பாடிய பாக்கள் பல தேவாரத்திலே காணப்படுகின்றன. அவற்றிலே சிறந்தவை எனத் நாம் கருதிய பாக்களை எடுத் துத் தொடுத்து உலகிற்கு ஓர் அருமைச் செல்வர் தந்த தேவாரத்திரட்டே அகத்தியர் தேவாரத்திரட்டு ஆகும். இந்நூலில் காணும் இருபத்தைந்து பதிகங்களிலே குரு வருள் பற்றிய பதிகங்கள் மூன்று. அவை சம்பந்தர், அப் பர், சுந்தரர் ஆகிய மூவராலும் பாடப்பட்டவை. திரு வெண்ணீற்றுக்குச் சம்பந்தர் பாடிய பதிகம் ஒன்று மட் டுமே உள்ளது. பஞ்சாக்கரம் பற்றிய பதிகங்கள் நான்கு. அவற்றிலே சம்பந்தருடையது இரண்டு; அப்பருடையது ஒன்று; சுந்தரர் பாடியது ஒன்று. கோயிற்றிறத்துக்கு மூன்று பதிகங்கள். அவை சம்பந்தர் முதலிய மூவரும் பாடியவை. சிவனுருவம் பற்றிய பதிகங்கள் ஐந்து. ஐந் திலே சம்பந்தர் பாடியவை இரண்டு; அப்பர் யாத்தவை இரண்டு; சுந்தரர் தொடுத்தது ஒன்று. சிவன்றன் திரு வடிப் பதிகங்கள் மூன்று. இவற்றிலே மூவர் தேவாரப் பதிகங்களும் உண்டு. அர்ச்சனை, தொண்டு ஆகிய இரண் டிலும் ஒவ்வொன்றுக்கும் மும்மூன்று பதிகங்கள் உள. ஒவ்வொரு பொருள் பற்றிய பதிகங்களிலும் மூவர் திருப்

பதிகங்கள் காணப்படுகின்றன. இந்த இருபத்தைந்து பதிகங்களிலே உள்ள முதற் பாட்டுக்களின் முதற் சொற்கள் கொண்ட அகவல் ஒன்றும் அகத்தியர் தேவாரத் திரட்டிலே காணப்படுகின்றது. மேலும் இப்பதிகங்களிலே பேசப்படும் எட்டுப் பொருள்களைப் பற்றிக் கூறும் வெண்பா ஒன்றும் உள்ளது. அவ்வெண்பா வருமாறு:—

"திருவுருவும் வெண்ணீறு எழுத்தஞ்சும் கோயில்
அரனுருவம் என்தலைமேல் ஆக்கும்—திருவடியும்
சிட்டான அர்ச்சனையும் தொண்டும் சிவாலயர்க்கு
இட்டார் அகத்தியனார் எட்டு."

## குருவருள் அல்லது திருவுருவம்

மூவரும் முதன்முதல் சிவனருள் பெற்றகாலை பாடிய முதற் பதிகங்களே குருவருள் என்ற தலைப்பிலே காணப் படுவன. சம்பந்தர் பதிகம் "தோடுடைய செவியன்" எனத் தொடங்குகின்றது. அப்பர் பதிகம் "கூற்றாயினவாறு" என ஆரம்பிக்கிறது. "பித்தா பிறை சூடி" எனச் சுந்தரர் பதிகம் தொடங்குகின்றது. இம் மூவர்தம் திருப் பதிகச் சிறப்புக்களை ஆராயவேண்டுமானால் அவர்கள் இப் பதிகங்களைப் பாடியபொழுது இருந்த அவர்தம் உள்ள நிலை, சூழ்நிலை ஆகியவற்றை ஆராய்தல்வேண்டும். பால் மணம் மாறாப் பச்சிளங் குழவியாக இருந்தபோது சம்பந்தர் பாடிய பதிகத்துக்கும், சூலைநோயால் குடலும் உடலும் உயிரும் ஒடுக்கி மடக்கப் பெற்றுப் புறச்சமய வெறுப் புற்றபோது அப்பர் பாடிய பாடலுக்கும், மலமாசு நிறைந்த இளமை முறுக்கு இறங்கப்பெற்றகால் சுந்தரர் பாடிய பாடலுக்கும் இடையே உள்ள வேற்றுமைகள் மிகப் பல வாகும். பசித்துன்ப நீக்கமும், பால் தந்த இன்ப ஆக்கமும் பெற்ற சம்பந்தர் பதிகத்திலே குழந்தையுள்ளம் குழைந்து காணப்படுகிறது. துன்பத்தால் துயர் மிகப் பெற்றுத் துடிக்கும் அப்பர் பாடிய பாடலிலே அவர் தம் உள்ளக் குமுறல் ஒளிவிடுகிறது. கொடு நரகில் விழ இருந்த தன்

னைத் தடுத்தாட்கொண்டதால் மனங்கனிந்த சுந்தரர் பாடலிலே இன்பவுணர்வு இளகி ஓடுகின்றது. அழகை அள்ளிப் பருகக் கட்புலன் செழுமையாக இருத்தல் வேண்டும். அழகினிடத்து எளிதிலே உளம் பறிகொடுப்பது குழந்தையே. அத்தகைய குழந்தையாம் சம்பந்தரோ ஞானப்பாலுண்டு சிவஞானம் பெற்ற ஞானத்தின் திருவுரு. அவ்வாறாய குழந்தை சம்பந்தர் இறைவன்றன் திருக்கோலத்திலே, அவன்றன் கதிர்மேனி பொழியும் கண்கொள்ளாக் காட்சியிலே உளம் பறிகொடுத்தார்; இறைவன் மேனியழகை இரு விழிகளாலும் அள்ளிப் பருகினார். அவர்தம் உள்ளத்திலே அழகு எழுப்பிய முருகியல் இன்பவுணர்வு பெருக்கெடுத்து ஓடலாயிற்று. உணர்வலைகள் அவர்தம் உள்ளத்திலே கொந்தளித்தன. அந்தக் கொந்தளிப்பிலே தன்னை மறந்தார். கவிஞன் கவிதை இயற்ற உதவும் அடிப்படையான அழகுணர்வு அவரை ஆட்கொண்டது. அவ்வளவில் இறைவன்றன் எழில் மேனியைப் பாடிவிட்டார்.

**''தோடுடையசெவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்**
**காடுடையசுடலைப்பொடி பூசிஎன் உள்ளங்கவர் கள்வன்**
**ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த**
**பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மானிவனன்றே.''**

''காத்தாள்பவர் காவலை இகழ்ந்து'' சமண் சமயம் புகுந்த அப்பர் சூலை நோயால் துன்புறுத்தப்பட்டார், புகுந்த சமயத்தால் அவர் பெற்ற துன்பத்தைப் போக்க முடியவில்லை. எனவே சைவத்தை மேற்கொண்டார். சிவன் முன்னிலையில் பணிந்து நின்றார். ஆனால் எளிதிலே சூலைநோய் அவரை விட்டு நீங்கிவிடவில்லை. ஒரு பக்கம் சமணத்தைத் துறந்தமை, மற்றொரு பக்கம் சூலைநோயின் துன்பம், வேறொரு பக்கம் தான் கருதிவந்த செயல் கைகூடாமை ஆகிய இம் மூன்றினாலும் தாக்குண்ட அப்பர்

தம் எண்ணைக் குமுறல்களிலே வெடித்து வெளிவந்த பாடல்களே "கூற்ருயினவாறு" முதலிய பாடல்கள். வெறுப்பு, விருப்பு, மாற்றம் ஆகிய முப்பெரும் உணர்ச்சிக்காட்பட்டே அப்பர் பாடியுள்ளார்.

"கூற்ருயினவாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்ரு யடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்போதும்
தோற்ருது என் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக்
கெடில வீரட்டானத்துறை அம்மானே."

தனக்கு ஏற்பட்ட இழிவையும் பழியையும் பாராமல், காலத்திஞல் இறைவன் செய்த செய்யாமற் செய்தவுதவிக்கு உருகி உருகிச் சுந்தரர் பாடியுள்ளார். இறைவன் சுந்தரரைத் தடுத்தாட்கொண்டது செய்யாமற் செய்த பேருதவி; கைம்மாறு கருதாது செய்தவுதவி; வையகமும் வானகமும் ஆற்ற ஒண்ணுத அளப்பரிய உதவி. அத்தகைய வுதவி சுந்தரர் உளத்தே செய்ந்நன்றியுணர்வை எழுப்பியது. அதன் வெளிப்பாடே கீழ்வரும் பாடல்.

"பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தாலும் மறவாது நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத்தென்பால் வெண்ணெய்
நல்லூர் அருட்டுறையுள்
அத்தா உனக்காளாயினி யல்லேன் எனலாமே."

மூவருக்கும் சிவன் அருள் செய்தான். சிவனருள் பெற்ற மூவரும் பாடினர். அருள் ஒரு தன்மைத்தே எனினும் அவரவர் தம் உள்ளத்தின் பக்குவம் வேருதலின் அவரவர் உணர்வும் வேருகவே அவர்கள் பாடிய பதிகங்களும் வேருயின. குழந்தை யுள்ளத்தைத் தெள்ளத்தெளியக்

காட்டிடும் வெள்ளிய ஒள்ளிய பளிங்கு சம்பந்தர் பதிகம்; உலக வாழ்க்கையிலே ஏற்பட்ட அனுபவத்தின் சுவடுகள் ஆழப் பதிந்ததே அப்பர் பதிகம்; செய்ந்நன்றியுணர்வு மணக்கும் நறும்பூங் கொத்து சுந்தரர் பதிகம்.

திருநீறு :

ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ் சோதியை ஆதியாகக் கொண்ட சைவசமயத்தின் புறச் சின்னங்களுள் தலையாயது திருநீறாகும். சைவசமயத்தின் திருச் சின்னம் ஒவ்வொன்றுக்கும் ஆழ்ந்த நுண்ணிய தத்துவக் கருத்துண்டு. அதுபோலத் திருநீறுக்கும் ஒரு தத்துவம் உண்டு. நீறு என்ற சொல்லுக்கு மலமாயா கர்மங்களை நீறு படுத்துவது என்று பொருள் கூறுவர். இச்சொல்லை வினையாகவும் கொள்ளலாம்; பெயராகவும் கொள்ளலாம். ஆனால் திருநீறு என்ற சொல்லைப் பெயராகவே கொள்ள முடியும். இத்தகைய திருநீற்றினைப் பற்றிய குறிப்புக் கள் தித்திக்கும் தேவாரப் பாக்களில் மட்டுமன்று; அவற் றிற்கு முந்திய திருமந்திரத்திலும், அதற்கும் முந்திய கற் றறிந்தார் ஏத்தும் கலித்தொகையிலும் காணப்படுகின்றன.

"மண்டமர் பலகடந்து மதுகையால் நீறணிந்து
பண்டரங்கம் ஆடுங்கால்" —கலித்தொகை.

"திருநீற்றினைப் பூசுபவரிடம் தீவினைகள் அண்டா; சிவசக்தி சாரும். திருநீறு பூசுவோர் இறைவன் திருவடி களைச் சேர்வார்; தொண்டர்கள் திருநீறணிந்திருந்தனர்"- இவை திருமூலர் திருவாய் மலர்ந்தருளிய குறிப்புக்கள் ஆகும். இத்தகைய அருமையும்பெருமையும் உடைய திரு நீற்றின் சிறப்பையும் அதனை அணிவதால் நாம் பெறு கின்ற சிவப் பேறுகளையும் நலங்களையும் திருவாலவாய்த் திருநீற்றுப் பதிகம் எடுத்தோதுகின்றது. அதனை அருளி யவர் ஞானத்தின் திருவுருவான ஞானசம்பந்தராவர். திருநீற்றை நாம் அணிவதால் அடையும் பேறுகளைக் காழியர்கோனின் கடவுட்பாடல் மூலம் அறியலாம்.

அவற்றுட் சில வருமாறு: "வெந்துயர் தீர்ப்பது நீறு; போதந் தருவது நீறு; புன்மை தவிர்ப்பது நீறு; முத்தி தருவது நீறு; பக்தி தருவது நீறு; கவினைத் தருவது நீறு; மதியைத் தருவது நீறு; ஆசை கெடுப்பது நீறு; அவல மறுப்பது நீறு; வருத்தந் தணிப்பது நீறு; வானமளிப்பது நீறு; துயிலைத் தடுப்பது நீறு; பாவமறுப்பது நீறு; இன்பந் தருவது நீறு." கூன்பாண்டியனது வெப்பு நோயினை, வெந்துயரினை, வருத்தத்தினைத் தீர்த்துப் பாவ மறுத்துத் துன்பத்தை நீக்கி இன்பத்தை அளித்தது திரு நீறேயாகும். அது போன்றே அப்பர் பெருமானின் சூலை நோயைப் போக்கி, அறியாமையை நீக்கியது திருநீறே யாகும்.

ஐந்தெழுத்து அல்லது பஞ்சாக்கரம்:

திருவைந்தெழுத்தும் பஞ்சாக்கரமும் ஒருபொருட் பன்மொழி. இப்பஞ்சாக்கரத்தின் பெருமை அளவிடற் கரியது. இதனுடைய சிறப்பைத் திருமூலர் பலபடியாகப் பேசுகிறார். மழவிளங் குழவிப பருவத்திலேயே அழல் மேனியம்மானின் திருவருளைப் பெற்ற ஆளுடைய பிள்ளை யார் திருவைந்தெழுத்தின் சிறப்புண்மை, அதனை ஓதும் முறை, ஓதினால் ஓதுவார் அடையும் இம்மை மறுமைப் பயன்கள், அதனை ஓதும் பொழுது உண்டாகும் மெய்ப்பாடு ஆகியவற்றைக் கூறியுள்ளார்.

" காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாமம் நமச்சி வாயவே."

அப்பர் பாடிய நமச்சிவாயத் திருப்பதிகத்தில் அஞ் செழுத்தின் அளவிடற்கரிய ஆற்றலுண்மை பேசப்படு கின்றது.

" கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே."

"பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணி நின்றறுப்பது நமச்சிவாயவே."

"இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே."

தம்பிரான் தோழர் நாத்தழும்பேறும் படியாக நமச்சிவாயத்தைத் தாம் பயின்ற சிறப்பைக் கூறியுள்ளார்.

"நற்றவா உனைநான் மறக்கினும் சொல்லுநா
நமச்சிவாயவே."
"சேடனே உனை நான் மறக்கினும் சொல்லுநா
நமச்சிவாயவே."

திருவைந்தெழுத்துக்களில் சி என்பது சிவபரம் பொருளையும், வ என்பது அவனது அருளையும், ய என்பது உயிரையும், ந என்பது இறைவனுடைய மறைப்புச் சக்தியையும், ம என்பது மலத்தையும் குறிக்கும். இவ்வைந்தெழுத்தினையும் எண்ணுங்கால் சிவத்துக்கும் உயிர்களுக்குமுள்ள தொடர்பும், சிவத்துக்கும் உலகத்துக்குமுள்ள தொடர்பும், உயிர்கட்கும் உலகத்துக்குமுள்ள தொடர்பும், அத் தொடர்புண்டான காரணமும், அதனால் வினையும் பயனும்எண்ணத்திற்கு வந்து இறைவன் திருவருள்நீழலை விட்டு நீங்காது நிற்கும் நிலைமையைக் கைவரச் செய்யும். அடியார்கள் ஐந்தெழுத்தின் துணையை உறுதியாகப் பற்றியவர்களாக விளங்கினார்கள். அமர்நீதியார் துலையில் ஏறியபொழுதும், ஆனாயர் குழலிசைத்த பொழுதும், திலகவதியார் அப்பரைச் சைவராக்க விபூதி தந்தபொழுதும், அப்பர் கல்மேல் மிதந்தபொழுதும், சம்பந்தர் முத்துச் சிவிகையில் ஏறிய பொழுதும், அவர் பாண்டிய நாட்டிற்குப் புறப்பட்ட பொழுதும், தண்டியடிகள் சமணர் முன் சபதம் கூறிக் குளத்தில் மூழ்கியபொழுதும், புகழ்ச்சோழர் தீக்குளித்த பொழுதும், சேரமான் பெருமாள் கயிலாயத்

திற்குக் குதிரைமீது புறப்பட்டபொழுதும், ஐந்தெழுத் தோதினர். அடியார்கள் காலையில் துயில் நீத்தெழும் பொழுது ஐந்தெழுத்தோதி எழுதல் மரபாகும். ஐந் தெழுத்து சிவமந்திரம் என்கிறார் சேக்கிழார்.

"மாலை யாமம் புலர்வுறும் வைகறை
வேலை செய்வினை முற்றிவெண் ணீறணி
கோல மேனிய ராய்க்கைம் மலர்குவித்
தேல அஞ்செழுத் தோதி எழுந்தனர்."

## கோயிற்றிறம்

"பசுகரணங்களா லறியாவண்ணம் எங்குந்நிறைந்த இறைவன் ஆன்மாக்களின் பொருட்டுத் தயிரின் கண் நெய் போலச் சிறப்பு விளக்கத்தோடு எழுந்தருளியிருக்கும் "தெய்வத்தானங்களே" கோயில்களாகும். 'ஆரூர்', 'தில்லை', 'காட்டூர்' என்பவற்றை முறையே முதலாக உடைய மூன்று திருப்பதிகங்களும் இப்பகுதியில் உள்ளன. இவை திருக்கோயிற்றிறத்தினை விளக்குவனவாகும். அப்பரது பாடல் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

"தில்லைச் சிற்றம்பலமுஞ் செம்பொன் பள்ளி
தேவன் குடிசிராப் பள்ளி தெங்கூர்
கொல்லிக் குளிரறைப் பள்ளி கோவல்
வீரட்டங் கோகரணங் கோடி காவு
முல்லைப் புறவ முருகன் பூண்டி
முழையூர் பழையாறை சத்தி முற்றங்
கல்லிற் றிகழ்சீரார் காளத் தியுங்
கயிலாய நாதனையே காணலாமே."

## சிவனுருவம்

உருவ வழிபாட்டை ஒப்புக்கொண்ட சமயங்களுள் சைவமும் அடங்கும். எனவே சைவசமயத்தினைத் தோற்றுவித்த முதற்பொருளாகிய சிவத்துக்குச் சைவர்கள்

உருவங் கற்பித்து அதனைப் பலபடியாகப் பாராட்டி வணங்கியுள்ளார்கள்; வணங்கி வருகின்றனர். அதனைச் சைவ இலக்கியங்களிலே காணப்பெறும் சிவன்றன் உருவத்தைப் பற்றிக் கூறும் பல்வேறு குறிப்புக்களால் அறியலாம். விண்ணிற்குத்தாவும் கங்கை, பிறைமதி, இவற்றைத் தாங்கிநிற்கும் பொன்னை வெல்லும் செஞ்சடை, கண்ணுதல், அருள் பழுத்தொழுகும் திருமுகம், தோடுடைய செவி, கறைமிடறு, கரித்தோல் போர்த்த செம்மேனி, சூலமேந்திய கரம், பெண்கூறு, அரையிலே புலித்தோல் கோவணம், காலிலே கழல், திருவடி உடம்பிலே நெளிந்து வளைந்து ஒளிரும் பாம்புகள், வெள்விடை ஆகியவை பற்றியும், அணியும் மாலைகள் பற்றியும் ஏராளமான குறிப்புக்கள் சைவத்திருமுறைகளிலே காணப்படுகின்றன. அவற்றுள் ஞானசம்பந்தர் சிவனுருவம் பற்றி வழங்கிய குறிப்புகளுட்சில வருமாறு:—

"கங்கை சடையிற் கரந்தார்; பிறை நின்றிலங்கு சடையாரவர் எம்பெருமானடிகளே; கரிய மிடறுமுடையார்; மங்கை மணந்த மார்பர்; மழுவாள் வலனொன்றேந்தி; துள்ளு மிளமான் மறியார்; விரிதோடு ஒரு காதிலங்க; செங்கண் வெள்ளேறு ஏறிச் செல்வார்."

இனித் திருநாவுக்கரசர் இட்டிய சிவனுர்தம் திருவுருவம் பற்றிய ஒரு பாடல் வருமாறு:—

"வடிவேறு திரிசூலந் தோன்றும் தோன்றும்
வளர்சடைமே லிளமதியம் தோன்றும் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றும்
காதில் வெண்குழை தோடு கலந்து தோன்றும்
மிடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில் திகழுந்திரு முடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் எம்பூவணத்தெம் புனிதனுர்க்கே."

இனிச் சுந்தரரின் வருணனை வருமாறு:—

"வெண்புரிநூன் மார்பர்; கண்ணார் நுதலார்; காயும் புலியின் அதளுடையர்; பிறையார் சடையார்;" "கொத்தார் கொன்றை மதிசூடிக் கோணாகங்கள் பூணாக மத்த யானை யுரிபோர்த்து மருப்பு மாமைத் தாலியார்."

அழுதே ஆண்டவன் திருவடித் தாமரைகளையடைந்த மணிவாசகப் பெருந்தகையார் வழங்கிய சிவனுருவம் வருமாறு:—

**"தோலும் துகிலும் குழையுஞ் சுருள் தோடும்**
**பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்**
**சூலமும் தொக்க வளையும் உடைத்தொன்மைக்**
**கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ."**

## திருவடி

இறைவன்றன் மெய்ப்புகழிலே ஆழ்ந்து ஆழ்ந்து பேரின்பக் கடலில் மூழ்கித் திளைப்பதற்கு மூலகாரணமாக இருப்பன கடவுளின் திருவடித் தாமரைகளாகும். அடியார் என்ற சொற்கே திருவடிகளை எப்பொழுதும் நினைந்து கொண்டிருப்பவர் என்பது பொருளாகும். இத்தகைய திருவடிகளுக்கு நறுமலர் பெய்து அவற்றை வணங்கினால் நாம் பேரின்பம் பெறுவோம்; இறுதியில் அவன்றன் திருவடிகளைச் சேர்ந்து விடுவோம். ஆளுடைய அரசு இறைவனின் வாடாத் திருவடித் தாமரைகளின் சிறப்பையும் அவற்றை வணங்கி வழிபடுவதால் ஏற்படும் நன்மைகளையும் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

**"அணியனவுஞ் சேயனவுமல்லா அடி**
**யடியார்கட் காரமுதமாய அடி**
**பணிபவர்க்குப் பாங்காக வல்லவடி**
**பற்றற்றார் பற்றும் பவளவடி**

மணியடி பொன்னடி மாண்பாமடி
மருந்தாய்ப் பிணிதீர்க்க வல்லவடி
தணிபாடுதண் கெடில நாடன்னடி
தகைசார் வீரட்டத் தலைவன்னடி.''

நம்பியாரூரர் தாம் இறைவன்றன் திருவடிகளை வந்து அடைந்தமைக்குரிய காரணங்களை எடுத்துக் கூறுகின்றார்.

''எந்தை நீயெனை நமன்றமர் நலியில்
இவன்மற் றென்னடியான் எனவிலக்குஞ்
சிந்தையால் வந்துன் றிருவடி யடைந்தேன்.''
''குற்றஞ் செய்யினும் குணமெனக் கருதும்
கொள்கை கண்டு நின்குரை கழலடைந்தேன்.''

இவ்வாறு காரணங்களைக் கூறுமுன் அவற்றுக்கடிப்படையான சில நிகழ்ச்சிகளையும் சுந்தரர் குறிப்பிடுகிறார்.

''பெய்யுமாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப்
பெயர்த்துப் பன்னிருவேலி கொண்டருளுஞ்
செய்கைகண்டு நின் திருவடி யடைந்தேன்.''
''அமரர்கட்கு அருள் புரிவதுகருதி
நீலமார்கடல் விடந்தனை யுண்டு
கண்டத்தே வைத்த பித்த நீசெய்த
சீலங்கண்டு நின்றிருவடி யடைந்தேன்.''

## அர்ச்சனை

சைவ சமயத்திலே மிகவும் முக்கியமானது ஆண்டவனுக்குச் செய்யும் அர்ச்சனையாகும். திருமுருகாற்றுப்படையில் அர்ச்சனை காணப்படுகிறது. திருமூலர் அர்ச்சனையைப் பற்றிக் குறிப்பிடுகிறார். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் தனித்தனியாக ஆண்டவனுக்குச் செய்ய வேண்டிய அர்ச்சனையைப் பற்றி அவர் பேசுகிறார். அர்ச்சனை மூன்று வகைப்படும். மனம், வாய், உடல் ஆகிய மூன்றிலும் அர்ச்சனைகள் செய்யப்படும். இம்மூன்றினுள்

வாயால் அர்ச்சனை செய்வது என்பது இறைவன் திருப்புகழைப் பாடல்களாகத் தொகுத்துப் பாடுதலாகும். அதனையே சிறப்புடையது என்று சைவப் பெருமக்கள் நினைக்கிறார்கள் என்பதை "அருச்சனை பாட்டேயாகும்" என்றும் சேக்கிழார் வாக்கால் நாம் அறியலாம். சைவ சமய நாயன்மார்களிற் சிறந்த மூவர் முதலிகளும் மேற்கொண்ட அர்ச்சனை சேக்கிழார் போற்றிய அர்ச்சனையாகும். ஞானசம்பந்தரின் திருப்பூந்தராய்ப் பதிகம் அர்ச்சனைப் பாடல்கள் நிறைந்த ஒன்றாகும். இப்பதிகத்திலே இறைவன் உறையும் திருப்பதியைப் போற்றிப் பாடி அதன் மூலம் சம்பந்தர் அர்ச்சனை செய்கிறார். இப்பதிக அர்ச்சனைப் பாடல்களிலே அம்மையின் உறுப்பு நலன்கள் பெரிதும் பேசப்படுகின்றன. மேலும் "வானவர்கள் திருப்பூந்தராய் வந்து கோயிலை வலஞ் செய்து மாமலரிட்டு இறைஞ்சிப் போகின்றனர்" என்று சம்பந்தர் பாடியுள்ளார்.

"பந்துசேர் விரலாள் பவளத்துவர் வாயினாள்
பனிமாமதிபோல் முகத்து
அந்தமில் புகழாள்மலை மாதொடு மாதிப்பிரான்
வந்துசேர்விடம் வானவ ரெத்திசையுந் நிறைந்துவலஞ்
செய்து மாமலர்
புந்திசெய்திறைஞ்சிப் பொழிபூந்தராய் போற்றுதுமே."

ஞானசம்பந்தர் அடியார்கள் கூட்டத்தோடு தன்மைப் பன்மை முகமாக அர்ச்சனை செய்தார். அப்பர் தாமே இறைவன் றன் திருச் செயல்களையும், அவன் றன் மேனியழகினையும், பேராற்றலையும், பிறவற்றையுங் கூறிப் போற்றி அர்ச்சனை செய்கிறார்.

"வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே யாளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி யுள்ளே யொளித்தாய் போற்றி
யோவாத சத்தத்து ஒலியே போற்றி

யாற்ருகி யங்கே யமர்ந்தாய் போற்றி
யாறங்க நால்வேதமாளுய் போற்றி
காற்ருகி யெங்கும் கலந்தாய் போற்றி
கைலேமலேயானே போற்றி போற்றி.'

மேலும் அப்பர் ஒவ்வொரு பாடலிலும் இறைவன் தன் சிந்தையுட் புகுந்து ஆட்கொண்ட திறம் பற்றிக் கூறிப் போற்றுகிருர்.

" மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி"
" போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி"
" கோயிலா என்சிந்தை கொண்டாய் போற்றி".

சுந்தரமூர்த்தி நாயனுர் தமது திருக்கழுக்குன்றப் பதிகத்திலே பிறரைச் சென்று அர்ச்சனை செய்யுமாறு பணிக்கிருர். அதிலே பெரும்பாலும் தொழுவதையே வற்புறுத்தி அதனுல் வினையறும் என்கிருர்.

" கொன்று செய்த கொடுமையாற் பல சொல்லவே
நின்ற பாவ வினைகடாம் பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் தேவர்பிரானிடம்"
" பிழைகள் தீரத் தொழுமின்."

## தொண்டு அல்லது அடிமை

கதிரவனைவிடக் கதிரவன் வெப்பத்திலே காய்ந்த சுடு மணல் வெப்பம் மிகவுடையது என்பது பலரும் அறிந்த ஒன்றே. அதுபோல ஆண்டவனைவிட அவன் அருள்பெற்ற அடியார்களுக்கு அருள் வலிவும் ஆன்ம வலிவும் மிகவுண்டு என்பது சைவர்களுடைய எண்ணம். சிவனடியார் கூட்டத்தைச் சிவமே என விரும்பிப் பேணுவது செந்தமிழ்நாட்டுச் சைவநூல் வகுக்கும் அறங்களுள் ஒன்று. இதனுல் இவர்கட்குச் சிவன்பாலுள்ள பேரன்பு தெற்றென விளங்குகிறது. சிவனடியார் என்பவர் பண்டைத் தவத்தாலும் அடியாரொடு பயிலும் பயிற்சியாலும் சிவன்பால் பேரன்

ற்றுத் தொண்டு செய்பவராவர் என்று ஞானசம்பந்தர் அவர்களைச் சிறப்பித்துள்ளார். இத்தொண்டர்களை உளத்திற்கொண்டு போற்றுபவர் வினையின் நீங்கி உண்மை அறிவு விளக்கம் பெறுவர் என்றும், அவர்களுக்குத் தூய நெறியாகிய சிவநெறி எளிதிற் கைகூடும் என்றும் சம்பந்தர் கூறியுள்ளார்.

வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்கப் பாண்டியநாடு செல்வதைச் சம்பந்தர் அப்பருக்கு அறிவிக்கிறார். அதுகேட்ட அப்பர் சமணர் பொல்லாதவர் எனப் புகன்று "இப்பொழுது நாளும் கோளும் நமக்கு நன்றாக இல்லை" எனக் கூறுகிறார். அதுகால் ஆளுடைய பிள்ளையார், "நாம் சாதாரண மக்கள் அல்லோம்; நாளையும் கோளையும் இயக்கிடும் ஆண்டவனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அடியார்கள்; எனவே நாளும் கோளும் நலியா" என அடிமையின் பெருமையையும் அடியார்தம் ஆற்றலையும் எடுத்துக் கூறிப் பதிகம் பாடியுள்ளார். அப்பதிகப் பாடல்களுள் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

"வேயுறு தோளிபங்கன் விடமுண்டகண்டன்
மிகநல்லவீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேலணிந்தெ
னுளமே புகுந் தவதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழம்வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்கு மிகவே."

அடியார்தம் சிறப்புப் பற்றி அப்பர் அருளிய திருவாக்கு வருமாறு:

"வீங்கிய தோள்களும் தாள்களுமாய் நின்று
வெற்றரையே
மூங்கைகள் போலுண்ணுமூடர் முன்னே
நமக்குண்டுகொலோ

தேங்கமழ் சோலைத் தென்னூருர்த் திருமூலட்டானன் எங்கள்
பூங்கழலான் அடித்தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே.''

சுந்தரர் தாம் பாடிய திருத்தொண்டத் தொகையிலே தனியடியார் அறுபத்து மூவரையும் தொகையடியார் ஒன்பதின்மரையும் கூறி அவர்க்குத் தாம் அடிமை செய்யக் கடப்பாடுடையேன் என்று பாடியுள்ளார்.

'' திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கு மடியேன் ''
'' இல்லையே என்னாத இயற்பகைக்கு மடியேன் ''
'' பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்.''

## அத்வைதம்

தென்னகத்திலே நிலவும் சமயங்களுள் அத்வைத சமயமும் ஒன்று. உலகமும் பிரமமும் ஒன்று என்பது இச்சமயத்தின் உயிர்நாடி. இச் சமயத்தைத் தோற்று வித்தவர் காலடியிற் பிறந்த சங்கரராவார். இவர் காலம் கி. பி. எட்டாம் நூற்றாண்டாகும். மெய் வாய் கண் மூக்குச் செவி ஆகிய ஐந்து பொறிகளாலும் நாம் உலகி டைக் காணும் பொருள்கள் உண்மையானவை அல்ல; அவையெல்லாம் பொறிகளின் மருட்சியால் தோன்றுபவை. நம் கண்களுக்குத் தெரிந்த உலகத்திலும், சிந்தையும் மொழியும் செல்லா உலகங்களிலும் பரவி, உயிருக்குள் உயிராய் எங்கும் நீக்கமற நிறைந்துள்ள ஒன்றே பிரமம் எனப்படும். சொல்லளவில் அந்தப் பிரமம் வேறு; உலகம் வேறு என்று தோன்றலாம். ஆனால் உலகத்துக்கு ஆதாரம் பிரமந்தான். ஆதலால் உலகமும் பிரமமும் வேறு வேறு அல்ல. இந்த இரண்டும் அற்ற நிலையே வடமொழியில் அத்வைதம் எனப்படும். பிரமம் உலகமாகக் காட்சி

யளிப்பதும், உலகம் பிரமத்துள் ஒன்றுவதும் அத்வைதத்
தின் சித்தாந்தமாகும். அத்வைதக் கொள்கைப்படி உயிர்
உடலினின்றும் வேறுபட்டது; உயிர் உலகப் பற்றுக்களினின்றும்
விடுபட்டவுடன் பிரமத்துடன் சேர்வது. மனிதனுடைய
அறிவு இருவகைய. அவை அபரஞானம், பரஞானம்
என்று கூறப்படும். அபரஞானமாவது, காது, கண்
போன்ற பொறிபுலன்களாலும், மனம், சித்தம், புத்தி
முதலிய அந்தக் கரணங்களாலும் காணப்படும் இந்த உல
கம் பற்றிய சாதாரண அறிவாகும். பரஞானமாவது
இந்த உலகுக்கு ஆதாரமாய் இருக்கின்ற பிரமத்தைப் பற்
றிய மேலான அறிவாகும். இத்தகைய பரஞான அறிவு
நிலையானது. பரத்தை அறியும் வழி பரமார்த்திகம் எனப்
படும். உயிர் பரஞானத்தை அறிந்ததும் அதனைவிட்டு
உலகப் பற்றுக்கள் நீங்கிவிடும். அவ்வாறு நீக்கம்பெற்ற
உயிர் அந்த நிலைமையில் ஆத்மா எனப்படும். பரஞானத்
தைப் பெற்ற ஆத்மா இறைவனோடு கலந்து விடுகிறது.

உலகத்தின் நிலையாமையே மாயைஆம். அபரஞானங்
கொண்டு நாம் அறியும் பொருள்கள் மாயை எனப்படும்.
இதனோடு மறையும் உலகையும் மாயை என்பர். உலகுக்கு
உண்மைத் தன்மை இல்லை என்று நம் மனத்தை மறைப்
பதும் மாயைத்தன்மைதான். பிரமத்தோடு கூடிய நிலை
யுள்ள உலகையும், நிலையற்ற உலகையும் ஒரே சமயத்தில்
நாம் அனுபவிக்க முடியாது. இந் நிலையற்ற உலகமும்
நிலைத்த உலகத்தால் நிலைபெறுகிறது. ஆனால் நம் சிறிய
அனுபவம் இவ்வுண்மையைக் காட்டுவதில்லை. உள்ளுணர்
வாலேயே இதனை உணரலாம். மாயை என்ற இருளால்
உயிர், தன் மேலான அறிவு குன்றிக் கிடக்கின்றது.
மேலான அறிவே இந்த இருளை அகற்ற முடியும். பிரமத்
தைப் பரமான்மா எனவும், உயிரைச் சீவான்மா எனவும்
கூறல் வழக்கம். பரமான்மாவும் சீவான்மாவும் ஒன்றே
ஆயினும், உடம்பு, மாயை ஆகியவற்றால் கட்டுண்ட
சீவான்மாவை நோக்கப் பரமான்மா வேறுபட்டது

என அறிஞர் கூறுவர். உயிர் இறைவனை அடைய வேண்டுமானால் முதலிற் குருவிடம் பயிறல் வேண்டும். தனக்கும் உலகிடைக் காணப்படும் பொருள்கட்கும் உள்ள தொடர்பு என்ன என்பது போன்ற உண்மைகளைக் குருவின் வாயிலாக அறிதல் முதனிலை ஆம். இங்ஙனம் குருவிடம் அறிந்த உண்மைகளைத் தன் அன்றாட வாழ்வில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கொண்டு அறிதல் வேண்டும். இதுவே நினைத்துப் பார்த்தல் என்னும் இரண்டாம் நிலையாகும். குருவின் வாயிலாக இறைவனைப் பற்றிக் கேட்ட உண்மைகளை அன்றாட வாழ்வில் அனுபவித்த மனிதன் தனது தியானத்தின் வாயிலாகத் தெளிவாக அறிகிறான். இந்த நிலையில் அவன் பிரமத்தை உணர்வதோடு தானே பிரமமாகவும் ஆகின்றான். இந்த நிலையை அடைபவனே சீவன் முத்தன் எனப்படுகின்றான். இவனை எல்லாப் பற்றுக்களினின்றும் விடுபட்ட மனிதன் என்றும் கூறலாம். இவனது ஆத்மா உடலைவிட்டுப் பிரிந்ததும் இறைவனோடு கலந்து விடுகிறது. மனித வாழ்வு நீரோட்டம் உள்ள ஆற்றுநீர்க் குமிழியை ஒக்கும். குமிழியும் நீர்தான்; ஓடும் ஆற்றிலும் அதே நீர்தான் இருக்கிறது. அதே போன்று சீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றே. இதுவே அத்வைதத்தின் உயிர்க்கொள்கை. இந்த அத்வைதத்தைக் கைவம் ஏகான்ம வாதம் என்றும் கூறப்படும்.

# 6. சோழர் காலச் சைவ சமயம்

பல்லவர் மரபு தன் நிலைகெட்ட பின்னர், தஞ்சை
யைத் தலைநகராகக் கொண்டு விசயாலயன் என்ற மன்
னன்வழிச் சோழர் பரம்பரை தலைதூக்கி நின்றது. கி. பி.
900 — 1300 வரை சோழரசர்கள் பேரரசை நிறுவி, சிறக்க
ஆண்ட காரணத்தினால் தமிழ்நாடு எல்லாத்துறைகளிலும்
சீரும் சிறப்பும் பெற்று விளங்கியது. இக்காலத்தில்தான்
சைவ சமயம் இந்தியா முழுவதும் பரவியது. பிற்காலச்
சோழப் பேரரசாம் மாளிகைக்கு அடிப்படை இட்டவன்
விசயாலயன்; கட்டிடத்தை எழுப்பியவன் இராசராசன்;
கட்டிடத்தின் புகழ் ஒளியை உலகெலாம் பரப்பியவன்
இராசேந்திரன். சங்க காலத்தில் தலைசிறக்க வாழ்ந்த
சோழர் குலம், சுமார் ஐந்தாறு நூற்றாண்டுகளுக்குமேல்
தலை தூக்காது விளங்கியது என்னலாம். தெற்கே பாண்
டியரும் வடக்கே பல்லவரும் தலைதூக்கித் தமிழ்நாட்டை
இக்காலத்தில் ஆண்டனர். எனவே சோழர் வலிகுன்றிச்
சிற்றரசராய் வாழ்ந்தனர். நந்திவர்மனுக்குப்பின் சிறந்த
பல்லவ வேந்தர் யாரும் இல்லை; பாண்டிய நாட்டிலும்
ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் இறந்தனன். இரண்டாம் வரகுணன்
பட்டமேறினான். இக்காலத்தில்தான் சோழன் விசயால
யன் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு தலைதூக்க
ஆரம்பித்தான். இவன் கி. பி. 846-இல் பட்டத்துக்கு வந்
தான். இவன் அப்பொழுது பல்லவமன்னனாக விளங்கிய
நிருபதுங்கனுக்கு உற்ற நண்பனாயிருந்தான். இருவரும்
கி. பி. 854-இல் பாண்டியர்மேல் போர்தொடுத்து, பாண்
டியன் மாறவர்மனைத் தோல்வியுறச் செய்தனர். இவ்
வெற்றி சோழர்தம் எழுச்சிக்கு வித்தாய் அமைந்தது எனக்

கூற வேண்டும். விசயாலயனது மகன் ஆதித்தன் கி. பி. 871-இல் பட்டமேறினான். இவன் காலத்தில் பல்லவ நாட்டை அபராசிதனும், பாண்டிய நாட்டை இரண்டாம் வரகுணனும் ஆண்டு வந்தனர். கி. பி. 880-இல் பல்லவ அரசன், கங்க வேந்தன் பிருதிவிபதி ஆகியவர்களின் துணைகொண்டு ஆதித்த சோழன் பாண்டிய மன்னனைத் திருப்புறம்பயத்தில் முறியடித்தனன். இவ்வெற்றியே சோழர் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது. இவ்வாறு விசயாலயனாலும் அவன் மகன் ஆதித்தனாலும் புதுப்பிக்கப்பட்ட சோழர் பரம்பரை தமிழ் நாட்டிற்கு நிலைத்த புகழைத் தேடித் தந்தது.

பிற்காலச் சோழர் காலத்தில் விளங்கிய சைவம் என்னும் ஆலமரம் பச்சை இலைகளும் பவழக் காய்களும் திக்கெலாம் ஓடிய கிளைகளும் தொங்கும் விழுதுகளும் கொண்டதாய் விளங்கிற்று. இதற்குக் காரணம் சோழர் பரம்பரையினர் அனைவரும் சைவராய் விளங்கியமையே ஆகும். எனினும் அவர்கள் பிற சமயங்களில் மாறுபாடு கொண்டவரல்லர். ஆதித்தன் தன் விரிந்த நாட்டில் பல சிவன் கோயில்களைக் கட்டினான். இவனது மனைவி திரிபுவன மாதேவி கோயில்களுக்குப் பல தானங்கள் செய்தாள். இவனது மகன் பராந்தகன் பெரு வீரனாவான். இவன் கி. பி. 907–953 வரை அரசாண்டான். தமிழ் நாடு முழுவதும் தன் கீழ்க் கொணர்ந்தான். ஈழத்தை வென்றான். இவன் சிறந்த சிவபக்தனாக விளங்கினான். திருவாவடுதுறை, செந்துறை முதலிய இடங்களில் இவன் கோயில்கள் அமைத்தான். இதனைத் திருவிசைப்பா பெரிதும் பாராட்டுகின்றது. பொன்னால் பசுச் செய்து அதன் வாய்வழி நுழைந்து பின் வெளிவந்து அப்பொற் பசுவை அந்தணருக்குத் தானம் செய்தலாகிய ஏமகர்ப்பம், துலையில் தான் ஏறிநின்று, தன் எடைக்குச் சரியாகப் பொன்னை நிறுத்து அப்பொன்னை அந்தணருக்குத் தானம் செய்தலாகிய துலாபாரம் ஆகிய தானங்களை இவன் செய்தனன். இவனது

மகன் கண்டராதித்தனும் சிறந்த சைவனே. இவன் பாடிய
பாடற்றொகுதி திருவிசைப்பாவில் இடம் பெற்றுள்ளது.
"சிவஞான கண்டராதித்தர்" என்று இவனை வழங்குவதி
லிருந்து இவன் மிகச் சிறந்த சிவ பக்தனாக விளங்கினான்
என்பதை நாம் எளிதில் உணரலாம். இவனுக்குப் பின்
இவன் தம்பி அரிஞ்சயன் ஓராண்டு ஆட்சி புரிந்தான்.
இவன் பெயரால் இவன் பேரன் திருவல்லத்தில் 'அரிஞ்ச
யேச்சுரம்' என்ற கோயிலைக் கட்டுவித்தான். அது இப்
பொழுது சோமேச்சுரம் என்று வழங்கப்படுகிறது. இவ
னுக்குப் பின் இவன் மகன் பராந்தகன் சுந்தர சோழன்
(957-970) அரசாண்டான். இவனது மூத்த மகன்
ஆதித்த கரிகாலன் ஆவான். இரண்டாம் மகனே பேரர
சன் இராசராசன். மகள் குந்தவ்வை. சுந்தர சோழனும்
சிறந்த சிவ பக்தனே. இவனது மூத்த மகனைச் சிலர் வஞ்
சித்துக் கொன்றனர். இவனுக்குப் பின் இவனது தம்பி
உத்தம சோழன் பத்தாண்டுகள் ஆட்சி செய்தான். இவன்
குடும்பம் பல அறச் செயல்கள் புரிந்தது. இவன் மகன்
கண்டராதித்தனும் சிறந்த சிவபக்தன். இராசராசன்
காலத்து இவன் திருக்கோயில்களை நன்கு பாதுகாத்தனன்.
இவனது பாட்டி செம்பியன் மாதேவியும் சமயத் தொண்டு
கள் பல செய்தனள். உத்தம சோழனுக்குப் பின் இராச
ராசன் பட்டமேறினான்.

ஆங்கில நாட்டுக்கொரு நெல்சன்; ரோம் நாட்டுக்
கொரு சீசர்; கிரேக்க நாட்டுக்கோர் அலெக்சாண்டர்;
வட நாட்டுக்கொரு சந்திரகுப்த மௌரியன்; சாளுக்கிய
நாட்டுக்கொரு புலிகேசி. இவர்களைப் போன்று தமிழ்
நாட்டுக்கோர் இராசராசன். இராசராசன் பிற்காலச்
சோழர்களிலே மிகச் சிறந்த சோழனவான். இவன் தன்
சிறிய தந்தை உத்தம சோழனுக்குப் பின் சோழநாட்டைக்
கி. பி. 985-ஆம் ஆண்டிலிருந்து இருபத்தொன்பது ஆண்
டுகள் ஆண்டான். பட்டம் பெற்றது முதல் இவன் நரம்
பெல்லாம் இரும்பாகவும் நனவெல்லாம் உணர்வாகவும்

வாழ்ந்தான். அதனால் தமிழகம் முழுவதும் இவன் ஆட்சி குட்பட்டது. குடமலை நாடும், கங்கபாடியும், நுளம்ப பாடியும், தடிகை பாடியும் இராசராசனது புகழ் பாடின. இரட்டபாடி அவன் காலடியில் வீழ்ந்தது; வேங்கி நாடு அவன் திருக்கண் பார்வைக்கு ஏங்கியது; கலிங்கம் நடுங் கியது. ஈழமும் அவன் அடி பணிந்தது. இவ்வாறு போர் செய்வதிலேயே தன் வாழ்நாளில் பெரும்பகுதியைச் செலவிட்ட இப்பெருமன்னன் சைவ சமயத்தைத் தன் உயிரெனப் போற்றி அதன் வளர்ச்சிக்காகவும் பாடுபட் டான். என்றும் தன் பெருமையும் அருமையும் குன்றாது இராசராசனது பெயரினை இவ்வவனிக்கு உணர்த்திக் கொண்டிருக்கும் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டி அழி யாப் புகழ்பெற்றான் இவன். இதன் காரணமாய் இவன் "சிவபாத சேகரன்" என்று போற்றப்பட்டான். இவனும் இவனது மனைவியாகிய உலகமாதேவியும் தானங்கள் பல செய்தனர்.

இவனது மகனே முதலாம் இராசேந்திரன் (1012–1044) ஆவான். இவன் தந்தையின் வழியைப் பின்பற் றிக் கங்கை வரை சென்று தமிழர்தம் பெருமையை நிலை நாட்டினான். இவ்வாறு கங்கை வரை சென்று வெற்றி பெற்ற இவன் அதன் நினைவாகக் கங்கை கொண்ட சோழ புரத்தை நிறுவி, அங்குக் கங்கை கொண்ட சோழேச்சுரம் என்னும் திருக்கோயிலையும் அமைத்தான். இக்கோயில் தஞ்சைப் பெரிய கோயிலை ஒத்திருந்தது. இக்கோயிலைக் கருவூர்த்தேவர் தமது திருவிசைப்பாவில் பாடியுள்ளார்; இன்று இவ்வூர் சிதைந்த கோலத்தில் சிற்றூராய்க் காட்சி தருகிறது. இராசேந்திரனும், அவனது குடும்பப் பெண் களும் சிவநெறி போற்றிப் பலவகையில் கோயில் திருப் பணி செய்தனர். சோழர் பரம்பரையில் மிகச் சிறந்த அரசர்களாகக் கருதப்பட்டவருள் கடைசி அரசன் குலோத்துங்கன் (1070-1120) ஆவான். இவன் இராசேந் திரன் மகளாகிய அம்மங்கைக்கும் கீழைச் சாளுக்கிய மன் னன் இராசேந்திரனுக்கும் பிறந்தவன். இவனும் சிறந்த

சைவனே. இவனது சகோதரிகளாகிய குந்தவ்வை, மதுராந்தகி என்போர் தில்லையில் பற்றுக் கொண்டவராகிப் பணி பல ஆற்றினர். இவனது மகன் விக்கிரமனும் சிறந்த சிவ பக்தனே. இவன் தில்லைக் கோயிலைப் பொன்வேய்ந்து அழகு படுத்தினான்; தில்லைக்கோயில் தேருக்கும் பொன் வேய்ந்து முத்துவடம் அளித்தான். பொன் கலன்களும், பொன் கற்பகத் தருவும் கொடுத்தான். இவனது பெயரால் சிதம்பரத்தில் வீதி ஒன்று உண்டு. தில்லை, காட்டுமன்னார் கோயில் ஆகிய இடங்களில் அரச மாளிகைகள் இவன் காலத்தில் இருந்தன. ஒட்டக்கூத்தர் இவனது அவைக் களப் புலவராவார். இவனது மகன் இரண்டாம் குலோத்துங்கன் ஆவான். இவனும் தன் முன்னோரைப் போலத் தில்லையின் புகழைத் திக்கெலாம் பரவச் செய்தான்; தில்லை நகரில் பெரும் வீதிகளை அமைத்தான்; எழு நிலைக் கோபுரம் எடுப்பித்தான்: பேரம்பலத்தைப் பொன்வேய்ந்தான்; சிவகாமி கோட்டம் அமைத்தான்; குளம் வெட்டினான்; கோயிலுக்குத் தேர் செய்துகொடுத்தான்; பசு, யானை, எருது முதலியவற்றை வழங்கினான். இவன் ஒட்டக்கூத்தரிடம் பெருமதிப்புடையவன். இவன் தில்லையில் நெடுங் காலம் தங்கி இருந்தனன்.

இவனது மகனாகிய இரண்டாம் இராச ராசன் (1146-1163) தன் தந்தையைப் போன்றே தில்லைக்குத் திருப் பணிகள் பல செய்தான். கும்பகோணத்துக்கு அருகில் உள்ள தாராசுரத்தில் இவன் 'இராச ராசேச்சுரம்' என்ற கோயிலைக் கட்டுவித்தான். அதன் பெயரே நாளடைவில் தாராசுரம் என மருவிற்று. இவனது அவைக்களப் புலவரும் ஒட்டக்கூத்தரே. இவனுக்குப் பின் விக்கிரமனது பேரன் இரண்டாம் இராசாதிராசன் பட்டமேறினான். அவனுக்குப் பின்னர் மூன்றும் குலோத்துங்கன் (1178-1218) பட்டமேறினான். இவன் இரண்டாம் இராசராசனின் மகன் ஆவான். இவனும் முன்னோர் போலச் சிவ பக்தனாக விளங்கினான். இவனுக்கு இறைவன் "நம் தோழன்" என்ற பெயரை வழங்கினான் என்று திருவாரூர்க்

கல்வெட்டொன்று கூறும். இவன் பல திருக்கோயில்களைக் கட்டுவித்தான். இவன் 'திரிபுவனன்' என்னும் தனது சிறப்புப் பெயரால் திருவிடைமருதூர்ப் பக்கத்தில் திரிபுவன வீரேச்சுரம் என்னும் கோயிலைக் கட்டுவித்தான். தில்லையில் பொன் வேய்ந்தான். பாண்டிய மன்னன் குலசேகரனை வெற்றிகொண்டபொழுது, இம்மன்னன் மதுரையில் தங்கியிருந்தனன். அதுகால் அவன் மதுரைத் திருக்கோயிலில் விழாவெடுத்தான்; கோபுரங்களைப் பொற் கலசங்களால் அணி செய்தான். இவன் காலத்தில்தான் சேக்கிழார் பெரிய புராணம் பாடினரெனப் பேராசிரியர் பண்டாரத்தார் 'பிற்காலச் சோழர்' என்னும்தனது நூலில் கூறியுள்ளார். ஒரு சிலர் சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் இருந்தவர் என்பர். இவன் காலத்தில் வடநாட்டுப் பிராமணர்கள், சைவத் துறவிகள் வாழ்ந்து வந்த குகைகளையும் மடங்களையும் அழித்தனர் என்றும், இவன் மகன் மூன்றும் இராசராசன் அவற்றைச் செப்பனிட்டான் என்றும் கூறப்படுகின்றது. மூன்றும் இராசராசன் திறமையற்றவனுக விளங்கியமையால் அவன் காலத்தில் சோழநாடு அளவிற் குறைந்தது. பல சிற்றரசர் உரிமை பெற்றனர். பாண்டியர் தலைதூக்கினர். எனவே சோழப் பேரரசு வீழ்ச்சியுறலாயிற்று. எனினும் இவன் காலத்திலும் சைவம் ஓங்கி இருந்தது. சந்தான குரவராகிய மெய்கண்டார் இவன் காலத்தில் வாழ்ந்தார் என்று கூறப்படுகின்றது. சோழப் பேரரசின் கடைசி மன்னன் மூன்றும் இராசராசனின் மகன் மூன்றும் இராசேந்திரன் (1246-1279) ஆவான். இவன் பாண்டியப் பெருவீரன் இரண்டாம் சுந்தர பாண்டியனால் முறியடிக்கப்பட்டான். இவனுக்குப் பின் சோழநாடு பாண்டி நாட்டோடு இணைந்து விடவே, பாண்டியர் ஆட்சி ஓங்கிற்று.

## சோழர் காலத்துக் கோயில்கள்

சோழர் காலத்தில் சோழர்கள் தில்லையைத் தங்கள் உயிராகக் கருதினர். அங்கு ஒரு அரண்மனை கட்டியிருந்

தனர். இரண்டாம் குலோத்துங்கன் போன்ற சோழ மன்னர்கள் தங்கள் பெரும் பொழுதைத் தில்லையில் கழித்தனர். தில்லைத் திருக்கோயிலிலும் ஆரூர்ப் பூங்கோயிலிலும் சோழர்கள் செய்த திருப்பணிகள் பல. சோழர்கள் பாடல் பெற்ற கோயில்களை எல்லாம் கற்றளிகளாக்க முற்பட்டனர். அவை பல்லவர் காலத்தில் அழியத் தக்க மண், செங்கல், சுண்ணும்பு, மரம், உலோகம் இவற்ருல் அமைக்கப்பட்டன. அழியாத கடவுளுக்கு அழியாத நிலையில் கோயில் அமைக்க வேண்டும் என்பது சோழர் விருப்பம். அதனுல் கற்களே கிடைக்காத சோழ நாட்டில் பல இடங்களிலிருந்தும் கற்களை அரும்பாடுபட்டுக் கொணர்ந்து, வியத்தகு முறையில் பழைய கோயில்களைக் கற்றளிகளாக மாற்றினர். அவர்கள் முதலில் கருவறையையே மாற்றி அமைத்தனர். பின்பு படிப்படியாகக் கோயிலின் பிறபகுதிகளைக் கல்லால் அமைத்தனர். இத்துறையில் வழிகோலியவன் சோழப் பேரரசுக்கு அடிகோலிய முதலாம் ஆதித்த சோழன். அவன் காவிரியின் தோற்றுவாயிலிருந்து அது கடலொடு கலக்கும் இடம் வரையில் ஆற்றின் இருகரைகளிலுமிருந்த சிவன் கோயில்களைக் கற்றளிகளாக மாற்ற முயன்ருன். அவனைப் பின்பற்றிப் பின்வந்த சோழர்கள் தொடர்ந்து நானூறு ஆண்டுகள் இத்திருப்பணியில் ஈடுபட்டனர். இவ்வாறு சோழர்கள் பாடல் பெற்ற கோயில்களைக் கற்றளிகளாக்கியதோடு அமையாது பெரிய புதிய கற்றளிகளை அமைக்கலாயினர். அவருள் தலை சிறந்தவன் முதலாம் இராசராசன் ஆவான். அவன் தஞ்சையில் கண்டார் வியக்கும் வண்ணம் மிகப்பெரிய சிவன் கோயிலைக் கட்டினுன். அவ்வேலை பல ஆண்டுகள் நடைபெற்றது. கருவறைக்குமேல் ஏறத்தாழ இருநூறடி உயரமுள்ள மிகப் பெரிய விமானத்தை அமைத்தான். அகன்ற பெரிய திருச் சுற்றும், உயர்ந்த மதிலும் அமைக்கப்பட்டன. மிக நீண்ட தூரம் சாரம் அமைத்து விமானத்தின்மேல் அமைக்க வேண்டிய சதுரக்கல் மேலே கொண்டு செல்லப்பட்டது. இராசராசன் மிகப் பெரிய சிவலிங்கத்தைக் கருவறையில்

எழுந்தருளச் செய்தான். அப்பேரரசன் அத்திருக் கோயிலைத் தன் உயிர் போலக் கருதினான். அதன் பூசைக்குரிய பொருள்களில் சிலவற்றைத் தன்னாட்சிக்குட்பட்ட இலங்கையிலிருந்து வருவித்தான். மிகப் பல வெள்ளிப் பாத்திரங்களும், பொன் நகைகளும், கல்லிழைத்த நகைகளும் செய்வித்தான். அவனுடைய மனைவியரும், மக்களும், உறவினரும், உயர் அலுவலரும் அக்கோயிற்குச் செய்த தானங்கள் பலவாகும். அவன் தமக்கையார் குந்தவைப் பிராட்டியார் அறங்கள் பல செய்தார். இங்ஙனம் அரசனது குடும்பத்தார் அனைவரும் சிறப்பாக அறம் செய்யப் பெற்ற கோயில் வேறு ஒன்றும் தமிழகத்தில் இல்லை.

இராசராசன் அப்பெருங் கோயிலை ஒரு கலைக்கூடமாக மாற்றினான். தமிழகத்துக் கோயில்களிலிருந்த சிறந்த ஆடல் பாடல் உடைய மகளிர் நானூற்றுவரைத்தன்பெரிய கோயிலில் பணிசெய்ய அமர்த்தினான். ஒவ்வொருத்திக்கும் ஒரு வேலி நிலமும் இருக்க வீடும் வழங்கினான். ஒவ்வொரு பூசை நேரத்திலும் வேத மந்திரங்களைச் சொல்ல "ஆரியம் பாடுவார்" என்பவரை அமர்த்தினான். திருமுறைகளை ஓத 48 பேரை அமர்த்தினான். கோயில் கருவறையின் வெளிப்புறச் சுவரில் சோழர்கால ஓவியங்கள் தீட்டப் பெற்றன. சுந்தரர் வரலாற்றைக் குறிக்கும் ஓவியங்கள் "உயிரோவியங்களாகக்" காட்சி தருகின்றன. நடனமாதர் ஓவியங்களும் குறிப்பிடத் தகுந்தனவாகும். இராசராசன் கட்டிய இப்பெரிய கற்றளி அவன் பெயரால் இராசராசேச்சுரம் (இராசராச ஈசுவரம்) எனப்பட்டது. அங்குள்ள சிவலிங்கம் இராசராசேசுவரமுடையார் எனப்பெயர் பெற்றது. அக்காலத்தில் அம்மனுக்குத் தனிக்கோயில் கட்டும் வழக்கம் இல்லை. கருவறையிலேயே அம்மன் சிலை ஒன்று வைக்கப்பட்டுப் பூசிக்கப்பட்டு வந்தது. கி. பி. 1100 இன் பிற்பகுதியிலிருந்துதான் அம்மனுக்குத் தனிக் கோயில் கட்டும் முயற்சி தோன்றியது. தஞ்சைப் பெரிய கோயிலிலிருந்த அம்மனின் பெயர் உமாபரமேசுவரி என்பது. அப்பெரிய கோயிலில் சுந்தரர், பரவையார், சிறுத்

தொண்டர், அவர் மனைவி வெண்காட்டு நங்கை, மெய்ப் பொருள் நாயனார் இவர்தம் படிமங்கள் வைத்து வழிபாடு செய்யப்பெற்றன.

தஞ்சைப் பெரிய கோயிலிலும், இராசேந்திரன் கட்டிய கங்கை கொண்ட சோழேச்சுரத்திலும் வழிபாட்டுக்குரியவையாய் அமைக்கப்பட்ட இலிங்கங்கள் மிகப் பெரியனவாகும். அவற்றின் உயரம் ஏறத்தாழ 13 அடி; பீடத்தின் சுற்றளவு ஏறத்தாழ 30 அடி. இவ்விலிங்கங்கள் முழுமையும் வழுவழுப்பாகவும் செம்மையாகவும் அமைந்துள்ளன. நடராசர், சந்திரசேகரர், பிச்சாடனர் எனச் சிவனைக் குறிக்கும் பல்வேறு திருமேனிகளும், மூத்த பிள்ளையார் (விநாயகர்), இளைய பிள்ளையார் (முருகன்) இவர்களைக் குறிக்கும் திருமேனிகளும் எல்லாச் சிவன் கோயில்களிலும் இடம் பெற்றன. அவை பெரும்பாலும் வெண்கலத்தாலும், வெள்ளியாலும், பொன்னாலும் கோயிலின் செல்வ நிலைக்கேற்ப அமைந்து இருந்தன. நாயன்மார்கள் தொண்டு செய்த கோயில்களில் அவர்தம் உருவங்கள் உலோகங்களில் செய்யப்பட்டு வழிபடப்பட்டன. இறைவனது உலாவின்போது திருமேனிகளும் படிமங்களும் எடுத்துச் செல்லப்பட்டன என்பதைத் தில்லை உலா என்னும் நூலினால் அறியலாம். ஒவ்வொரு பெரிய சிவன் கோயிலிலும் இரண்டாம் திருச்சுற்றில் நாயன்மாரைக் குறிக்கும் கல்லாலான திருவுருவங்கள் இடம் பெற்றன. அவ்வாறே செம்பாலான திருவுருவங்களும் செய்யப்பட்டன. அவைகள் சிறந்த வேலைப்பாடு பொருந்தியவை ஆகும். இவ்வுருவங்கள் நாடோறும் பூசிக்கப்பட்டன. பைரவர், வீரபத்திரர், காளி ஆகியோரது உருவங்களும் சோழர் காலத்து விளங்கின.

சோழர் காலத்தில் மக்கள் அனைவரும் கோயிலைத் தம் உயிராகக் கருதி அதில் திருநந்தா விளக்கெரிக்கவும், பூசை செய்யவும், விழாச் செய்யவும், ஏராளமான நிலங்களையும் தோட்டங்களையும், பொன்னையும் பொருளையும், பொன்

வெள்ளிப் பாத்திரங்களையும், அணிகலன்களையும், கால் நடைகளையும், பிறவற்றையும் மிகுதியாக வழங்கினர். மேலும் அரசுக்குச் சேரவேண்டிய வரிகளில் சில கோயிலுக்குத் தரப்பட்டன. பொது மக்களிடம் பணம் வசூலிக்கப்பட்டது. நீதி மண்டபத்தில் விதிக்கப்பெற்ற தண்டத்தில் ஒரு பகுதி கோயிலுக்குத் தரப்பட்டது. பிள்ளையில்லாதவர் சொத்துக்கள் கோயிலைச் சார்ந்தன. கோயில்களில் காரியங்கள் ஒழுங்காக நடைபெறுதற்பொருட்டு ஆட்சிக் குழு அமைக்கப்பட்டது. அலுவலர் பலர் பணியாற்றினர். சில கோயில்களில் மாகேசுவரர் என்ற சைவத்துறவிகள் காரியங்களை மேற்பார்த்தனர். சில கோயில்கள் கோயிலைச் சார்ந்த மடத்தலைவர்கள் மேற்பார்வையில் இருந்தன. சில கோயில்களை ஊரவையார் கவனித்துக் கொண்டனர். பெரிய கோயிலில் தனி ஆட்சிக்குழு இருந்தது. அவர்கள் கோயில் கணப்பெருமக்கள் என்றும், பாத மூலத்தார் என்றும் வழங்கப்பட்டனர். சில கோயில்களில் சமயக் கல்லூரிகள் விளங்கின. மாணவர்க்கு உணவு, உடை, இடம் ஆகியன இலவசமாக வழங்கப்பட்டன. சுருங்கக் கூறின் சோழர் காலக் கோயில்கள் சமுதாயக் குடியிருப்புக்களாய் விளங்கின. எல்லாக் கலைகளும் கோயிலில் இடம்பெற்றன. மேலும் கோயில் மதிற்சுவர்களெல்லாம் வரலாற்றைக்கூறும் ஏடுகளாய் மாறின. தானம் கொடுத்தவர்கள் கோயில் மதிற்சுவரில் தாங்கள் செய்த தானங்களைப் பற்றியும், அவற்றைச் செயலாற்ற வேண்டிய முறைகள் பற்றியும், செய்த ஆண்டுகள் பற்றியும், அக்காலங்களில் ஆண்ட மன்னர்களைப் பற்றியும், அவர்தம் வெற்றிச் சிறப்புகளைப் பற்றியும் ஒன்றன்பின் ஒன்றாக அழகுபடத் தொகுத்துப் பாமாலையாக மாற்றிப் பொறித்து வைத்தனர். அரசனைப் பற்றிக்கூறும் பகுதியை வரலாற்றாசிரியர் 'மெய்க்கீர்த்தி' என்பர். பிற்காலச்சோழர் தம் பெருமையினையும், ஆற்றலையும், ஆட்சிச் சிறப்பையும் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் தெரிந்து கொள்ளுவதற்குத் துணைபுரியும் இம் "மெய்க் கீர்த்திகள்" இன்றும்

அறியாமல் கோயில்களில் உள்ளன. மேலும் பசுக்கூடம், மருத்துவக்கூடம், சில அலுவலகங்கள் ஆகியவைகளும் கோயில்களில் சிறப்புடன் விளங்கின.

## சைவ இலக்கியங்கள்

### பன்னிரு திருமுறைகள்

ஆலமர் செல்வனை ஆதி முதல்வனாகக்கொண்ட சைவ சமயம் தமிழ்நாட்டுத் தொன்மைச் சமயம் என்பதை மறந்து புறச் சமயப் பற்றுக்கொண்டு விளங்கிய தமிழ் மக்களின் கண்களையும் கருத்துக் கோயிற் கதவுகளையும் திறக்க அடியார்கள் பாடிய பாக்கள் பல்லாயிரமாகும். அவற்றுள் நீருக்கும் நெருப்புக்கும் நம்மவர் மறப்புக்கும் கறையானுக்கும் இரையாகியவை போக எஞ்சிய சைவத் திருப்பாக்களே பன்னிரு திருமுறைகளாகும். பன்னிரு திருமுறைகளையும் வகுத்தவர் நம்பியாண்டார் நம்பி ஆவார். ஏழு திருமுறைகளையே நம்பியாண்டார் நம்பிகள் வகுத்தளித்தனர் என்று கூறுவாருமுளர். இத்திருமுறைகளை வகுத்த நம்பியாண்டார் நம்பி ஆதி சைவப் பிராமணராவார். பொல்லாப் பிள்ளையாரின் அருளைப் பெற்றுத் தமிழ் வேதவியாசராக விளங்கினார். திருத்தொண்டர் திருவந்தாதி, கோயில் திருப்பணியர் விருத்தம், திருச் சண்பை விருத்தம், திருக்கலம்பகம் முதலியன இவர் பாடிய நூற்களாகும். இவற்றுள் திருத்தொண்டர் திருவந்தாதி என்பது சைவ சமயத்தைச் சார்ந்த அறுபத்து மூன்று நாயன்மார்களைப் பற்றிக் கூறும் நூலாகும்.

பன்னிரு திருமுறைகளில் திருஞானசம்பந்தர் பாடிய திருமுறைகள் மூன்று; அப்பர் பாடியவை நான்கு, ஐந்து, ஆறு ஆகிய மூன்று திருமுறைகளாகும். ஏழாம் திருமுறை சுந்தரர் பாடியது. மணிவாசகர் பாடிய திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையைச் சேரும்.

திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பிகாடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் என்ற ஒன்பது அடியார்கள் பாடிய திருவிசைப்பாக்கள் ஒன்பதாம் திருமுறைக்குள் அடங்கும். திருமூலரது திருமந்திரம் பத்தாம் திருமுறை. 'சிவபிரான் பாணபத்திரனுக்குப் பொன் தருமாறு சேரமான் பெருமாளுக்கு விடுத்த பாடல், கல்லாடதேவ நாயனார் கண்ணப்பர் பற்றிப் பாடிய ஓர் அகவல், இளம் பெருமானடிகள் பாடிய ஒரு பதிகம், கபிலதேவநாயனார் பாடிய இரட்டை மணிமாலை, பரமதேவநாயனார் பாடிய சிவபெருமான் திருவந்தாதி, நக்கீரதேவ நாயனார் பாடிய கண்ணப்பதேவர் திருமறம், திருமுருகாற்றுப்படை முதலியன காரைக்காலம்மையார் பாடிய திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை, அற்புதத்திருவந்தாதி ஆகியவை, ஐயடிகள் காடவர் கோன் பாடிய சேத்திர வெண்பா, சேரமான் பெருமாள் பாடிய பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக் கோவை, திருக்கைலாய ஞானவுலா என்பன, அதிரா அடிகள் இயற்றிய விநாயகர் மும்மணிக்கோவை, பட்டினத்தடிகள் இயற்றிய கோயினான்மணிமாலை, திருக்கழுமலமும்மணிக் கோவை முதலியன, நம்பியாண்டார்நம்பி சம்பந்தர், அப்பர் ஆகியோரைப்பற்றிப் பாடிய பாடல்களும் பிறவும் ஆகிய அனைத்தும் அடங்கப் பெற்றதே பதினோராம் திருமுறை. பன்னிரண்டாம் திருமுறையில் பெரிய புராணம் சேரும். இப்பன்னிரு திருமுறைகளும், அவை தோன்றிய காலங்களின் அடிப்படையில் வகுக்கப்படாது, அவற்றின் சிறப்புக்களின் அடிப்படையிலே முறைப்படுத்தப் பட்டுள்ளன. சம்பந்தரின் திருமுறைகளிலே இயற்கையின் பல்வேறு இனிய காட்சிகளையும், அவர்தம் களங்கமற்ற பளிங்கு உள்ளத்தையும் காணலாம். அப்பர் திருமுறைகளிலே உலக வாழ்வில் ஏற்படும் துன்பங்களின் பெருக்கைக் காணலாம். சுந்தரர் பாடல்களிலே இன்பமும் துன்பமும் பின்னிப் பிணைந்து செல்லும். மேலும் இயற்கை

வருணைகளையும் காணலாம். அப்பர், சம்பந்தரால் குறிக்கப்படாத வைப்புத் தலங்கள் பல சுந்தரர் பதிகங்களில் காணப்படுகின்றன. "சிவனை வழிபடுங்கள்; தீவினை அற்று நன்மை அடைவீர்கள். திருப்பதிகங்களைப் பாடிப் பயன்பெறுங்கள். ஐந்தெழுத்தோதி நன்மை பெறலாம்; ஐந்தெழுத்தே நல்ல துணை; ஐம்பொறிகளையும் அடக்குங்கள்; மனத்தை ஒருவழிப்படுத்தி இறைவனை அடையுங்கள்; சிவனைக் காண்பீர்கள்" என்பன மூவர்தம் அறிவுரைகளாகும்.

முதல் ஏழு திருமுறைகள் பண்ணோடும் தாளத்தோடும் பாடத்தக்கவை. ஆனால் திருவாசகம் அத்தகையது அன்று. மணிவாசகர் எங்ஙனம் உழன்று உழன்று இறைவனது அருளைப் பெற்றார் என்பதை எடுத்துக்கூறும் இந்நூல் படிப்பாரை உருக்கும் தன்மையது. கொண்ட குறைகளைக் கூறிக் கடவுள்முன் அழுதால் அவனை அடையலாம் என்பது மணிவாசகரின் கோட்பாடு. கடவுளிடம் என்றும் இறவாத காதல் பெற விரும்பும் பக்தன் அன்பை அடிப்படையாகக் கொண்ட மெய்யடியாருடன் தொடர்ந்து பழகவேண்டும் என்பது சைவ சித்தாந்தக் கொள்கைளுள் ஒன்று. இதனைச் சிவஞான போதம் பன்னிரண்டாம் சூத்திரம் நன்கு வற்புறுத்துகிறது. மணிவாசகர் இத்தகைய அடியார் குழாத்தில் தம்மை வைக்குமாறு இறைவனை வேண்டுகிறார். இவ்விரண்டும் திருவாசகத்தின் உயிர்நாடிகளாகும். ஆன்மாவாகிய தலைவன் கடவுளாகிய தலைவியைப் பல சோதனைப் படிகளைக் கடந்து கூடுதலே திருக்கோவையாரில் குறிக்கப்படும் பொருளாகும். பாக்கள் இனிமையும் ஆழமும் உடையவை. ஒன்பதாம் திருமுறையில் காணப்பெறும் பாக்களில் பல ஐந்தொழில் இயற்றுதற்கேதுவாகிய திருநடனம் செய்யப்படும் ஒளி நிலையமாக விளங்கும் தில்லையின் சிறப்பை எடுத்தோதுகின்றன. திருமூலர் செய்த திருமந்திரமே சைவ சித்தாந்த முதல் நூலாகும். சங்க காலத்திற்குப் பிறகு தமிழராய சோழர் ஆட்சியில் தமிழ் நாட்டு நாயன்மாரைப் பற்றித் தமிழர்

பாடிய தமிழ்க் காவியம் பெரியபுராணம் ஆகும். மேலும் இது சிறந்ததொரு வரலாற்றுப் புதையலுமாகும். திருத்தொண்டர் புராணம் என வழங்கப்பெறும் இந்நூல் காவியச்சுவையும் கவிநலமும் கனிந்து ஒழுகும் நூலாகும். தற்காலத்திற்கேற்ற கருத்துக்கள் பலவற்றைக் கொண்டு விளங்கும் இந்நூல் சாதி மத வேறுபாட்டைக் கடந்து பிறப்பால் உயர்வு தாழ்வு கருதாத நிலைமையை விளக்கும் ஒரு சீர்திருத்த நூலாகும். இந்நூலாசிரியராகிய சேக்கிழார் பெருமான் குன்றத்தூரில் சைவ வேளாளர் குலத்தில் பிறந்தவர். இவரது இயற்பெயர் அருண்மொழித் தேவராகும். அமைச்சுத் தொழில் ஆற்றிய இவர் அநபாயச் சோழன் எனப்படும் இரண்டாம் குலோத்துங்கன் சீவகசிந்தாமணியில் ஈடுபட்டிருந்த நிலையினை உணர்ந்து அதனை மாற்றுவதற்காக வேண்டிப் பெரியபுராணத்தைப் பாடினார் என்று கூறப்படுகின்றது. சுந்தரர் பாடிய தொகை நூலை முதல் நூலாகவும், நம்பியாண்டார் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியை வகை நூலாகவும், கொண்டு சேக்கிழார் பெரியபுராணத்தை விரிநூலாகப் பாடி அருளினார்.

"கற்பகத்தின் பூங்கொம்போ காமன் தன் பெரு
வாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல் சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக் கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேன் என்
றதிசயித்தார்."

"ஐந்து பேரறிவும் கண்களேகொள்ள அளப்பரும்
கரணங்கள் நான்கும்
சிந்தையேஆகக் குணமொரு மூன்றும் திருந்து
சாத்துவிகமே ஆக

இந்துவாழ் சடையான் ஆடுமானந்த எல்லையில் தனிப்
பெருங்கூத்தின்
வந்தபேரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா
மகிழ்ச்சியில் மலர்ந்தார்.''

மேலே தரப்பட்டுள்ள சேக்கிழார் பாடல்கள் பக்திச் சுவையினையும் கவிச் சுவையினையும் நன்கு எடுத்துக்காட்டுகின்றன.

சோழர்கள் காலத்தில் விளங்கிய ஏனைய சைவப் புலவர்களிலே கருவூர்த்தேவரும் ஒட்டக்கூத்தரும் குறிப்பிடத்தக்கோராவர். தஞ்சை இராசஇராசேச்சுரமுடைய பெருமான் மீது திருவிசைப்பா என்னும் நூலைப் பாடிய கருவூர்த்தேவர் நம்பியாண்டார் நம்பிகளைப் போன்று இராசராசன் காலத்தில் வாழ்ந்தவர். மற்றொரு புலவராகிய ஒட்டக்கூத்தர் செங்குந்த மரபில் தோன்றிய சைவராவார். இவர் மூவருலா, தக்கயாகப் பரணி முதலிய நூல்களைப் பாடினார். இராசராச விசயம், இராசராசேசுவர நாடகம் ஆகியவையும் சோழர் காலத்தில் பாடப்பட்டனவாகும். ஆனால் இவ்விரண்டு நூல்களும் இன்று கிடைக்கப் பெற்றில. தஞ்சைப் பெரிய கோவிற் கல்வெட்டின் மூலம் தான் இராசராசேசுவர நாடகம் என்னும் நூல் இருந்தது என்பதை அறிய முடிகின்றது. இவ்வாறே பூந்துருத்தியிலுள்ள கல்வெட்டு ஒன்று ஸ்ரீ இராசராச விசயம்என்னும் நூலைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இராசராசேசுவர நாடகத்தைத் தஞ்சை மாநகரில் ஆண்டுதோறும் விழாக்காலங்களில் நடித்தற்கு இரண்டாம் இராசேந்திரன் நூற்றிருபது கல நெல் நிவந்தமாக அளித்திருந்ததாகக் கல்வெட்டொன்று கூறுகின்றது.

## மெய்க்கீர்த்திகள்

தமிழ்நாட்டு வரலாற்றிலேயே ஓர் அரிய புதுமையைப் புகுத்தினான் பேரரசனான இராசராச சோழன். அதுதான்

மெய்க்கீர்த்தி வரைந்தமை ஆகும். அவன் கி. பி. 993 ஆம் ஆண்டில்தான் முதன் முதலாக மெய்க்கீர்த்தி பொறிக்கும் வழக்கத்தைத் தொடங்கினான். வரலாற்றுக்குப் பேருதவி புரியவல்லது இம்மெய்க்கீர்த்தி ஆதலால் முதல் இராச ராசனது பேரறிவினை வரலாற்றாசிரியர்கள் வானளாவப் புகழ்கின்றனர். மெய்க்கீர்த்திகளின் நடையிலே தனி அழகு சுடர் விடுவதைக் காணலாம். தூய தமிழ்ச் சொற்களால் ஆகிய இம்மெய்க்கீர்த்திகள், மொழி நுட்பமும், சொல் திட்பமும், பொருள் நுட்பமும் உடைய சிறந்த இலக்கியச் செல்வங்களாகும். தமிழ் இலக்கியத்திலே சிறுகதை இலக்கியம், நெடுங்கதை இலக்கியம் முதலிய தனித்தனி இலக்கிய வகைகள் இருப்பது போலக் கல்வெட்டு இலக்கியமும் இருப்பது தமிழுக்குப் பெருமை அன்றோ !

## பதினான்கு சாத்திரங்கள்

சித்தாந்த சாத்திரங்கள் தொடங்கப் பெற்ற காலமும் சோழர் காலமே. மெய்கண்டார், உமாபதி சிவம் போன்றோர் வாழ்ந்து சித்தாந்த சாத்திரங்களை இக்காலத்தில்தான் செய்தருளினர். திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞான போதம், சிவஞான சித்தியார் (பரபக்கமும் சுபக்கமும்), இருபாவிருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் ஆகிய பதினான்கு நூல்களும் சித்தாந்த சாத்திரம் எனப்படும். மெய்கண்ட சாத்திரம் என்ற பெயரும் இவைகட்கு வழங்கப்படுகிறது. இவற்றுள் திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார் ஆகிய இரண்டும் மெய்கண்டார் காலத்துக்கு முந்தியன என்பது பல பேரறிஞர்கள் தங்கள் ஆராய்ச்சியிற் கண்ட முடிபாகும். தமிழரின் தலைசிறந்த சித்தாந்த நூலாகிய சிவஞானபோதம் மெய்கண்டார் அருளிச் செய்தது. இச் சிவஞான போதத்துள் பன்னிரண்டு சூத்திரங்களை

மட்டுமே மெய்கண்ட தேவர் அருளினர் என்பது சில ருடைய கொள்கை. ஆனல் பழைய வரலாறு கூறுவது சூத்திரங்கள், மேற்கோட் செய்யுட்கள், பொழிப்புரை ஆகிய மூன்றையும் மெய்கண்ட தேவர் அருளிச் செய்தார் என்பதாகும். சிவஞான போதம் என்னும் நூல் சுத்தாத் துவிதம் எனப்படும் சைவ சித்தாந்த முடிவை விளக்கிக் கூறும் பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்டது. அள வில் சிறியதாக இந் நூல் விளங்கினும் சிறந்த கருத்துக் களைக் கொண்டு விளங்குகின்றது. தர்க்க முறைப்படி சைவ சித்தாந்தக் கொள்கைகளை ஆணித்தரமாகக் கூறு கின்றது. இந்நூலாசிரியராகிய மெய்கண்ட தேவர் சந்தானசாரியர் நால்வருள் முதன்மையானவர். இவர் சைவ வேளாண் குடியிற் பிறந்தவர். இவரது தந்தையார் அச்சுதகளப்பாளர் ஆவார். இவரது இயற்பெயர் சுவேதவனப் பெருமாள் என்பதாகும். காலம் 13-ஆம் நூற் ருண்டு. இவர் பெண்ணுகடத்தில் பிறந்தவர். "கடவுள் உண்டு; கடவுள் உயிர்களுடன் அத்து விதமாக நின்று அவைகட்கு வினைப் பயனை ஊட்டுவார்; உயிர்கட்குப் பாசத் தொடர்பால் பிறப்பு இறப்பு நிகழும். உயிர்—பரு உடல், அறிகருவிகள், நுண் உடல், மூச்சு இவற்றுக்கு வேருனது; தானே அறிவதன்றி உணர்த்த உணருவது; உடற்கரணங்கள் கூடியிருப்பினும் அவற் றுக்கு வேருய் நின்று அறிவது; பண்டைக் கால முதலே, ஆணவ மலத்தால் கட்டுண்டு கிடப்பது. புற—அகக் கரு விகளும் உயிரும், அமைச்சும் அரசும் போல்வன. அக் கருவிகள் உயிர்க்குத் துணை செய்வன. இவை யாவும் தொழிற்படுங் காலம் உயிர்க்கு நனவு நிலை எனப்படும். இவற்றுட் சில குறைந்த காலம் உயிர்க்குக் கனவு நிலை என்பதாம் பெயர். மேலும்சில குறைந்த போது உறக்கநிலை எனப்படும். இவையாவும் நீங்கி உயிர் தன்னிலையில் நிற் கும் போது, பேருறக்கநிலை எனப்படும், உயிரின் அகங் காரம் ஒடுங்கிய நிலை உயிர்ப்பு அடக்கம் எனப்படும். கருவிகள் அறிவற்றனவாதலின் தம்மையும் அறியா; தம்

மைச் செலுத்தும் உயிரினையும் அறியா; அவைபோல உயிர்களும் தம்மை அறியா; தம்மைச் செலுத்தும் இறைவனையும் அறியா. சத்து என்பது என்றும் கேடின்றி விளங்கும் பொருள். எனவே இறை ஒன்றே அவ்விலக்கணத்துக்கு இலக்கியமாகும். ஆயினும் சைவ சித்தாந்தத்தின் முப்பொருள்களாகிய இறை, உயிர், உலகம் (பதி, பசு, பாசம்) என்பன என்றுமுள பொருள்களாக ஒப்புக் கொள்ளப்பட்டன. ஆகவே இவை மூன்றும் சத்தே ஆம். ஆயினும் உயிரும் உலகமும் விகாரமடைவதால் அசத்து ஆதல்பெறப்படும், இவை மூன்றினையும் வேறு பிரித்தறிய இவை முறையே சிவசத்து, சதசத்து, அசத்து என்று பிரிவுறும். சார்ந்ததன் வண்ணமாதல் உயிரின் சிறப்பிலக்கணம். அஃது அசத்தாகிய உலகத்தையும் சத்தாகிய பரம்பொருளையும் அறியவல்லது; அசத்தை விட்டுச் சத்தைப் பற்றவல்லது. உயிர்களின் தவத்தால் இறைவன் குருவடிவில் வந்து பக்குவமுடையவர்க்கு ஞானத்தை உணர்த்தித் தன்பால் அவர்களைச் சேர்ப்பான். ஞானம் பெற்றவர் ஐந்தெழுத்து ஓதி ஞான நிலையைக் காப்பர். இவ்வாறு ஞானத்தைப் பெறும் உயிர்கள் இறைவன் தம்முடன் ஒன்றி நிற்றலால் பாசம் நீங்கப்பெறும். இறைவன் உயிர்கட்குத் துணையாக நின்று சிவப்பேறு அல்லது முத்திநிலையைக் காட்டுவான்; அதனைக் காணும் மாறு உதவியும் செய்வான். இப்பிறவியிலேயே சிவத்தை உணர்ந்தவர்களாகிய சீவன்முத்தர்கள் அடியாரிணக்க முடையவராய் சிவவேடத்தையும் சிவன் கோயிலையும் வழி படும் நியமம் உடையவராய் நிற்பர்" ஆகியன இந்நூலிற் காணும் கருத்துக் குவியல்களாகும்.

சிவஞான சித்தியார் என்னும் நூல் இப்பதினான்கு சாத்திரங்களுள் மிக விரிவானது. சுருங்கக் கூறின் சிவஞான சித்தியார் என்பது சிவஞான போதத்திற்குச் செய்யுள் வடிவில் உரை கூறுவது போன்று அமைந்த நூலாகும். பதி பசு பாச உண்மைகளையும், பதியைப் பசு அடையும் வழி, பாசத்தின் இயல்பு ஆகியன பலவும் இந்நூலில்

தருக்க முறையில் திறம்படக் கூறப்பட்டுள்ளன. குருவின் மாண்பு, சிவவேடப் பெருமை, ஐந்தெழுத்தின் சிறப்பு முதலியவற்றையும் இந்நூலாசிரியர் அழகாகக் கூறியுள்ளார். இந் நூலாசிரியராகிய அருணந்தி சிவாசாரியார் திருத்துறைப்பூண்டியில் அந்தணர் குலத்தில் பிறந்து, ஆகமங்களை ஐயந்திரிபறப் பயின்று மெய்கண்டாரின் மாணவராக விளங்கி இத்தகு சிறப்புடைய நூலைச் செந்தமிழ் நாட்டுக்கு அருளித் தந்து ஆண்டவன் அருளைப் பெற்றுச் சிறப்பெய்தினர். இருபாஇருபஃது என்னும் நூலும் இவரால் செய்யப்பெற்றதேயாகும். இந்நூல் வெண்பாவும் ஆசிரியப்பாவும் ஒன்றன் பின் ஒன்று தனித் தனி அமைய இருபது பாடல்களைக் கொண்டது. தமது ஆசிரியரை முன்னிலைப்படுத்தி வினவுதலும், அதற்கு விடை கூறுதலுமான முறையில் இந்நூல் அமைந்துள்ளது. அருணந்தி சிவாசாரியாரின் மாணவரே சந்தானசாரியார் நால்வருள் ஒருவராகிய மறைஞான சம்பந்தராவார். இவரது மாணவரே உமாபதி சிவாசாரியார் ஆவார். இவர் கொற்றவங் குடியில் அந்தணர் மரபில் உதித்தவர்; சந்தானசாரியர் நால்வருள் ஒருவர். சிவப்பிரகாசம், கொடிக் கவி, நெஞ்சு விடு தூது, திருவருட் பயன், சங்கற்ப நிராகரணம் முதலிய சைவ சித்தாந்த நூற்களையும், கோயிற்புராணம், சேக்கிழார் புராணம் முதலிய புராண நூற்களையும்எழுதியவர். இவற்றுள் சிவப்பிரகாசம் என்னும் நூல் பதி பசு பாச இலக்கணங்களையும், தீட்சை விதிகளையும் பற்றிக்கூறுகிறது. திருவருட் பயன் என்னும் நூல் குறள் வெண்பாவால் ஆனது. இதற்கு நிரம்ப அழகிய தேசிகர் எழுதிய உரை உண்டு. பதி பசு பாச இலக்கணங்களையும் ஐந்தெழுத்தின் மாண்பையும் இதன்மூலம் தெளிவாக அறியலாம். மாயாவாதி ஐக்கியவாதி முதலான வாதிகளைத் தர்க்க முறைப்படி மறுத்துச் சைவ சித்தாந்த உண்மையைச் சங்கற்ப நிராகரணம் என்னும் நூல் கூறுகின்றது. இதற்குத் திருவொற்றியூர் ஞானப்பிரகாசரும் இராமானந்த சுவாமி

களும் உரை எழுதியுள்ளனர். உமாபதி சிவாசாரியாரின் காலம் கி. பி. 14-ஆம் நூற்றாண்டாகும். உண்மை விளக்கம் என்னும் நூலை இயற்றியவர் திருவதிகை மனவாசகம் கடந்தார் ஆவார். சிவஞானபோதம், சிவஞான சித்தியார் ஆகிய இரண்டு பெருநூல்களின் பொருள்களை இந்நூல் சுருக்கமாகக் கூறுகிறது என்னலாம். 55 வெண்பாக்களாலாயது. இந்நூலாசிரியர் மெய்கண்டாரின் மாணவராவார். திருவுந்தியாரும், திருக்களிற்றுப் படியாரும் முறையே திருவியலூர் உய்யவந்த தேவ நாயனாராலும், அவர்தம் மாணவராகிய திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனாராலும் பாடப்பட்டனவாகும்.

## பாண்டிய மன்னரின் சைவத்தொண்டு

சோழர்தம் காலத்திற்குப் பின்னர் பாண்டியர் ஆட்சி ஓங்கிற்று என்பதை முன்னர்க் கண்டோம். சோழப் பேரரசர்களைப் போன்றே பாண்டிய மன்னர்களும் சைவத் திருப்பணிகளைப் பெரிதும் விரும்பிச் செய்தனர். பெருவீரனான இரண்டாவது சுந்தர பாண்டியன் சிறந்த சிவபக்தனாவான். சோழப் பெரு நாட்டை வெற்றி கொண்டகால் இவன் தில்லைக்குச் சென்று இறைவனைக் கண்டு களித்ததோடு தானங்கள் பல செய்தனன். திருவரங்கத்துக் கோயிலிலும் இவன் பொன்வேய்ந்தனன் என்று கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இவனது மகன் சடையவர்மன் வீரபாண்டியனும் கோயில்களுக்கு நன்கொடைகள் பல வழங்கினான். பதினான்காம் நூற்றாண்டில் மாலிக்கபூரின் படையெடுப்பும் மகமதியர் கொள்ளைகளும் தமிழ் நாட்டை உருக்குலைத்தன. இக்காலத்தில் பொதுவாக நாட்டின் சமயநிலை அழிந்ததோடு அமைதியும் குலைந்தது. பாண்டியர் பல பக்கங்களுக்கும் சிதறி ஓடினர். சிலர் திருநெல்வேலி சென்றனர்; ஒரு சிலர் திருவாங்கூர் சென்றனர். இதற்கிடையில் மாராட்டியரும், விசய நகரப் பரம்பரையினரும் இந்து சமயத்தை நிலைநாட்ட வேண்டும் என்ற எண்ணத்தினால் தமிழ் நாட்டில் புகும்

தனர்; முகமதியராட்சியைக் குலைத்தனர். அக்காலத்தில் பாண்டியர்கள் சிற்றரசர்களாக வாழ்ந்தனர். அவர்கள் பெரும்பாலும் திருநெல்வேலியிலிருந்து தென் பாண்டி நாட்டினை மட்டும் ஆண்டனர். திருநெல்வேலிப் பாண்டியரில் 16-ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த அதிவீர பாண்டியரும், இவரது பெரிய தந்தையார் மகன் வரதுங்கராம பாண்டியரும் குறிப்பிடத் தகுந்தோராவர். இருவரும் சிறந்த சைவர்கள். நைடதம், காசி காண்டம், கூர்ம புராணம், இலிங்கபுராணம், வாயு சங்கிதை, வெற்றி வேற்கை என்பன அதிவீரபாண்டியர் இயற்றிய நூல்கள். பிரம்மோத்திர காண்டம், கருவை யந்தாதி, கூர்ம புராணம் முதலியன வரதுங்கராம பாண்டியரியற்றிய நூல்கள். தென்காசித் திருக்கோயில் திருப்பணிகளை இருவரும் செம்மையுடன் செய்தனர். இவ்விருவர்க்கும் முன்னர் வாழ்ந்த தலைசிறந்த சைவப் புலவர் அருணகிரியார் ஆவார். அவர் கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; திருவண்ணாமலையில் பிறந்தவர். சிறந்த முருக அடியாராக விளங்கிய இவர் வில்லிபுத்தூராரையும், சம்பந்தாண்டானையும் வாதில் வென்றவர். திருப்புகழ், கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, கந்தர் அந்தாதி, திருவகுப்புக்கள், மயில் விருத்தம், வேல் விருத்தம் என்பன இவரது நூல்களாகும். இவற்றுள் திருப்புகழ் என்னும் நூல் முருகப் பெருமான் எழுந்தருளியுள்ள திருத் தலங்களின்மீது பாடப்பட்ட திருப்பாடல்களின் தொகுதியாகும். 1200 பாடல்கள் இந் நூலில் காணப்படுகின்றன. திருப்புகழ் சிறந்த சந்தச் சுவடியாகும். அருணகிரியாரின் பாடல்களில் செந்தமிழ் மொழிச் சிறப்பினையும், சிந்தைக்கினிய அன்புச் சுவையினையும், செவிக்கினிய ஓசை நயத்தையும், உளத்தை உருக்கும் திருவருட்டன்மையினையும், காணலாம். தித்திக்கும் திருப்புகழ்ப் பாடல் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

"ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே

கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரைவ தைத்தமுக மொன்றே
வள்ளியைமண ணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம மர்ந்தபெரு மாளே."

விசயநகர ஆட்சியில் சைவமும் வைணவமும் மேலோங்கி இருந்தன. கோயில்கள் பலவாக வளர்ச்சியுற்றன. விசய நகர வேந்தர் சிறந்த வைணவராவர். பிரபந்த, திருமுறை முழக்கம் எங்கும் கேட்டது. வேதாந்த தேசிகர் போன்றோர் சமய விளக்க நூல்களை எழுதிக் குவித்தனர். அத்வைதிகளும், பாசுபதர்களும், வீர சைவர்களும் இருந்தார்களெனினும் சைவ சித்தாந்த முறையினைப் பின்பற்றும் சைவர்களே சிறக்க வாழ்ந்தனர். சமண, கிறித்தவ சமயங்களும் இக்காலத்தில் வளர்ச்சி பெற்று விளங்கின. மேலை நாட்டினர் பலர் வந்து பலரைக் கிறித்தவராக்கினர். இசுலாமும் பரவியது. சாதிகளும் வளர்ந்தன. இந்து சமயத்தைக் காத்தற்பொருட்டே விசய நகர வல்லரசு தோன்றியதால் விசயநகர மன்னர்கள் அனைவரும் கோயில் திருப்பணிகளிற் பெரிதும் ஈடுபட்டனர். இவர்களைப் போன்றே நாயக்க மன்னரும், மராட்டியரும் கோயில் வளர்ச்சியில் அக்கறை காட்டினர். சோழர்களால் கட்டப்பட்ட பல கோயில்களை இவர்கள் பழுது பார்த்துச் சீரும் சிறப்பும் பெறச் செய்தனர். கோயில்களுக்கு நிலங்கள் அளிக்கப்பட்டன. கோயிற் பணிகளைச் செம்மையுற நடத்துவதற்கு அறக் குழுவினர் ஏற்படுத்தப்பட்டனர். மேலும் கோயில்கள், தொழும் இடங்களாகவும் மக்கள் பொது வாழ்வு மலரத் தக்க வகையில் துணைபுரிய வல்ல இடங்களாகவும் விளங்கின. கிராமங்களில் சிறு தெய்வங்கள் பல வழிபடப்பட்டன. அரசினையும் வேம்பினையும் வைத்து அவற்றின்கீழ் நாகப் பிரதிட்டை பண்ணி வழிபடும் முறையும் இக்காலத்

தில் பரவியது. சமயத் தொண்டுகள் புரியப் பல மடங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இவ்வாறு பதினேழாம் நூற்றாண்டு வரை விசய நகர வேந்தர்கள் தமிழ் நாட்டைச் சமயத் துறையிலும் ஏனைய துறைகளிலும் நன்கு வளரச் செய்து, அதன் நலம் குன்றாவகையில் காத்தோம்பினர். இவர்கள் காலத்தில் பல கோயில்களுக்கு அழகிய மண்டபங்களும், கட்டிடங்களும் கட்டப்பட்டன. வேலூர்க் கோட்டைக் கோயில் மண்டபம், வரதராசர் கோயில் கலியாண மண்டபம் ஆகியன இக்காலத்தில் கட்டப்பட்டன. சிதம்பரம் கோயிலில் வடக்குக் கோபுரப் பணியினையும், காஞ்சி ஏகாம்பர நாதர் கோயில் கோபுரப் பணியினையும் செய்து முடித்தவர் மாமன்னர் கிருட்டினதேவராயர் ஆவார். சிதம்பரம் கோயிலில் ஆயிரக்கால் மண்டபமும், சண்முகர் கோயிலும், மதுரையில் வசந்த மண்டபமும், கோபுரங்களும் இக்காலத்தில்தான் அமைக்கப்பட்டன. மதுரைப் புது மண்டபம் நாயக்க மன்னரால் கட்டப்பட்டதாகும். விசய நகர வேந்தர் காலத்தில் சிற்றம்பலநாடி, இரட்டையர், காளமேகப் புலவர், சிதம்பர புராணம், மதுரைச் சொக்கநாத ருலா ஆகிய நூல்களின் ஆசிரியர் சிதம்பரம் திருமலைநாதர், திருவாரூரில் வாழ்ந்த தத்துவ ராய சுவாமிகள், பாகவதம் பாடிய செவ்வைச் சூடுவார், கச்சிக்கலம்பகம் பாடிய ஞானப் பிரகாசர், சித்தாந்தச் செல்வர் சிதம்பரம் மறைஞான சம்பந்தர், சிவாக்கிரயோகியார், கமலை ஞானப் பிரகாசர், குருஞான சம்பந்தர் ஆகியோர் வாழ்ந்து தமிழை வளப்படுத்தினர். இவர்களிற் பெரும்பாலோர் பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவர். பதினேழாம் நூற்றாண்டில் இரேவண சித்தர், ஆனந்த நமசிவாயப் பண்டாரம் முதலியோர் வாழ்ந்தனர். தாயுமானவரும் இக்காலத்தவரே.

தாயுமானவர் சைவ வேளாளர்; வேதாரண்யம் கேடிலியப்ப பிள்ளையின் திருமகனார்; மௌன குருவின் மாணவர்; திரிசிரபுர விசயரகுநாதசொக்கலிங்க நாயகரிடம் அரசியல் அலுவலராகப் பணியாற்றியவர்; சில காலம்

இல்லறம் நடத்திய பின்னர் துறவுக் கோலம் பூண்டவர். இவர் பாடிய தோத்திரப் பாடல்களின் தொகுதியே தாயுமானவர் பாடல் என்னும் நூலாகும். வேதத்தின் முடிவாகிய உபநிடதங்களின் சிறந்த கருத்தும் சிவாகமத்தின் முடிவாகிய சைவ சித்தாந்தக் கருத்தும் ஒரு தன்மையன என்றும், அக் கருத்தொற்றுமையே வேதாந்த சமரசமென்றும், அக்கருத்தினை உட்கொண்ட நெறியினையே வைதிக சைவமென்றும் அடிகளார் தம் திருப்பாட்டுக்களில் கூறியுள்ளார். சைவ சித்தாந்தத்தின் பெருமையைப் பலவிடங்களில் அடிகள் விதந்தோதியுள்ளார். முடிந்த முத்தி நிலையில் உள்ள பேரன்பர்கள் தமது திருவடியைத் தொழும் பொருட்டு இறைவன் எழுந்தருளுகின்ற வீதி 'சைவ சித்தாந்தம்' என்றும், பொதுவாகிய வேதநெறியினும் சிறப்பாகிய சிவாகம நெறியே விரைவில் வீடு சேர்க்கும் என்னும் கருத்துப்பட வேதமாகிய வழியிலே ஆகமமாகிய குதிரை அற்புதமாய் நடக்கும் என்றும் அடிகள் மொழிந்துள்ளார்.

"முத்தாந்த வீதி முளரிதொழு மன்பருக்கே
சித்தாந்த வீதிவருந் தேவே பராபரமே"
"முத்தாந்த வித்தே முளைக்கு நிலமா யெழுந்த
சித்தாந்த மார்க்கச் சிறப்பே பராபரமே"
"ஆரணமார்க்கத் தாகமவாசி—யற்புதமாய்
நடந்தருளும்."

இக்காலத்தில் வாழ்ந்த மற்றொரு குறிப்பிடத் தகுந்த புலவராகிய சைவ எல்லப்ப நாவலர் என்பவர் அருணைக் கலம்பகம், திருவெண்காட்டுப் புராணம், செவ்வந்திப் புராணம், திருச் செங்காட்டகுடிப் புராணம் முதலிய நூல்களைப் பாடியுள்ளார். இவர் தருமையாதீனத்தைச் சார்ந்தவர். இக்காலத்தில் திருவாரூரில் வாழ்ந்த அகோர முனிவர் கும்பகோணப் புராணம், வேதாரண்ய புராணம், திருக்கானப்பேர் புராணம் ஆகியவற்றை இயற்றியுள்ளார். கழுக்குன்றமாலை, சேயூர் முருகன் பிள்ளைத்

தமிழ், திருவாரூர் உலா, சந்திரவாணன் கோவை முதலிய நூல்களை இயற்றிய அந்தக்கவி வீரராகவ முதலியாரும் இக்காலத்தவரே. பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்த இரேவண சித்தரும் சைவ வேளாளரே. பேரளத்தில் பிறந்து சிதம்பரத்திலும் சென்னையிலும் வாழ்ந்த இவர் பட்டீசுரப் புராணம், திருவலஞ் சுழிப்புராணம், திருமேற்றளிப் புராணம் முதலிய நூல்களைப்பாடியுள்ளார்.

இவ்விருண்ட காலத்தில்தான் மேலைநாட்டார் நம் நாட்டு மண்ணில் கால் வைத்தனர். இறுதியில் ஆங்கிலேயரே நம்நாடு முழுவதையும் ஆட்சி செய்யக்கூடிய வாய்ப்பைப் பெற்றனர். பதினெட்டாம் நூற்றாண்டே ஆங்கிலேயரை நமது நாட்டில் ஊன்ற வைத்த நூற்றாண்டு ஆகும், இந்நூற்றாண்டில் திருக்கடவூர் தேவியான அபிராமி அம்மையார் மீது அபிராமி அந்தாதி பாடிய அபிராமிப்பட்டர், அறப்பளிசுர சதக ஆசிரியர் அம்பலவாணக் கவிராயர், சீகாழித்தலபுராணம், சீகாழிக்கோவை, இராமாயண நாடகம், கீர்த்தனை முதலிய நூல்களைப் பாடிய அருணாசலக் கவிராயர், திருக்குற்றாலக்குறவஞ்சி ஆசிரியர் திரிகூட ராசப்பக் கவிராயர், திருப்பாதிரிப் புலியூர்ப்புராணம் பாடிய சிதம்பரநாத முனிவர், சிவரகசியம் என்னும் நூலை எழுதிய ஒப்பிலாமணிப் புலவர், கடவுள் மாமுனிவர், ஒழிவில் ஒடுக்கம், சித்தாந்த தரிசனம் முதலிய நூல்களைப் பாடிய சீர்காழிச் சைவத்துறவி கண்ணுடை வள்ளலார், விநாயக புராணம், தணிகை புராணம், காஞ்சிப் புராணத்தின் இரண்டாம் காண்டம், பேரூர்ப் புராணம் முதலிய நூல்களை இயற்றிய சிவஞான முனிவரின் மாணவர் திருத்தணிகைக் கச்சியப்ப முனிவர் முதலிய புலவர்கள் வாழ்ந்து சைவத்தையும் தமிழையும் வளர்த்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில்வாழ்ந்ததிரிசிரபுரம்மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை சிறந்த சிவநேசச் செல்வராவார். அவர் பாடியுள்ள தலபுராணங்களும் பிரபந்தங்களும் அளவிடற்கரியனவாகும். திருவாவடுதுறை ஆதீனப் புலவராக விளங்கிய இவர் இயற்றிய நூல்களில் சேக்கிழார் பிள்ளைத்தமிழ்,

திருவிடை மருதூர் உலா, காசிரகசியம் முதலியன குறிப்பிடத்தகுந்தனவாகும். யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலரும் இந்நூற்றுண்டினரே. தமிழ் உரைநடை நன்கு வளருவதற்கு வித்திட்டவர் இவரே. சிறந்த சைவர். பல நூல்களைப் பதிப்பித்தவர். பெரிய புராண வசனம், திருவிளையாடற்புராண வசனம், சைவ வினு விடை முதலியன இவரது நூல்களாகும். இந்நூற்றுண்டில் வாழ்ந்தவரே இராமலிங்கசுவாமிகள். இவர் கருணீகக் குலத்தினர். இவரது நூலே திருவருட்பா ஆகும். மனுமுறை கண்டவாசகம், சிவகாருண்ய ஒழுக்கம் என்பன இவரது தலைசிறந்த வசன நூல்களாகும். வேதாந்தம் சித்தாந்தம் வடமொழி தென்மொழி ஆகியவற்றில் நல்ல புலமை நிரம்பியவர். வடலூரில் ஒரு கோயில் கட்டிச் சித்துக்கள் பல செய்து வாழ்ந்தவர். கடவுள் திருவருளைப் பெறுதற்குரிய நூலாகிய திருவருட்பாவில், சிவன், உமை, விநாயகர், சுப்பிரமணியர், திருமால் ஆகியோர் மீது பாடப்பட்ட பாடல்கள் உள்ளன. நாமாவளிகளும், கீர்த்தனைகளும், நங்கைமார் பாடுதற்குரிய பாடல்களும், பல வசனங்களும் இந்நூல் கொண்டிலங்குவதால் படிப்பதற்குச் சுவையாக இருக்கும். முருகனைப்பற்றிய திருவருட்பாப் பாடல் ஒன்று வருமாறு:

''முன்னைப் பொருட்கு முதற்பொருளே
முடியா தோங்கு முதுமறையே
முக்கட் கரும்பீன் றெடுத்த முழு
முத்தே முதிர்ந்த முக்கனியே
பொன்னைப் புயங்கொண் டவன்போற்றும்
பொன்னே புனித பூரணமே
போத மணக்கும் புதுமலரே
புலவரெவரும் புகும்பதியே
மின்னைப் பொருவு முலகமயல்
வெறுத்தோ ருள்ள விளக்கொளியே!

மேலுங் கீழு நடுவுமென
விளங்கி நிறைந்த மெய்த்தேவே
தன்னைப் பொருவுஞ் சிவயோகந்
தன்னை யுடையோர் தம்பயனே
தணிகா சலமாந் தலத்தமர்ந்த
சைவ மணியே சண்முகனே.''

இவர்களைப் போன்று எத்தனையோ புலவர்கள் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தனர்; இன்றும் பலர் வாழ்கின்றனர். விரிவஞ்சி, அவர்களைப் பற்றிக்கூறாது விடுத்து, சைவ மடங்கள் ஆற்றிய சமயத்தொண்டுகளை அடுத்துக் காண்பாம்.

# 7. சைவ மடங்களின் சமயத் தொண்டு

சைவசமயக் கொள்கை, ஒழுக்கம் ஆகியன மக்களிடையே நிலவும் பொருட்டுச் சைவ நூல்களில் புலமையும் சைவ ஒழுக்கமும் துறவு உள்ளமும் கொண்ட பெரியோர்களைத் தலைவராக நிறுத்தி அவர்கட்கு வேண்டிய இடமும் பொருளும் நல்கி, இடங்கட்கு மடம் என்ற பெயர் தந்து சமயத்தை வளர்க்குமாறு இடைக்காலத்தில் வாழ்ந்த மன்னர்கள் ஏற்பாடுகள் செய்துள்ளனர். கி. பி. 10,11,12-ஆம் நூற்றாண்டுகளில் மத்தமயூர் சந்தானத்தின் தென்கிளையாய்ப் போந்த கோளகி சந்தானம் சைவ சமயத்துக்காகப் பணிபுரிந்திருக்கிறது. கோளகி சந்தானத்துக்குத் தமிழக முழுதும் பலவிடங்களில் மடங்கள் இருந்துள்ளன. கோளகி சந்தானத்தின் வாயிலாகச் சோமசம்புபத்ததி (ஞானாமிர்த முகவுரை), ஞானாமிர்தம் ஆகிய நூல்கள் வெளிவந்தன. கி. பி. 13ஆம் நூற்றாண்டில் சிவஞான போதம் எழுதிய மெய்கண்ட தேவர் பெயரால் தமிழ் நாட்டின் பல்வேறிடங்களில் மடங்கள் தோன்றியுள்ளன. இவற்றுக்கு முன் ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் இவர்கள் பெயரால் பல மடங்கள் தோன்றிச் சிவத்தொண்டு புரிந்துள்ளன. இன்றைய மடங்களில் தலைமையானது, தமிழ்த் தொண்டால் தொன்மைச் சிறப்புடையது திருவாவடுதுறை மடமாகும். ஏறத்தாழ 500 ஆண்டுகளுக்கு முன் சித்தர், சிவப்பிரகாசர் ஆகியோரின் மாணவரான வைத்தியநாதர் என்பவர் நமச்சிவாயர் என்னும் தீட்சை நாமம் பெற்றுத் திருவாவடுதுறையில் சைவ ஆதினத்தை நிறுவினார். கைலாயத்திலுள்ள சிவன் முதலாக நந்திபெருமான் முதல் மெய்கண்டார் வரை தெய்வ பரம்பரை எனவும் மெய்கண்டார் முதல் நமசிவாய தேவர்

வரை பூத பரம்பரை எனவும் அவர்க்குப் பின் வந்தவர் அபிடேக பரம்பரையினர் எனவும் கூறப்படும். நமசிவாயரே முதலாசாரியார். தற்போதுள்ளவர் 21ஆம் ஆசாரியார். நமசிவாய தேசிகர் மெய்கண்ட சாத்திரத்துள் இருபா இருபஃது, வினாவெண்பா என்ற இரண்டுக்கும் உரையெழுதினார். இம்மடத்தைச் சேர்ந்த தட்சிணாமூர்த்தி தேசிகர், தசகாரியம், உபதேசப் பஃறொடை என்பவற்றை எழுதினார். அம்பலவாண தேசிகர் என்பவர் தசகாரிய முதல் நமச்சிவாய மாலை ஈறாகப் பத்து நூல்கள் எழுதி உள்ளார். பண்டார சாத்திரம், சிவஞான போதச் சிற்றுரை, பேருரை முதலிய நூல்களும் இவ்வாடுதுறை மடத்தைச் சேர்ந்தவையாகும். இம்மடத்தைச் சேர்ந்த சிவஞானயோகி எனப்படும் சிவஞான முனிவர் பரந்த பேரறிவு படைத்த ஒரு பெரும் புலவராவார். இவரது காலம் பதினெட்டாம் நூற்றாண்டு. இவரது பெற்றோர் ஆனந்தக்கூத்தர், மயிலம்மை என்போர்; ஊர் விக்கிரமசிங்கபுரம்; குலம் சைவ வேளாளர்; இவரது இயற்பெயர் முக்களாலிங்கர். இளமையிலேயே கல்வியறிவும் கவிபாடும் ஆற்றலும் பெற்றிருந்த இவர் திருவாவடுதுறையை அடைந்து பின் வேலப்ப தேசிகரால் அருள் செய்யப்பெற்றுத் துறவியானார். இலக்கணம், இலக்கியம், தருக்கம் ஆகிய மூன்றிலும் ஒப்பாரும் மிக்காரும் இன்றி விளங்கினார். வடமொழி அறிவும் பெற்றிலங்கினார். சிவஞான போத விரிவுரை, அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ், காஞ்சிப் புராணம், சிவ சமயவாத மறுப்பு, தொல்காப்பியச் சூத்திர விருத்தி என்பன இவர்தம் நூல்களாகும். இவரது பேருரை சிவஞான பாடியம் எனப்படும்.

இன்று இவ்வாதீனத்தின் குருமகா சந்நிதானமாக விளங்கும் திருப்பெருந்திரு சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் சைவநூற் புலமையும் தமிழ் அறிவும் மிக்கவர். சைவ சித்தாந்த சாத்திரங்கள் யாவற்றையும் உரையுடன் வெளியிட்டு அவற்றை இலவசமாக மக்களுக்குக் கொடுத்துதவி வருகிறார். திருமந்திர மகா

நாட்டை ஆண்டு தோறும் நடத்தி வருகிறார். புலவர்க்குப் பொன்னும் பொருளும் வரையாது வழங்கி வருகிறார். விநாயகரைப் பற்றி இவர் காலத்தில் வெளியிடப்பட்ட நூல் கண்ணையும் கருத்தையும் கவரும் சிறந்தவொரு நூலாகும். அவ்வக்காலத்தில் விளங்கிய தமிழ்ப் புலவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்தில் தொடர்பு பெற்றுத் தங்கள் புலமை வளர்ச்சிக்கு ஆதரவு பெற்றனர். தமிழ்ப் பேரறிஞர்களாகிய மீனாட்சிசுந்தரம் பிள்ளை, உ. வே. சாமிநாத ஐயர், ஆறுமுக நாவலர், கச்சியப்ப முனிவர் முதலியோர் இவ்வாதீனப் புலவர்களாய் விளங்கினர். இன்றும் பலர் உள்ளனர்.

தஞ்சையில் மாயவரத்துக்கருகிலுள்ள தருமபுரம் என்னும் ஊரிள்ள மடத்தை நிறுவியவர் குருஞான சம்பந்த தேசிகர். ஆடுதுறையார் சிவஞான போதத்தைச் சிறப்பாகக் கொள்வது போலத் தருமையாதீனத்தார் சிவ ஞான சித்தியை மேற்கொள்வர், முத்தி நிச்சய பாடியம் என்ற நூல் சிறப்பாகக் கருதப்படும். சிவஞான போதத்துக்குச் சிற்றுரை, பேருரை தோன்றியது போல முத்தி நிச்சயம் என்ற நூற்குச் சிற்றுரையும் பேருரையும் உண்டு. இந்நூல் சைவசித்தாந்தக் கருத்துக்களை அழகுற எடுத்துக்கூறும். இதன் ஆசிரியர் ஞானசம்பந்த தேசிகர் கி. பி. 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். தர்மபுரப் பண்டாரச் சாத்திரங்களுட் தலை சிறந்தது 'சிவபோக சாரம்' என்னும் நூலாகும். இது எளிமையும் இனிமையும் வாய்ந்ததாகும். நான்காவது பட்டத்திலிருந்த மாசிலாமணி தேசிகர் காலத்தில் குமரகுருபரர் அவர்பால் ஞான தீட்சை பெற்றார். இம்மடத்தின் ஆறாவது பட்டம் திருஞானசம்பந்த தேசிகர் சமூக மாலை, முத்தி நிச்சயப் பேருரை, சிவஞான சித்திக்கு ஞானவர்ண விருத்தியுரை ஆகிய நூல்களை எழுதினார். கந்தபுராணச் சுருக்கம் எழுதியவரும் தருமபுரப் பண்டாரச் சந்நிதியாகப் பின்னர் விளங்கியவருமாகிய சம்பந்த சரணாலயரும் சிவப் பிரகாசரின் ஆசிரியராகிய வெள்ளியம்பலத் தம்பிரானும்

இவரது மாணவராவர். அழகிய திருச்சிற்றம்பல தேசிக ரால் சொர்க்கபுர மடம் நிறுவப்பட்டது. இங்குள்ள தம்பி ரானால் திரிபதார்த்த தீபம் என்னும் நூல் எழுதப்பட் டது. 24-வது பட்டமாகிய சண்முக தேசிகர் சைவசித் தாந்த மாநாடுகள் கூட்டியும், நூலகம் நிறுவியும், ஞான சம்பந்தம் என்ற திங்கள் வெளியீடு நடத்தியும், அச்சகம் நிறுவியும், தேவார, சிவாகமப் பாடசாலைகளை நடத்தியும் தொண்டுபல செய்தார். இம்மடத்தின் சார்பில் தமிழ்க் கல்லூரியும் வடமொழிக் கல்லூரியும் நடந்து வருகின்றன. இப்பொழுது பட்டத்திலுள்ள திருப்பெருந்திரு சுப்பிரம ணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் 25-வது குருமகா சந்நிதானமாவார். திருக்குறள் உரை வளம், திருவாசகம், தேவாரம் அவற்றின் ஆராய்ச்சிக் குறிப்புகள், சைவ சித்தாந்த ஆங்கில, இந்தி மொழி பெயர்ப்புக்கள் முதலியவற்றை அழகிய முறையில் வெளியிட்டுதவியுள்ளார். சென்னையில் சமயப் பிரசார நிலையம் ஒன்று நிறுவி, சமய விழாக்களும் தேவார, தமிழ் வகுப்புக்களும் திறம்பட நடத்தப் பட்டு வருகின்றன. இக்குருமகா சந்நிதானம் சிறந்த நூற்புலமை உடையவர்.

திருப்பனந்தாள் காசி மடத்தைத் தோற்றுவித்த வர் சீவைகுண்டத்தைச் சேர்ந்த குமரகுருபரர் ஆவார். சண்முகசிகாமணிக் கவிராயருக்கும் சிவகாமி அம்மையாருக் கும் திருமகனாகப் பிறந்த இவர் ஐந்து வயது வரை ஊமை யாக இருந்து, பின்னர்த் திருச்செந்தூர் முருகன் அருளி னால் பாடும் ஆற்றல் பெற்றுத் தென்னாடு முழுவதும், வட நாடும் சென்று சைவத்தின் பெருமையை நிலைநாட்டியவர். இவர் திருமலை நாயக்க மன்னன் காலத்தவர். வடநாட்டை ஆண்ட முசுலிம் மன்னன்முன் இவர் சிங்கத்தின் மீத மர்ந்து செய்யுள் பாடி, அவனது பேரன்பினையும் பெரு மதிப்பினையும் பெற்றார் என்று கூறப்படுகிறது. இவர் முதலில் காசியில்தான் குமாரசாமி மடத்தை நிறுவினார். இம்மடமே பல ஆண்டுகள் தலைமை பெற்று விளங்கியது. ஆனால் இன்று திருப்பனந்தாள் மடம் தலைமையிடத்தைப்

பெற்று விளங்குவதை நாம் அறிவோம். கந்தர்கலி வெண்பா, மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமா ரசாமி பிள்ளைத் தமிழ், மதுரைக் கலம்பகம், கைலைக் கலம் பகம், மீனுட்சியம்மைகுறம், மீனுட்சியம்மை இரட்டை மணிமாலை, திருவாரூர் நான்மணிமாலை, பண்டார மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை, நீதிநெறி விளக்கம், சிதம்பர மும்மணிக்கோவை, சிவகாமியம்மை இரட்டை மணிமாலை, காசிக்கலம்பகம், சகல கலாவல்லி மாலை ஆகியன குமரகுருபர அடிகளார்தம் நூல்களாகும். சுவாமிநாத தேசிகர் காலத்தில் வித்துவான் தேர்வில் முதன்மையாகத் தேர்ச்சி அடைபவரை ஊக்குவித்தற் பொருட்டு ஆயிர வெண்பொற்காசுகள் பரிசு ஏற்படுத்தப் பட்டது. இன்று இத்திருமடத்தின் தலைவராக உள்ள திருப்பெருந்திரு காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமி கள் பன்மொழிப் புலவராவார். திருக்குறள் உரைக் கொத்து வெளியீடு இவரால் வெளியிடப்பட்டவற்றுள் குறிப்பிடத்தக்கதாகும். ஆங்கிலம், இந்தி மொழிகளில் குறளையும் சைவ நூல்களையும் வெளியிட்டு வருகிறார். சைவத்திருமுறைகளை நன்கு அச்சிட்டுத் தக்கவர்களுக்கு இலவசமாக வழங்கி வருகிறார். மதுரை மீனுட்சி கோயி லில் பொற்றாமரைக் குளக்கரையில் 1330 குறள்களையும் சலவைக் கல்லில் பொறித்துள்ளார். இவர் செய்கின்ற அறக்கட்டளைகள் பலவாகும். தமிழ்க் கல்லூரி ஒன்றும், குமரகுருபரன் என்னும் திங்கள் வெளியீடும் இத்திருமடத் தால் நடத்தப்படுகின்றன.

திருவண்ணமலை ஆதீனமும், மதுரைத் திருஞான சம்பந்தர் மடமும் குறிப்பிடத்தக்க ஏனைய சைவ நிலையங் களாகும். திருவண்ணமலை ஆதீனத்தைச் சேர்ந்த குகை நமச்சிவாயர் அருணகிரி அந்தாதி பாடினர்; குருநமச்சி வாயர் என்பவர் அண்ணமலை வெண்பா, பரமரகசியமாலை முதலியவற்றைப் பாடினர்; ஆறுமுக சுவாமிகள்நிட்டானு பூதி என்னும் நூலையும், ஞானப்பிரகாசர் என்பவர் சிவ ஞான சித்தியார் சுபக்கத்திற்கு உரையினையும் எழுதினர்.

ஞானப் பிரகாசர் இலங்கையில் பிறந்தவர். இம்மடத்தில் சேர்ந்து துறவு பூண்டவர். திருக்கைலாய பரம்பரையைச் சேர்ந்த இவ்வாதினக் குருமுதல்வர் தெய்வசிகாமணி சுவாமிகள் ஆவார். இவர் பரம்பரையில் வந்த நாகலிங்க தேசிக குருமூர்த்திகள் இராமநாதபுரம் மன்னர் வேண்டுதலுக்கு இணங்கப் பிரான்மலையில் திருவண்ணாமலை ஆதீன மடாலயத்தைத் தோற்றுவித்துத் தம் சீடர் ஒருவரைக் குருபீடத்தில் அமர்த்தினார். நாளடைவில் இவ்வாதினக் குருமூர்த்திகள் குன்றக்குடியில் வந்து தங்கத் தொடங்கினர்; காளத்தியப்பரைக் கொண்டு வந்து மடாலயத்தில் எழுந்தருளச் செய்தனர். இன்று இம்மடத்தின் தலைவராகவிளங்கும் திருபெருந்திரு குன்றக்குடி அடிகளாராகிய தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகளைத் தமிழகத்தில் அறியாதார் யாருமில்லை. நல்ல புலமையும் சீர்திருத்த உள்ளமும் கொண்ட இவர் நாவீறு படைத்த நல்லிசைப் புலவராவார். தேவார-திருவாசக திருவாய் மொழிகளின் மூலம் தமிழ் நாட்டுக் கோயில்களில் இறைவனுக்கு அர்ச்சனை நடைபெற வேண்டும் என்று கூறித் தமிழ் நாடெங்கணும் விழிப்பை ஏற்படுத்தி உள்ளார். மலேயா, சிங்கப்பூர், இலங்கை, வடநாடு ஆகிய இடங்களுக்குச் சென்று தம் வாக்கு வன்மையால் மக்கள் உள்ளங்களை ஈர்த்து, அருள்நெறியினைத் தழைக்கச் செய்துள்ளார். கல்வி நிலையங்கள் பலவற்றை நிறுவிச் சமயத்தொண்டினையும் கல்வித் தொண்டினையும் செய்து வருகிறார். இவர் தொடங்கியுள்ள அருள்நெறி இயக்கம் இவ்வவனி எங்கணும் அருளினையும் அன்பினையும் விளங்கச் செய்து உலக அமைதிக்கு வழி காட்டும் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. மதுரைத் திருஞான சம்பந்தர் மடத்தின் இன்றையத் தலைவராக விளங்கும் சோமசுந்தர தேசிகப் பரமசாரிய சுவாமிகள் பற்பல சமய மாநாடுகளுக்கும், கூட்டங்களுக்கும் தலைமை பூண்டு சொற்பொழிவாற்றிச் சைவத்தை வளர்த்து வருகின்றார். மீனாட்சி கோயிலில் வாரந்தோறும் கூட்டு வழிபாட்டினைத் திறம்

பட நடத்தி வருகிறார். இம்மடங்களைத் தவிர வீர சைவ மடங்களும் தமிழ் நாட்டில் உள்ளன.

வீர சைவம் தோன்றிய காலம் இதுவெனத் திட்ட வட்டமாகக் கூறுவதற்கில்லை. இதனைத் தோற்றுவித்த வர் பசவர் என்பவர் ஆவார் என்று பொதுவாகக் கூறப்படு வதுண்டு. டாக்டர். வ்ளிட் என்பவர் ஏகாந்த ராமையா என்னும் முனிவரே லிங்காய மதத்தை ஏற்படுத்தினார் என் கிறார். சைவ தரிசனம், சித்தாந்த தரிசனம் என்னும் பெயர்களும் இச் சமயத்திற்கு வழங்கப்படுகின்றன. வீர சைவத்திலே இரண்டு பிரிவுகள் உள. ஒன்று இலிங்காய தம், மற்றொன்று ஆராத்யம். ஆராத்ய வாதிகள் காயத் திரி மந்திரம் ஓதல், புரிநூல் போடல் ஆகியவற்றை மேற் கொண்டிருந்தனர். இலிங்காயத்தைச் சேர்ந்தவர்களிலே லிங்கிப்—பிராமணர்கள் உயர்வாகக் கருதப்படுகின்றனர். மற்றொரு வகையினரான விரகதர்கள் மடங்களை ஏற்படுத் திச் சமயத்தொண்டு புரிந்தனர். வீரசைவர்களிடையே உபநயனம் போன்றதொரு சடங்குளது. இச் சடங்கிலே இலிங்கத்தை அணிதல் வேண்டும். பெண்களுக்குங்கூட இச்சடங்கு நடத்தப்படும். அந்தச் சடங்கிலே காயத்திரி மந்திரத்திற்குப் பதிலாக "ஓம் நமசிவாய" என் பது சொல்லப்படும். வீரசைவர்கள் கோயிலுக்குச்சென்று வழிபடுவதைவிடத் தம் இலிங்க வழிபாட்டையே பெரிதும் மதிக்கின்றனர்.

பாண்டிச்சேரிக்கு அருகில் உள்ள பொம்மபாளைய ஆதீனத்தை ஏற்படுத்திய சிவஞான பாலைய சுவாமிகள் வீரசைவரேயாவார். இம்மடத்தின் சார்பில் துறைமங்க லச் சிவப்பிரகாசர், பிரபுலிங்கலீலை, நால்வர் நான்மணி மாலை, சோணசைல மாலை, வெங்கைக் கலம்பகம், வெங் கைக் கோவை, வேதாந்த சூடாமணி, பெரியநாயகி கலித் துறை, திருக்கூவப் புராணம், ஏசுமத நிராகரணம், திருக்காளத்திப் புராணம் (இரண்டு சருக்கங்கள்)முதலிய நூல்களைச் செய்தருளினார். இவரது காலம் 17-ஆம் நூற்

றுண்டு. காஞ்சியில் வாழ்ந்த குமாரசுவாமிப் பண்டாரமே இவரது தந்தையார். வடமொழி தென்மொழிகளில் வல்லவரான இவர் வீரசைவ மரபினர். பெரும் புலவராகிய இவரைக் "கற்பனைக் களஞ்சியம்" என நாம் இன்றும் புகழ்கின்றோம். கருணைப் பிரகாசரும் வேலைய சுவாமிகளும் இவரது உடன்பிறந்தோராவார். இம்மூவரும் சேர்ந்தே சீகாளத்தி புராணத்தைப் பாடிமுடித்தனர். இவ்வீரசைவ மடத்தின் இப்பொழுதுள்ள தலைவர் பாலைய சுவாமிகள், திருமயிலத்தில் ஒரு முருகன் கோயிலையும், தமிழ்க் கல்லூரி ஒன்றினையும் ஏற்படுத்தி உள்ளார். சிவப்பிரகாசரது பிரபந்தங்களை ஒன்று சேர்த்து வெளியிடச் செய்துள்ளார். பிரபுலிங்கலீலைக்கு (ஒரு பகுதி) உரை கூறி வெளியிடச் செய்துள்ளார். கோவைக்கருகிலுள்ள பேரூர் மடமாகிய சாந்தலிங்க சுவாமிகள் மடமும் வீரசைவ மடமே. சாந்தலிங்க சுவாமிகளின் மாணவரே, திருப்போரூரில் தங்கி மடமொன்று நிறுவியவரும் திருப்போரூர் சந்நிதி முறை என்னும் சுவைமிகுந்த நூலைப் பாடியவருமாகிய சிதம்பரசுவாமிகள். தற்பொழுது தமிழ்க்கல்லூரி ஒன்று பேரூர் மடத்தால் நடத்தப்படுகிறது. வைராக்கிய சதகம், அவிரோத உந்தியார், கொலை மறுத்தல் முதலியன சாந்தலிங்க சுவாமிகள் இயற்றிய நூல்களாகும். இவரது காலம் கி. பி. 17-ஆம் நூற்றாண்டாகும். இம்மடங்கள் தவிர வேதாந்த மடங்கள் பலவும் தமிழ் நாட்டில் உள்ளன.

110940

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 37 — | ‘திகைக்கின்ற.....நான்கு’ என்ற பகுதிக்குக் கீழே ஒப்புமைக்காகக் குதம்பைச் சித்தர் பாடல்கள் தரப்பட்டுள்ளன. | | |
| 54 — | 3 | திருமுறைகளை | தேவார திருமுறைகளை |
| 56 — | 9 | அநீதம் | அதிதம் |
| 71 — | 15 | கண்டகோடாரி | கோலொன்றை |
| 76 — | 3 | சாங்கியம், யோகம் என்பவற்றை நீக்கவும். | |
| 107 — | 10 | சமய | சைவசமய |
| 113 — | 2 | அரசர்க்கு | அரசற்கு |
| 113 — | 26 | இரும்பூது | இறும்பூது |
| 117 — | 14 | உள்ளந்தான் | உள்ளந்தாள் |
| 117 — | 24 | என்றிவை | இவை வந்து |
| 118 — | 1 | விதிர்விதித்து | விதிர் விதிர்த்து |
| 119 — | 4 | நாங்கூழ்ப் புழுவென | நாங்கூழ் என |
| | | அரிப்புண்ட | அரிப்புண்டலந்த |
| | 22 | வுனர்வே | வுணர்வே |
| 132 — | 8 | எப்போதும் | எப்பொழுதும் |
| | 10 | வயிறோடு | குடரோடு |
| | 22 | எத்தாலும் மறவாது | எத்தால் மறவாத |
| 143 — | 15 | உலகமும் பிரமும் ஒன்று | பிரமம் ஒன்றே உன்பொருள் |
| 146 — | 5 | சோழரசர்கள் | சோழவரசர்கள் |
| 151 — | 32 | ஒரு | ஓர் |

# ஆசிரியரது பிற நூல்கள்

| | | ரூ. ந.பை. |
|---|---|---|
| 1. | அமெரிக்க நூலகங்கள் ... | 1—25 |
| 2. | அறிவியற் சோலை ... | 1—50 |
| 3. | இலக்கண வழிகாட்டி ... | 2—25 |
| 4. | இலக்கியத்தில் விலங்குகளும் பறவைகளும் ... | 1—50 |
| 5. | உயர்நிலைப்பள்ளி நூலகம் ... | 1—50 |
| 6. | உரிமைப்போர் (வில்லுப்பாட்டு) ... | 0—25 |
| 7. | தமிழ்நாடும் மொழியும் ... | 4—00 |
| 8. | நூலக அமைப்பியல் ... | 1—50 |
| 9. | நூலக ஆட்சி ... | 1—50 |
| 10. | நூல் நிலையம் ... | 1—25 |
| 11. | மறுமலர்ச்சிக் கவிஞர்கள் ... | 1—25 |
| 12. | மலைவாழ் மக்கள் ... | 2—00 |
| 13. | முதலுதவி ... | 1—25 |
| 14. | யாப்பருங்கலக் காரிகை ... | 1—25 |
| 15. | விஞ்ஞானத்தின் கதை ... | 1—25 |